# வணிக வனிதை

# VANIKA VANITHAI

PT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3615



## வர்த்தக மாணவர் ஒன்றியம்

### யாழ்/இந்து மகளிர் கல்லூரி

### 1994 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக பொருளியல் மன்றத்தின்,

"வனிதை" சஞ்சிகையானவள் இரண்டாவது தடவையாக வெளிவருகிறாள். இவள் தொடர்ந்தும் வெளிவர எமது பாராட்டுக்கள்.

**தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்**

22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்.

தேவையான நகை செய்வதற்கு உடன் நாடவேண்டிய ஒரே ஒரு இடம்:-

# ராதிகா நகை மாடம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

222, கஸ்தூரியார் வீதி,

**யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3615

# வணிக வனிதை

1994 1995



## இரண்டாவது மலர்

வர்த்தக மாணவர் ஒன்றியம்
யாழ். இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
    திகழ்ந்திடுங் கல்லூரி — எங்கள்
பெறுவருமிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
    பிறங்கிடுங் கல்லூரி — உயர்
மருவுரு கலைகள் யாவையுமின்பாய்
    வழங்கிடுங்கல்லூரி — உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
    புகழினை வாழ்த்தோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
    என்று வணங்கோமோ

இந்து மதப்புகழ் எங்கும் விளங்கிட
    இசைந்திடுங் கல்லூரி — இயல்
சிந்தை வளம்பெற மெய்ப்பொருளறிவைச்
    சேர்த்திடுங் கல்லூரி — வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
    சுரந்திடுங் கல்லூரி — உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
    வாழ்த்தொடு சூட்டோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
    என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
    முழங்கிடுங் கல்லூரி — ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
    பொறித்திடுங் கல்லூரி — இந்து
நங்கையர் வாழ்வின் லட்சியமனைத்தும்
    நல்கிடுங் கல்லூரி — உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன்பாடி
    அனுதினம் ஏத்தோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
    என்று வணங்கோமோ:

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
    கண்டிடுங் கல்லூரி — என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
    மாண்புறுங் கல்லூரி — நித்தம்
நிலமகள் நெற்றி திலகமென்றேத்த
    நிலைத்திடுங் கல்லூரி — உனைத்
தலைமுறையாகத் தொழு துளங்குளிரத்
    துதி சொல்லிப் பாடோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
    என்று வணங்கோமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்



திருமதி சரஸ்வதி ஜெயராஜா
B A. (Hons.) Dip-in Edu., S. L. P S. T.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளரும் பருவத்திலே....

இன்று கல்வியுலகில் போட்டியிடும் துறையாக வணிகத்துறை வளர்ந்துள்ளது. மாணவர்கள் இத்துறையில் நுழைவதற்கு முழு முயற்சியெடுத்துப் படிக்கிறார்கள். அவர்களின் முயற்சியின் படிமுறை வளர்ச்சியில் ஒன்றே மன்றங்களும் சஞ்சிகை வெளியீடுகளுமாக அமைகின்றன.

ஒரு வயதினைப் பூர்த்தி செய்து கொண்டாடிய "வணிக வனிதை" இன்று தனது இரண்டாவது படைப்பினையும் மாணவர் உலகுக்குத் தந்து மகிழ்வடைகின்றாள். படிமுறை வளர்ச்சியில் சிறந்த பெறுபேறுகளை ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்ற தனது குறிக்கோளைச் செவ்வனே நிறைவேற்றி வருவது கண்டு மகிழ்வடைகிறோம்.

மாணவர் அறிவினை வளர்க்கும் அதேநேரம் அவர்களிடையே கட்டுக்கோப்பையும், ஒருங்கிணைப்பினையும் ஏற்படுத்துபவளாகவும் வனிதை விளங்குகிறாள்.

ஆசிரியர்களின் வழிகாட்டல்களிலும் மாணவர்களின் ஒத்துழைப்பு, விடாமுயற்சி ஆகியவற்றுடனும் பவனிவரும் "வணிக வனிதை" தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து என்றும் கன்னியாய் விளங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

திருமதி ச. ஜெயராஜா
அதிபர்

யாழ். இந்து மகளிர் கல்லூரி

# யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துரை

யாழ்ப்பாணம், இந்து மகளிர் கல்லூரி வணிகத்துறையின் 'வணிக வனிதை' மலர் இவ்வாண்டு வெளிவரவிருக்கும் செய்தி கல்வியுலகினர் - குறிப்பாக வணிகத்துறை மாணவர்களுக்குப் பெருமகிழ்ச்சி தருமென நம்புகிறேன்.

இன்று மகளிர் தம் திறனை நிரூபிக்காத துறையே உலகில் இல்லை எனலாம். கல்வித்துறையில் அன்னார் நிலைநாட்டியுள்ள சாதனைகள் அளப்பரியன. அந்தவகையில் சமகால மாணவிகள் குறிப்பாக மருத்துவம், பொறியியல் புலங்களிலிருந்து சற்று விலகி வணிகத்துறையில் முன்னணியில் நிற்க விழைவது பாராட்டுதற்குரியது. அத்துறையில் உயர் கல்வி நாடும் மாணவர்க்கு உசாத்துணை நூல்களாக பெரிதும் உதவுவன சஞ்சிகைகளே.

மாணவர் தம் அறிவை மேலும் விருத்தி செய்வதற்கு மிகவும் உதவக்கூடிய புலம்சார் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் அரிய தகவல்களையும் ஒருங்கே உள்ளடக்கி வெளிவரும் இத்தகைய பாடசாலைச் சஞ்சிகைகள் அவர்கட்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையுமென்பதில் ஐயமில்லை. இந்நோக்கில் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் 'வணிக வனிதை'யானவள் வணிகத்துறை மாணாக்கருக்காற்றும் அரிய சேவை மெச்சத்தக்கது.

எத்துறையிலாயினும் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்வோர் ஆசிரிய சேவையில் மட்டுமின்றி வாழ்க்கைத்திறன்சார் துறைகளில் - தனியார் துறை, அரச வணிக நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றில் தம் கல்வியறிவு, ஆற்றலைப் பிரயோகிக்கத் தக்க சிறந்த வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தி, தாம் முன்னேறுவதுடன் எம் இனமும் நாடும் பல துறைகளிலும் மேன்மேலும் முன்னேற வழிசமைக்க வேண்டுமென்பது என் பேரவா.

இத்தகு தனிச் சிறப்பு வாய்ந்த வணிகத்துறைக் கல்விக்கு மெருகூட்டும் 'வணிகவனிதை' மலர் வெளிவருவதற்கு வேண்டிய வழி காட்டல், ஆலோசனை, ஊக்கம் ஆகியவற்றை அயராது வழங்கிவரும் அதிபருக்கும் துறைசார்ந்த ஆசிரியர்களுக்கும் அவர் வழியிற் செயற்படும் நன்மாணாக்கருக்கும் என் உளமார்ந்த பாராட்டுக்கள்.

''வணிக வனிதை''யானவள் ஆண்டு தோறும் மலர்ந்து வணிக மாணவ உலகுக்கு அறிவொளி பரப்ப வாழ்த்துகின்றேன்.

செல்வி தி. பெரியதம்பி
கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம் - வலயம் 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வணிகப் பொருளியல் மன்றத்தினரால் வெளியிடப்படவுள்ள 'வணிக வனிதை' என்னும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

பல காலமாக கல்வி உலகில் பெரும் பணியாற்றுவதுடன், சைவத்துக்கும், தமிழுக்கும் பெருந்தொண்டு புரிந்துவரும் இக் கல்லூரி வணிகத்துறையிலும் பல சாதனைகள் படைக்க வேண்டும் என்பது எனது ஆவல்.

எனவே இத்துறையினர் இவ் 'வணிக வனிதை'யை வெளிக்கொணர்வதையிட்டு அவர்களை நான் பாராட்டுகிறேன். கற்றலுக்கான ஆக்கங்களைக் கொண்டு அறிவு வளர்ச்சியைத் தூண்டக்கூடியதாக இம் மலர் வெளிவரவேண்டும்.

இப் பணியை நிறைவேற்றுவதற்காக அரும்பாடுபட்டுவரும் அதிபர், ஆசிரியர்கள், வணிக மன்றத்தினர், பெற்றோர், நலன் விரும்பிகள் யாவருக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு இம் மலர் சிறப்புற மலர என் ஆசியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி. புலந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளம் பூரிப்படைகின்றேன்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி வணிக மாணவ மன்றத்தினர் இரண்டாவது இதழாக 'வணிக வனிதை' எனும் இச் சஞ்சிகையை வெளியிடுவது குறித்து பேருவகை அடைகின்றேன். 1975ஆம் ஆண்டில் சிரேஷ்ட இடைநிலை வகுப்புகளிலும், அதனைத் தொடர்ந்து 1981இல் உயர் வகுப்புகளிலும் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தகத்துறையானது இக் கல்லூரியைப் பொறுத்தவரை போதிய பயனைத் தந்துள்ளது. யாழ் மாவட்டத்தில் வணிகக்கல்விக்குரிய பௌதிக, ஆசிரிய, மாணவ வளங்களைப் பெற்றுக்கொள்வதில் முன்னணியில் திகழும் இக்கல்லூரி கடந்த நான்காண்டுகளில் 42 மாணவிகளைப் பல்கலைக் கழகத்திற்கு வணிக உயர்கல்வி பயில அனுப்பியுள்ளமை பாராட்டக்குரியதாகும்.

வணிகத்துறையில் சிறந்து விளங்கும் யாழ் மாவட்டத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய பாடசாலைகளிலொன்றாகத்திகழும் இக் கல்லூரியின் வளர்ச்சியில் நான்கு மாணவிகள் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகள் பெற்றுப் பல்கலைக்கழகம் நுழைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய அடியொற்றலில் இச்சஞ்சிகை வெளியீடானது மேலும் தடம் பதித்து வளர்ச்சி பெறுவதற்கு உறுதுணையாக அமையுமென நம்புகின்றேன். வணிகப்புலமையாளர்களினதும், மாணவர்களினதும் புத்தாக்கங்கள் மேலும் ஊக்கமூட்டுவனவாக அமைந்துள்ளன. எதிர்காலத்திலும் இவ் 'வணிக வனிதை'யானவள் பல்வகைச் சிறப்புக்களுடன் தமிழ் உலகிலும், வணிக உலகிலும் சாதனைகள் படைக்க எல்லாம் வல்ல இறையை இறைஞ்சி என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வ. க. பாலசுப்பிரமணியம்
சிறப்பறுவர் [வணிகவியல்]

யாழ்ப்பாணம் வலயம்1
கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்
1995-02-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவதாக வெளிவருகிறாள்

எமது கல்லூரியின் வணிக மன்றத்தின் வெளியீடான வணிக வனிதையின் இரண்டாவது பவனி கண்டு அகமகிழ்கின்றேன்.

வணிகக் கல்வி இன்றைய கால கட்டத்தில் மாணவ சமுதாயத்தை கவர்ந்திழுக்கும் ஒரு துறையாக மட்டுமல்லாமல் மனித சமுதாய நடவடிக்கைகளில இரண்டறக்கலந்து விட்ட ஓர் துறையாகவும் காணப்படுகின்றது. எமது மாணவ குழாத்தினரின் அகலூக்கத்தின் செயற்பாட்டினால் மலர்ந்த இம்மலர் வணிகக் கல்வியை மேற்கொள்ளும் சகலருக்கும் ஒரு உசாத் துணையாக நின்று மணம் பரப்புவதை நினைக்கும் பொழுது இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

இவ் வணிக வனிதை தனது உலாவினை மேற்கொள்ள மறுகு அமைத்துக் கொடுத்த அதிபர் ஆசிரியர்கள் உட்பட அனைவருக்கும் நன்றி நவில்வதுடன் ஊக்கத்துடன் இவ் வனிதையை ஆக்கம் பெற வைத்த மாணவ குழாத்தினரையும் வாழ்த்துகின்றேன்.

இத்தனைக்கும் மேலாக இவ் வனிதையவளின் உருவிற்கு தருவாக நின்ற விளம்பரதாரர்களையும் இவ்விடத்தில் நன்றியுணர்வுடன் நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன்.

வணிக வனிதையை வண்ணமுடன் வடிவமைத்த அச்சகத்தினரையும் தோன்றாத் துணையாக நின்ற ஏனையோரையும் வாழ்த்தி காலவோட்டத்தில் இவள் ஒரு கலங்கரை விளக்கமாக விளங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

திருமதி க. சிவநித்தானந்தா
மன்றப் பொறுப்பாசிரியர்

யாழ். இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக வனிதைக்கு...

வர்த்தகக் கல்வி கற்கும் மாணவர்கள் தேவைகள் அதிக மாகிவிட்டன. அத்தேவைகளின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் ஒருவகை வெளிப்பாடே இவ் ''வணிக வனிதை'' இத ழாகும். இரண்டாவது இதழ் இக் கல்வியாண்டிலே மலர்கின் றது.

மாணவிகளாகிய நாம் பல இன்னல்களுக்கு மத்தியிலும் இவ் ''வணிக வனிதை''யைக் கட்டுரைகளாகவும், கருத்துருவங்க ளாகவும் படைத்திருக்கின்றோம்.

இவ் "வணிக வனிதை" இதழுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அதிபர் அவர் கட்கும், மன்றப் பொறுப்பாசிரியர்களுக்கும் ஏனைய மாணவி களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு தொடர்ந்தும் இவ்வணிக வனிதை இதழ்கள் வெளிவர வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எமது வணிக வனிதைக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு ஆண்டுதோறும் எமது சஞ்சிகை வளர்பிறையென வளர்ந்து முழுமதியெத் திகழ அனைவரினதும் அன்பையும் ஆதரவினையும் வேண்டுகின்றோம்.

நன்றி

யாழ்/இந்து மகளிர் கல்லூரி
வணிக மாணவர் மன்றம்

ச. சுகந்தினி
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியர் உள்ளத்திலிருந்து

வணிக வனிதை வாசகர்களுக்கு
வரவேற்புக்கள் பல கிடைக்கட்டும்.

எமது கல்லூரியின் வர்த்தகக்கல்விக்கு மெருகூட்டும் வர்த்தகமாணவர் ஒன்றியத்தினால் 'வணிக வனிதை' சஞ்சிகையின் இரண்டாமிதழை உங்கள் கரங்களில் அளிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். இது வர்த்தகக்கல்வியை சமகால சிந்தனைகளுடன் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எமது மன்றத்தின் உயர் இலட்சியத்தின் வெளிப்பாடாகும்.

எமது கல்லூரி அதிபர், பொறுப்பாசிரியர், மற்றும் நல்லாசிரியர்கள் இம்மலரின் வெளியீட்டிற்கு உறுதுணையாக இருந்தனர். எமது மன்ற உறுப்பினர்களின் இடைவிடாத் தொழிற்பாட்டினால் இம்மலர் இன்று வெளிவந்து உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

புலமைமிக்க அறிஞர்களின் கருத்துக்களையும், மாணவர்களின் ஆக்கங்களையும் கொண்டுள்ள இம்மலர் தரும் வணிகக் கல்வியின் அறிவைப் பெற்று அறியாமையைப் போக்கி பயன் பெறுங்கள்.

எமது வணிகவனிதை மேலும் ஓங்கிவளர வாசகர்களாகிய உங்களின் ஆதரவு என்றும் கிடைக்கட்டும்.

நன்றி.

இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி

## 1991 - வர்த்தகம்

1. யமுனா . ப
2. சந்திரபவானி . ந
3. ஜெயவதனி . பொ
4. குகப்பிரியா . ந
5. மஞ்சுளா . இ
6. மேகலா . இ
7. சசிதிரா . இ
8. மல்லிகாதேவி . பே
9. கீதாஞ்சலி . ம
10. மாலினி . ந
11. துஷ்யந்தினி ; ந
12. தயாளினி . சி

## 1992 - வர்த்தகம்

1. லோகேஸ்வரி . ந
2. மஞ்சுளாதேவி . T
3. சிவாஜினி . K
4. சுகந்தினி . T
5. அனுராதா . R
6. நளாயினி . N
7. சுகந்தினி . R
8. மைதிலி . T

## 1993 - முகாமைத்துவம்

பரமேஸ்வரி . க

## வர்த்தகம்

1. யசோதா . மா
2. துஸ்யந்தி . ச
3. யோகநாயகி . க
4. சுரேகா . கோ
5. துஷ்யந்தி . ந
6. நளாயினி . ந
7. பகீரதி . ப

## 1994 - வர்த்தகப் பிரிவில் பல்கலைக் கழகத்திற்குத் தகுதி உடையோர்

1. தயாளினி . க
2. அம்பிகை . இ
3. பகீரதி . ப
4. மஞ்சுளா . ஜ
5. வானதி . க
6. சுஜீதா . ச
7. அனுசா . ப
8. சவிதா . ந
9. தாரணி . உ
10. சுபாஜினி . மு
11. வத்சலா . ப
12. சாந்தரூபி . சோ
13. கவிதா . த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ஆம் ஆண்டுப் பிரிவில் 4'A' சித்திகளைப் பெற்று
பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறவுள்ளோர்



தயாளினி கனகலிங்கம்



அம்பிகை இராமுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக மாணவர் ஒன்றியம் செயற்குழு – 1995

யாழ். இந்து மகளிர் கல்லூரி



அமர்ந்திருப்பவர்கள்:- (இ-வ) பா. ராதிகா (செயலாளர்), க. சிவநித்தானந்தா (பொறுப்பாசிரியர்), யோ. கந்தையா (பிரதி அதிபர்), ச. சுகந்தினி (தலைவர்), ச. ஜெயராஜா (அதிபர்), ம. பரமநாதன் (பிரதி அதிபர்), ஞா. கவிதா (பொருளாளர்)

நிற்பவர்கள்:- (இ-வ) ம. ஆனந்தமதி (உப-செயலாளர்), தே. சுமணா (பத்திராதிபர்). சுதமதி (மலர்க்குழு) பா. ஷர்மிலா (மலர்க்குழு), அ. யாழினி (உப-தலைவர்), சி. சிவாஜினி (மலர்க்குழு), குகப்பிரியா (மலர்க்குழு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD.
NALLUR, JAFFNA
No..................

# 2001 ஆம் ஆண்டில் இலங்கை 'புதிய கைத்தொழில்மய நாடு' என்னும் இலக்கினை அடைவதில் எதிர்நோக்கும் வரையறைகள்

ஞா. கவிதா
ஆண்டு 13 B
வர்த்தகப் பிரிவு.

**21-ம்** நூற்றாண்டை இனிமையாக வரவேற்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்திலே உலகின் ஒவ்வொரு நாடும் ஏதாவது ஒரு புதிய இலக்கினை அடைந்துகொள்ள வேண்டுமென திடசங்கற்பம் கொண்டு அவ்வழியில் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அவ்வகையில் இலங்கை ''புதிய கைத்தொழில் மயமாகிய பொருளாதாரமாக உருவாகிவிட வேண்டும் என்ற ஆவலுடன் வீறுநடை போட்டுக்கொண்டு இருக்கின்றது. ஆனால் இன்றுள்ள இலங்கைப் பொருளாதாரத்தை சீர்தூக்கிப் பார்க்கின்ற போது இன்னும் ஆறு ஆண்டு காலத்தில் இந்த இலக்கினை அடைந்து கொள்ள முடியுமா என்பது பொருளியலாளரிடையே ஒரு வினாவாக தொக்கி நிற்கின்றது.

ஒரு நாடு புதிய கைத்தொழில் மயமாகிய நாடு என வகைப்படுத்தப்படுவதற்கு அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25% க்கு மேற்பட்ட பகுதி பொருள் உற்பத்திக் கைத்தொழில் மூலம் பெறப்பட்டதாக இருக்கவேண்டும். தலா தேசிய உற்பத்தி 2000 அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்டதாகவும் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதம் 8%த்தையும் விட உயர்வாகக் காணப்படல் வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நோக்குகின்ற போது உள்நாட்டுச் சேமிப்பு 30% க்கும் உயர்வாகவும் மொத்த உள்நாட்டு முதலீடு 35% க்கும் அதிகமாகவும் அமைந்திருத்தல் வேண்டும். மேலும் முதலீட்டின் சராசரி வளர்ச்சி வீதம் 10% மாக இருப்பதுடன் உள்நாட்டு சேமிப்புக்கள் முதலீட்டிற்குப் போதாத இடத்து அவற்றை வெளிநாடுகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் வகையில் நேரடி வெளிநாட்டு முதலீட்டின் பாரிய உட்பாய்ச்சல் இடம் பெறவேண்டும். ஏற்றுமதி, இறக்குமதிகள் ஆண்டுக்கு 10% இதற்கும் அதிகமாக உயர்வடைந்து செல்வதுடன் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகளையும் பணவீக்கத்தையும் குறைத்து விடக்கூடிய உறுதியான நாணய அரசிறைக் கொள்கைகள் காணப்படவேண்டும். மானிட மூலதனம், உள்நாட்டு வசதி பந்தோபஸ்து என்பவற்றின் மீதும் வருடாந்தம் கணிசமானளவில் முதலீடுகள் இடம்பெற வேண்டும்.

அண்மைக் காலத்தில் 'நான்கு சிறிய வேங்கைகள்' 'ராஜ நாகங்கள்' என்று அழைக்கப்பட்டுவரும் கொரியாக் குடியரசு, சிங்கப்பூர், ஹொங்கொங், தாய்வான் போன்ற ஆசிய நாடுகள் புதிய கைத்

தொழில்மயநாடுகள் என்னும் வரிசையில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் வரலாற்றை இலங்கையின் போக்குடன் ஒப்பிட்டு நோக்குகின்ற போது இலங்கை புதிய கைத்தொழில் மயமாகிய நாடு என்னும் வரிசையில் குறித்தகாலத்தில் சேர்ந்து கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தெளிவாக இனங்காண முடிகிறது.

புதிய கைத்தொழில் மயநாடுகள் வரிசையில் அங்கத்துவம் பெற்றுள்ள ஆசிய நாடுகள் 6000 அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட தொகையை வருமானமாகப் பெறுவதுடன் ஆண்டு சராசரி பொருளாதார வளர்ச்சி வீதம் 9% ஐ விட உயர்வாக கொண்டுள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொருள் உற்பத்தித்துறை 29% இலும் கூடுதலான பங்கைப் பெற்று வருவதுடன் சேவைகள் துறை பங்களிப்பு 70% ஐ அண்மித்துள்ளது.

இலங்கையை எடுத்து நோக்கின் 1993 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் கணிப்பீட்டின்படி தலா நபர் வருமானம் 588 அமெரிக்க டொலர்கள் ஆகவும் ஆண்டு சராசரி பொருளாதார வளர்ச்சி வீதம் 7. 6% ஆகவும் இருக்கின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொருள் உற்பத்தித்துறையின் பங்கு 20% ஐ விட குறைவாக காணப்படுவதுடன் ஆக்கக் கைத்தொழிலின் பங்களிப்பு 14% மாகவே காணப்பட்டுள்ளது.

எனவே இலங்கை தனது இலக்கினை அடைந்து கொள்வதில் செல்ல வேண்டிய தூரம் கூடுதலாகவே காணப்படுகின்றது. தலா தேசிய உற்பத்தியை 2000 அமெரிக்க டொலர்கள் என்ற மட்டத்திற்காவது ஆக்கிக் கொள்ளும் வகையில் உள்நாட்டு உற்பத்தி மட்டத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். இவ்விலக்கை அடைய வேண்டுமாயின் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை 15% க்கும் உயர்வாக நிர்ணயிக்க முயல வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை இது கஷ்டமானதொன்றாகவே உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நோக்குகின்ற போது உள்நாட்டு சேமிப்பு மட்டம் 16% மாக மட்டும் இருப்பதுடன் மொத்த உள்நாட்டு முதலீட்டு மட்டமும் 26% க்கும் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் முதலீட்டுக்கான இடைவெளியை நிரப்புவதில் பாரிய வெளிநாட்டு முதலீடு தேவைப்படுகின்றது. வரவுசெலவுத் திட்டக்குறை 8% மாக காணப்பட்டு உள்ளமையால் பொதுத்துறைக் கடன்கள் அதிகரித்துள்ளதுடன் பணவீக்கத்தினையும் உயர்வடையச் செய்துள்ளன. உள்நாட்டு உற்பத்தியை பொறுத்த வரையில் வேளாண்மைத்துறை மந்தமான வளர்ச்சியையே காட்டி உள்ளது. 1980- 90 வரையான காலப்பகுதியில் சராசரி 2.3% ஆண்டு வளர்ச்சியே காணப்பட்டுள்ளது. 1992 இல் 1. 6% மும் 1993 இல் 4. 9% மாகவும் இவ் வளர்ச்சிப் போக்கு காணப்படுகின்றது. இத்தகைய போக்கிற்கு உள்நாட்டில் வடகிழக்கு பகுதிகளில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலையும் பாதகமான காலநிலையும் பொறுப்பாக இருந்ததுடன் விவசாயத் துறையில் விசேடமாக பெருந்தோட்டத் துறைகளை பொறுத்தவரையில் போதிய உரப்பாவனை இன்மை, முகாமைத்துவ குறைபாடுகள் போன்றவை காரணங்களாக இருந்துள்ளன. கைத்தொழில்துறை சேவைகள் துறை ஓரளவு வளர்ச்சியை காட்டிய போதும் எதிர்பார்க்கும் இலக்கை அடையும் வகையிலானதாக அவ்வளர்ச்சி அமையவில்லை.

இத்தகைய அவதானிப்புக்களின் அடிப்படையில் இலங்கை தனது இலக்கை அடைந்து கொள்ளும் வகையில் முதலாவதாக கைத்தொழில் நிகழ்வுப் போக்கினை ஆழமாக்கிப் பன்முகப்படுத்த வேண்டியுள்ளது. இலங்கை ஊழியர் செறிவு மிக்க நாடாக இருப்பதுடன் கைத்தொழில் மயமாக்கலில் முதலாவது கட்டத்தில் முதிர்ச்சியடைந்துள்ளது. கைத்தொழில் மயமாக்கலை பன்முகப்படுத்தும் நோக்கில் இது முக்கியமான கட்டமாகும். பெருந்தொகையானோர் இக்கட்டத்தில் வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதுடன், உள்ளூர்த் தொழில் முயற்சியாளர்கள் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நவீன தொழில் முனைப்பாண்மைத் திறன்களைக் கற்றுக் கொள்வதற்கும் முகாமை நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்கும் உலக சந்தையுடன் பரஸ்பரம் தொடர்பினை உருவாக்கிக் கொள்ளவும் வாய்ப்பினை இது அளிக்கின்றது.

அதேவேளை இங்கு சில கட்டுப்பாடுகளும் காணப்படுகின்றன. மிகவும் தளர்ச்சியான இயல்பு, குறைந்தளவிலான உள்நாட்டு மூலப்பொருட்களின் சேர்க்கப்பட்ட பெறுமதி, குறைந்த மட்டத்திலான திறன்களின் உருவாக்கம், உள்நாட்டுக் கைத்தொழில்களுடன் ஓரளவுக்கே தொடர்பு, பிணைப்புக்கள் ஏற்படுத்திக் கொண்டமை போன்றவை இவ்வகையில் குறிப்பிடத்தக்கவையாகும். எனவே நாடு கைத்தொழில் மயமாக்கலின் 2ஆம் கட்டத்தை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டியுள்ளது. அவ்வகையில் உயர் அளவிலான சேர்க்கப்பட்ட பெறுமதியைக் கொண்ட உற்பத்திகள், தொழில் நுட்ப ரீதியில் முன்னேற்றம் அடைந்த சிக்கலான உற்பத்தி வடிவங்கள், உயர்திறன்களை உருவாக்கக்கூடிய ஆற்றல், உயர் வளர்ச்சிக்கு அவசியமான நாட்டின் கைத்தொழில் ஆற்றல்களையும் திறன்களையும் கட்டி எழுப்புதல் போன்ற அம்சங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது. பெருமளவுக்கு நவீனமான பொருள் உற்பத்தி வடிவங்களை நோக்கி நகர்ந்து செல்வதானது பேரளவிலான வெளிநாட்டு நேரடி மூலதன உட்பாய்ச்சல்களைக் கவர்ந்திருப்பதற்கான மிகவும் தாக்கமான ஒரு வழிமுறையாகவும் உள்ளது. தற்போது சார்பு ரீதியில் குறைந்த மட்டத்திலான வெளிநாட்டு நேரடி முதலீடே காணப்படுகின்றது. ஆசியாவில் துரிதமாக வளர்ச்சியடைந்து கொண்டு வரும் நாடுகளுள் மிகப்பிரமாண்டமான அளவில் உட்பாய்ச்சப்படும் வெளிநாட்டு நேரடி முதலீடு பெருமளவுக்கு தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றம் அடைந்துள்ள கைத்தொழில்களுடன் சம்பந்தப்பட்டதாகக் காணப்படுகிறது. உதாரணமாக தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளின் மொத்த ஏற்றுமதியில் மூலதனப் பொருள்களின் ஏற்றுமதிகள் முறையே 22% ஆகவும் 38% ஆகவும் காணப்படுகிறது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் 2% மாகவே காணப்படுகின்றது. இலங்கையின் இந்நிலைமைக்கு சார்புரீதியில் குறைந்த மட்டத்திலான வெளிநாட்டு நேரடி முதலீடு காணப்படுவதும் இம்முதலீட்டின் பெரும்பகுதி எளிமையான ஏற்றுமதி முறைப்படுத்தும் தொழில் துறைகளில் தங்கியிருக்கின்றமையும் பிரதான காரணமாகும். இந்நிலைமையை மாற்றி இலங்கை வெளிநாட்டு முதலீட்டினை தயாரிக்கப்பட்ட ஆடைகள் அல்லாத இரசாயனப் பொருட்கள், இலத்திரனியல் உற்பத்திகள், போக்குவரத்து உபகரணங்கள் போன்ற உற்பத்திகளினை நோக்கி மூலதன முதலீட்டினை நகர்த்திச் செல்லுதல் அவசியமானதாகும்.

கைத்தொழிற் துறையை நவீன மயமாக்கி உற்பத்தியினை அதிகரித்த போதும் வேளாண்மைத்துறையின் வளர்ச்சியில் மந்தமும், பின்னடைவும் நிலவிவரும் வரையில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி ஒரே நேரத்தில் ஏற்படமுடியாது. இதனால் இரண்டாவதாக விவசாயத் துறையின் வளர்ச்சியை தூண்டிவிட வேண்டியது அவசியமாக உள்ளது. வளர்ச்சியின் மீது வேளாண்மைத்துறையின் மந்தம் ஏற்படுத்தி வரும் தாக்கம் கைத்தொழில் மயமாக்கலின் வேகம் பெருகி வருவதுடன் இணைந்தவகையிலும் வெளியீட்டில் வேளாண்மைத் துறையின் பங்கு குறைந்து வருவதுடன் இணைந்த வகையிலும் வீழ்ச்சியடைய முடியும். இவற்றைத் தவிர்க்க சகலவேளாண்மைப் பயிர் வகைகளதும் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திகளின் உற்பத்தியினை அதிகரித்துக் கொள்வதுடன் உள்நாட்டு

தேவையை நிறைவு செய்யும் வகையில் நெல், உபஉணவுப் பயிர்களின் உற்பத்தியினை அதிகரித்தல் வேண்டும்.

உற்பத்திச் செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் மூன்றாவதாக பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்குவதில் அடுத்து அரசு கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமான முன் நிபந்தனைகளான வலு, நீர் விநியோகம், பாதை அபிவிருத்தி, துறைமுகங்கள், விமானநிலையங்கள், விஸ்தரிப்புப் பாவனையாளருக்குச் தொந்தரவுகளை அளிக்காத தொலைத்தொடர்பு வசதிகள் என்பவற்றை உள்ளடக்கிய திறமையான உள்கட்டமைப்பு வசதிகளை அமைத்துக் கொடுத்தலே இவ் அம்சமாகும். வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கான கவர்ச்சியான ஓர் அம்சமாக இந் நடவடிக்கை அமையும். இந்நிலையில் உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கு அரசின் சார்பில் கணிசமான அளவிலான மூலதன முதலீடுகளை ஒதுக்க வேண்டிய தேவை உள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலதனத்தையும் தொழில்நுட்பத்தையும் எடுத்துவரும் அதேவேளையில் உள்ளூர் வசதிகளை உருவாக்கிக் கொடுப்பது அரசின் பொறுப்பாக இருந்து வருகின்றது. இவ்வகையில் நான்காவதாக முக்கியம் பெறும் அம்சம் மனித மூலதன முதலீடுகளை அபிவிருத்தி செய்வதிலும் நாட்டின் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதனைத் தடுத்து கண்காணிப்பதிலும் அரசு மிகவும் நிர்ணயமான ஒரு பங்கினை வகிக்க வேண்டும் என்பதாகும். இவ்வகையில் மனித மூலதனத்தின் மீதான முதலீடுகளை அதாவது கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி, அபிவிருத்தி தொடர்பான முதலீடுகளை அரசு அதிகரிக்க வேண்டும். தொழில்களுடன் சம்பந்தப்பட்ட மனிதவலு தொடர்பான திறன்களையும், ஆராய்ச்சி ஆற்றல்களையும் மேம்படுத்துவதற்கு இந்நடவடிக்கை அவசியமாகும். கல்விகற்ற திறன் களைப் பெற்றுள்ள ஊழியப்படை பெருமளவுக்கு உற்பத்தித்திறன் கொண்டதாகவும் வெளிநாட்டு முதலீட்டினை கவர்ந்திருக்கக் கூடியதாகவும் இருந்து வருகின்றது. குறிப்பாக, புதிய கைத்தொழில் மயநாடான கொரியாக் குடியரசு தனது பொதுச்செலவினத்தில் 23.3% தை இந் நோக்கத்திற்காக செலவு செய்யும் அதே வேளை இலங்கை 5.4% தையே செலவு செய்கின்றது. இந்நிலைமை விருத்தி செய்யப்பட வேண்டியதாகும்.

மேலும் கைத்தொழில்களை குறை நிரப்பு செய்யக்கூடிய செயல் முனைப்பு மிகுந்த உள்ளூர் தொழில் முயற்சிகளின் வளர்ச்சி வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான ஒரு மேலதிக ஊக்குவிப்பாக இருந்து வரும் சந்தை நோக்கிலான கொள்கைகள், உள்ளூர் ஆற்றல்களை மேம்படுத்தல் தொடர்பாக அரசின் கைத்தொழில் ஊக்குவிப்புக்கள் போன்றவையும் உள்நாட்டில் உறுதியான கைத்தொழிலாற்றலை கட்டியெழுப்ப அவசியமான அம்சங்களாக உள்ளன.

இலங்கை சார்புரீதியில் அதிக குடித்தொகை கொண்ட நாடாக இருப்பதால் குடித்தொகை வளர்ச்சி கட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்பது அடுத்து முக்கியம் பெறும் அம்சமாக உள்ளது. அதிகரிக்கும் சனத்தொகைக்கு தொழில் வாய்ப்பு, இருப்பிட வசதிகளை வழங்குவதில் நாடு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதுடன் தொழிலின்மை, சுற்றுச்சூழல் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துதல் போன்றவற்றால் அதிகரிக்கும் சனத்தொகை பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துவிடுகின்றது.

மேற்கூறப்பட்ட அம்சங்களுடன் இணைந்த வகையில் தொடர்ந்து கவனத்தை ஈர்க்கும் அம்சம் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியின் போது ஏற்படக்கூடிய சமூக, சூழல் தாக்கங்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையில் தயார்நிலையில் இருக்கவேண்டும் என்பதாகும். துரித

பொருளாதார வளர்ச்சி சுற்றுச்சூழல் மீது ஆகக்குறைந்த மட்டத்திலான சதத்தினை மட்டுமே நிகழ்த்தும் வகையில் உறுதி செய்து கொள்ள வேண்டும். அதாவது இந்நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய சமூக,சுற்றுப்புறச்சூழல் செலவுகளை பெருமளவுக்கு குறைத்துக் கொள்ளும் வகையில் கைத்தொழில் மயமாக்கல் அமைய வேண்டும் என்பதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

கைத்தொழில் மயமாக்கலுடன் இணைந்த துரித பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை நோக்கம் மக்களின் வருமான மட்டத்தினை உயர்த்தி வாழ்க்கைத் தரங்களை விருத்தி செய்வதாகும். எனவே பொருளாதார வளர்ச்சியின் பயன்களை சமமான விதத்தில் மக்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதனை உறுதிசெய்தல் வேண்டும். இலங்கையில் அதிகரித்துச்செல்லும் உற்பத்தியில் கணிசமான பங்கு ஒரு சிறு பிரிவினைச் சென்றடைய பெரும்பகுதியினர் மிகக்குறைந்த உற்பத்தி நன்மைகளையே அனுபவிக்கின்றனர். இதனால் வேலைவாய்ப்பு, வருமானம் என்பவற்றின் அடிப்படையில் இந்த அனுகூலங்களை நாட்டுமக்கள் அனைவரும் பெற்றுக் கொள்ள முடியாது இருக்கின்றது. இந்த ஏற்றத்தாழ்வுகளை நீக்க குறைந்த வருமானம் பெறுவோர் சார்பாக அரசு பல்வேறு சமூகநலத் திட்டங்களை அறிமுகப் படுத்தி வருகின்றது. குடித்தொகை வளர்ச்சியுடன் இணைந்த வகையில் இவற்றை நடைமுறைப் படுத்துவதன் மூலம் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ள முடியும்

எனவே ஒட்டு மொத்தமாக நோக்கின் மேற்கூறப்பட்ட வரையறைகளைத் தாண்டி நிற்கும் போக்கிலேயே புதிய கைத்தொழில் மயநாடு என்னும் அந்தஸ்தை 2001 ஆம் ஆண்டில் இலங்கை அடைவது சாத்தியமானதாகும். □

---

## விலை கூறுடைய முதலீடு — விலைகூறாத முதலீடு (நிரற்படுத்தப்பட்ட முதலீடு)

நிறுவனங்கள் வேறு கம்பனிகளின் பங்குகளிலும் தொகுதிக்கடன் பத்திரங்களிலும் முதலீடு செய்யப்பட்டு அவை பங்கு முதற்சந்தையின் அலுவலகப்பட்டியலில் விலை பதிவு செய்யப் பட்டிருக்குமாயின் அவை விலை கூறுடைய முதலீடு ஆகும்.

அலுவலகப்பட்டியலில் விலை பதிவு செய்யப்பட்டிராத பங்குகளில் அல்லது தொகுதிக்கடன்களில் முதலீடு செய்தால் விலை கூறற்ற முதலீடு ஆகும்.

# புவிக்கோளத்தின் நிலையற்ற மேலோடு கண்டங்கள், சமுத்திரங்கள் என்பவற்றின் இன்றைய பரம்பல் நிலைமைகளை விளக்கிக் கொள்வதற்கான ஒரு முக்கிய அம்சம்


எஸ். ரி. பி. இராஜேஸ்வரன்,
முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ் / பல்கலைக் கழகம்.

ஜி. றொபேர்ட்
விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ் / பல்கலைக் கழகம்.


புவி தோற்றம் பெற்ற காலத்தில் புவி மேற்பகுதி எவ்வாறு இருந்திருக்கும் என்பதை அறிவதற்கு எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. இன்று உள்ளன போல கண்டங்கள் சமுத்திரங்கள் இருந்தனவா? அல்லது வேறு வகையான நில அமைப்புக்கள் இருந்திருக்கக் கூடுமா? பொதுவாக மிக அண்மைக்காலம் வரை புவியின் மேற்பகுதியானது குளிர்வடைந்து திண்ம நிலைக்கு மாறியது. அதாவது ஓடு (Crust) போன்ற அமைப்பை பெற்றுள்ளது என்ற கருத்து நிலவி வந்தது. அதன் அடிப்படையில் புவி மேற்பரப்பு அம்சங்கள் விளங்கிக் கொள்ளப்பட்டது. புவிச்சரிதவியல், சமுத்திரவியல், புவிப்பௌதிகவியல் போன்ற துறைகளில் 2 - ம் உலக மகாயுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட அபரிமிதமான வளர்ச்சியின் பயனாக புவிபற்றிய பல விஞ்ஞான ரீதியான ஆய்வு முடிவுகள் பெறப்பட்டு அவற்றின் அடிப்படையில் புவி மேற்பரப்பு பற்றிய விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன, தொடர்ந்து செய்யப்பட்டுவரும் புவிப்பௌதிகவியல், சமுத்திரவியல், புவிச்சரிதவியல் ஆய்வு முடிவுகள் இதுவரை காலமும் புவி மேற்பரப்பு அம்சங்களுக்கு கொடுக்கப்பட்ட விளக்கங்களை முற்றாக மாற்றி அமைப்பனவாக இருக்கின்றது. இதுவரை காலமும் 'புவியின் மேலோடு' அல்லது மேற்பகுதி நிலையான (Stable Crust) பொருள் என்று எண்ணப்பட்டு வந்ததை, இன்று நிலையற்ற, மாற்றமுற்றுக் கொண்டுவரும் (Unstable Crust) பொருளாக விபரிக்கின்றனர். புவி மேலோட்டில் இன்று காணப்படும் சமுத்திரங்கள் - கண்டங்கள் போன்றவற்றின் அமைப்பு, உருவவியல் விஞ்ஞான ரீதியாக விபரிப்பதுடன் அவற்றின் காலங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக அட்லான்டிக் சமுத்திரத்தின் வயது 200 மில்லியன் (20 கோடி) வருடங்கள் என்று வரையறுத்துள்ளனர். அத்துடன் சமுத்திர அடித்தளங்கள் புதிது புதிதாக உருவாகி வருவதுடன் புவியோட்டின் பழைய பகுதிகள் புவியின் உட்பகுதிகளுக்குள் சென்று விடுவதாகவும் கண்டு பிடித்துள்ளனர். இந்நிகழ்வுகளாலேயே புவியோட்டின் மிகப்பழைய அல்லது புவி தோற்றம்பெற்ற காலத்தில் இருந்த பகுதிகளை அறியமுடியாதுள்ளது என்றும் விளக்கம் அளிக்கப்படுகின்றது. மற்றும் புவிநடுக்கங்கள் எரிமலை நிகழ்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அகழிகள் போன்றவை புவி மேலோட்டின் நிலையற்ற தன்மையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. என்வே, ''புவிக்கோளத்தின் நிலையற்ற மேலோடு'' என்னும் இக்கட்டுரையில் மாணவர்களின் தேவைக்கு ஏற்றவகையில் சுருக்கமாக சில அடிப்படை விபரங்கள் தொகுத்துத் தரப்படுகின்றன.

## புவியின் அமைப்பு:-

புவியின் அமைப்பினை சுருக்கமாக ஒட்டுப்பகுதி, உள்அகப்பகுதி (Mantle) மையப்பகுதி (Core) என்று பிரிக்கப்படுகின்றது. இவ்வமைப்பு மேலும் பல உப பிரிவுளாக அவற்றின் அமைப்பு வேறுபாடுகளைப் பொறுத்து பிரிக்கப்படுகின்றது. இதில் ஒட்டுப்பகுதி சிலிக்கா, அலுமினியம் மக்னீசியம் போன்ற பொருட்களால் ஆக்கப்பட்டுள்ளது. கண்டங்கள் சிலிக்காப் பொருட்களினால் ஆக்கப்பட்ட படைகளாலும் சமுத்திர அடித்தளங்கள் சீமா பொருட்களால் ஆக்கப்பட்ட படைகளால் காணப்படுகின்றது. சீயல் என்று அழைக்கப்படும் கண்டங்கள் அமைந்திருக்கும் ஓட்டுப்படையானது 10 - 90 கி. மீ தடிப்பில் காணப்படுகின்றது. சமுத்திர அடித்தளங்கள் தடிப்பம் அல்லது தடிப்பு (5 - 10 கி. மீ) குறைந்து காணப்படுவதுடன் அடர்த்தி (3. 0 கி. மீ) கண்டப்பகுதியிலும் பார்க்க கூடியதாகவுள்ளது. ஓட்டுப்பகுதி அதன் கீழ் உள்ள உள்ளகப்பகுதியிலும் பார்க்க அடர்த்தி குறைந்தது. உள்ளகப்பகுதியின் மேற்பாகம் (Upper Mantle) 1000 கி. மீ தடிப்புடைய பகுதியாகவும், கீழ் உள்ளகப்பகுதி (Lower Mantle) 1900 கி. மீ தடிப்புள்ள பகுதியாகவும் இருக்கின்றது. கோளவகத்திற்கும் புவியின் மையப் பகுதிக்கும் இடையில் ஒரு வலயம் உள்ளமை அண்மைய ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. இது ''D'' படை (Dee Double Prime) என அழைக்கப்படுகின்றது. இவ்வலயம் கோளவகத்தின் தாழ்பகுதியிலும் மையம் ஆரம்பிக்கும் பகுதிக்கும் இடையில் 200 கி.மீ - 400 கி.மீ தடிப்பில் உள்ளதாக ஊகிக்கப்பட்டிருக்கின்றது. இப்பகுதியில் புவிநடுக்க அலைகளின்சராசரி வேகத்தில் ஏற்படுகின்ற மாற்றம் இப்பகுதி அமைப்பில் அல்லது வெப்பநிலையில் அல்லது இரண்டிலும் பெரிதளவு வேறுபாடு உள்ளதை வெளிப்படுப்படுத்துவதாக கருதப்படுகின்றது. புவியின் மையப்பகுதியை வெளிமையம், உள்மையம் எனப்பிரிக்கலாம். வெளிப்பகுதி 2200 கி. மீ தடிப்புடையது. வெப்பநிலை 2000 பாகை செ. வரை வேறுபடுகின்றது. ஏறத்தாழ புவி மேற்பரப்பிலிருந்து 5000 கி. மீ. கீழ் திரவ நிலை மாறு வலயம் உள்ளது. இதன் கீழ் இறக்கமான உள்மையம் 2216 கி. மீ தடிப்பில் காணப்படுகின்றது. இங்கு அடர்த்தி ஒட்டுப்பகுதியினை விட அதிகமானதாக இருக்கின்றது.

புவியின் ஓட்டுப்பகுதிக்குக் கீழ் இடம் பெறுகின்ற வலிமையான 'மேற்காவுகை சுற்றோட்டங்கள் (Convection currents) பற்றிய தகவல்கள் புவியோடு நிலையற்ற தன்மையை உறுதி செய்வனவாக உள்ளன. இத்தகைய மேற்காவுகைச் சுற்றோட்டங்கள் உள்ளகத்தில் இருந்து மேல் வந்த பின்னர் மீண்டும் கீழ் இறங்கும் சுற்றோட்டத் தன்மை விளக்கப்படுகின்றது (படம் 1 மேற்காவுகைச்சுற்றோட்டம்)

## மேற்காவுகைச் சுற்றோட்ட விளக்கம்:-

புவியின் உள்ளகப்பகுதியில் மேற்காவுகைச் சுற்றோட்டம் படம் - 1 ல் காட்டப்பட்டுள்ளதைப் போல உள்ளகத்தில் இருந்து மேல் வருகின்றது.

மேல்வந்த சுற்றோட்டம் பின்னர் இரு கிளைகளாகப் பிரிந்து எதிர் எதிர் திசையிலும் செல்கின்றது. இந் நிகழ்ச்சியில் ஏற்கனவே திண்மமாயிருந்த ஓட்டுப்பகுதியானது பிளவுபட்டு மேற்காவுகைச் சுற்றோட்டத்தின் திசைக்கு ஏற்ப நகர்த்தப்படுகின்றது.

சுற்றோட்டங்கள் மேல்வந்து. கிளைகளாகப் பிரியும் இடங்களில் ஓட்டுப்பகுதி உடைவுபட்டு இருபகுதியாக நகர அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளிகளில் புவியுள்ளீட்டுப் பொருள்கள் (magma) படிவுறுகின்றன. இப்படிவாக்கம் மேற்காவுகைச்சுற்றோட்ட மத்திய அச்சுக்கு சமாந்திரமாக இருபக்கங்களிலும் இடம் பெறுகின்றது. தொடர்ந்து மேற்காவுகைச்சுற்றோட்டங்கள் இடம் பெறும்போது புதிய நகர்வுகள் இடம் பெற, பழைய படிவுகள் இருதிசைகளிலும் நகர்ந்து கொள்ள அவ் இடங்களில் புதிய படிவுகள் படிந்து கொள்கின்றன. இவ்வண்ணம் தொடர்ந்த முறையில் மேற்காவுகை சுற்றோட்ட நிகழ்வுகள் இடம்பெறும் பொழுது புதிய புதிய படிவுகள் படிந்து இன்றைய சமுத்திர அடித்தளங்கள் உருவாகியுள்ளன என்று கூறப்படுகின்றது. இவ்வாறு புவியுட்பாகப் பொருட்கள் படிவதனால் சமுத்திர அடித்தளங்கள் உருவாகியுள்ளமையை 1960 களின் ஆரம்பத்தில் ''ஹரி ஹெஸ்'' (Harry Hess) என்பவரின் ''கடற்தரை பரவுதற் கோட்பாடு (Sea Floor Spreading Hypothesis) விபரிக்கின்றது. (படம்- 11 கடற்தரை பரவுதலும் சமுத்திர அடித்தளம் உருவாக்குதலும்).

## புவியோட்டின் தட்டுக்கள்:-

இதுவரைகாலமும் நம்பப்பட்டது போல புவியோடானது ஒத்ததன்மையான ஒரு பொருளாக, புவி குளிர்ந்து வருவதனால் மேற்பகுதி உறைந்த இறுகிய படையாக அமைந்துள்ளது என்ற கருத்து மறுக்கப்பட்டுள்ளது. புவியோடானது பல துண்டுகள் அல்லது தட்டுக்களின் தொகுதியாகக் காணப்படுகின்றது. சில கணிப்புக்களின்படி புவியோடானது 8 பெரும் தட்டுக்களாகவும், 24 ற்கு மேற்பட்ட சிறு தட்டுக்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பசுபிக் தட்டு மாத்திரமே சமுத்திர ஓட்டினால் ஆக்கப்பட்டதாகும், ஏனையவை கண்ட, சமுத்திர ஓடுகளினாலானவையாகும். புவியோட்டின் பழைய தட்டுக்கள் புவியுட்பாகங்களில் அமிழ்ந்துவிட்டன. தட்டுக்களின் அசைவு காரணமாக தட்டுக்களின் நுணுக்கமான விபரங்கள் சிக்கலாக இருக்கின்றன. ஆயினும் இன்றைய விஞ்ஞான அறிவுக்கு எட்டிய வகையில் புவியோட்டின் நுணுக்கமான அசைவுகள் அறியப்பட்டுக்கொண்டு வருகின்றது. ஆயினும் புவியோட்டின் சிக்கலான புதிர்கள் தெளிவுபடுத்தப்படவேண்டியே உள்ளன. (படம்- 111 புவியோட்டின் பிரதான தட்டுக்களும் அவற்றின் நகர்வின் திசைகளும்.)

படம்- 111-ல் இன்றைய கண்டங்கள், சமுத்திரங்களை அடக்கியதாக தட்டுக்களின் பரம்பல் காட்டப்படுகின்றது. தட்டுக்களின் எல்லைகள் அல்லது விளிம்புகள் மேற்காவுகைச்சுற்றோட்டம் மேல்வரும் பகுதியாகவும், கீழ்வரும் பகுதியாகவும் இருக்கின்றன. இன்றைய அத்திலாந்திக் சமுத்திரத்தினதும், இந்து சமுத்திரத்தினதும் மத்தியில் அமைந்திருக்கும் நடுச்சமுத்திர பாறைத்தொடர் (Mid- Oceanic Ridge தட்டுக்களின் விளிம்புப்பகுதியாக அமைவதை படத்தில் அவதானிக்கலாம். மேலும் இத்தொடர் நிலப்பகுதிகளிலும் பரவுகின்றது. செங்கடல் ஊடாக கிழக்கு ஆபிரிக்கா மத்தியதரைக்கடல் பகுதியூடாகச் சென்று அத்திலாந்திக் சமுத்திரத்தை அடைகின்றது. பசுபிக் சமுத்திர கண்டக்கரைகள் சமுத்திர அகழி வலயங்கள் பசுபிக் தட்டின் எல்லைகளாக அமைவதையும் படத்தில் இருந்து அவதானிக்கலாம்.

மேற்படி பெரிய தட்டுகளைவிட சிறிய சிறிய தட்டுக்கள் புவியோட்டில் காணப்படுகின்றன. உதாரணமாக ''நஸ்கா'' 'அராபியன்' போன்றவை காட்டப்பட்டுள்ளன.

தட்டுக்கள் அசையும் திசையும் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

இன்று புவியோட்டு நகர்வு பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகவே இருக்கின்றது. 'தகட்டோட்டக்கருது கோள்' (Theory of Plate Tectonic) மூலமும் இன்றுள்ள கண்டங்கள், சமுத்திரங்களின் ஒழுங்கமைப்பு சிறப்பாக விளக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. தற்போதைய ஆழ்கடல் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் வாயிலாக மத்திய சமுத்திரப்பாறைத் தொடருக்கு இருபுறத்தில் அமைந்துள்ள பாறைகளின் தொல்கால காந்தப்புலத் தரவுகள் (Paleo Magnetic data) கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. வடகடல் பிராந்தியத்தில் 1960 காலகட்டத்தில் எண்ணெய் அகழ்விற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது பெறப்பட்ட சமுத்திர பாறைப்படிவுப் பொருள்களை ஆராய்ந்த போது, மத்திய சமுத்திர பாறைத் தொடருக்கு இரு புறமும் தூரம்நோக்கி படிவுகளின் வயது அதிகரித்துச் செல்வதை உறுதிப்படுத்துகின்றனர். இவற்றில் இருந்து மத்திய சமுத்திரப்பாறைத் தொடர்கள் காணப்படும் பகுதிகளில் பழைய கண்டவிளிம்புகள் காணப்பட்டிருப்பதை உறுதிப்படுத்த முடியும்.

## தட்டுக்களின் விளிம்புகள்:

தட்டுக்களின் விளிம்புகளை 'அழிவுகள் ஏற்படும் தட்டு விளிம்புகள்' (Destructive Plate Margins), புதிய ஓடுகள் உருவாகும் தட்டு விளிம்புகள் (Constructive Plate Margins) மாற்றங்கள் ஏற்படாத தட்டுக்களின் விளிம்புகள், (Transform or Conservative Plate Margin) என்று மூன்று வகையாகப் பிரித்துள்ளனர்.

தட்டுக்களை நகர்த்துவதற்கான விசை புவியுட்பாகத்தில் அல்லது ஆழம் குறைந்த பாகங்களில் இருத்தல்கூடும். மத்திய நடுச்சமுத்திர பாறைகளின் நடுப்பிளவுப்பகுதிகளே அழிவுகள் ஏற்படும் தட்டுக்களின் விளிம்புகளாகும். இருதட்டுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒரு தட்டு கீழ் இறங்கும் பொழுது அவ்விடத்தில் அகழிகள் உருவாகின்றன. உதாரணமாக பசிபிக் சமுத்திர ஓர கண்டவிளிம்புகளில் அகழிகள் காணப்படுவதற்கு கண்டவிளிம்புப்பகுதிகளில் சமுத்திர அடித்தளங்கள் கீழ் நோக்கி இறங்குவதே காரணங்களாகும். இவ்வகையான அகழிகள் காணப்படும் விளிம்புப்பகுதிகளே அழிவுகள் ஏற்படும் தட்டு விளிம்புகளாகும். இவ் விளிம்புப்பகுதிகளில் எரிமலை புவிநடுக்கம் நிகழ்வுகள் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. தென் அமெரிக்கக்கண்டத் தகட்டின் கீழ் நாஸ்காத் தட்டு அமிழ்ந்தமையினாலேயே தென்னமெரிக்க எரிமலை அந்தீஸ் மலை (Vclcanic Andes Mountains of South America) உருவாகியதாகக் கூறப்படுகின்றது.

இரு கண்டத் தட்டுக்கள் எதிர் எதிர்த் திசையில் சந்திக்கும் போது தட்டுக்களின் நெருக்குதல்களால் மடிப்பு மலைகள் உருவாகின்றன. இந்தியா - ஆசியா தட்டுக்கள் மோதுவதால் இமாலய மடிப்புக்கள் தோன்றியுள்ளன. இப்பகுதிகளும் அழிவுகள் ஏற்படும் தட்டுக்களின் விளிம்புப்பகுதிகளாகும். தட்டுக்கள் ஒன்றையொன்று விட்டு விலகி நகர்கின்ற பொழுது அவைகளுக்கிடையில் இடைவெளி ஏற்படுகின்றன. இவ் இடைவெளிகள் கோளவகத்திலிருந்து வருகின்ற உருகிய பாறைக் குழம்புகளினால் மிக விரைவில் நிரப்பப்பட்டு விடுகின்றன. இப் பொருட்கள் மெதுவாகக் குளிர்ந்து புதிய சமுத்திர அடித்தளங்களை உருவாக்குகின்றன. உதாரணமாக இச் செயற்பாடு கடந்த 200 மில்லியன் வருடங்களாக அத்திலாந்திக் சமுத்திர அடித்தளத்தை உருவாக்கியிருக்கின்றது. இதுவே கடற்தரை பரவுதல் என்றும் அழைக்கப்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் ஒரு தளத்தில் இடைவெளி ஒன்றும் ஏற்படாமல் புதிய அம்சங்களை உருவாக்காமல் அல்லது மாற்றங்களை ஏற்படுத்தாமல் தட்டுக்கள் நேர் எதிர்த் திசையில் நகருகின்றன. கலிபோர்னியாவின் சென் அன்ட்ரீஸ் பிளவினைக் (San Andreas Fault of California) கூறலாம். இப்பிளவு வழியாக பசுபிக் தட்டு வடமேற்கு நோக்கி நகர்கின்றது (b cm/yr) இது போன்ற அறிய முடியாத பல நுண்ணிய அசைவுகள் தட்டுகளில் ஏற்பட்டவண்ணமிருக்கின்றன. இத்தகைய அசைவுகளே பெரிய புவி நடுக்கங்களுக்கும் புவியோட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில் உடைவுகளுக்கும் காரணமாகின்றன. சன்பிரான்சிஸ்கோ (கலிபோர்னியா) வில் ஏற்பட்ட பெரிய புவி நடுக்கங்களுக்கு இத் தகைய அசைவுகள் காரணமாக இருந்தி ருக்கின்றன. இவ்வகையான தட்டுக்களின் விளிம்புகள் மாற்றங்கள் நிகழாத விளிம்பு கள் என்று அழைக்கப்படுகின்றன.

மேலே விளக்கிக் கூறப்பட்டது போல புவியோட்டில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இத்தகைய மாற்றங் களினாலேயே புவி மேற்பரப்பில் கண்டங் கள் சமுத்திரங்கள் புவிச்சரிதகாலத்தினூ டாக மாற்றமுற்றுவந்திருக்கின்றன. 180 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இருந்த புவிமேற்பரப்பு ஒட்டமைப்பிற்கும் இன் றைய புவிமேற்பரப்பு நிலைக்கும் இடை யில் காணப்படும் வேறுபாட்டிற்கு புவி யோட்டின் நிலைமாற்ற இயக்கத்தன் மையே காரணம், புவியோட்டின் மாற்ற முறும் தன்மையினால் இனிவரும் புவிச்ச ரித காலங்களில் இன்றுள்ள கண்டங்கள் சமுத்திரங்கள் போன்றவற்றில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் கூறப் படுகின்றது. இன்றுள்ள கண்டங்கள் பல துண்டங்களாகி விடும் என்று கூறப்படுகின் றது. புவிவிஞ்ஞானம் வளர வளர புவிஓடு பற்றிய பல விதமான உண்மைகள் வெளி வருவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. அப் போது இன்றும் தெரிந்தவற்றைவிட இன் னும் பல புதிய தகவல்கள் வெளிவரும் (படம் - iv) புவிச்சரிதவியல் காலங்களினூ டாக புவிமேற்பரப்பில் கண்டங்கள் சமுத் திரங்களின் பரவல் நிலை.

## 180 மில்லியன் வருடங்களுக்கு முன்னர்:

பஞ்சியா (Original Pangaea) நிலத் திணிவானது இரு பிரிவுகளாக பிரிந்து விட் டது. வடதிணிவு 'லொறேசியா' (Laura sia) எனவும். தென்திணிவு 'கொண்டுவான லாந்து' (Gondwana Land) எனவும் அழைக்கப்பட்டது. கொடுண்வானாலாந்து மேலும் துண்டுகளாக பிரிக்கப்பட்டது. இந் தியா, அன்ராட்டிக்கா அவுஸ்ரேலியா என் னும் நிலத்திணிவுகள் மேலும் தனித்தனி யாக பிரிவுபடத் தொடங்கியது. தென் அமெரிக்காவுக்கும் ஆபிரிக்காவுக்குமிடை யில் பிளவுகள் ஏற்பட்டு நகர்வு இடம் பெற்றது.

## 135 மில்லியன் வருடங்களுக்கு முன்னர்:-

கொண்டுவானாலாந்து, லொறேசியா நிலத்திணிவுகளின் வடபக்கமான நகர்வு கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. வடஅட்லாண்டிக்பகுதிகளும் இந்து சமுத் திரப்பகுதிகளும் அகலமாகிக்கொண்டிருக் கும் நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. தென் அட்லான்டிக் செங்குத்து நகர்வு அதிகரிக் கின்றதுடன் இவற்றின் வடக்கு நோக்கிய விரிவு வடஅமெரிக்காவில் இருந்து கிறீன் லாந்தினை வேறுபடுத்தக்காரணமாக அமைகின்றது. இந்தியா ஆசியாவுடன் வட பக்கமாக மோதும் விதத்தில் தொடர்ந்து அசைகின்றது.


## 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர்:


ஆபிரிக்காவில் இருந்து தென் அமெ ரிக்கா முற்றாகப் பிரிந்து விட்டது. மேலும் தென் அமெரிக்கா வடக்குப்பக்கமாகவும் மேற்குப்பக்கமாகவும் நகருகின்றது. மடகாஸ்கார் ஆபிரிக்காவில் இருந்து பிரிந்து விட்டது. செங்கடல் பிளவு இன்னும் தெளி வாகத் தெரியவில்லை. மத்தியதரைக்கடற் பகுதிகளை அடையாளம் காணமுடிகின் றது. தென் பகுதியில் அன்ராட்டிக்காவு டன் அவுஸ்ரேலியா இன்னும் இணைந்த நிலையிலேயே இருக்கின்றது.

## இன்றைய நிலை:

இந்தியா வடபாகமாக நகர்ந்து ஆசி யாவுடன் மோதி இணைந்த நிலையில் உள்ளது. இந்நிகழ்வால் இமாலய மடிப்பு மலைகள் தோன்றியுள்ளன. தென் அமெ ரிக்கா திருப்பப்பட்டு மேற்குப்பக்கமாக நகர்ந்த வட அமெரிக்காவுடன் இணைந் துள்ளது. அவுஸ்ரேலியா அன்ராட்டிக்கா வுடன் இருந்த இணைவு துண்டிக்கப்பட் டுள்ளது. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




After Dietz and Holden Sci.AM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப்படுகடன்

க. வானதி
A/L 94 வர்த்தகம்

இலங்கை அரசாங்கம் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதி காண்பதற்கு பல்வேறுபட்ட மூலகங்களைப் பயன்படுத்துகிறது. அவ்வகையில் உள்நாட்டு சந்தைக்கடன், உள்நாட்டு சந்தையில்லாக் கடன், காசு நிலுவையும் இணைக்கிணை நிதியமும், வெளிநாட்டு உதவி என்பவை முக்கியமானவையாகும். இவ்வாறு நிதியீட்டம் செய்யப்படும் மூலகங்களில் அரசு வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வேண்டியவையே 'கடன்கள்' ஆகும், பொதுப்படு கடன் என்பது ''அரசு தான் பெற்ற கடன்களில் தீர்க்கப்பட்ட தொகைகள் போக எஞ்சி உள்ள நிலுவைகளின் மொத்தம்'' ஆகும்.

இலங்கை அரசு தனக்குத் தேவையான கடன்களை உள்நாட்டில் இருந்தும் நாட்டுக்கு வெளியில் இருந்தும் பெற்றுக் கொள்ளுகின்றபோது இக் கடன்கள் பல்வேறு வகையான கடன்கருவிகளைப் பயன்படுத்தி வெவ்வேறு பட்ட கால அடிப்படையில்பலவகைகளில் பெறப்படுகின்றன.

இலங்கையின் அரசியல் எல்லைக்குள் இருந்து பெறப்படும் கடன்களே உள்நாட்டுக் கடன்கள் எனக்குறிப்பிடப்படுகின்றன உள்நாட்டு சந்தை அமைப்பிடம் இருந்து வங்கித்துறை, வங்கியல்லாத்துறை என்றும் நிறுவனங்களினூடாக குறுங்கால, நடுத்தரகால, நீண்டகால அடிப்படையில் கடன்கள் பெறப்படுகின்றன. இவை திறைசேரி உண்டியல்கள், ரூபாய்ப்பிணைகள், திறைசேரிவைப்புச் சான்றிதழ்கள் தேசிய பாதுகாப்பு முறிகள், வரி ஒதுக்குப் பத்திரங்கள், மத்தியவங்கி முற்பணங்கள் என்பவற்றின் மூலம் திரட்டப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைப்படி உள்நாட்டுக் கடன்களின் போக்கினை அவதானிக்கின்றபொழுது அவை தொடர்ச்சியாக அதிகரித்துக் செல்லும் போக்கினைக் காட்டிநிற்கின்றன. குறிப்பாக 1979 இல் 19634 மில்லியன் ரூபாகளாக காணப்பட்ட உள்நாட்டுக் கடன்கள் 1989இல் 1,17561 மில்லியன் ரூபாக்களாகவும் 1993 இல் 213685 மில்லியன் ரூபாக்களாகவும் உயர்வடைந்து சென்றுள்ளன. 1989 1993 ஆகிய ஆண்டுகளில் குறுங்கால கடன்கள் முறையே 63145 மில்லியன் ரூபாவாகவும் 1,01845 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டு வரை உள்நாட்டு கடன்களில் குறுங்காலக் கடன்களே கூடிய பங்கினைப் பெற்றிருந்தன. 1993 இல் நடுத்தர, நீண்டகால கடன்கள் ஒப்பீட்டு ரீதியில் கூடிய பங்களிப்பினை வழங்கியுள்ளமையை தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையின் அரசியல் எல்லைக்கு அப்பால் உள்ள நாடுகளிடமிருந்தும் சர்வதேச நிதி நிறுவன அமைப்புகளிடமிருந்தும் பெற்றுக் கொள்ளப்படும் நிதியீட்டத் தொகைகள் வெளிநாட்டுக் கடன்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. ''வெளிநாட்டு உதவி'' என்பது ''வெளிநாட்டுக் கடன்'' என்பதில் இருந்தும் வேறுபட்டதாகும். வெளிநாட்டு உதவி என்பதனுள் ஒரு நாடு சர்வதேசரீதியில் பெற்றுக் கொள்ளும் கடன்களும் நன்கொடைகளும் உள்ளடக்கப்படும். ஆனால் கடன் என்பதனுள் கொடைகள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொதுப்படுகடனில் வெளிநாட்டுக் கடன்களின் அளவே அதிகமான அளவினதாகக் காணப்படுவதுடன் இது இலங்கைப் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது. வெளிநாட்டுக் கடன்களை அவை பெறப்படும் நோக்கங்களின் அடிப்படையில் செயல்திட்டக்கடன், செயல்திட்டமல்லாக்கடன் என வகைப்படுத்தலாம். நாட்டின் குறிப்பிட்ட ஒரு அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புபட்ட வகையில் பெறப்படும் கடன்களே செயல்திட்டக்கடன்களாகும். இவ்வகையில் பெறப்படும் கடனானது குறிப்பிட்ட திட்டத்திற்கே பயன்படுத்தப்பட வேண்டியதுடன் கடன் வழங்கும் நாட்டின் விருப்பப்படியே செயற்படவேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. எமது நாட்டைப் பொறுத்தவரை 1983 இன் பின்னர் இத்தகைய கடன்களே கூடியளவில் பெறப்பட்டுள்ளன 1979-ல் 5063 மில்லியன் ரூபாக்களாகவும் 1989இல் 113120 மில்லியன் ரூபாக்களாகவும் 1993 இல் 215064 மில்லியன் ரூபாவாகவும் குறித்த கடன் தொகைகள் அதிகரித்துச் சென்றுள்ளன. குறிப்பிட்ட ஒரு செயற்திட்டத்திற்கெனக் குறிப்பிடப்படாது வழங்கப்படும் கடன்களே செயல்திட்டமல்லாக் கடன்கள் எனக் கொள்ளப்படுகின்றன. இக்கடன் தொகைகள் பண்டவடிவிலும் பணவடிவிலும் பெறப்படுகின்றன. 1979 இல் இவ்வகைக்கடன்கள் 10,778 மில்லியன் ரூபாவாகவும் 1989இல் 4,3178 மில்லியன் ரூபாக்களாயும் 1993 இல் 54819 மில்லியன் ரூபாவாகம் கிடைத்துள்ளன.

இதில் பண்டக்கடன்களே கூடுதலாகக் கிடைத்திருப்பது அவதானிக்கத்தக்கது. 1979, 1989, 1993 ஆகிய ஆண்டுகளில் பண்டக்கடன்கள் முறையே 8979 மில்லியன் ரூபா, 41,117 மில்லியன் ரூபா, 52768 மில்லியன் ரூபாக்களாக அமைந்துள்ளமை இதனைத் தெளிவாக்குகின்றது.

இலங்கையின் வெளிநாட்டுக்கடன்கள் பெருமளவிற்கு ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா கனடா, டென்மார்க், மக்கள் சீனக்குடியரசு, ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், இந்தியா, நெதர்லாந்து, குவைத், யப்பான், சுவீடன், பிரான்ஸ் ஹங்கேரி, இத்தாலி, சுவிஸ்லாந்து, மத்திய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளிடமிருந்தும், உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆசியா அபிவிருத்தி வங்கி, ஒபேக் போன்ற சர்வதேச நிதிநிறுவனங்களிடமிருந்தும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி, கூட்டமைக்கப்பட்ட சுலமன் சகோதரங்கள் (நியூயோர்க்) பனீகர்ஸ் றஸ்ற் கூட்டு நிலையம் போன்ற சர்வதேச நிதிச்சந்தைகளிடமிருந்தும் கிடைத்து வருகின்றன.

## பொதுப்படுகடன் திரட்டலின் நோக்கங்கள்

அரசாங்கம் கடன் பெறுவது பாதீட்டு பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக மட்டுமன்று இவ்வாறு கடன்பெறும்போது பல பொருளாதார விளைவுகள் தோன்றுகின்றன. அத்தகைய பொருளாதார விளைவுகளை நாட்டின் அபிவிருத்திக்கு சாதகமாகவும் பயன்படுத்தலாம். எனவேதான் அரசு பொதுப்படுகடன் பெறுவதில் பல்வேறுபட்ட நோக்கங்களை மையமாகக் கொண்டு செயற்படுகின்றது.

### 1) பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்

அரசாங்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு கடன் பெறுகின்றது. இங்கு பொருளாதார வளர்ச்சி என்பது நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரித்துச் செல்வதைக் குறிக்கும். இவ்வாறு மொத்த உற்பத்தி அதிகரிக்க வெண்டுமெனில் விவசாயம், கைத்தொழில், சேவைத்துறைகள் வளர்ச்சி அடையவேண்டும். இதற்குப் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அரசு மேற்கொள்ளவேண்டும். ஆனால் அரசிடம் போதிய நிதி இல்லை. எனவேதான் கடன் பெறவேண்டிய நிலையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்;-

1) துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்
2) 200 ஆடைகள் கைத்தொழில் முயற்சி

பொருளாதார அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியுடன் பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்ணையும் உள்ளடக்கியது. எனவே நாட்டின் கல்வி, சுகாதாரம், போஷாக்கு, வீடமைப்பு, பொழுதுபோக்கு, போக்குவரத்து போன்ற சமூகநலத் திட்டங்களை அமுல்படுத்தும் நோக்குடன் அரசு கடன் பெறுகின்றது

உதாரணம்;-

1) ஜனசக்தி
2) ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள்

### 2) மக்களிடையே சேமிப்பைத் தூண்டுதல்

இலங்கை போன்ற வறிய நாடுகளில் மக்களின் வருமானம் குறைவாக உள்ளது. ஆனால் வாழ்க்கைச்செலவு அதிகம். எனவே மக்களின் சேமிப்பு ஆற்றல் குறைவாகவே உள்ளது. அரசு மக்களிடையே சேமிப்பை அதிகரிப்பதற்குக் கடன் நடவடிக்கையை ஓர் கருவியாகப் பயன்படுத்துகின்றது. அதாவது அரச கடன் பத்திரங்கள் மூலம் மக்களின் வருமானத்தின் ஒரு பகுதி அரசிற்குக் கடனாகக் கொடுக்கப்பட்டு வட்டியுடன் கூடிய சேமிப்பாக மாற்றப்படுகிறது.

உதாரணம்:-

1) திறைசேரி உண்டியல்கள்
2) திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள்

### 3) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்

இலங்கைப் பொருளாதாரத்தில் காணப்படும் பிரச்சினைகளில் ஒன்று பணவீக்கம் ஆகும். இப்பணவீக்கமானது பல்வேறுபட்ட காரணங்களால் அதிகரித்துச் செல்கிறது. இப்பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கருவியாக அரசு கடன் நடவடிக்கையை கையாளுகின்றது. நாட்டில் பொது மக்களிடமும் ஏனைய நிறுவன அமைப்புகளிடமும் கடன் பத்திரங்களை அதிகமாக விற்பதன் மூலம் மேலதிகமாக காணப்படும் பணத்தை அரசு பெற்றுக் கொள்கிறது. இதனால் புழக்கத்தில் காணப்படும் பணத்தின் அளவு குறைந்து பணவீக்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

### 4) பணச்சந்தையை விரிவுபடுத்தல்

இலங்கையின் பணச்சந்தை வளர்ச்சி பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இப்பணச் சந்தையை விரிவுபடுத்துவதற்கு அரசின் பொதுப்படுகடன் திரட்டல் நடவடிக்கை உதவுகிறது. அதாவது குறுங்கால, நடுத்தரகால, நீண்டகாலக் கடன்களை உண்டியல்கள், ஆவணங்கள், வைப்புச்சான்றிதழ்கள் என்பனவற்றின் மூலம் அடிக்கடி பெறுவதாலும் தீர்ப்பதாலும் நாட்டின் பணச்சந்தை வளர்ச்சி அடைகிறது.

உதாரணம்;-

1) திறைசேரி உண்டியலின் மீள்கொள்வனவுச் சந்தை
2) திறைசேரி உண்டியலின் 1-ம், 2-ம் தரச்சந்தைகள்

### 5) கடன்களைக் கட்டுப்படுத்தல்

அரசு நாட்டின் பொருளாதார உறுதி நிலைமையைப் பேணுவதற்குப் பணநிரம்பலைக் கட்டுப்படுத்துதல் முக்கியமானது. இதற்குக் கடனாக்கத்தைக் கட்டுப்படுத்தல் முக்கியமானது. எனவே மத்திய வங்கியினூடாக வணிக வங்கிகளின் கடன் வழங்கும் அளவைக் கட்டுப்படுத்தவேண்டும். வணிக வங்கிகளிடம் பகிரங்கச் சந்தை நடவடிக்கையூடாக கடன் பத்திரங்களை விற்பனை செய்து அவற்றின் திரவப்பண அளவை குறைப்பதால் கடனாக்கம் குறைகிறது. இதனால் நாட்டின் பணநிரம்பல் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்;-

1) திறைசேரி உண்டியயல்களை வணிக வங்கிகளுக்கு விற்பனை கொள்வனவு செய்தல்.

### 6) மூலதன ஆக்கத்தை அதிகரித்தல்

அரசு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன் பெறுவதன் மூலம் தனது மூலதனத்தை அதிகரிக்கின்றது. அதாவது பாரிய அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் தொடர்ந்து நடாத்துவதற்கும் மூலதனம் அதிகம் வேண்டும். எனவே அரசு வெளிநாடுகளிடம் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் பெறுகின்ற கடன்கள் நாட்டின் மூலதனமட்டத்தை உயர்த்துகின்றது.

### 7) சென்மதி நிலுவைப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்தல்

இலங்கையின் சென்மதி நிலுவையானது தொடர்ச்சியாக பாதகமான மீதியையே காட்டி நிற்கின்றது. இவ்வாறான பாதகமான நிலுவையை நீக்கி சென்மதி நிலுவையை சமப்படுத்த அரசு கடன் பெறவேண்டி உள்ளது. அதாவது உள்நாட்டுப் பொருளாதாரத்தை விருத்தி செய்து இறக்குமதிச் செலவைக் குறைக்கவும் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கவும் அரசு பொதுப்படுகடனூடான நிதியைப் பயன்படுத்துகிறது.

## இலங்கையின் பொதுப்படுகடன் போக்கு

இலங்கையின் நடைமுறைப் பொருளாதாரப் பிரச்சனைக்குள் முன்னணி வகிக்கும் பிரச்சனைகளுள் ஒன்றாகப் பொதுப்படுகடன் பிரச்சனை தலைதூக்கியுள்ளது. இப்பிரச்சனையானது 70-ம் ஆண்டுகளுக்குப் பின்னர் குறிப்பாக 75-ம் ஆண்டிற்குப் பின்னர் பிரச்சனைக்குரிய அம்சமாக முன்வைக்கப்பட்டுள்ளது. 77-ற்கு முன்னர் இலங்கையில் படுகடன் காணப்பட்டாலும் அது பிரச்சனைக்குரியதாகக் காணப்படவில்லை. ஏனெனில் அப்போது பாரிய அபிவிருத்தித் திட்டங்களோ பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளோ பெருமளவிற்குக் காணப்படவில்லை. அத்துடன் நாட்டில் விலைமட்ட உயர்வுகள் பணவீக்கத்தாக்கங்கள் குறைவாகக் காணப்பட்டதுடன் ஒப்பீட்டு ரீதியில் வருமானம் அதிகமாகவும் செலவுகள் குறைவாகவும் இருந்துள்ளன. ஆனால் 1977-க்கு பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் பாரியமாற்றம் ஏற்பட்டது. அப்போது ஆட்சிக்கு வந்த அரசின் பொருளாதாரக்கொள்கைகள் முன்னர் ஆட்சியில் இருந்த அரசின் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டனவாகவே காணப்பட்டன. பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால் பெருமளவு வெளிநாட்டுக்கடன்கள் பெறப்பட்டன. உதாரணமாக துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம் 200 ஆடைகள் கைத்தொழில் திட்டம் ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டம் நீர்ப்பாசனத்திட்டம் என்பவற்றினைக் கூறலாம். மேலும் மக்களின் சமூக பொருளாதாரக் குறிகாட்டிகளை முன்னேற்றுவதற்கு உணவு முத்திரை, ஜனசக்தி, இலவசக்கல்வி, மருத்துவம், வீதி அபிவிருத்தித்தொடர் பாடல், வேலைவாய்ப்பு என்பவற்றை அதிகரிப்பதற்கும் அரசு கடன்களைப் பெற்றுள்ளது.

இவை மட்டுமன்றி அரசின் பாதுகாப்புச்செலவு 1982-க்குப்பின்னர் அதிகரித்துவருகின்றது. நாட்டில் ஏற்பட்ட யுத்தத்திற்குப் பெருமளவு ஆயுதங்கள், வெடிமருந்துகள், கனரகவாகனங்கள் போன்ற போர்க்கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கும் நிர்வாகச் செலவிற்கும் பெருமளவு தொகை தேவைப்பட்டது. இதற்கு வெளிநாட்டுக்கடன்களே பெருமளவு பயன்படுத்தப்பட்டன.

அரசு கடன் பெறுவதனால் பணவீக்கம் ஏற்பட்டுவருவதைக் காணலாம். அதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது உள்நாட்டில் வங்கித்துறையிடம் கடன்பெறும்போது குறிப்பாக மத்திய வங்கியிடம் கடன்பெறும்போது புதிய பணம் புழக்கத்தில் வருகின்றது. இதனால் பண நிரம்பல் அதிகரிக்கின்றது. வர்த்தக வங்கிகளிடம் கடன்பெறுவதால் கடனாக்கம் ஏற்பட்டு பணவீக்கம் ஏற்படும். வெளிநாடுகளிலிருந்து செலாவணி வடிவில் கடன் பெறுவதாலும் பண நிரம்பல் அதிகரித்து பணவீக்கம் ஏற்படுவதைக் காணலாம். மேலும் தளம்பவிடப்பட்ட நாணயக் கொள்கையாலும் பணவீக்கம் ஏற்படுகின்றது.

இலங்கைப் பொருளாதாரத்தை நோக்கின் இங்கு அரச வருமானங்கள் குறைவாக இருப்பதுடன் செலவுகள் அதிகமாகவும் காணப்படுகின்றன. பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் காணப்படுவதால் அரசு தொடர்ந்து கடன்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது. அத்துடன் படுகடன் பணிக்கொடுப்பனவும் அதிகரித்துக் கொண்டுவருவதால் அரச கடன்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. பெருந்தொகையான கடன்கள் வழங்கிய நாடுகள் இலங்கை மீது தமது ஆதிக்கத்தை செலுத்துவதுடன் செயல்திட்டங்களைத் தாம் விரும்பிய வடிவிலும் கொண்டு செல்வதற்கு முயல்கின்றன. மேலும் கடன் கொடுத்தவர்கள் கடனை திருப்பிச் செலுத்துமாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர். இதனால் அரசு வேறுநாடுகளில் இருந்து கடனைப் பெற்று அவர்களின் கடனைத் தீர்க்க வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் இலங்கை கடன் பொறியில் சிக்கி வருவதை அவதானிக்க முடிகிறது.

அட்டவணை பத்து இலட்சம்

| 1. மூலம் | 1977 | 1983 | 1988 | 1993 |
|---|---|---|---|---|
| 1. வெளிநாட்டுப்படுகடன் | 10593 | 46025 | 125,657 | 269,883 |
| 1.1 செயல்திட்டக்கடன் | 3072 | 19531 | 85,745 | 215.064 |
| 1.2 செயல்திட்டமல்லாத்கடன் | 7,521 | 26.494 | 39,912 | 54 819 |
| 1.2.1 பண்டக்கடன் | 6,979 | 17.888 | 35,886 | 52,768 |
| 1.2.2 ஏனையகடன் | 542 | 8,606 | 4.026 | 2,051 |
| 2: உள்நாட்டுப் படுகடன் | 14 392 | 52,354 | 98,594 | 213,685 |
| 2.1 குறுங்காலம் | — | 20,204 | 48,624 | 101 845 |
| 2.2 நீண்டகாலம் | — | 32,150 | 49,970 | 111,840 |
| 3. மொத்தம் | 24 985 | 98379 | 224 551 | 483 568 |

ஆதாரம்:- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது மொத்தப்படுகடன் அளவானது குறிப்பிட்ட காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. 1983-ம் ஆண்டுவரை உள்நாட்டுக்கடன் மூலங்களே அரசபடுகடனுக்கு கூடுதலான பங்களிப்பினை வழங்கியுள்ளன. 1983-இன் பின்னர் உள்நாட்டிலிருந்து போதியளவு நிதியைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக வெளிநாட்டுக்கடன் மூலங்களை அரசு கூடுதலாக நாடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதனால் 1983-இன் பின்னர் மொத்தப்படுகடனுக்கு வெளிநாட்டுக் கடன் மூலங்களின் பங்களிப்புக் கூடுதலாக இருந்துவருகின்றது. வெளிநாட்டுக்கடன் மூலங்களைப் பொறுத்தவரையில் செயற்திட்டக்கடன்களும் உள்நாட்டு மூலங்களைப் பொறுத்தவரையில் நடுத்தர நீண்டகாலக் கடன்களின் பங்களிப்பும் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த பெறுமதிகளைக் காட்டி நிற்கின்றன.

அதிகரித்துச் செல்லும் படுகடன் அளவைக் குறைப்பதற்கு அரசு பெருமளவு முயற்சி செய்கின்றது. ஆயினும் அவை பெருமளவு வெற்றி அளிக்கவில்லை. இலங்கை ஓர் அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருப்பதனால் நாட்டின் செலவினங்களைக் குறைக்கவோ, வருமானங்களை அதிகரித்துக்கொள்ளவோ முடியாதநிலைகாணப்படுகிறது. அதேவேளை வெளிநாட்டுக் கொடைகளும் வரையறைக்கு உட்பட்டவையாகவே கிடைத்துவருகின்றன. இதனால் கடன்கள் பல்வேறு வகையில் பெற்றுக்கொள்ளப்படுகின்றமை நாட்டின் கடன் சுமையை அதிகரிப்பதாக அமைந்திருப்பதுடன் நாட்டின் வருடாந்த வருமானத்தில் குறிப்பிட்ட பகுதியைக் கடனாகவும் வட்டிக் கொடுப்பனவுக்காகவும் திருப்பிச் செலுத்தவேண்டிய நிலைமை உருவாகி வருகின்றது. இப்பிரச்சனை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் யாவற்றுக்கும் பொதுவானவையாகக் காணப்படினும் இலங்கை கடன் பொறியில் சிக்கிக் கொள்ளாமல் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதிலேயே அதன் எதிர்காலம் தங்கியுள்ளது எனக் கூறின்மிகையாகாது.

உசாத்துணை நூல்கள்:-


1) மத்தியவங்கி ஆண்டறிக்கை
2) பொருளியல் நோக்கு
3) அரச நிதி (மா. சின்னத்தம்பி) ☐


இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் திறந்த பொருளாதாரக் கொள்கை வெளிநாட்டு தனியார் முதலீட்டு உட்பாய்ச்சலுக்கு வாய்ப்பளித்து வருகின்றது. தனியார் முதலீடுகள் நேரடி முதலீட்டுப் பாய்ச்சலாகவும் பட்டியலிடப்பட்ட முதலீட்டுப் பாய்ச்சலாகவும் கிடைத்து வருகின்றன.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையின் முதலீட்டுச் சபையினால் (Board of Investment) நிர்வகிக்கப்பட்டு வரும் கைத்தொழில் முதலீட்டு வலயங்களில் ஒப்பந்த அடிப்படையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் முதல் உட்பாய்ச்சல்கள் நேரடி வெளிநாட்டு முதலீடாகும் 1960களின் நடுப்பகுதியிலிருந்தே இத்தகைய முதலீட்டிற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. ஆயினும் 1990இன் பின்னர் துரித மாற்றம் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. தேறிய நேரடி வெளிநாட்டு முதலீடு 1990இல் 1294 m/R ஆகவும் 1993இல் 9107m/R கிடைத்துள்ளன.

(21ஆம் பக்கம் பார்க்க)

யாழ் / இந்து மகளிர் கல்லூரி வர்த்தகத்துறை
மாணவிகள் வெளியிடும்
"வணிக வனிதை"
சிறப்புற வாழ்த்துகிறோம்
சுபமுகூர்த்தப்பட்டு, பருத்தி புடவைக்கடல்

# திருமாட்டி
## புடவைக்கடல்

122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் / இந்து மகளிர் கல்லூரி
வர்த்தகத்துறை மாணவிகள் வெளியிடும்
"வணிக வனிதை"
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

A

## ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம்

148, கண்டி வீதி,
சாவகச்சேரி,

கிளை :-

**ரூபா பன்முக வர்த்தகம்**
104, A அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதைக்கு எமது வாழ்த்துக்கள்

# இலங்கையன் பதிப்பகம்

அழகுமிகு அச்சக வேலைகளை
குறிப்பிட்ட நேரத்தில் சிறந்த
முறையில் மனத் திருப்தியுடன் செய்து
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## இலங்கையன் பதிப்பகம்

ஸ்ரீ லங்கா அச்சகம்,
ஸ்ரீ காந்தா அச்சகங்களின் ஒருங்கிணைப்பே

# இலங்கையன் பதிப்பகம்

பதிப்பகசாலை, ராஜா தியேட்டர் அருகாமை,
காங்கேசன்துறை சாலை - யாழ்ப்பாணம்.

---

வணிக வனிதையே! நோக்கங்கள் பல கொண்டு நோக்காக
நீ நாற்றிசையும் உலா வர எமது வாழ்த்துக்கள்!

மக்களுக்குத் தேவையான அலங்காரப் பொருட்கள், சிறுவர் சிறுமியர் பாவிக்கும் பேபி ஒடிக்கலன், பேபி சோப், பேபிப் பவுடர், பேபி கிரீம் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் சகாய விலையில் விற்பனை செய்யும் ஒரே ஸ்தாபனம்

# சிவகாந்தா விற்பனை நிலையம்

65, 66. நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

தலைமையகம்:-

## கணபாலா களஞ்சியம்

24; மேல்மாடி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ஹேமாஸ் மார்க்கட்டிங் பிறைவேற் லிமிட்டெட்டின் விநியோகஸ்தர்கள்
சில்லறை மொத்த வியாபாரங்களுக்கு இன்றே நாடுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தொன்று விருட்சமாக வளர வாழ்த்துகிறோம்

நவீன வேலைப்பாடுள்ள அழகிய
தங்கப் பவுண் நகைகள்
உத்தரவாதத்துடன் கிடைக்கும்;
ஓடர் நகைகளை
சுத்தமான 22 கரட் தங்கத்தில்
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**புவனேந்திரன்**

**நகைத் தொழிலகம்**

லெப். கேணல் இராதா தெரு, யாழ்ப்பாணம்.
(58, கன்னாதிட்டி)

---

தொடர்ந்து வெளிவரும் வணிக வனிதைக்கு எமது வாழ்த்துக்கள்

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு

பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

**மகாலக்ஷ்மி நகைமாடம்**

**213 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதையின் புகழ்
நாற்றிசையும் ஒளிவிச வாழ்த்துகிறோம்.

V

# கலை வர்த்தக கல்லூரி
# C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை
**யாழ்ப்பாணம்**

**கலை வர்த்தகத்துறை சார்ந்த மாணவர்களுக்கான
க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.**

---

இந்த வணிக வனிதை தொடர்ந்து வரும் ஆண்டுகளில்
பிரகாசமாக ஒளிவீச மன தார வாழ்த்துகிறோம்.

கண்டவுடன் அகமகிழ்ந்து கொண்டவுடன் அணிந்து மகிழ
நாடவேண்டிய ஒரே இடம்.

# விதுரா ஆடை அகம்

நங்கையர்களுக்கான இறக்குமதி செய்யப்பட்ட
ஸ்கேட், பிளவுஸ், சேலை வகைகள் பஞ்சாபி, சிறுவர்களுக்கான
ஆடை வகைகள் மற்றும் மங்கள வைபவங்களுக்கான பட்டாடைகளை
மனம் விரும்பியபடி தெரிவுசெய்ய நீங்கள் நாடவேண்டியது.
மற்றும் தலைச்சோடனை வாடகைக்கு விடப்படும்.

*VITHURA TEX*
34, Model Market,
(Inside)
JAFFNA

**விதுரா ஆடை அகம்**
34, நவீனசந்தை
[உட்புறம்]
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால் பொப்பர்

## KARL POPPER

## (1902-1994)

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞான அறிவுக்கொள்கையாளரான கால் பொப்பர் தனது 92 வயதில் சமீபத்தில் காலமானார். இந்த நூற்றாண்டில் பொப்பரினது சிந்தனையின் ஆளுகைக்குட்படாத அறிவுத்துறையென எதுவுமே இல்லையெனலாம். கலை வரலாறு முதற்கொண்டு மருத்துவம் ஈறாகவுள்ள சமூக, இயற்கை விஞ்ஞானத் துறைகள் அனைத்திலும் பொப்பரின் செல்வாக்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகிறது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் தருக்கம் (The Logic: A Scientific Discovery), திறந்த சமூகமும் அதன் எதிரிகளும் - இரண்டு பாகங்கள் (The Open Society and its Enemies) வரலாற்று நியதிவாதத்தின் வறுமை (The Poverty of Historicism) ஊகங்களும் நிராகரித்தலும் (Conjectures and Refutations), சார்பற்ற அறிவு (Objective Knowledge) என்பன பொப்பரால் எழுதப்பட்ட பிரதான நூல்களாகும். பெருந்தொகையான கட்டுரைகளையும் பொப்பர் எழுதியுள்ளார். இவற்றிற் சில இவரது மாணவர்களால் தொகுக்கப்பட்டு மூன்று நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இம்மூன்று நூல்களும் பொப்பரின் முதனூலான விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் தருக்கம் என்பதில் முன்மொழியப்பட்ட வாதங்களிற்கு அனுசரணையாகத் தொகுக்கப்பட்டவையேயாகும். "முடிவிலா ஆர்வம்" (Unended Quest) என்ற தலைப்பிலான சுயசரிதை யொன்றும் பொப்பரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. இவை தவிர ஜே. சி. ஈசெல்ஸ் என்பாருடன் இணைந்து உயிரும் அதன் மூளையும் (The Self and its Brain) என்றவொரு நூலையும் இவர் எழுதியுள்ளார்.

கால் மார்க்ஸ், சிக்மன்ட் ஃபிராய்ட், ஐயன்ஸ்ரைன் என்ற மூவரதும் கண்டுபிடிப்புகளும் இளமைக் காலத்தில் தன்னை மிகவும் ஆகர்ஷித்தவையாகக் காணப்பட்டனவென்று தனது சுயசரிதையில் கூறுகிற கால் பொப்பர், இவர்களில் முதலிருவர்களதும் கொள்கைகளைக் காலப்போக்கில் தான் நிராகரித்து விட்டதாகவும், ஐயன்ஸ்ரைன் மட்டுமே உண்மையான விஞ்ஞான மனப்பான்மையுடைய சிந்தனையாளராகக் காணப்பட்டாரெனவும் குறிப்பிடுகிறார். சமூகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி சில விதிகளின்படி இயங்குகிறதெனக் கருதிய கால் மார்க்ஸ், வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்ற கொள்கையை முன்மொழிந்தார். அதே போல சிக்மன்ட் ஃபிராய்ட் என்ற மருத்துவரும் தன்னிடம் நோயாளராக வந்தோரில் கணிசமான தொகையினர் உளநோயுடையவர்களாகவே இருப்பதைக் கண்டு அவர்களின் உளநோயைத் தீர்க்கும் வகையில் 'உளப்பகுப்பாய்வு' என்ற செல்வாக்குப் பெற்ற உளவியற் கொள்கையொன்றை உருவாக்கினார். கால்மார்க்சும், ஃபிராய்ட்டும் தமது கொள்கைகள் உண்மையான விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே என்பதை நிறுவுவதற்கான தமது ஊகங்களிற்குச் சாதகமான தரவுகளைத் திரட்டுவதிலேயே பெருமுயற்சியுடன் ஈடுபட்டனர். தமது கொள்கைகள் பொய்யாகவிருக்கலாம் என்று அவர்கள் கிஞ்சித்தேனும் சிந்திக்கவில்லை. இதுவே கால் மார்க்சும், ஃபிராய்ட்டும் விடுத்த பெருந்தவறென பொப்பர் குற்றம் சாட்டுகிறார். இவருடைய அபிப்பிராயப்படி எந்தவொரு விஞ்ஞானக் கொள்கையையும் அறுதியாக நிறுவலாமெனக் கருதுவது தவறானது. மேலும் அது விஞ்ஞான மனப்பான்மைக்கு முற்றிலும் எதிரானதெனப் பொப்பர் குறிப்பிடுகிறார்.

தொலமியின் புவிமையக் கொள்கையை நிராகரித்ததாலேயே கொப்பநிக்கசின் சூரியமையக் கொள்கை சாத்தியமாயிற்று. காலம் வெளி பற்றிய நியூட்டனது கருத்தை நிராகரித்ததாலேயே சார்புக்கொள்கை கண்டுபிடிக்கப்படலாயிற்று. புவிமையக்கொள்கையையோ அல்லது நியூட்டனின் காலம், வெளி பற்றிய கொள்கையையோ அறுதியாக நிறுவப்பட்ட உண்மைகளென விஞ்ஞானிகள் ஏற்றுக்கொண்டிருந்தால் விஞ்ஞானம் இன்றைய வளர்ச்சியைப் பெற்றிருக்க முடியாது. பழைய கொள்கைகள் நிராகரிக்கப்பட்டதாலேயே புதிய கொள்கைகள் முன்மொழியப்பட்டு, அதனூடாக விஞ்ஞானமும் வளர்ச்சியடைந்து வருகிறது.

ஐயன்ஸ்ரைன் தனது கண்டுபிடிப்புகள் நிராகரிக்கப்படலாமென ஏற்றுக்கொண்டிருந்தார். வானத்தின் தொலைதூரத்திலிருந்து வருகிற ஒளியில் சிவப்புவரி விலகல் காணப்படுவதேன் என்கிற பிரச்சினைக்கு பாரிய வானத்துப் பொருட்களைக் கடந்துவர நேரிடுவதாலேயே ஒளியானது ஈர்ப்புவிசைக்குட்பட்டு வளைந்து வருகின்றது. இதுவே திரிசியக்கோட்டில் சிவப்புவரி விலகலுக்கு காரணமாயிருக்கலாமென ஐயன்ஸ்ரைன் ஊகித்தார். நீண்டகாலம் வெறும் விஞ்ஞான ஊகமாக இருந்துவந்த இவ்விளக்கம், 1919ல் நிகழ்ந்த பூரண கிரகணத்தின் பொழுது வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது. திரிசியக்கோட்டில் சிவப்புவரி விலகலிற்கு ஈர்ப்பு விதி காரணமாக இல்லாதுவிடின் சார்புக்கொள்கையின் பொதுத்தத்துவம் தவறானதாக இருக்குமென ஐயன்ஸ்ரைன் எழுதினார். அவதானிக்கப்பட்ட நேர்வினடிப்படையில் தன்னால் மொழியப்பட்ட விஞ்ஞானக்கொள்கையையே நிராகரிக்க தயாராக ஐயன்ஸ்ரைன் இருந்தமையே விஞ்ஞான மனப்பாங்கென்று கூறுகிற பொப்பர் பழைய விஞ்ஞானக் கொள்கைகள் பொய்ப்பிக்கப்படுவதன் மூலம் புதிய கொள்கைகளை நாடி விஞ்ஞான அறிவு வளர்ச்சியுறுகின்றதென வாதிடுகிறார்.

விஞ்ஞான ஆராய்ச்சி எப்பொழுதும் பிரச்சினைகளிலிருந்தே ஆரம்பமாகிறது. பிரச்சனைகளுக்கான தீர்வைக்காணவேண்டுமெனின் முதலில் அதனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். விளக்கம் தீர்விற்கான முன்நிபந்தனையாகுமெனக் கூறுகிற பொப்பர், விஞ்ஞானத்தின் நோக்கம் திருப்திகரமான விளக்கத்தைப் பெறுதலேயென எடுத்துக்காட்டுகிறார். உண்மையான விளக்கம் என்பதற்குப் பதிலாக திருப்திகரமான விளக்கம் என்ற பதத்தை பொப்பர் பயன்படுத்துவதேன் என ஒருவர் கேட்கலாம். பொப்பருடைய அபிப்பிராயப்படி விஞ்ஞான விளக்கங்கள், கொள்கைகள் அனைத்தும் தற்காலிக ஊகங்களேயாகும். எனவே தற்காலிக ஊகங்களை உண்மையான விளக்கம் என்பதிலும் பார்க்க திருப்திகரமான விளக்கமென்பதே மிகவும் பொருத்தமானதெனக் கூறுகிறார்.

ஒரு விஞ்ஞானப் பிரச்சனைக்குத் தரப்பட்ட விளக்கம் திருப்திகரமான விளக்கமென எவ்வாறு தீர்மானிக்கலாமென்பதற்கு ''நம்பகத்தன்மையுடையதாயிருக்கிற விளக்கமே'' திருப்திகரமான விளக்கமாகுமென பொப்பர் பதிலளிக்கிறார். இதன்படி இன்று நம்பகத்தன்மையுடையதாயிருக்கிற தொரு விஞ்ஞான விளக்கம் நாளை தனது நம்பகத்தன்மையை இழந்து விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனிடத்தை புதியதொரு விஞ்ஞான விளக்கம் பெறலாம். இவ்வாறே விஞ்ஞானக் கொள்கைகளும் அவதானிக்கப்பட்ட புதிய நேர்வுகளால் (தகவல்களால்) தம் நம்பகத்தன்மையை இழப்பதுடன் புதிய விஞ்ஞானக் கொள்கைகளிற்கு வழிவிடுவதன் மூலம் வளர்ச்சியடைகிறது. இதுவே ''தவறுகளைக் களைவதன் மூலம் விஞ்ஞானம் முன்னேறுகின்றதென'' பொப்பர் குறிப்பிடுவதன் தாற்பரியமாகும்.

தவறுகளை களைவதன் மூலமே விஞ்ஞானம் முன்னேறுகிறதெனில், இவ்வளர்ச்சியில் விஞ்ஞானியின் பங்கென்னவென்பதற்கு, விஞ்ஞானியானவன் எச்சந்தர்ப்பத்திலும் எவ்விஞ்ஞானக் கொள்கையையும் நிறுவ வேண்டுமென முயற்சித்தல் கூடாதெனவும் மாறாக முன்மொழியப்பட்ட விஞ்ஞானக் கொள்கைகளை பொய்ப்பிக்கவே முயலுதல் வேண்டுமெனவும் பொப்பர் வாதிடுகிறார். நிறுவலிற்குப் பதிலாக நிராகரித்தலை வற்புறுத்துவதன் மூலம் பிரான்சிஸ் பேக்கன் என்பவரால் தொடக்கிவைக்கப்பட்டு, பாரம்பரியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த விஞ்ஞான முறைக்குப் பதிலாக பொய்ப்பித்தற்கோட்பாடு என்ற முற்றிலும் புதியதொரு விஞ்ஞான முறையை பொப்பர் முன்மொழிகிறார்.

பாரம்பரியமாக விஞ்ஞான முறையானது ஒன்றையொன்று தொடரும் ஆறு படிமுறைகளைக் கொண்டதாக எடுத்துக் காட்டப் பட்டது. முதலாவது படி நிலையில் நோக்கலும் இரண்டாவது படி நிலையில் தொகுத்தறிப் பொதுமையாக்கமும், மூன்றாவது படிநிலையில் கருதுகோள் உருவாக்கமும், நான்காவது படிநிலையில் கருதுகோளை வாய்ப்புப் பார்த்தலும், நடைபெற்று அதனடியாக விஞ்ஞான அறிவு பெறப்படுமெனக் கூறப்பட்டது. பொப்பர் இதற்குப்பதிலாக விஞ்ஞான முறையானது முதலாவது படிநிலையில் எப்பொழுதும் ஒரு பிரச்சனையுடனே ஆரம்பமாகிறதெனக் கூறி, அப்பிரச்சனை வழக்கமாக ஏலவேயுள்ளதொரு கொள்கையை அல்லது எதிர்பார்க்கையை மறுதலிப்பதாகவே இருக்க வேண்டுமென்கிறார். இரண்டாவது படிநிலையில் மறுதலிக்கப்பட்ட பழைய கொள்கைக்குப் பதிலாக புதிதாக முன்மொழியப்பட்ட விஞ்ஞானக் கொள்கை இடம்பெற வேண்டுமென்றும் மூன்றாவது படிநிலையில் புதிதாக முன்மொழியப்பட்ட கொள்கையிலிருந்து பரிசோதிக்கக் கூடிய புதிய தரவுகளை உய்த்தறிதல் இடம்பெற வேண்டுமென்றும், நான்காவது படிநிலையில் பரிசோதனை -அதாவது மறுதலிக்கப்பட வேண்டிய கொள்கையை, பெறப்பட்ட புதிய தரவுகளினடிப்படையில் நிராகரிக்க முயற்சிப்பது இடம்பெற வேண்டுமென்றும், ஐந்தாவது நிலையில் பழைய விஞ்ஞானக் கொள்கையா அல்லது போட்டியிடும் புதிய விஞ்ஞானக் கொள்கையா எது ஏற்புடையதெனத் தீர்மானிக்கும் தீர்ப்புச்சோதனை இடம்பெற வேண்டுமென்றும் தனது விஞ்ஞான முறை பற்றிப் பொப்பர் விளக்குகிறார்.

விஞ்ஞான முறைபற்றிய பொப்பருடைய விளக்கம் - அதாவது பொய்ப்பித்தற்கோட்பாடு, தொகுத்தறிதலை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான முறையானது எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதுடன், விஞ்ஞானத்தை விஞ்ஞானமல்லாதவற்றிலிருந்து வேறுபடுத்தி அறிய உதவுமெனவும் வாதிடப்படுகிறது.

தொகுத்தறிவு முடிபுகள் நிச்சயமான முடிவுகள் அல்லவென்றும், அவை வெறும் எதிர்பார்ப்புகளே என்றும் டேவிட் ஹியூம் என்ற நவீனகால மெய்யியலாளர் எடுத்துக்காட்டினார். இவரது அபிப்பிராயப்படி தருக்கநிச்சயம் தொகுத்தறி முடிவுகளிற்கில்லை. அவை உளவியல்சார் நம்பிக்கையால் விளைந்த எதிர்பார்க்கையே. இவ்வாறு ஹியூமினால் எடுத்துக்காட்டப்பட்ட விமரிசனத்தைக் கருத்திற் கொண்ட தற்கால விஞ்ஞான முறையியலாளர்கள் நிகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவுக் கோட்பாட்டை அறிமுகப்படுத்துவதன் மூலம் தொகுத்தறி முடிபுகளில் நிகழ்திறத்தை அதிகரிக்க முயன்றனவெனினும், இம்முயற்சியினால் தொகுத்தறிதலிற்கெதிராக கியூமினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை அகற்ற முடியவில்லை. சான்றுகளின் தொகையை அதிகரிக்க அதிகரிக்க நிகழ்திறம் அதிகரித்துச் செல்லுமேயொழிய நிச்சயத்தன்மையை அது ஒரு பொழுதும் எய்துவதில்லை. ஒரு விஞ்ஞானக் கொள்கையை அது உண்மையேயெனக் காட்ட ஆயிரக்கணக்கான சான்றுகளைச் சேகரித்தாலும் அதனை ஒரு பொழுதும் அறுதியாக நிறுவமுடியாதென்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட பொப்பர் இப்பிரச்சனைகளிலிருந்து விடுபடுவதற்கு பொய்யாக்கற் தத்துவம் பயனுடையதென எடுத்துக்காட்டினார்.

ஒரு விஞ்ஞானக் கொள்கை ஏற்புடையதேயென நிறுவுதற்கு எத்தனை சான்றுகள் தேவைப்படுமென எவராலும் தீர்மானிக்க முடியாதென்பது உண்மையே. ஆனால் அக்கொள்கை பொய்யானதென நிராகரிப்பதற்கு அக்கொள்கையை மறுதலிக்கும் ஒரு சான்று உளதென்று எடுத்துக்காட்டுவது மட்டுமே போதுமானதென்பதால், விஞ்ஞானக் கொள்கையை நிறுவுதற்குப் பதிலாக நிராகரிக்க முயலவேண்டுமென்று கூறுவதன் மூலம் தொகுத்தறிதலிற்கெதிராக கியூமினால் எடுத்துக் காட்டப்பட்ட பிரச்சனையைப் பொப்பர் தீர்க்கிறார்.

பொப்பரின் அபிப்பிராயப்படி; விஞ்ஞான அறிவின் முன்னேற்றம் ஏலவேயுள்ள விஞ்ஞானக் கொள்கைகளை மறுதலிப்பதன்மூலம் புதியகொள்கைகள் உருவாதற்குவழியமைத்துக்கொடுப்பதாலேயே சாத்தியமாகும், பழைய கொள்கைகள் நிராகரிக்கப்படாதவரை புதியகொள்கைகளிற்கு இடமில்லையென்பதால் விஞ்ஞானிகள் தமது ஆய்வை பொய்யாக்கற் தத்துவத்தினடிப் படையிலேயே செய்ய வேண்டியதாகிறதெனக் கூறியதன் பின்னர், பொய்ப்பிக்கப்படுதலே விஞ்ஞானக் கொள்கைகளின் இலட்சணம் என்ற முடிவிற்கு வருகிறார். பொய்ப்பிக்கமுடியாதிருக்கும் விஞ்ஞானக் கொள்கையென இதுவரை காலமும் எந்தவொரு கொள்கையும் இருக்கவில்லை. எனவே பொய்ப்பிக்கக் கூடியதாயிருத்தலே விஞ்ஞானக் கொள்கைகளின் இயல்பென்றும், எந்தவொரு அறிவுத்துறையிலும் பொய்ப்பிக்க முடியாக் கொள்கைகள் உளதென ஒருவர் வாதிடுவராயின் அவ்வறிவுத்துறை விஞ்ஞானமேயல்ல என்றும் பொப்பர் வாதிடுகிறார். இவருடைய அபிப்பிராயப்படி மார்க்சிசம் பொய்ப்பிக்க முடியாக் கொள்கை எனக் கூறப்படுவதால், அது விஞ்ஞானமல்ல என்ற முடிவிற்கு வருகிறார். இதுபோலவே வரலாறும் விஞ்ஞானமல்லவென்பது அவரது நிலைப்பாடு.

விஞ்ஞானத்தை விஞ்ஞானமல்லாதனவற்றிலிருந்து வேறுபடுத்தும் தத்துவமாகப் பொய்ப்பித்தற் கோட்பாட்டை அறிமுகப்படுத்திய பொப்பர் இதனடிப்படையில் அறிவுக்கொள்கையொன்றையும் விருத்தி செய்து கொள்கிறார். உண்மை எதுவென எவரும் அறியார். நாம் செய்யக் கூடியதெல்லாம் அறியாமையிலிருந்து விடுவித்துக் கொள்வதே. முடிவிலியாய்த் தொடரும் இப்பயணத்தை அறிவின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையென அழைப்பர். அறியாமையிலிருந்து அறிவை நோக்கிய இப்பயணம் பிரச்சனைதீர்க்கும் முறையிலமைகிறதென்பது பொப்பரது வாதம். இதனைப் பின்வருமாறு விளக்குகிறார்,

$$P_1 \rightarrow TS \rightarrow EE \rightarrow P_2$$

அறிதல் முயற்சி எப்பொழுதும் ஒரு பிரச்சனையுடனேயே ஆரம்பமாகிறது. இதனை $P_1$ குறிக்கிறது. TS என்பது முன்மொழியப்பட்ட தீர்வு முயற்சியையும் EE என்பது முன்மொழியப்பபட்ட தீர்வில் காணப்படும் தவறுகளைக் களைதலையும் $P_2$ என்பது தவறுகள் களையப்பட்டதன் பின்னர் உள்ள நிலையையும் குறிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$P_1$ உம் $P_2$ உம் சாராம்சத்தில் பிரச்சனைகளேயெனினும், $P_1$ பிரச்சனையின் தொடக்கத்தையும், $P_2$ முன்மொழியப்பட்ட தீர்வினடிப்படையில் தவறுகள் களையப்பட்ட நிலையையும் அதேசமயம் புதிய பிரச்சினையொன்றின் தொடக்கத்தையும் சுட்டுகிறது. இவ்வாறு $P_1 \rightarrow TS \rightarrow EE \rightarrow P_2 \rightarrow TS \rightarrow EE \rightarrow P_3$ என அறிவானது உண்மை நோக்கி பிரச்சனை தீர்க்கும் முறையினூடாக வளர்ச்சியடைந்து செல்கிறது. பொதுவாக அறிவுலகத்தையும், குறிப்பாக விஞ்ஞான அறிவையும் பொறுத்த வரையில் முடிவிலியாத் தொடரும் இத்தேடலில் பழைய கொள்கைகள் (ஊகங்கள்) நிராகரிக்கப்பட்டு புதிய கொள்கைகள் (ஊகங்கள்) வந்தவண்ணமேயிருக்கின்றன. அறிவும் வளர்ச்சி அடைந்து கொண்டே செல்கிறது. எந்தவொரு அறிவுத்துறையில் எக்கணத்தில் இவ்வளர்ச்சி தடைப்படுத்தப்பட்டு, இருப்பதுடன் திருப்தியடைய நேரிடுகிறதோ அக்கணத்தில் அவ்வறிவுத்துறை விஞ்ஞானம் என்ற அந்தஸ்தை இழந்து விஞ்ஞானமல்லாததாய், சித்தாந்தமாய்ப் போய்விடுகிறது.

ஊகமும் நிராகரிப்புமாக வளர்ந்து செல்வதே விஞ்ஞான பூர்வமான அறிவு என்ற நிலைப்பாட்டிலிருந்து கொண்டு நிர்ணயமில்வாதம் என்ற கோட்பாட்டைப் பொப்பர் முன்மொழிகிறார். நிர்ணயமில்வாதமென்பது நிர்ணயவாதத்திற்கு எதிரானது. இயற்கை விஞ்ஞானங்களிலும், சமூக விஞ்ஞானங்களிலும் நிர்ணயவாதமென்பது ஒரு அதிதக்கொள்கையாக (Meta theory), அதாவது அறிவைப் பெறுவதற்கு ஆதாரமாயிருக்கின்ற தத்துவமாக எண்ணப்பட்டது. காரணத்தைத் தேடுவதன் மூலம் காரியத்தை விளக்கிக் கொள்ளலாம் என்ற காரணக் கோட்பாடும் நிர்ணயவாதத்தையே ஆதாரமாகக் கொண்டது. நிர்ணயவாதத்தையும் காரணக் கொள்கையையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் எனலாம். அரிஸ்ரோட்டலின் காலத்திலிருந்தே காரணக்கொள்கை அறிவைப் பெறுவதற்கானதொரு திறவுகோலாய் ஏற்றுக்கொள்ளப்பட்டுவந்தது. நியூட்டனின் விஞ்ஞானமும், நிறைபோட்டிப் பொருளாதாரமும், திட்டமிடல் தொடர்பான கொள்கைகளும் உள்பொருளியலடிப்படையில் நிர்ணயவாதமாகவும் அறிவாராய்ச்சியடிப்படையில் காரணக் கொள்கையாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது நிர்ணயவாதமும் காரணக்கொள்கையும் இயற்கை விஞ்ஞானங்களில் நியதிவாதத்திற்கும் சமூகவிஞ்ஞானங்களில் விதிவாதத்திற்கும் (Fatalism) இட்டுச் செல்லுமென எச்சரித்து, நிர்ணயமில் வாதத்தைப் பொப்பர் ஆதரிக்கிறார். இயற்கை விஞ்ஞானங்களில் ஒன்றான பௌதீகத்தில் ''குவாண்டும் மெக்கானிக்ஸ்'' (சக்திச் சொட்டுக் கொள்கை) நிர்ணயமில் வாதத்தை ஆதரிக்கிறதென்றும், குறிப்பிடுகிறார். பொப்பரின் வழியில் திறந்த சமூகத்தின் பொருளாதாரம் பற்றிச் சிந்தித்த பொருளியலாளர்களில் கயக் (Hyek) குறிப்பிடத்தக்கவர்.

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பங்குச்சந்தை நடவடிக்கையையும் சர்வதேச தரத்துக்கு உயர்த்தும் வகையில் 'வெளிநாட்டு முதலீட்டாளர்களும் கொழும்பு பங்குச் சந்தையில் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் பங்கு கொள்வனவு நடவடிக்கையானது நேரடியாகப் பங்குச் சந்தையில் பங்குகளைக் கொள்வனவு செய்வதாகவோ அல்லது இலங்கையில் ஏற்கனவே அரசு சார்பாக இயங்கிய நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் போது (மக்கள் மயப்படுத்தல்) அந்நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்வதாகவோ அமையலாம். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகள் பட்டியலிடப்பட்ட முதலீடாகக் கொள்ளப்படுகின்றன. இலங்கையில் 1990இன் பின்னரே பட்டியலிடப்பட்ட முதலீடு முக்கியம் பெற்று வருகின்றது. 1990இல் பட்டியலிடப்பட்ட முதலீட்டின் தேறிய பெறுமதி 390MR ஆகவும் 1993 இல் 3272MR ஆகவும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த பொருளாதாரத்தில் பொதுநிதியும், வர்த்தகக் கொள்கையும்

## Public Finance and Trade Policies in Open Economy


திரு. இ. நந்தகுமாரன்
B. A. (Hons), MSc. M.sc. (Survey)
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியல்துறை
யாழ் பல்கலைக்கழகம்


### அறிமுகம்:

1960களிலும், 1970 களிலும் கைத்தொழில் நாடுகள் சராசரியாக ஆண்டொன்றிற்கு 4 சதவீதமாகவும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் 5, 5 சதவீதமாகவும் வளர்ச்சியடைந்துள்ளன. ஆனால் 1980 களில் இவ்வளர்ச்சி வீதமானது முறையே 2 சதவீதமாகவும், 4 சதவீதமாகவும் காணப்பட்டது. உப ஆபிரிக்க நாடுகளிலும், கடன் பழுநிறைந்த நாடுகளிலும் 1980 களில் தலா வருமானம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது. சர்வதேச பொருளாதார சூழலில் ஏற்பட்ட மாற்றங்களே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் இப்போக்கிக்குக் காரணமாகும். சர்வதேச வர்த்தக வளர்ச்சி 1980 களில் மந்த கதியில் இருந்தது. எண்ணெய் விலைகள் உயர்வடைந்தன. எண்ணெய் அல்லாத ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. மெய்வட்டி வீதம் முன்னெப்போதும் இல்லாத உயர்வைக் காட்டியது. சர்வதேச முதலீடுகளைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருந்தது. தேறிய வள மாற்றமானது எதிர்க் கணியமாக காணப்பட்டது.

கைத்தொழில் நாடுகளில் மேற்கொள்ளப்படும் பொது நிதி, வர்த்தகக் கொள்கையின் தாக்கம் நேரடியாகவும் உடனடியாகவும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொதுநிதி, வர்த்தகக் கொள்கை, அபிவிருத்தி என்பவற்றில் பாதிப்பினை ஏற்படுத்தின. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வளர்ந்து வரும் வர்த்தக பாதுகாப்பு நடவடிக்கைகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சந்தை வாய்ப்பினை குறைக்கின்றது. முன்னைய தொகுதி நாடுகளில் விவசாய உற்பத்திகளுக்கான மானியங்கள் வளர்ந்து வரும் நாடுகளின் ஏற்றுமதிக்கான விலைகளை கீழ்நோக்கிச் செலுத்துகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளில் மெய்வட்டி வீத அதிகரிப்பு தற்போதைய வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் சென்மதி நிலுவை நடைமுறைக்கணக்கு வரவுசெலவுத் திட்டம் என்பவற்றில் குறைநிலையை ஏற்படுத்துகிறது. கைத்தொழில் நாடுகளின் மெதுவான வளர்ச்சி, வளர்முக நாடுகளின் வர்த்தகத்திற்கான வாய்ப்பினை குறைத்துள்ளது. இவை ஒரு சில முக்கியமான பிணைப்புக்கள்; அண்மைக்கால அபிவிருத்தி அனுபவங்கள் இவ்விரு தொகுதி நாடுகளுக்குக்கிடையில் இவ்வாறான பிணைப்புக்கள் நெருக்கமாகக் காணப்படுவதை உறுதி செய்கின்றது. எனினும் பிராந்திய ரீதியாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கடந்தகால செயற்பாடுகள் பெரிதும் மாறுபட்ட தன்மையைக் கொண்டதாகவே காணப்படுகிறது. கிழக்காசிய நாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் செயற்பாடுகள் வியக்கத்தக்கதாக இருக்க தென் அமெரிக்க, தென் ஆசிய நாடுகளின் செயற்பாடுகள் அவ்வளவு வெற்றியளிக்கவில்லை ஆபிரிக்க நாடுகளை எடுத்தாலோ அவற்றின் செயற்பாடுகள் மிக மோசமாக அமைந்துள்ளது. இவ்வாறான வேறுபட்ட தன்மைக்கு காரணம் கடந்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களாக கடைப்பிடித்து வந்த பல்வேறு கொள்கைகளினதும் ஒட்டு மொத்தமான செயற்பாடேயாகும். இவற்றுள் பொதுநிதி, வர்த்தகக் கொள்கைகளும் அடங்கும்.

இந்தக் கட்டுரையானது பொதுநிதிக்கும் வர்த்தகக் கொள்கைகளுக்குமிடையிலான இடைத்தொடர்பையும் அபிவிருத்தியில் அவற்றின் முக்கியத்துவத்தையும் மூன்று வேறுபட்ட கொள்கை உருவாக்கல் பரிமாணங்களில் இருந்து நோக்க எத்தனிக்கின்றது.

(1) பேரின பொருளாதாரக் கொள்கை
(2) அரசாங்க வருமானக் கொள்கை
(3) பொது செலவினக் கொள்கை.

## பேரின பொருளாதார பரிமாணம்: இறைக்கொள்கையும் வர்த்தகமும்

நாடுகள் கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்ற வெளித்தாக்கங்களுக்கு வேறுபட்ட வகையில் செயற்பட்டுள்ளன. நெருக்கடியைத் தவிர்த்துக் கொண்டநாடுகளில் உறுதியான நாணயமாற்று வீதம், காத்திரமான இறைமுகாமைத்துவம், (Fiscal Mangement) சுதந்திரமான வர்த்தகத்தினைநோக்கிய போக்கு என்பவை மிக முக்கியமான பங்கு வகித்துள்ளது.

## நாணயமாற்று வீதம்:

இறைக்கொள்கைக்கும் வர்த்தகத்திற்குமிடையிலான பிரதான இணைப்பு நாணயமாற்று வீதமாகும். பொதுவாக அளவிற்கதிகமான வரவு செலவுத்திட்டக் குறைநிலையே மிகை மதிப்பிடப்பட்ட நாணய மாற்றுவீதத்திற்கு அடிப்படையாகும். வரவுசெலவுத் திட்டக் குறைநிலை அதிகரிக்க உள்நாட்டு கேள்வி அதிகரித்து கூலி, விலைகள் என்பவற்றை மேல்நோக்கி உயர்த்தும். குறைநிலையை நிதிப்படுத்த பண ஆக்கத்தின் மீது அதிகளவு நம்பியிருப்பதும் விலைவீக்கத்திற்கு இட்டுச் செல்லும். வர்த்தகப் பங்காளர் நாடுகளினது விலைகளிலும் பார்க்க உயர்ந்த உள்நாட்டு விலை மெய் நாணயமாற்று வீதத்தினை மிகை மதிப்பீட்டிற்கு (over valuation) இட்டுச் செல்லும். அதிகரித்த கேள்வி நடைமுறைக்கணக்கில் ஏற்படும் குறைநிலையை உயர்த்த இது உயர்மூலதன உள்வருகையால் ஈடுசெய்யப்படுமானால் நாணய மிகை மதிப்பீடு ஏற்படாது. நாணயமிகை மதிப்பீடு வர்த்தகம் செய்யக்கூடிய உற்பத்திகளுக்குப் பதிலாக வர்த்தகம் செய்யமுடியாத உற்பத்திகளைத் தூண்டும். சர்வதேச சந்தையில் போட்டியிட முடியாத நிலைமையை இது பிரபலிக்கும். ஏற்றுமதி செயற்பாடுகள் தேய்வடையும் மிகை நாணய மதிப்பீடு நீண்டகாலத்தில் வர்த்தகம் செய்யக்கூடிய துறையில் முதலீட்டு வீழ்ச்சிக்கும் வழிகோலும். இது நாட்டின் ஏற்றுமதி செய்யக் கூடிய சாத்தியப்பாட்டினை மேலும் குறைக்கும்.

அரசியல் காரணங்களுக்காக நாடுகள் நாணய மதிப்பிறக்கத்தினை பிற் போடுவது வழமையாகும். பதிலாக தற்காலிக நடைமுறைகளான இறக்குமதித் தீர்வைகள் இறக்குமதித் தொகைக் கட்டுப்பாடுகள் போன்றவற்றின் மூலம் நடைமுறைக் கணக்கினை உறுதிப்படுத்த முனைவர். அரசியல் ரீதியாக அதிகரித்து வரும் பாதுகாப்புக் கோரிக்கையை இது நிறைவேற்றினாலும் இந்நடவடிக்கைகள் நாணய மிகை மதிப்பீட்டின் விளைவுகளை மேலும் வலியுறுத்தும். பாதுகாப்பு மூலம் பெறப்படும் வாடகையைப் பெற வளங்கள் பயன்படுத்தப்படுவதனால் இது பொருளாதாரத்திற்கு மேலும் செலவினைத் தோற்றுவிக்கும். இறுதியாக நாணய மிகை மதிப்பீடு நிலைத்து நிற்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கங்கள் மதிப்பிறக்கத்திற்கு வலுக்கட்டாயமாகத் தள்ளப்படும். நாணயமதிப்பிறக்கம் தேவைப்படும் இறை, நாணய கட்டுப்பாடுகளுடன் செயற்படாவிட்டால் நன்மை பயக்காது, தொடரும் மிகைக் கேள்வியும் விலைவீக்கமும் நாணயப்பெறு மதிபிறக்கம் மெய் நாணய மாற்று வீதத்தில் ஏற்படுத்தும் ஆரம்ப தாக்கத்தினை தேய்வடையச் செய்யும். இறை நாணயச் சீராக்கங்களுடன் கூடிய நாணய மதிப்பிறக்கமே நிலைத்து நிற்கக்கூடிய போட்டித் தன்மையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

## காத்திரமான இறை முகாமைத்துவம்

இறை கட்டுப்பாடு என்பது சமநிலை வரவு செலவுத் திட்டத்தைக் குறிக்கவில்லை; விலைவீக்கத்தைக் கட்டுப்படுத்தல், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், வெளிநாட்டு கடன்படு தகுதியைப் பேணுதல் போன்ற பேரின குறிக்கோள்களுடன் ஒத்துப் போகக் கூடிய குறை அல்லது மிகை நிலையைக் கொண்டிருப்பதையே குறிப்பிடுகிறது.

வரவு செலவுத்திட்டக் குறையின் தாக்கமானது அதன் அளவில் மட்டுமல்ல எவ்வாறு உள்நாட்டிலா அல்லது வெளிநாட்டிலா நிதிப்படுத்தப்படுகின்றது என்பதிலும் தங்கியுள்ளது. குறைநிலையை, உள்நாட்டில் தனியார் துறையில் கடன்பெறுதல் மூலம் அல்லது பண ஆக்கத்தின் மூலம் நிதிப்படுத்தலாம். அரசாங்கம் தனியார் துறையிடமிருந்து கடன்பெறும் தன்மை நிதிச் சந்தையின் வளர்ச்சியிலும் அரசாங்க ஆவணங்களை தனியார் கொள்வனவு செய்வதில் காட்டும் விருப்பத்திலும் தங்கியுள்ளது. இவ்வாறு அரசாங்கம் செய்யும்போது தனியாருக்குக் கிடைக்கக் கூடிய கடன்கள் குறைவடைய வட்டிவீதம் உயர்வடையும். இது சர்வதேச போட்டித் தன்மையைக் குறைக்கும்;

பணத்திற்கான கேள்வியை விட பணத்திற்கான நிரம்பல் அதிகரிக்காத வகையில் வளர்ச்சியடைகின்ற ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கம் ஏற்படாமல் பணத்திற்கான தளத்தினை விரிவாக்கிக் குறைநிலையை நிதிப்படுத்தலாம். பணநிரம்பலின் வளர்ச்சிவீதம் பணத்திற்கான கேள்வியைவிட அதிகரிக்குமானால் பணவீக்கம் ஏற்படும் பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பணவீக்கம் வரவுசெலவுத்திட்டக் குறையை நிதிப்படுத்த அரசாங்கங்கள் இந்த வழிமுறையைப் பின்பற்றுவதனாலே ஏற்படுகிறது. அத்துடன் பணவீக்கம் இறைத்தாக்கத்தினையும் கொண்டதாகும். பணவீக்கத்தினால் கையிலுள்ள பணநிலுவையின் மெய்ப்பெறுமதி வீழ்ச்சியடைவதனால் தனிநபர்கள் மறைமுகமான ஒரு ''பணவீக்க வரிக்கு'' உட்படுத்தப்படுகின்றார்கள். உயர் பணவீக்கம் பணத்திற்கான கேள்வியை வெகுவாகக் குறைக்குமானால் அரசாங்கத்திற்கு வளங்களின் மீதுள்ள Claim குறைவடையும். பணவீக்கம் அரசாங்க செலவினத்தை அதிகரிக்கவும் மெய்வருமான வளர்ச்சியை வீழ்ச்சியடையவும் செய்வதன் மூலம் குறைநிலை மேலும் அதிகரிக்க இது விஷவட்டத்தை ஏற்படுத்தும்.

வரவு செலவுக் குறையுடனும் பண ஆக்கத்துடனும் தொடர்புடைய பணவீக்கம் வர்த்தகப்பங்காளர்களான நாடுகளின் பணவீக்கத்திலைவிட உயர்வாக இருப்பின் நாணய மிகை மதிப்பீட்டிற்கு இட்டுச் செல்லும். நாணய மிகை மதிப்பீட்டினால் வர்த்தகத்தில் ஏற்படக் கூடிய அனைத்து தீய விளைவுகளும் (முன்னர் குறிப்பிட்ட) ஏற்படும். பணவீக்கம் உள்வீட்டு விலைகளின் நிச்சயமற்றதன்மையையும் வெளியீட்டு விலை அதிகரிப்பிற்கும் இட்டுச் செல்லும். இவையெல்லாம் கடன்பெறு தகுதியைக்குறைக்கும். அத்துடன் நிச்சயமற்ற சூழ்நிலையையும் உருவாக்கும். இதனால் முதலீடுகள் வீழ்ச்சியுறும், முதல் வெளியேற்றமும் இடம்பெறும்; வர்த்தகம் செய்யக்கூடிய பொருட்களின் விலை உயர்வும். இதனால் இலாப எல்லை வீழ்ச்சியடைவதால் உற்பத்தியாளர்கள் இவற்றை உற்பத்தி செய்ய முன்வரமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவு செலவுத் திட்டக் குறையை நிதிப்படுத்த அரசுக்குரிய மற்றொரு வழி வெளிநாடுகளில் கடன் பெறுவதாகும். அளவிற்கதிகமாக வெளிநாடுகளில் கடன் பெறுவதில் தங்கியிருப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை கடந்த காலங்களில் கடன் பழுவால் அவதியுற்ற நாடுகளின் அனுபவங்களில் இருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. கடன்பெறு தகுதி இழக்கப்படின் வெளிநாடுகளில் கடன்பெறுவது வரையறையுடையதாகிவிடும். நடைமுறைக் கணக்கு குறைநிலை வெகுவாகக் குறைக்கப்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். குறுங்காலத்தில் இறக்குமதியைக் குறைப்பதன் மூலமே இதனை அடைந்து கொள்ளலாம். அதிகம் கடன்பெற்ற நாடுகளில் இறக்குமதித் தொகை 1980ற்கும் 1987 இற்குமிடையில் சராசரி 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிக்கட்டுப்பாடு, உள்நாட்டு முதலீட்டு வீழ்ச்சியுடன் சேர்ந்து ஏற்றுமதிப் பக்கத்தில் ஏற்படக்கூடிய வர்த்தக வாய்ப்புக்களுக்கு ஏற்ப செயற்பட முடியாமல் போகலாம். கடன் கொடுத்தவர்களுக்கும் கடன்பட்டவர்களுக்குமிடையில் கடன் திருப்பிச் செலுத்தும் வழிமுறைகளில் உடன்பாடு ஏற்படாத சந்தர்ப்பங்களில் வர்த்தக நிதிக்கான கிடைப்பருமை அல்லது உயர்செலவு வர்த்தகத்திற்குப் பெரும் தடையாக அமையலாம்.

ஒரு ஏற்றுமதிப் பொருளின் விலையில் திடீரென ஏற்படும் அதிகரிப்பினால் நாட்டின் வருவாய் அதிகரித்து மிகை ஏற்படும் போது அம்மிகையை உரிய முறையில் முகாமை செய்வது என்பது குறைநிலைமை முகாமை செய்வதற்கு ஒத்ததாகும். பல நாடுகளில் குறிப்பாக எல்லா எண்ணெய் ஏற்றுமதி நாடுகளிலும் இத்தகைய மிகை நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை அநேகமாக அரசாங்கங்கள் அதிகரித்த நடைமுறைச் செலவினங்களிலோ அல்லது வருமானம் குறைந்த முதலீடுகளிலோ செலவு செய்துள்ளன. இதனால் மெய்நாணய மாற்று வீதம் அதிகளவில் அதிகரித்து செழிப்பினை அனுபவித்த ஏற்றுமதிப் பொருள் தவிர்ந்த ஏனை ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்துள்ளன. அதே சமயம் அதிகரித்த மொத்தக் கேள்வியினாலும், மிகைப்படுத்தப்பட்ட நாணயத்தினால் இறக்குமதி அதிகரித்துள்ளது. செழிப்புக் காலத்தில் மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி இருப்புக்கள் ஏற்றுமதி வருமானத்தினாலும், மூலதன உட்பாய்ச்சலினாலும் அதிகரிக்கும். இது நாணயத் தளத்தின் வளர்ச்சிக்கு வழிகோல உயர் பணவீக்கம் ஏற்படும். பலர் செழிப்புக் காலங்களில் ஏற்பட்ட உயர் கடன்பெறு தகுதியைப் பயன்படுத்தி அதிகளவில் கடன் பெற்று ஏற்றுமதிப் பொருளின் விலை வீழ்ச்சியடைய தகுதிக்கு மேற்பட்ட வெளிநாட்டுக் கடன் பழுவை சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அதிகரித்த வருமானத்தை உள்நாட்டில் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவது நல்லது. இதனைப் பயன்படுத்தி வெளிநாட்டுக் கடனைக் குறைப்பதன் மூலம் நாணய மாற்று வீதத்தின் அதிகரிப்பினைக் குறைக்கலாம். அல்லது ஏற்றுமதி அமைப்பினை பன்முகப்படுத்துவதன் மூலம் நீண்ட காலத்தில் வெளித்தாக்கங்களுக்கு முகங்கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

## சுதந்திரமான வர்த்தகம்

சுதந்திரமான வர்த்தகத்திற்கு காத்திரமான இறைக்கொள்கை அவசியம் என்பதைப் பல நாடுகளின் அனுபவம் எடுத்துக்காட்டியுள்ளது; தென்கிழக்காசியாவின் புதிய கைத்தொழில் நாடுகளில் சுதந்திர வர்த்தகம் வெற்றியளித்ததற்கு ஓரளவு உறுதியான இறைக் கொள்கையே காரணமாகும். மாறாக பல நாடுகளில் வரவு செலவுத்திட்டக் குறை தவறான முகாமைத்துவம் செய்யப்பட்டபடியால் சுதந்திர வர்த்தகம் தோல்வியடைந்தது. இதிலிருந்து பொருளாதார நெருக்கடிக்கு முதலில் உடனடியாக நன்கு உருவாக்கப்பட்ட உறுதிப்படுத்தல் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்; இதன் மூலம் பேரினப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார சமமின்மைகள் குறைக்கப்பட்ட பின்னரே சுதந்திர வர்த்தகம் இடம்பெறல் வேண்டும். உறுதிப்படுத்தல் செயற்திட்டத்தில் பிரதான அம்சங்கள் நாணய மதிப்பிறக்கமும், வரவு செலவுத் திட்டக் குறையைக் குறைப்பதுமாகும். பொருளாதார வளர்ச்சியையும் வர்த்தகத்தையும் தூண்டுதற்குத் தேவையான அமைப்பு மாற்றத்தைக்கொண்டு வர பேரின பொருளாதார சமமின்மைகளை நீக்குவதற்கான உடனடி நடவடிக்கை அவசியமாகும். வரவு செலவுத் திட்டக் குறையைக் குறைப்பதற்கு குறுங்காலத்தில் அநேகமாக எடுக்கும் நடவடிக்கை பொதுச்செலவினத்தில் குறைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் இறக்குமதி கேள்வியைக் குறைப்பதாகும். பின்னர் சுதந்திர வர்த்தகத்தை நடைமுறைப்படுத்தும்போது தீர்வைகள் அனுமதிப் பங்குகளைக் குறைத்து இழக்கப்படும் வருமானத்தை வரித்தளத்தை அகலப்படுத்துவதன் மூலம் பெற்று வரவு செலவு குறையை முகாமை செய்ய வேண்டியிருக்கும். வர்த்தக வரிகள் வருமானத்தில் முக்கிய பங்கு வகிக்கும் நாடுகளில் வர்த்தகத்தினை சுதந்திர மயமாக்குவது மிகவும் கடினம். ஏனெனில் வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சி பேரின பொருளாதார உறுதிப்பாட்டிற்கு முரணானதாக இருக்கும்.

சுருக்கமாக, இறைக்கொள்கை, நாணயமாற்று விகிதம், வர்த்தகக்கொள்கை என்பவற்றிற்கிடையிலான இடைத்தொடர்புகளை அறிந்து கொள்வது அவசியமாகும். உள்நாட்டு சமநிலைக்கு மட்டுமல்லாமல், வெளிநாட்டு சமநிலை உறுதியான நாணய மாற்று விகிதம், நீண்டகால வர்த்தக செயற்பாடு அனைத்திற்கும் காத்திரமான இறைக் கொள்கை முதற் தேவையாகக் காணப்படுகிறது. அதே சமயம் வர்த்தகக் கொள்கை, வெளிநாட்டு வர்த்தகம், நாணயமாற்று விகிதம் என்பவை இறை மீதி (Fiscal Balance) பேரின பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

## அரசாங்க வருமானமும் வர்த்தகமும்

வரிக்கொள்கையும் வர்த்தகக் கொள்கையும் நெருக்கமான தொடர்புடையவை. இறக்குமதித் தீர்வையானது வருமானத்தைத் தேடித்தருவதுடன் உள்நாட்டில் உற்பத்தி செய்யும் இறக்குமதிப் பதிலீடுகளைப் பாதுகாக்கவும் உதவுகிறது. ஏற்றுமதி வரிகள் விவசாய கிராமிய உற்பத்திகள்மீதே அறவிடப்படுகின்றது. ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக விசேட இறை ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுகின்றன. நுகர்வோர் கட்டணங்களும் வர்த்தகத்தில் பாதிப்பினை ஏற்படுத்தலாம். இந்தப் பகுதி அரசாங்க வருமானத்திற்கும் வர்த்தகக் கொள்கைக்குமிடையிலான தொடர்பை ஆராய்கின்றது.

## வருமானம் பெறல்

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் வருமானம் குறைந்த நாடுகளும் கைத்தொழில் நாடுகளை விட கூடியளவு வர்த்தகத் தீர்வைகளில் வருமானத்திற்குத் தங்கியுள்ளன. 1985 ஆம் ஆண்டு மொத்த வருமானத்தில் ஏற்றுமதி இறக்குமதி வரி வருமானம் குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் 36 சதவீதமாகவும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் 18 சதவீதமாகவும் கைத்தொழில் நாடுகளில் 2 சதவீதமாகவும் காணப்பட்டது. ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களில் வரி அறவிட்டு வருமானம் பெறுவது நேரடியான வழியாகக் கருதப்படுகிறது. நிர்வாகத்திறமை குறைவாகக் காணப்படும் நாடுகளில் இலகுவாக நிர்வகிக்கக்கூடிய இவ்வரிகள் விருப்பத்திற்குரியவையாகத் தென்படுகின்றன. இவ்வரிகள் குறைந்த நிர்வாகச் செலவு கொண்டவை மட்டுமல்ல, குறிப்பாக இறக்குமதி வரிகள் மிக வேகமாக செயற்படுத்தக் கூடியவையாகவும் இருப்பது மற்றுமொரு நன்மையாகும். வரவு செலவுக்குறை நிலைமை உயரும் போது இத்தகைய வரிகளைப் பயன்படுத்தி குறையைக் கட்டுப்படுத்த முனைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக வரிகளை நிர்வகிக்கும் செலவு குறைவாக உள்ளபோதும், உள்நாட்டு வரியை உயர்த்தி வருமானம் பெறுவதை விட வர்த்தக வரிகளை உயர்த்தி வருமானம் பெறுவது உயர்ந்த பொருளாதாரச் செலவுடையது பல நாடுகளில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளில் இருந்து இந்த உண்மை புலப்படுகிறது. சுங்க நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் செலவுகளைக் குறைத்து வருமானத்தை அதிகரித்து வர்த்தகத்தினையும் முன்னேற்றலாம். இவ்வாறு செய்வதன் மூலம் வர்த்தக வரிகளின் செலவுகளைக் குறைத்தாலும், உள்நாட்டு வரிகளின் மூலம் வருமானம் பெறுவதற்கும் வர்த்தக வரிகள் மூலம் வருமானம் பெறுவதற்கும் இடையிலான செலவுகளில் உள்ள வேறுபாட்டை ஈடு செய்ய முடியாது.

## உள்நாட்டு உற்பத்தியை தீர்வையின் மூலம் பாதுகாத்தல்

இறக்குமதிப் பதிலீட்டுப் பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் பல நாடுகளில் வர்த்தகத் தீர்வைகள் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகவே கருதப்படுகின்றது. சென்மதி நிலுவைப் பிரச்சனை காணப்படும் நாடுகளிலும் இறக்குமதிகளைக் குறைப்பதற்காக இறக்குமதிக் தீர்வைகளைக் கருவியாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இறக்குமதித் தீர்வை மறைமுகமாக ஏற்றுமதி மீதான தீர்வையாகச் செயற்படுகின்றது. அதிகரித்த தீர்வை அந்நியச் செலாவணி மாற்றுவீதத்தினை உயரச் செய்கின்றது. இதனால் வளங்கள் ஏற்றுமதி செய்யமுடியாத பொருள் உற்பத்திக்குப் பாய்கின்றன. ஏற்றுமதிப் பொருள் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. நீண்டகாலத்தில் சென்மதி நிலுவை மேலும் மோசமடையும்.

இறக்குமதி வரிகள் வெளிநாட்டுச்சூழலினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் இருந்து எழக் கூடிய பிரச்சனைகளைக் குறைக்கும் ஒரு வழியாகவும் கருதப்படுகின்றது. ஒரு நாடு இறுதி நுகர்வுப் பொருட்களில் தங்கியிருத்தலை இறக்குமதித் தீர்வை குறைத்தாலும் இடைநிலைப் பொருட்களில் தங்கியிருக்கின்ற நிலையை உயர்த்தி விடும். இடைநிலைப் பொருட்கள் உள்நாட்டு உற்பத்திக்கு அவசியம் தேவைப்படுவதனால் இவற்றில் அதிகளவு தங்கியிருப்பதால் ஏற்றுமதி வருமான தளம்பலினால் எவ்வளவு பாதிப்பிற்குள்ளாகுமோ, அவ்வளவு பாதிப்பினை எதிர்நோக்க வேண்டும். இறக்குமதியினை நிதிப்படுத்த முடியாவிட்டால் உற்பத்தி குறைக்கப்படல் வேண்டும். மேலும் வர்த்தகத்தில் ஏற்பட்ட தங்கியிருத்தல் நிலை குறைந்ததால் சென்மதி நிலுவை குறைநிலை பாதிப்பு குறைக்கப்படலாம் ஆயினும் மொத்த அரசாங்க வருமானத்தில் வர்த்தக வரியின் பங்கு உயர்வாக உள்ளதால் வரி வருமானம் நிச்சயமற்றதாக மாறும். எனவே சென்மதி நிலுவை குறைக்கப்படுவதனால் ஏற்படும் நன்மை வர்த்தக வரியில் ஏற்படும் நிச்சயமற்ற தன்மையினால் இல்லாது போகலாம்.

எல்லையில் அறவிடப்படும் பெயரளவு வரி மூலம் வர்த்தக வரியின் பாதுகாப்புத் தாக்கத்தினை முழுமையாக அளவிட முடியாது. இறக்குமதிப் பிரதியீடுகள் மீது விதிக்கப்படும் உள்நாட்டு நேரில் வரியை விட எந்தளவு உயர்வாக தீர்வை காணப்படுகிறதோ அதற்கேற்பவே பாதுகாப்புத் தன்மை காணப்படும். உள்ளீடுகள் வெளியீடுகள் மீது விதிக்கப்படும் உள்நாட்டு வரி தீர்வைகளின் இணைந்த செயற்பாடே முக்கியமானது. இதன் செயற்படு பாதுகாப்பு வீதம் (Effective rate of Protection) என்பதனால் அளவிடலாம். இவற்றைக் கணிப்பிடுவதில் பல பிரச்சினைகள் இருந்த போதும் இதனைக் கொண்டு ஒரு பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகள் எந்த மட்டத்தில் பாதுகாப்பினைப் பெறுகின்றன என்பதையும் உள்நாட்டு வரி, தீர்வைகளின் ஒன்றிணைந்த பாதுகாப்புத் தன்மை என்ன என்பதையும் அறிந்து கொள்ள முடியும். விசேடமாக திறந்த வர்த்தகக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால கட்டத்தில் இது மிகவும் உதவியாக இருக்கும்.

வர்த்தகம் சுதந்திர மயமாக்கல் என்பது பொதுவாக பல கட்டங்களை உள்ளடக்கியது. முதலாவதாக தொகை ரீதியான கட்டுப்பாட்டிற்குப் பதிலாக தீர்வையை அறிமுகப்படுத்தல். இதன் மூலம் அரச வருமானம் முன்னேற்றமடைய வரவு செலவு பற்றாக்குறையில் முன்னேற்றம் ஏற்படும். இரண்டாவதாக உயர்ந்த தீர்வைகளைக் குறைத்தல். இதனால் வருமான வீழ்ச்சி ஏற்படலாம்; சில சமயங்களில் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதனால் கள்ளக் கடத்தல் குறைந்திருந்தால் அதிகரித்த இறக்குமதி போன்றவற்றால் வருமான வீழ்ச்சியில் ஏற்படும் தாக்கம் குறைக்கப்படலாம் அல்லது சாதகமாகவும் மாற்றமடையலாம். மூன்றாவது வழி வருமான இழப்பைத் தவிர்ப்பதற்காக கீழ்மட்டத் தீர்வைகளை உயர்த்தும் அதேவேளை பல்வேறு நடவடிக்கைகளுக்கிடையிலான செயற்படு பாதுகாப்பு வரிவீத வேறுபாட்டினையும் குறைக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

மூன்றாவது வழிமுறை பின்னர் திருத்த முடியாத மேலதிகமான பிறழ்வினை ஏற்படுத்துவதாலும் ஒரு சிலர் நலன்களுக்கு சாதகமாக அமைவதனால் அண்மைக் காலமாக கேள்விக்குரியதாக உள்ளது. மாற்று வழியாகத் தீர்வைகள் சீராக்கம் உள்நாட்டு பொருட்கள் மீதான வரிகளது சீராக்கத்துடன் ஒன்றிணைக்கப்படல் வேண்டும். உள்நாட்டு நுகர்வு வரி உயர்த்தப்படும் போது இறுதிப் பொருட்கள் மீதான தீர்வை குறைக்கப்படுவது இறக்குமதி பிரதியீட்டுப் பொருட்களுக்கு சார்பாக உள்ள நிலையை இல்லாதொழிக்க மிகவும் பொருத்தமான வழியாகும். இதில் பல நன்மைகள் உண்டு. சுதந்திரமான வர்த்தகச் செயற்பாட்டினை வடிவமைக்கும் போது பொதுநிதி பற்றி ஒட்டு மொத்தமான ஒரு நோக்கு இருக்கவேண்டுமென்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது. பிறழ்வுகளைஇழிவுபடுத்துவது மட்டுமல்லாமல் சுதந்திர வர்க்கத்தின் வருமான விளைவு 1980 களில் தாய்லாந்தில் ஏற்பட்டது போன்று சுதந்திரமாக்கல் முயற்சியை பின்தள்ளி விடாமல் இருப்பதற்கும் இந்த நோக்கு அவசியமாகும். சில சந்தர்ப்பங்களில் உள்நாட்டு நுகர்வு வரியை அறிமுகப்படுத்துவதோ அல்லது உயர்த்துவதோ உடனடியாக சாத்தியப்படாமல் இருக்கலாம். அல்லது மிகவும் குறைவான வரிகளை உயர்த்தும் போது குறிப்பாக இடைத்தர அல்லது மூலதன பொருள் உற்பத்தித்துறையில் இளம் தொழில்களின் அபிவிருத்திக்கு உதவலாம். சுதந்திர வர்த்தகத்துடன் தொடர்பான விரிந்த இறை சீராக்கங்களை கவனத்திற் கொண்ட பின்னரே மேற்கூறியவாறான முடிவுக்கு வருதல் வேண்டும். பாதுகாப்பு வழங்கும் போது அளவிலும் நேரத்திலும் வரையறையுள்ளதாக அமைய வேண்டும்.

## ஏற்றுமதி வரிகள்:

ஏற்றுமதி வரிகளைப் பயன்படுத்துவது கடந்த பத்து வருடங்களாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. ஏற்றுமதி வரிகள் விவசாய உற்பத்திகளையும் வருமான வரி அல்லது நில வரியினூடு சென்றடைய முடியாத கிராமிய உற்பத்தியாளர்களையும் வரிக்கு உட்படுத்தும் வழிமுறையாகும், வருமானத்தைத் திரட்டுவதுடன் ஏற்றுமதி வரிகள் ஏற்றுமதிப்பண்டங்களின் உள்நாட்டு விலையை குறைவாக வைத்திருப்பதனால் உள்ளூர் பதப்படுத்தலுக்கு சாதகமாக அமையும், பல்நாணயமாற்று வீதம் அல்லது சந்தைப்படுத்தும் சபைகளது விலையிடல் நடவடிக்கைகள் போன்றவையும் உலக விலையை விட உள்நாட்டு விலையை குறைவாகத் தீர்மானிப்பதன் மூலம் மறைமுகமாக ஒரு ஏற்றுமதி வரி போல செயற்படலாம்.

சில நாடுகளில் விவசாய ஏற்றுமதி பொருள் உற்பத்தியாளர்கள் மிகை வரிக்கு உட்படுத்தப்பட்டிருப்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. கானாவில் 1990 களின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டின்படி கொக்கோ விவசாயியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணை விலையில் 4 சதவீதமான ஏற்றுமதி வரி விதித்திருந்தால் அவரது இலாபத்தில் அப்போது இருந்த வருமான வரி வீதத்தில் வருமானவரி அறவிட்டால் பெறும் அதே அளவு வருமானத்தைப் பெற்றிருக்க முடியும் என எடுத்துக் காட்டியது. உண்மையாக அறவிடப்பட்ட ஏற்றுமதி வரிவீதம் 100 சதவீதத்திற்கும் மேலானதாகும். வருமானவரிக்குப் பதிலாக ஏற்றுமதி வரியை பதிலிடும்போது வரிவீதம் வெகுவாகக் குறைக்கப்படலாம்.

சர்வதேச விலைகளில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஒரு நாட்டில் ஏற்றுமதி வரிகள் பொருளின் விலை உயர்விற்கு வழிகோலி வர்த்தக மாற்று வீதத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும். நடைமுறையில் ஒரு சில நாடுகள் மட்டுமே அதுவும் நீண்ட காலத்தில் இவ்வாறு விலைபிடல் சக்தியைக் கொண்டவை. ஏற்றுமதி வரி உற்பத்தியாளர் மீது திருப்பப்பட்டு விடும், இதன்விளைவாக ஏற்றுமதி உற்பத்திகளை ஊக்கமிழக்கச் செய்து நடைமுறைக்கணக்கு பாதகமாக மாற வழிகோலும். ஏற்றுமதி வரிகள் உள்நாட்டு பதப்படுத்தல் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு அதிகூடிய பிறழ்வுகளை ஏற்படுத்தக்கூடிய வழிமுறையாகும். அத்தகைய ஒரு ஊக்குவிப்பு தேவைப்படுமிடத்து வேறுவழிகள் உதாரணமாக நேரடி மானியம் வழங்கல் போன்றவை, பொருளாதார ரீதியில் விரும்பத்தக்கவையாகும். உள்நாட்டு வரித்தளம் விரிவடைய இதனை படிப்படியாக நீக்க வேண்டும்.

## ஏற்றுமதி ஊக்குவிப்பு:

வரியமைப்பிலுள்ள ஏற்றுமதிக்கெதிரான பக்கச் சார்பு நிலையை போக்குவதற்காக பல நாடுகள் விசேடமாக ஏற்றுமதி ஊக்குவிப்புக்களை செயற்படுத்துகின்றன. வெற்றியீட்டிய மிகவும் சிறந்த உதாரணம் கொரியாவாகும். அபிவிருத்தியடைந்து வரும் பல நாடுகளில் இவற்றின் தாக்கம் பல வகைப்பட்டதாகக் காணப்படுகின்றது.

விசேடமான ஏற்றுமதிச் சலுகைகள் குறிப்பிடத்தக்க பங்கினை வகிப்பதாக கருதுவதனால் வலியுறுத்தப்படுகின்றது. ஏற்றுமதிக்கெதிரான ஊக்குவிப்புக்களின் தாக்கத்தினை இழக்கச் செய்வதாகவும் இறக்குமதி அமைப்பில் உள்ள பிறழ்வுகள் குறைக்கப்படுவதாகவும் கருதப்படுவதனால் ஏற்றுமதிச் சலுகைகள் ஒரு இடைக்கால செயற்பாடாக கருதப்படுகின்றது. மேலும் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பது முக்கியமான வெளிவாரி விளைவினைக் கொண்டிருப்பதாகவும் வாதிடப்படுகின்றது. சந்தைப்படுத்தல் நுட்பங்களை அபிவிருத்தி செய்தல், செய்தி பரிமாற்றம் உள்ளக கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல் போன்றவை வெளிவாரிவிளைவுகளைஏற்படுத்துவதனால் அரசாங்கம் ஏற்றுமதி ஊக்குவிப்பில் தலையிடுவது நியாயப்படுத்தப்படுகிறது. அரசு தலையிடுவதனால் செலவினங்களும் இருப்பதனால் இத்தகைய செலவுகளைவிட ஏற்றுமதி ஊக்குவிப்பில் நன்மை இருத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளல் அவசியம்.

ஏற்றுமதி ஊக்குவிப்பிற்காக வரிக் கொள்கைகளை பயன்படுத்தும் போது வரி விலக்கும் மறைமுகமான வரி மீளச் செலுத்தலும் பொதுவான அணுகுமுறையாக உள்ளது. ஏற்றுமதியாளர்கள் உள்ளீடுகளை உலக சந்தை விலையில் பெறக்கூடியதாக இருப்பதையும் வெளியீடுகளையும் அவ் விலையில் விற்கக்கூடியதாக இருப்பதையும் உறுதி செய்கின்றது. ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான வேறு கருவிகளாக வருமான வரி மீளச் செலுத்தல், ஏற்றுமதியாளர்களுக்கு தேவையான நிதியைப் பெற வாய்ப்பு, முதல் விளைவு உள்ளீடுகள், வர்த்தகம் செய்ய முடியாத உள்ளீடுகள், உண்மையான பிறழ்வுபடாத விலையில் கிடைக்க வழி செய்தல், வர்த்தகத்திற்கான நிர்வாகக் கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல், சுதந்திரமான வர்த்தக வலயங்களை உருவாக்கல் போன்ற நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஏற்றுமதி ஊக்குவிப்புக்களின் உள்ளடக்கத்திலும் நிர்வகிப்பதிலும் முன்னேற்றங்களை அபிவிருத்தியடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்து வரும்நாடுகள் அண்மைக் காலமாக செய்து வந்துள்ளன.

பொதுவாக வர்த்தகக் கொள்கை சீராக்கலிலிருந்து ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை கவனத்தை திசை திருப்பிவிடும் ஆபத்தைக் கொண்டுள்ளது. விசேடமான ஏற்றுமதி ஊக்குவிப்புக்கள் அதிகளவு வரவு செலவுத் திட்டக் குறையைக் கொண்ட நாட்டிலும், குறைந்த நிர்வாக இயலளவு நாட்டிலும் செயற்படுத்துவதற்குக் கடினமானதாக இருக்கலாம். ஏனெனில் செயற்திறமையான ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை செலவினத்தையும் வருமான இழப்பையும், வலிமையானதும் விரைவானதுமான நிர்வாக அமைப்பையும் வேண்டி நிற்கின்றது. ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கையில் உள்ள மற்றொரு பிரச்சனை சர்வதேச வர்த்தகம் இருபக்க விதிகளினால் கட்டுப்படுத்தப்படுவதனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தலையீட்டு நடவடிக்கையாக அமையவில்லை. இறுதியாக ஏற்றுமதி ஊக்குவிப்பு வரி அமைப்பினை மேலும் சிக்கலாக்கி வர்த்தக சீராக்கலை எதிர்க்கக் கூடிய ஒரு குழுவினரை கட்டியெழுப்பக் கூடும். ஆகவே தீர்வை குறைப்பினோடு பெறுமதி ஊட்டிய வரியையும் அறிமுகப் படுத்தி செயற்படுவது விரும்பத்தக்கது. ஏற்றுமதி வரி மீளச் செலுத்துதல் நடவடிக்கையினால் எதனை அடைய முற்படுகின்றோமோ அதனையே பெறுமதி ஊட்டிய வரி செய்கின்றது. அதாவது உள்நாட்டு மறைமுக வரிகளினால் ஏற்றுமதி சுமையுடையதாக மாறாமல் பார்த்துக் கொள்கிறது. வர்த்தக சீராக்கலின் நிரப்பு நடவடிக்கையாக ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கையை செயற்படுத்தி நிர்வகித்து வந்தால் பலதரப்பட்ட வரையறைகளின் மத்தியிலும் வர்த்தக சுதந்திர மயமாக்கலின் ஆரம்ப கட்டங்களில் முக்கியமான பங்கினை வகிக்க முடியும்.

## பயன்படுத்துவோர் கட்டணங்கள்:

வரிகளுக்கப்பால் அரசினால் வழங்கப்படும் பொருட்கள் சேவைகளை பயன்படுத்துவோரிடம் அறவிடப்படும் கட்டணங்கள் அரச வருமானத்திற்கு மூலாதாரமாக விளங்குகின்றது. இக்கட்டணங்கள் எல்லைச் செலவின் அடிப்படையில் அறவிடப்படுமானால் வருமானம் பெற்றுக் கொள்ள வரிகளை விட விரும்பத்தக்க வழியாக காணப்படுகின்றது. ஏனெனில் இவை சாதன ஒதுக்கீட்டின் வினைத்திறமையைப் பாதிப்பதில்லை. இவ்வாறான கட்டணங்கள் எவ்வாறு வர்த்தகத்தினைப் பாதிக்கின்றன.

முதலில் கட்டணங்களின் மட்டத்தினை எடுத்துக் கொண்டால் இவை பொதுவாக நிதிச் செலவுகளை ஈடுசெய்யக் கூடிய அளவு இருப்பதில்லை. போதிய நிதியின்மையால் பொதுச் சேவைகளின் உள்ளடக்கத்திலும், தரத்திலும் ஏற்படும் முன்னேற்ற வீதம் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. வர்த்தகமும் வர்த்தகம் செய்யக் கூடிய உற்பத்திகளும் நேரடியாக உள்ளக கட்டுமானத்தில் பெரிதும் தங்கியுள்ளதால் குறைந்தமட்டத்திலான கட்டணம் வர்த்தகத்தினை நேரடியாகவே பாதிக்கின்றது. வரியினூடாக நிதிப்படுத்தும் போது உள்ளகக் கட்டுமான மானியம் பொருளாதாரத்தில் மேலும் பிறழ்வினை ஏற்படுத்துகின்றது. எவ்வளவிற்குக் கட்டணங்கள் உயர்வாக இருக்கின்றனவோ அந்தளவிற்கு மானியம் குறைக்கப்பட தேவையான வரி வருமானமும் குறைக்கப்படும். வரியமைப்பில் வர்த்தக வரிகள் முக்கியம் பெறுகின்ற நாடுகளில் வருமானத்தினை அதிகரிக்க கட்டணங்களை உயர்த்துவது வர்த்தக வரியினை குறைக்க வழிகோலும். இதனால் வர்த்தக வரிகளினால் ஏற்படும் வர்த்தகத்திற்கு எதிரான கோடல் நிலை குறைக்கப்பட்டு வர்த்தகம் சுதந்திர மயமாக்கப்படும்.

இரண்டாவதாக பயன்படுத்துவோர் கட்டணத்தின் அமைப்பு பற்றிய கேள்வி எழுகின்றது. பல நாடுகளில் உள்ளக கட்டுமானங்களை பயன்படுத்தும் கைத்தொழில் நுகர்வோர்கள் வரிக்குட்படுத்தப்பட வீட்டுத்துறை நுகர்வோர்கள் மானியம் வழங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுக்கு உட்படுத்தப்படுகின்றனர். கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு எதிரான கோடல் தன்மை கொண்டதாக கட்டணங்களின் அமைப்பு இருப்பதற்கான போதுமான சான்றுகள் இல்லாதவிடத்தும் மேலெழுந்த வாரியான சான்றுகள் உண்டு. இவ்வாறான கோடல் தன்மை சர்வதேச சந்தையில் உள்நாட்டு உற்பத்தியாளர்களது போட்டியிடக் கூடிய தகுதியைக் குறைத்து விடும்.

பொதுத் துறை வருமானமும் வர்த்தகக் கொள்கையும் பற்றி மேலே எடுத்துக் கூறியவற்றை சுருக்கமாகக் குறிப்பிடின்;

1) பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வர்த்தக வரிகளை பிரதான வருமானம் தரும் மூலமாகக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் அவை சுலபமாக நிர்வகிக்கக் கூடியவை என்பதனாலாகும். இவை மிக முக்கியமான பொருளாதாரச் செலவுடையவை. குறிப்பாக ஏற்றுமதி உற்பத்திகள் சார்பாக இவ்வாறான செலவு உயர்வாகும். குறுங் காலத்தில் சில நாடுகளுக்கு வர்த்தக வரிகளைவிட வேறு மாற்று வழியில்லாமல் இதனைப் பயன்படுத்தலாம். ஆனால் பொருளாதார நிர்வாகநிலைமைகள் மாறும்போது வர்த்தகவரிபற்றிய மீளாய்வு அவசியம்.

2) வருமானத்தினைத் தேடித் தருவதுடன் ஒரு பாதுகாப்புக்கருவியாகவும் செயற்படுகின்றது. உள்நாட்டு வரியும் வர்த்தக வரியும் இணைந்தே பாதுகாப்பு மட்டத்தினையும் வருமானத்தினையும் தீர்மானிக்கின்றது. சுதந்திரமான வர்த்தகம் உள்நாட்டு வரிகளிலும் வர்த்தக வரிகளிலும் சீராக்கத்தினை வேண்டி நிற்கின்றது.

3) ஏற்றுமதி வரிகள் ஏற்றுமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதன் மூலம் நன்மையை விடதீமையையே அதிகம் செய்யும். தெரிந்தெடுக்கப்பட்ட விதத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரித்தளம் விரிவடைய முற்றாக நீக்கப்படல் வேண்டும்.

4) ஏற்றுமதிகளை ஊக்குவிக்க விசேட ஊக்குவிப்புகள் உதவலாம். விசேடமாக வர்த்தகக் கொள்கைகளின் சீராக்கல் நடவடிக்கையின் ஆரம்ப காலத்தில் இது சாத்தியமாகலாம். ஏனைய வர்த்தக சுதந்திரமாக்கல் நடவடிக்கைகளில் இருந்து திசைதிருப்பப்படாமலும், வர்த்தக பங்காளர் மத்தியில் எதிர் நடவடிக்கைகளை ஏற்படுத்தாத வரையும் இதனைப் பயன்படுத்தலாம். ஏற்றுமதி ஊக்குவிப்புக்கள் வேகமானதும் வினைத்திறனானதுமான நிர்வாக அமைப்பினுள்ளேயே வெற்றி அளிக்கும்.

5) பயன்படுத்துவதற்கான கட்டணத்தினை அதிகரிப்பதுடன் கைத்தொழில் நுகர்வோர் பொருத்தமற்ற வகையில் வரிக்குட்படுத்துவதையும் தவிர்த்துக் கொண்டால் உள்நாட்டு கைத்தொழில்களின் சர்வதேச போட்டித் தன்மை முன்னேற்றமடையும்.

## பொதுச் செலவினக் கொள்கை

மரபு ரீதியாக பொருளியலாளர்கள் அரசாங்க வரவுசெலவுகளில் வருமானப் பக்கத்தில் அதுவும் குறிப்பாக வரி, வர்த்தகத் தீர்வைகள் என்பனவற்றிலேயே கூடிய கவனம் எடுப்பதுண்டு. அபிவிருத்தி வர்த்தகம் என்பவற்றைத் தீர்மானிப்பதில் அரசாங்க செலவினதும் அதன் அமைப்பினதும் பங்கிற்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. அண்மைக்காலத்தில் ஒரு சில ஆய்வுகள் அரசாங்கச் செலவினத்தையும் வேறு சில ஆய்வுகள் வர்த்தகப் போக்குகளையும் ஆராய்ந்துள்ள போதும் எவையும் அரசாங்கச் செலவு, வர்த்தகம், அபிவிருத்தி என்பவற்றிற்கிடையிலான தொடர்புகளை ஆராயவில்லை. எனவே இவற்றிற்கிடையிலான தொடர்புகள் பற்றி முழுமையாக இங்கு குறிப்பிடமுடியாதுள்ளது. ஆனால் சில அவதானிப்புக்களைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கச் செலவினம், வர்த்தகம், அபிவிருத்தி என்பனவற்றிற்கிடையிலான தொடர்புகள் இரண்டு காரணங்களினால் சிக்கலானவையாகும். முதலாவது ஏற்றுமதிப் பொருள் உற்பத்திக்கு சாதகமாக அரசாங்கச் செலவினங்கள் காணப்பட்டாலும் உற்பத்தியாளர் வர்த்தர்களுக்குத் தவறான ஊக்குவிப்பினைவழங்குவதன்மூலமோ மோசமாகத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்துவதன் மூலமோ, மிகவும் திறமையான தனியார் நடவடிக்கைகளைப் பதிலீடு செய்வதன் மூலமோ பிழையாகத் திசைதிருப்பப்படலாம் அல்லது முற்றிலும் எதிர் விளைவைக் கொண்டதாக அமையலாம். இரண்டாவது பொதுச் செலவுகள் எப்போதும் வர்த்தகத்தில் ஈடுபடுத்தாத பொருள் உற்பத்தியிலேயே ஈடுபடுத்தப்படுவதுண்டு. இருப்பினும் இவை ஏற்றுமதிப் பொருள் உற்பத்தியில் முக்கியமான உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. உள் நாட்டு வருமானத்தில் உள்ள நெருக்கடிகள் வர்த்தகத்தின் வளர்ச்சியிலும் நாட்டின் அபிவிருத்தியிலும் பெரும் தடையாகச் செயற்படலாம். எனவே அரசாங்கச் செலவினம் வர்த்தகம் அபிவிருத்தி என்பவற்றிற்கிடையிலான தொடர்புகளை ஆராயும் போது அவதானமாக இருத்தல் அவசியமாகும்.

பொருத்தமான அரசாங்கத்தின் பங்களிப்பு என்ன என்ற பிரச்சினை முதலில் தீர்க்கப்படல் வேண்டும். விவசாயக் கைத்தொழில் பொருட்களினது உற்பத்திச் சந்தைப்படுத்தலில் நேரடியாக அரசாங்கம் தலையிடுவது பொதுவாக வெற்றியளிக்கவில்லை. இதற்குப்பதிலாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் தமது வரையறையான நிதி, நிர்வாக வளங்களைத் தனியார்துறை வெற்றியாகச் செயற்படுவதற்கான ஊக்குவிப்புக்களையும், சட்ட சூழலையும் ஏற்படுத்தக்கூடியவாறு இயங்குவதற்கும் ஏற்றுமதி உற்பத்திகளுக்குத் தேவையான உட்கட்டுமானத்தைக் கட்டி எழுப்புவதற்கும் ஏற்ற வகையில் செயற்படக் கூடியதாக உள்ளது எனலாம்.

விவசாயத்தில் ஏற்றுமதி செய்யக்கூடிய உற்பத்திகளை விரிவாக்க நீர்ப்பாசனம், வீதிகள், மின்சாரம், ஆய்வும் விரிவாக்கலும் என்ற செயற்பாடுகளில் அரசாங்கச் செலவுகளைச் செய்வது பொருத்தமாகும். இவற்றுடன் தொடர்பான பிரதான பிரச்சினைகள் :-

அ) உள்கட்டுமானத்தின் பொருத்தமான விரிவாக்க வீதம்

ஆ) உற்பத்தியிலும் பங்கீட்டிலுமான முதலீட்டில் சமநிலை.

இ) புதிய முதலீட்டிற்கும் இயக்குதல், பராமரித்தல், அதிகளவு செலவிடல் என்பவற்றிற்கிடையிலான சமநிலை.

ஈ) அமைப்பின் இயங்கு வினைத்திறன்

உ) இந்தச் செயற்பாடுகளில் அரசிற்கும் தனியாருக்குமிடையிலான பொறுப்புக்களில் சமநிலை.

பொதுவாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கிராமிய உட்கட்டுமானத்தில் செலவு செய்யப்பட்ட செலவினங்கள் தவறாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. அல்லது தேவையில்லாமல் தனியார் முயற்சிகளை பதிலீடு செய்துள்ளது போலத் தெரிகிறது. இதனால் பங்கீடு அல்லது துணை அமைப்புக்களை விட முதல் விளைவு உற்பத்திகளுக்கு சாதகமாகவும் பராமரிப்புச் செலவுகளை புறக்கணித்து புதிய முதலீடுகளில் செலவு செய்யப்பட்டிருப்பது தெரிகின்றது. இதன் விளைவாக விவசாய ஏற்றுமதிகளை விரிவாக்க அல்லது திறமையான இறக்குமதிப் பதிலீட்டிற்குத் தேவையான உள்கட்டுமானம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழிற்துறையிலும் உள்கட்டுமானம் மேற்சொல்லப்பட்டது போன்ற முக்கிய பங்கினை ஏற்றுமதிப் பொருட்கள் சார்பாக வகிக்கின்றது. தடையற்ற நீர், சக்தி வழங்கல், திறமையான போக்குவரத்து, தொலைத்தொடர்பு, துறைமுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகள், நன்கு பயிற்றப்பட்ட தொழிலாளர் என்று எல்லாமே உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தித் திறனையும் போட்டித் தன்மையையும் தீர்மானிக்கும். விவசாயத் துறையில் உள்ளது போன்ற பல்வேறு முதலீடுகளுக்கிடையிலான சமநிலை போன்ற பிரச்சனைகளுடன் வேறும் பிரச்சனைகளும் ஏற்படும். நகரமயமாக்கல் காரணமாகப் புதிய உள்கட்டுமானங்கள் தேவைப்படும். விசேட பிரச்சனைகளாக நெருக்கடி (Congestion) மாசுபடல், கைத்தொழில், குடியிருப்பு வசதிகளை வழங்குவதற்குரிய போதிய நிதி நிர்வாக வளங்கள் இன்மை போன்ற பிரச்சனைகளும் எழும்.

இத்தகைய குறைபாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உற்பத்திப் பொருட்களின் வர்த்தகத்தில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதைக் கணக்கிடுவது சுலபமல்ல. உதாரணமாக நைஜீரியாவில் பொதுத்துறையின் நீர், மின் சக்தி வழங்கல், நிச்சயமற்றதாகவோ அல்லது பெற்றுக்கொள்ள முடியாததாகவோ இருப்பதனால் உற்பத்தி நிறுவனங்கள் தமது ஆரம்ப முதலீட்டில் 20 சதவீதத்திற்குச் சமனான தொகையை மின் உற்பத்தி, நீர் என்பவற்றிற்குச் செலவிட வேண்டியுள்ளது. இதேபோல ஆசியான் நாடுகளிலும் இந்தோனேசியாவிலும் கப்பல் துறைமுக சேவைகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுமானால் செலவுகள் பெருமளவு வீழ்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்தி வலயம் அல்லது சுதந்திர வர்த்தக வலயம் ஏற்றுமதி ஊக்குவிப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க அரசாங்க முதலீடு எனலாம். இங்கு ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்கான பௌதீக, நிதி நிறுவனக் கட்டமைப்புக்கள் பலவீனமாகவுள்ள கிழக்கு, தென் கிழக்கு ஆசியா நாடுகளில் ஏற்றுமதிகளைத் தூண்டுவதற்கான குறுக்கு வழிகளாக இவ்வலயங்கள் பிரபல்யம் அடைந்துள்ளன. கிழக்கு தென்கிழக்கு ஆசியாவின் அனுபவத்திலிருந்து பார்க்கும்போது இவை பெருவெற்றி ஈட்டியிருப்பது போலத் தெரிகிறது. கொரியாவைப் பொறுத்து மிக விரிந்த ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கையில் இது ஒரு அம்சமாகக் காணப்பட மலேசியா, பிலிப்பைன்ஸ் நாடுகளில் இதுவே பிரதானமான ஒரு ஏற்றுமதி ஊக்குவிப்புக் கருவியாக இருக்கிறது.

நிதி பற்றாக்குறை காரணமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அண்மைக்காலமாகச் செலவினங்களைக்குறைக்க வேண்டியிருந்தது. இத்தகைய குறைப்பு பெரும்பாலும் உள்கட்டுமானத் துறையில் மூலதனச் செலவுகளிலேயே ஏற்படுத்தப்பட்டது. அதே சமயம் வட்டிக்கொடுப்பனவுகள் அதிகரித்தும் பாதுகாப்புச் செலவினங்கள் சிறிதளவே வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டன. உற்பத்தி, சமூக சேவைகள் துறைகளில் செலவினங்கள் வீழ்ச்சி இவை இரண்டிற்கும் இடைப்பட்டதாகக் காணப்பட்டது. நிதிப்பற்றாக்குறை உள்ளவிடத்து இவ்வாறான செலவுக்குறைப்புக்கள் தேவையானதும் பொருத்தமானதாகவும் இருந்தபோதும் சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களுக்கு ஏற்ப இந்நாடுகள் செயற்பட முடியாமல் போனதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

திறமையான பொதுத்துறை செலவின முகாமைத்துவம் தனியார் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் வினைத்திறனை ஊக்குவிப்பதாகச் செயற்படும் இதேவேளை பொருத்தமற்ற வரிகள் கட்டுப்பாடுகள் பொதுத்துறை செலவினங்களை செயற்திறமையற்றதாகவோ எதிர் விளைவை ஏற்படுத்தக்கூடியதாகவோ அமையலாம். உதாரணமாக திறமையற்ற இறக்குமதி பதிலீட்டு உற்பத்திகளைப் பாதுகாக்கும் போது இதற்குத் துணையாக உட்கட்டுமான முதலீடுகள் இடம்பெறலாம். இவையும் திறமையற்றவையாகக் காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் வர்த்தகம் சுதந்திரமாக்கப்படும் போது இம் முதலீடுகள் வீணாக்கப்படும்.

பொதுத்துறை செலவினங்கள் பற்றி மூன்று முடிவுகளுக்கு நாம் வரலாம்.

1. அரசு நேரடியாகக் கைத்தொழில் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளில் தலையிடாமல் பௌதிக கட்டுமானங்களிலும், மனித வளவிருத்தியிலும் செலவிடுவதன் மூலம் பெரும் பங்கினை ஆற்ற முடியும். இதன் மூலம் வர்த்தகம் செய்யக்கூடிய உற்பத்திகளை அதிகரிக்கலாம். சர்வதேச வர்த்தகச் சந்தர்ப்பங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நெகிழ்வுடையதாக அமையலாம். நீண்டகால வர்த்தகம், அபிவிருத்தி என்பவற்றைப் பாதிக்காத வகையில் நிதிப்பற்றாக்குறையைக் கையாளக்கூடியதாகவும் இருக்கும்.

2. கவனமாகத் திட்டமிட்டு திறமையாகச் செயற்படுத்தும் பொதுத்துறைச் செலவுகளுக்கு பிரதியீடுகள் இல்லை.

3. தனியார் உற்பத்தியாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் பொதுத்துறைச் செலவுகள் திறமையான ஊக்குவிப்பிற்கு நிரப்பியாகத் தொழிற்படும்.

## முடிவுரை:

வர்த்தகம், பொதுநிதிக்கொள்கைகள் பற்றி ஆராயும்போது அவற்றிற்கிடையிலான சிக்கலான தொடர்புகளை கவனத்தில் கொள்ளல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் கொள்கைகளுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றி வர்த்தக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையலாம். எனவே போட்டியடிப்படையிலான மெய் நாணய மாற்று வீதம், வர்த்தகச் செயற்பாட்டு முன்னேற்றம், வர்த்தகச் சுதந்திர மயமாக்கல் வரவு செலவு மீதியில் எதிர்க்கணிய தாக்கத்தினை ஏற்படுத்தலாம். அவற்றைக் கவனித்து ஈடுசெய்யக் கூடிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். போட்டித் தன்மையை உயர்த்துவதும் பாதுகாப்புக்களைக் குறைப்பதும் என்பது வர்த்தகத் தீர்வைகள், உள்நாட்டு வரிகள் என்பனவற்றில் சீராக்கங்களை வேண்டி நிற்கும். நன்கு வடிவமைக்கப்பட்ட பயன் படுத்துவோர் கட்டணங்களும், சர்வதேசப் போட்டித் தன்மையை வளர்க்கும். பொதுச்செலவினங்கள் தொடர்பாகச் சரியான முன்னுரிமைகளைத் தீர்மானிக்க வேண்டும். வர்த்தகம், வர்த்தகத்தில் ஈடுபடுத்தக்கூடிய உற்பத்தி போன்றவற்றிற்கு உதவக்கூடிய வகையில் முன்னுரிமையை வழங்க வேண்டும். □

# References


1. Balassa Bela "Public Finance and Economics Development Policy planning and Research working Paper world Bank 1988
2. Bhagwati, Jagdish "Directly - unproductive, Profit seeking Acti vities" Journal of political Economy vol. 90 5 Oct. 1982.
3. Heller, Peter. S and Alan Tait. "International Comparisons of Government Expenditure, IMF occasional paper 10. 1982.
4. Krueger Anne O "The political Economy of the Rent seeking Society; American Economic Review Vol. 64 No. 3 June 1974
5. Landen David "Government and Economic Growth in the less Developed Countries. An Emperical study for 1960 - 80" 'Economic Development and cultural changes. Vol. 35 Oct. 1986.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்வார்களும் பண்ணும்

செல்வி வாசுகி சிதம்பரநாதன்
(B. A. Hons.)
இந்து நாகரீகம்

தேவபாணி எனப்படும் தெய்வத்தை வாழ்த்திப் பாடப்படும் பாடல்கள் எல்லாம் பிரபந்தங்களாகவே காணப்படுகின்றன. எனினும் இசையோடு தொடர்புடையனவாக காணப்படும். பிரபந்த வகைகளுள் ஆழ்வார்களால் ஆக்கப்பட்ட பிரபந்தங்கள் திவ்ய பிரபந்தங்கள் என்ற சிறப்புப் பெயர் கொண்டு விளங்குகின்றன;

தேவாரங்கள் பண்களோடு ஆலயங்களில் ஓதப்பட்டு வந்ததுபோன்று திவ்யபிரபந்தங்களும் விஷ்ணு ஆலயங்களில் ஓதப்பட்டு வந்தமையை பிரபந்தங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

தேவாரங்களைப் பாடிய நாயன்மார்கள் மூவர் திவ்ய பிரபந்தங்களைப் பாடிய ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்பார் பேயாழ்வார் நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர். இப்பன்னிரு வரும் அருளிச்செய்த பாசுரங்களை நாலாயிர திவ்ய பிரபந்தம் எனத் தொகுத்தவர் நாதமுனிகள். நாயன்மார்கள் வாழ்ந்த காலத்திலேயே இந்த ஆழ்வார்களும் வாழ்ந்தனர்.

திவ்ய பிரபந்தங்களும் பண்ணோடு பாடப்பட்டவையே. இவற்றை நாதமுனிகள் இசையில் வல்ல தமது மருமக்களாகிய மேலையகத்தாழ்வார், கீழையகத்தாழ்வார் என்ற இருவரையும் கொண்டு பண்ணமைத்துப் பரப்பினார்;

பிரபந்தங்களின் பாடற் தொகை பின்வருமாறு: பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு தொடக்கம் மதுரகவி யாழ்வாரின் "கண்ணிநுண் சிறு தாம்பு" வரையுள்ள 947 பாசுரங்கள் முதலாயிரம் எனப்படும்.

திருமங்கை யாழ்வாரின் பெரியமொழி தொடக்கம் திருநெடுந்தாண்டகம் வரையுள்ள 1134 பாசுரங்களும் இரண்டாவதாயிரம். முதலாழ்வார் திருவந்தாதி தொடக்கம் பெரிய திருமடல்வரையுள்ள 817 இயற்பாக்கள் மூன்றாவதாயிரம். நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி 1102 க்குமான பாசுரங்களும் நான்காவதாயிரமாகக் கொள்ளப்படுகின்றன;

திவ்ய பிரபந்தங்கள், நாலாயிரதிவ்ய பிரபந்தங்கள் என வழங்குகின்றன. இவற்றுள் மூன்றாவதாயிரம் இயற்பாவாக இருப்பதால் மிகுதி மூன்றும் பண்ணோடு பாடத்தகுந்தவை. இரண்டாவதாயிரத்துள் ஒரு சில பாசுரங்களுக்குப் பண்களின் பெயர்கள் கிடைக்கவில்லை. முதலாயிரத்துக்குப் பண்கள் குறிக்கப்படாது விட்டாலும் "இன்னிசை மாலைகள்" "மாலை பத்தும் பண்ணின்பம் வரப் பாடும் பத்தர்" போன்ற பெரியாழ்வாரின் அகச் சான்றுகளால் இவையும் பண்ணோடு பாடப்பெற்றவை என்பது தெளிவு. நாலாவது, இரண்டாவதாயிரம் பாடல்களில் எமக்கு 28

பண்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. 103 பண்களின் வரிசையில் அவை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | பாலையாழ் | 01 |
| 2. | தோடி (நிருபதுங்கராகம்) | 03 |
| 3. | தக்கராகம் | 17 |
| 4. | புறநீர்மை | 21 |
| 5 | பஞ்சமம் | 25 |
| 6. | நட்டபாடை (நைவளம்) | 37 |
| 7. | அந்தாளி | 38 |
| 8. | காந்தாரம் | 41 |
| 9. | செருந்தி | 42 |
| 10. | பஞ்சுரம் | 45 |
| 11. | பழம் பஞ்சுரம் | 46 |
| 12. | மேகராகக் குறிஞ்சி | 47 |
| 13. | கௌவாணம் | 49 |
| 14. | பழந்தக்கராகம் | 56 |
| 15. | முதிர்ந்த குறிஞ்சி | 56 |
| 16. | குறிஞ்சி | 61 |
| 17. | நட்டராகம் | 62 |
| 18. | வியாழக்குறிஞ்சி | 64 |
| 19. | செந்திருதி | 65 |
| 20. | தக்கேசி | 69 |
| 21. | கொல்லி | 70 |
| 22. | இந்தளம் | 73 |
| 23. | கௌசிகம் | 80 |
| 24. | பியந்தை | 81 |
| 25. | சீகாமரம் | 82 |
| 26. | குறண்டி | 85 |
| 27. | வியந்தம் | 88 |
| 18. | நாட்டம் | 95 |

ஆழ்வார் பாசுரங்களுக்குப் பண்கள் குறிக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் இசை முறை சரியாகத் தெரியவில்லை. ஆழ்வார்கள் காலத்தில் இவை பண்ணோடு பாடப்பட்டிருந்தாலும் பிற்காலத்தில் இம் மரபு தொடர்ந்து பேணப்படவில்லை.

திருவரங்கம், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவல்லி புத்தூர் ஆகிய வைணவத் திருத்தலங்களில் விழாக் காலங்களில் அரையர்கள் பாடி அபிநயமும் செய்து வருகின்றனர். இப்பாசுரங்கள் பண்ணிசை முறையில் பாடப்படாது. மந்திரம் ஓதும் முறையில் ஓதப்படுகின்றது. பிற்காலத்தில் வெளிவந்த திவ்ய பிரபந்த நூல்களில் ஒரு பண்ணுக்குச் சமமான ராகங்கள் பல தரப்பட்டிருப்பதைக் காணலாம். இது தெளிவற்ற குழப்பமான சிந்தனையை உண்டாக்கிறது.

தமிழ் நாட்டில் எத்தனை கிராமங்கள் இருந்திருக்கின்றனவோ அத்தனை பண்களும் இருந்திருக்கின்றன. இந்தப் பண்கள் வாயிலாக நாயன்மார் சிவனைப் பாடிப் பக்தியை வெளிப்படுத்தியது போல ஆழ்வார்கள் திருமாலைப்பாடித் தமது பக்தியை வெளிப்படுத்தினர் என்பது தெளிவு.

தேவாரங்களில் உள்ள பண்கள் சில பாசுரங்களில் இல்லை. பாசுரங்களில் உள்ளவை சில தேவாரங்களில் இல்லை. எனினும் இரண்டிற்கும் பொதுவாகக் காணப்படும் பண்களின் எண்ணிக்கை 20. தேவாரங்களில் காணப்படாத பாசுரப் பண்கள் எட்டு. அவை பாலையாழ், தோடி, செருந்தி, பஞ்சுரம், முதிர்ந்த குறிஞ்சி, குறண்டி, வியந்தம் நாட்டம் தேவாரங்களிலுள்ள பண்கள், ஆனால் பாசுரங்களில் காணப்படாதவை. மூன்று அவை செவ்வழி காந்தார பஞ்சமம் சாதாரி.

பிரபந்தங்கள் மிகுந்த பக்தியை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவற்றிற்குப் பயன்படுத்தப்படும் பண்களும் சக்தி ராகங்களாக பக்திச் சுவையையும் இரங்கலையும் அதிகம் வெளிப்படுத்துவனவாக உள்ளன. பண் என்பது பக்தி இயக்கத்தின் ஒரு கலாசார ஊடகமாக விளங்குகின்றது.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தியை வளர்த்த பல்லவர் காலத்திலேயே வாழ்ந்தனர். இருவர் பாடல்களிலும் ஒப்புவமை காணப்படுகிறது மணிவாசகர் திருவெம்பாவை, ஆண்டாள் திருப்பாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் திருத்தாண்டகம், திருமங்கையாழ்வார், திருக்குறுந்தாண்டகம், திரு நெடுந் தாண்டகம், சேர்ந்தனார் திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருப்பல்லாண்டு, மணிவசகர்- திருப்பள்ளி யெழுச்சி, தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பள்ளி யெழுச்சி போன்றன சில உதாரணங்கள். நாயன்மார்களும் ஆழ்வார்களும் வேற்றுமை கடந்து முழுமைகாண விழைந்தார்கள்என்பதனை நாயன்மார் திருமாலையும் ஆழ்வார்கள் சிவனையும் பாடியமையால் அறிய முடிகிறது. பண்கள் வாயிலாக இவர்கள் கருத்துக்கள் சிறந்த வகையில் வெளிப் படுத்தப்பட்டன. மக்களிடையே பரப்பப் பட்டன.

ஆகவே சம காலத்தவர்களாக வாழ்ந்த இவர்களது பாடல்களை நோக்குங்கால் நாயன்மார்களின் தேவாரப் பண்கள் போன்று ஆழ்வார்களது பாசுரங்களும் சிறப்புற்றிருந்திருக்கின்றன என்று எண்ணத் தோன்றுகின்றது. தமிழ் நாட்டிஅரையர்கள் வாயிலாக இவற்றை அறிந்து வெளிக் கொணர்வது பண்ணிசை வளர்ச்சிக்குப் பெரிதும் பயனளிக்கும். □

□●□ □●□

●

*1995 -ல் புதிய பலமான சர்வதேச நிறுவனம் செயற்படவுள்ளது. அதுதான் உலக வியாபார அமைப்பாகும். (WTO- World Trade Organisation) 1947 -ல் ஆரம்பிக்கப்பட்ட வியாபார இறுப்பு தொடர்பான பொது உடன்படிக்கையை இது (GATT- General Agreement on Trade and Tariffs) நீக்குகின்றது.*

●

*ஊழியர்களையும் நிறுவனத்தில் உடமையாக்கிக்கொள்ளும் கருத்திற்கு அமைய ஹட்டன் நஷனல் வங்கி அண்மையில் தனது ஊழியர்களுக்கு பங்குகளை வழங்கியது. இதற்கு அமைய இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் நன்மை அடைந்துள்ளனர். 113, 000 பங்குகள் இந்த இரண்டாயிரம் ஊழியர்களுக்கு இடையில் வழங்கப்பட்டது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டுக் கணக்குமுறைமை
Control Accounting System

திரு. வே. ஈஸ்வரன்
விரிவுரையாளர்
வணிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

ஒரு சிறிய நிறுவனமானது சில பேரேடுகளை மாத்திரம் வைத்திருப்பதோடு அங்கு சமப்படும் பரீட்சை மீதியினை தயாரிப்பதில் பெரிய கடினம் எதுவும் இருக்காது. ஆனால் ஒரு பெரிய நிறுவனமாயின் அதனது கணக்கீட்டுப் பதிவுகள் அதிகமாக இருப்பதால் ஏதாவது தவறுகள் இடம் பெறின் விரைவாக கண்டு கொள்வது சிரமமானதாகும். அதாவது பெரிய நிறுவனங்களில் பல்வேறு நடவடிக்கைகள் பெரியளவில் இடம் பெறுவதோடு, ஒருதொகை வித்தியாசமான வாடிக்கையாளர்களையும், வழங்குனர்களையும் கொண்டிருக்கும். இதனால் இவ்வாறான நிறுவனங்கள் ஆள்சார் கணக்குகளை (Personal Accounts) பதிவு செய்வதில் கூடிய பொறுப்புடையவர்களாக இருத்தல் அவயசிமானதாகும். ஆகவே பதிவு செய்யப்பட்ட தனிநபர்கணக்குகளை சரிபார்ப்பதற்கும், அவற்றினது திறமையினை அதிகரிப்பதற்கும் பயன் படுத்தப்படுவதே கட்டுப்பாட்டுக் கணக்காகும்.

"கட்டுப்பாட்டுக் கணக்கு (Control Account) என்பது ஒரு பேரேட்டின் கணித ரீதியான சரித்தன்மையை Arithmetical Accuracy) பரீசீலிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு கணக்காகும்" கட்டுப்பாட்டுக் கணக்கிற்காக பயன்படுத்தப்படும் கொள்கைகள் இலகுவானவை. அதாவது ஒரு கணக்கின் ஆரம்ப மீதியுடன் அக்காலப்பகுதியில் இடம் பெற்ற சேர்ப்புக்களையும் (additions) குறைப்புக்களையும் (deductions) பதிவு செய்வதன் மூலம் இறுதி மீதியினைக் கண்டு கொள்ள முடியும். இதனை பின்வரும் ஒரு மாதத்திற்கான விற்பனை பேரேட்டினை அடிப்படையாகக் கொண்டு விளக்க முடியும்.

| | ரூபா |
|---|---|
| ஆரம்ப மீதியின் மொத்தம் 1 ஜனவரி 1994 | 6,000 |
| கூட்டு:- மீதியினை அதிகரிக்கும் மொத்தப் பதிவுகள் | 14,000 |
| | 20,000 |
| கழி:- மீதியினை குறைக்கும் மொத்தப் பதிவுகள் | 12,000 |
| மொத்த இறுதிமீதிகள். | 8,000 |

ஒரு பூரணமான பேரேட்டில் மொத்த ஆரம்ப மீதியுடன் அக்காலப்பகுதியில் இடம் பெற்ற சேர்ப்புக்களையும் குறைப்புக்களையும் பதிவு செய்வதன் மூலம் இறுதி மீதியினைக் கொடுக்க முடியும். மொத்தத்தினைப் பயன்படுத்தும் போது கணக்குகள் மொத்த கணக்குகளாகக் (Total Accounts) கொள்ளப்படும். கண்ணன் நிறுவனத்தின் 31 டிசம்பர் 1994-ல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளிலிருந்து பின்வருவன பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து கட்டுப்பாட்டுக் கணக்கினை தயார் செய்யும்படி நீர் வேண்டப்படுகின்றீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காசுப் புத்தகம்

| | ரூபா |
|---|---|
| அனுமதித்த கழிவு | 6'805 |
| வாடிக்கையாளரிடம் இருந்துபெற்ற காசும் காசோலையும் | 2,87601 |
| பெற்ற கழிவு | 3,415 |
| வழங்குனர்களுக்கு செலுத்திய காசும் காசோலையும் | 233078 |
| வாடிக்கையாளருக்கு மீளச் செலுத்தியவை | 187 |
| மறுக்கப்பட்ட வாடிக்கையாளர் காசோலை | 251 |

### நாளேடு

| | ரூபா |
|---|---|
| ஐயக்கடன் பதிவழிப்பு | 3143 |
| கொள்வனவு நாளேடு | 247084 |
| விற்பனை நாளேடு | 306580 |
| உட்திரும்பல் நாளேடு | 6508 |
| வெளித்திரும்பல் நாளேடு | 4720 |

முன்னைய வருடத்திற்கான கணக்காய்வு நிதி அறிக்கையின்படி 31 டிசம்பர் 1993ன் முடிவடைந்த வருடத்துக்கான கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் முறையே ரூபா 44, 040, ரூபா 63289 ஆகும்.

31 டிசம்பர் 94 க்கான பொருத்தமான கட்டுப்பாட்டுக் கணக்கினை தயாரிக்குக

### விற்பனை பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி/கீ/ வந்தது | 44040 | அனுமதிக்கப்பட்ட கழிவு | 6805 |
| விற்பனைகள் | 306580 | வாடிக்கையாளர் | — |
| வாடிக்கையாளர்களுக்கு திருப்பியவை | 187 | காசும் காசோலையும் | 287601 |
| மறுக்கப்பட்ட காசோலை | 251 | உட்திரும்பல் | 6508 |
| | | அ.மு.கடன் பதிவழிப்பு | 3143 |
| | | மீதி/கீ/ சென்றது | 47001 |
| | 351058 | | 351058 |

### கொள்வனவு பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| பெற்றகழிவு | 3415 | மீ/ கீ/ வந்தது | 63289 |
| வ. காசும், காசோலையும் | 233078 | கொள்வனவுகள் | 247084 |
| வெளித்திரும்பல் | 4720 | | |
| மீ/ கீ/ சென்றது | 69160 | | |
| | 310373 | | 310373 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய நிறுவனம் ஒன்றுஒன்றுக்கு மேற்பட்ட விற்பனை அல்லதுகொள்வனவுப் பேரேட்டினை வைத்திருக்கும்விற்பனைப் பேரேடுகளுக்குரிய கணக்குகளினை பல்வேறு வகையாகப் தமது வழிக்கு ஏற்ப பிரித்து வைத்திருக்கலாம். உதாரணமாக ஆங்கில எழுத்துக்களின் அகரவரிசையில் பல பகுதிகளாகப் பிரித்து பேரேடுகளை பிரிக்கலாம். உதாரணமாக A என்ற எழுத்தில் ஒருவரது பெயர் ஆரம்பித்தால் அந்த பிரிவுக்குள் A என்பது எந்தப் பிரிவுக்குள் இருக்கின்றதோ அந்த பகுதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

உதாரணமாக:-

| திகதி | விபரம் | | மொத்தம் | பேரேடுகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | A-H | I-P | O-Z |
| 1994 டிசம்பர் 1 | ஆறுமுகம் | (A) | 1500 | 1500 | — | — |
| ,, ,, 8 | சுந்தர் | (S) | 1700 | — | — | 1700 |
| ,, ,, 12 | அருணன் | (A) | 3200 | 3200 | — | — |
| ,, ,, 16 | சுவர்ணா | (S) | 4800 | — | — | 4800 |
| ,, ,, 19 | நவீனன் | (N) | 2400 | — | 2400 | — |
| ,, ,, 23 | கணேஷ் | (G) | 1800 | — | 1800 | — |
| ,, ,, 27 | நந்தா | (N) | 1200 | — | 1200 | — |
| ,, ,, 30 | அருள் | (A) | 3300 | 3300 | — | — |
| ,, ,, 31 | ரஜீதா | (R) | 1900 | — | — | 1900 |
| | | | 21800 | 8000 | 5400 | 8400 |

இதேபோன்று புவியியல் ரீதியாக அல்லது நிறுவனங்களின் வசதிக்கேற்ப தேவையான பகுதிகளாக பிரிக்கலாம். அவை இலகுவானவையாகவும், சுலபமாக கண்டு கொள்ளக் கூடியனவாகவும் இருத்தல் அவசியமானதாகும். விற்பனைப் பேரேட்டினைப் போன்று கொள்வனவுப் புத்தகம், உட்திரும்பல் புத்தகம், வெளித்திரும்பல் புத்தகம் மற்றும் காசுப் புத்தகம் போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம். இத்தகைய புத்தகங்களின் பொருத்தமான நிரல்களிலிருந்து கட்டுப்பாட்டுக்கணக்குகளுக்கான மொத்தத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதனை விட அறவிட முடியாக் கடன்பதிவழிப்பு விற்பனைப் பேரேட்டுடன் சம்பந்தப்பட்ட விற்பனைக் கட்டுப்பாட்டுக்கணக்கில் பதியப்படும். ஒரு நிறுவனத்திற்கு ஒருவர் வழங்குநராகவும், வாடிக்கையாளராகவும், இருப்பின் அவருடன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஒரு எதிர்ப்பதிவுக் கணக்கு இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக:

சக்தி என்பவருக்கு நிறுவனம் ரூபா 2500 பெறுமதியான பொருட்களை விற்பனை செய்கின்றது. சக்தி என்பவர் நிறுவனத்திற்கு ரூபா 3500 பெறுமதியான பொருட்களை வழங்குகின்றார். எனவே சக்தி பெற வேண்டிய ரூபா 2500க்கு நிறுவனம் கொடுக்க வேண்டிய 3500/- எதிரீடு செய்து தீர்க்கப்படுகின்றது. இந்த விடுவிப்புக்களில் சக்திக்கு இன்னும் ரூபா 1000/- நிறுவனம் செலுத்த வேண்டியுள்ளது.

சக்தியின்
விற்பனைப் பேரேடு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 2500 | சரிசெய்தல் கொ. பேரேடு | 2500 |

சக்தியின்
கொள்வனவுப் பேரேடு

| | | | |
|---|---|---|---|
| சரிசெய்தல் வி/பே | 2500 | கொள்வனவு | 3500 |
| மீ/கீ/செ | 1000 | | |
| | 3500 | | 3500 |
| | | மீ/கீ/வ | 1000 |

ரூபா 2500/- தொகையானது விற்பனை பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவுப் பக்கத்திற்கும் கொள்வனவுப் பேரேட்டுக் கணக்கின் வரவுப் பக்கத்திற்கும் மாற்றப் படுகின்றது.

கட்டுப்பாட்டுக் கணக்குகளை ஒரு நிறுவனம் பேணுவதால் பல்வேறு நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும். இலகுவாக தவறுகளை கண்டுகொள்ளல் கணக்கீட்டுக் பதிவுகளின் மீதான் கணிதரீதியான சரிப்படுத்தல்களை நிச்சயப்படுத்துதல் அதாவது கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதியுடன் ஆள்சார் கணக்குகளின் மீதியின் மொத்தம் இணங்குகின்றதா? என்பதனை சரிபார்க்க உதவுகின்றது. கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும், பேரேட்டுக்கும் வேறாக ஆளணிகள் வைத்து இருந்தால் அவர்களினது வேலையினையும் நேர்மையினையும் பரிசீலிப்பதற்கு வழிவகுக்கின்றது. உப பேரேடுகளில் ஏற்படும் பிழைகளை திருத்துவதற்காக காத்திருக்காது பிரதான பரீட்சைமீதி தயாரிக்கப்படும் போதே இறுதிக் கணக்குகளினையும், இந்தொகையினையும் தயாரிக்கமுடியும்.

தகவல் தொழிநுட்பமும், கணணி மயப்படுத்தப்பட்ட முறைகளும் தரவுகளைப் பதிவு செய்வதன் முக்கியத்துவத்தில் துரித அதிகரிப்பினை ஏற்படுத்துவனவாகவுள்ளன. இத்தகைய போக்கு பெரும்பாலும் கட்டுப்பாட்டுக்கணக்கின் தேவையினை அகற்றிவிடுமா என்ற கேள்வி பலரிடையே எழலாம். ஒரு கணணியானது இரண்டு தொகைகளை (Figures) வேறுபட்ட திசைகளில் தன்னியல்பாகவே பதிவதுடன் அவற்றின் மொத்தத்தினையும் உறுதி செய்யும். இவ்வாறு ஒரே தடவையில் மேற்கொள்ளப்படுவதால் கட்டுப்பாட்டுக் கணக்குகள் என்பது இங்கு தேவைப்படாமல் போகலாம். ஆனால் தரவுகளின் உள்ளீடுகளின் சரியான தன்மையினை உறுதி செய்வதற்கும், நிகழ்ச்சித்திட்டங்களின் திறமையினையும், நேர்மையினையும் பரீட்சித்து பார்ப்பதற்கும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் முக்கியத்துவம் உடையனவாக இருப்பதுடன் இவற்றின் பிரயோகம் இன்றும் தேவைப்படுகின்றது.

## உதாரண விளக்கம்;-

1) வினா;- வரையறுக்கப்பட்ட கருணா நிறுவனத்தின் பரீட்சை மீதியில் அந் நிறுவனத்தின் கணக்கீட்டுப் பதிவாளரால் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு ரூபா 1,10,172
கொள்வனவுப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு ரூபா 78,266
தொங்கல் கணக்கு (வரவு மீதி) ரூபா 2,315
உமக்குப் பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன

1) விற்பனை பேரேட்டு வரவு மீதி மொத்தம் ரூபா 1,11,111
செலவு மீதி மொத்தம் ரூபா 1,234

2 விற்பனை பேரேட்டு செலவு மீதி மொத்தம் ரூபா 77, 777

6 வரவு மீதி மொத்தம் ரூபா 1, 111

3) விற்பனை பேரேடானது கம்பன் நிறுவனத்தின் 700 செலவுமீதி ஒன்றினையும், கொள்வனவுப் பேரேடானது அதே நிறுவனத்தின் ரூபா 800 செலவு மீதியுடன் தொடர்புடைய ஒரு தொகையினையும் உள்ளடக்கியுள்ளது. தேறிய தொகை மட்டுமே பெரும்பாலும் செலுத்தப்படும்.

4) விற்பனைப் பேரேட்டு செலவு மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 600 க்குரியவர் அ.ஸ்ரீபிரபாவாகும். இது முன்னர், பிழையாக விற்பனை நாள் புத்தகத்திலிருந்து கொள்வனவு பேரேட்டில் சு. ஸ்ரீபிரபா என்ற கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு இருந்தது.

5) ரூபா 300 தொகையான சில சேதமடைந்த பொருட்கள் விற்பனைப் பேரேட்டின் பொருத்தமான கணக்குகளிலிருந்து விலக்கப்பட்டு இருந்தது.

6) ரூபா 456க்கு பட்டியலிடப்பட்டிருந்தவை கொள்வனவு நாள் புத்தகத்தில் ரூபா 654 வாகப் பதியப்பட்டிருந்தது.

7) கடன் பட்டோரிடமிருந்து பெற்ற ரூபா 345 பணமானது காசுப்புத்தகத்தில் ரூபா 245 என பதியப்பட்டிருந்தது.

8) கொள்வனவு நாள் புத்தகமானது ரூபா 1000 ஆல் கூடுதலாக கூட்டப்பட்டு இருந்தது.

9) வங்கி மீதி ரூபா 1200, பரீட்சைமீதியில் தவறுதலாக ஒரு மேலதிகப்பற்றாக சேர்க்கப்பட்டிருந்தது.

10) அம்பு என்ற வாடிக்கையாளருடைய கணக்கில் அறவிட முடியாக்கடனாக ரூபா 500 பதிவழிக்கப்படல் வேண்டுமென கணக்குப் பதிவியலாளர் கேட்கப்பட்டுள்ளார். கணக்குப் பதிவியலாளர் தவறுதலாக அம்பு என்ற வாடிக்கையாளர் கணக்கில் ரூபா 700 பதிவழிப்பு செய்யப்பட்டதுடன், அறவிடமுடியாக்கடன் ஏற்பாட்டுக்கு ரூபா 500ஆல் அதிகரிப்பும் செய்துள்ளார்.

11) காப்புறுதிக் கணக்கு வரவுமீதி ரூபா 3456 பரீட்சை மீதியில் ரூபா 3546 என சேர்க்கப்பட்டு இருந்தது.

## வேண்டப்படுவது:-

1) கட்டுப்பாட்டுக்கணக்கு, தொங்கல் கணக்கு ஆகியவற்றிலுள்ள பிழைகளை திருத்துவதற்கான பதிவுகளை மேற்கொள்க.

2) விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கினை விற்பனைப் பேரேட்டு மீதியுடனும், கொள்வனவுப் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கினை கொள்வனவுப் பேரேட்டு மீதியுடனும் இணங்க வைக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை

### விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி/கீ/கொ.வந்தது | 1,10,172 | கொள்வனவுப் பேரேட்டு எதிர்ப் பதிவு (3) | 700 |
| வாடிக்கையாளர் அம்பு(10) | 200 | வாடிக்கையாளர் பிழையைப் பதிவு செய்தல் (7) | 100 |
| | | மீதி/கீ/கொ/சென்றது | 1,09,572 |
| | 1,10,372 | | 1,10,372 |
| மீதி/கீ/கொ. வந்தது | 1,09,572 | | |

### கொள்வனவுப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனைப் பேரேட்டுக்கு எதிர்ப்பதிவு (3) | 700 | மீதி/கீ/கொ. வந்தது | 78266 |
| கொள்வனவு - பிழையாக பதிந்தது (6) | 198 | | |
| கொள்வனவுக்குறைவு (8) | 1000 | | |
| மீ/கீ/கொ. சென்றது | 76,368 | | |
| | 78,266 | | 78266 |
| | | மீ/கீ/ கொ. வந்தது | 76368 |

### தொங்கல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/கீ/கொ.வந்தது | 2315 | பரீட்சை மீதியிலுள்ள தவறு (9) | 2400 |
| காப்புறுதி (11) | 90 | மீதி/கீ/கொ. சென்றது | 5 |
| | 2405 | | 2405 |

### கொள்வனவுப் பேரேட்டு மீதிகள்

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| கொடுக்கப்பட்டதன் படி | | 77777 |
| கூட்டு-: அ. ஸ்ரீபிரபா, பிழையாகப் பதிவு செய்யப்பட்டது. (4) | | 600 |
| | | 78,377 |
| கழி:- வரவு மீதிகள் | 1111 | |
| எதிர்ப்பதிவு (3) | 700 | |
| பிழையாகப் பதிவு செய்யப்பட்டவை (6) | 198 | (2009) |
| திருத்தப்பட்ட மீதி | | 76,368 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விற்பனைப் பேரேட்டு மீதிகள் | ரூபா | ரூபா |
|---|---|---|
| கொடுக்கப்பட்டதன்படி | | 1,11,111 |
| கூட்டு:- விலக்கப்பட்ட விற்பனைகள் (4) | 600 | |
| பிழையாக எடுக்கப்பட்ட அ.மு. கடன் (10) | 200 | 800 |
| | | 1,11,911 |
| கழி:- செலவு மீதிகள் | 1234 | |
| எதிர்ப்பதிவு (3) | 700 | |
| விலக்கப்பட்டவை (5) | 300 | |
| பிழையாகப் பதிந்தவை (7) | 100 | (2334) |
| திருந்தப்பட்ட மீதி | | 109,577 |

## REFERENCES:-


1. BUSINESS ACCOUNTING - I. Frank wood. - Sixth Edition -1993
c: Accounting - Stage One A Hennessy - Wright & + C Wilks. First Edition - 1992
3. ADVANCED ACCOUNTS - M.C Shukla & T. S. Grewal Twelfth Edition - 1993


வணிக வங்கிகளின் இரகசிய இலக்கங்களைப் பயன்படுத்தி இலங்கையில் வதியாதோரும், வெளிநாட்டவர்களும் கணக்குகளை ஆரம்பிக்கும். வசதி தற்போது நீக்கப்பட்டுள்ளது. எனினும் ஏற்கனவே கணக்குகளை ஆரம்பித்தவர்கள் தொடர்ந்து பேணலாம். ஆனால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு திகதியில் இருந்து ஐந்து வருடங்களுற்குள் அக் கணக்கிளன முடிவிடும்படி வேண்டப்படுவர்கள். அதுவரை அக்கணக்குகளைப் பேண முடியும் எனினும் வட்டி தவிர வேறு எத் தொகையையும் இக்கணக்குகளில் வைப்பில் இடமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிச் சேவையின் சந்தைப்படுத்தல்

க. தேவராஜா
தலைவர்/வணிகத்துறை
யாழ் பல்கலைக் கழகம்

## 1.0 அறிமுகம்

சந்தைப்படுத்தல் என்பது தனியே பொருட்களுக்கு மட்டுமன்றி சேவைகளுக்கும் அவசியமான தொன்றாகும். இதன் காரணமாகவே வங்கிகள் காப்புறுதி நிறுவனங்கள் போக்குவரத்து அமைப்புக்கள் என்பனவும் சந்தைப்படுத்தல் எண்ணக் கருவில் அதிக அக்கறைகாட்டி வருகின்றன. உண்மை என்னவென்றால் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் போக்குவரத்து அமைப்புக்கள் என்பனவும் சந்தைப்படுத்தல் எண்ணக் கருவில் அதிக அக்கறைகாட்டி வருகின்றன. உண்மை என்னவென்றால் வங்கிகள் எப்பொழுதும் ஏதோ ஒரு வகையைச் சேர்ந்த சந்தைப் படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டே வந்திருக்கின்றன. வங்கிகளால் அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஒவ்வொரு சேவையும் ஏதோ ஒரு வகைச் சந்தைப்படுத்தலாகவே காணப்படுகின்றது. வங்கிகளின் 30 வகையான சேவைகளும் இன்று ஏதோ ஒருவகைச் சந்தைப்படுத்தலாகவே அமைகின்றது. இதன் காரண மாக வங்கிகள் ஏனைய நிறுவனங்கள் போட்டிச் சந்தையில் இயங்குவதுபோல் தாமும் இயங்கவேண்டிய நிலையில் உள்ளன. இலங்கையிலும் உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகளின் அதிகரிப்பானது வங்கிகளின் சந்தைப்படுத்தலில் அதிக ஆர்வத்தினை ஏற்படுத்தியுள்ளது.

## 2.0 வரைவிலக்கணம்

வங்கிகளின் சந்தைப்படுத்தலுக்கான வரைவிலக்கணங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன தியோடர் லெவிட் (THEODORE LEVITT) என்பவர் வெளியிட்டார் ''MARKETING MAYOPIA'' என்ற நூலில் வங்கிகளின் சந்தைப்படுத்தலுக்கான வரையறை கூறப்பட்டுள்ளது. ''வாடிக்கையாளர்களது தேவைகளை இனம்கண்டு, எதிர்பார்த்து, திருப்திப்படுத்தும் இலாபகரமான முகாமைக் கருமமே சந்தைப் படுத்தல்'' எனக் கூறப்படுகின்றது.

ஒரு வர்த்தக முயற்சியின் நோக்கம் வாடிக்கையாளர்களை உருவாக்கி வைத்திருப்பதாகும். இதனை நிறைவேற்றுவதற்காக ஏனைய போட்டியாளர்களின் நிலைகளிலும் பார்க்க கவர்ச்சிகரமான போக்கினை உருவாக்கி வைத்திருப்பது வங்கிகளின் கடமையாகும். இதன் காரணமாகவே எல்லா வங்கிகளும் இன்று ''வாடிக்கையாளர் நோக்கிய சந்தைப்படுத்தல்'' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றன.

## 3.0 வாடிக்கையாளர் நோக்கிய சந்தைப்படுத்தல்

சந்தைப்படுத்தல் முன்னர் உற்பத்தி நோக்கிய சந்தைப்படுத்தல் என்ற நிலையில் இருந்தது. இதன் கருத்தெல்லாம் என்ன பொருட்களை அல்லது சேவைகளை ஆக்க முடியுமோ அதனை உற்பத்தி செய்து சந்தைக்கு விடுவது என அமைந்தது. ஆனால் இன்று நிலைமைமாறி எதனை விற்க முடியுமோ அதனையே உற்பத்தி செய்து சந்தைப்படுத்த வேண்டும் என்ற நிலைமை இருக்கின்றது. இதற்கு ஏற்றவாறே வங்கிகள் வாடிக்கையாளர்களது தேவைகள் எவையென அறிந்து அதற்கேற்றவாறு இயங்கவேண்டிய நிலையில் உள்ளன. ஒவ்வொரு வங்கியும் வாடிக்கையாளர்களைக் கவர்ந்துகொள்ள போட்டியிட்டு வருகின்றன.

வங்கிகள் தொடர்ந்தும் கடன் வசதிகளை வழங்கிவரும் முகாமையாளர்களாகச் செயற்பட்டு வருமேயானால் அது அவற்

றின் இறுதி நடவடிக்கையாகவே இருக்க முடியும். ஆதலால் இப்பொழுது விற்பனைச் சந்தையொன்றில் சந்தைப்படுத்தல் முகாமையாளரொருவர் வகிக்கவேண்டிய பங்கை ஆற்றும் நிலைமை வங்கிகளுக்கு வந்துள்ளது. முன்னர் வங்கிச் சேவையைப் பெற்றுக்கொள்ள மக்கள் வரிசையாகக் காத்துக்கொண்டிருக்கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நிலைமை மாறி வங்கிகள் வாடிக்கையாளரைத் தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. முன்னரைப்போல் வாடிக்கையாளர்களுக்குக் கட்டளையிட்டு அவர்களைக் காத்திருக்குமாறு இன்று கூற முடியாது. மாறாக அவர்கள் சொல்வதைச் செய்ய வங்கிகள் தயாராக இருக்க வேண்டும். முன்னர் ஆவணங்கள் அந்தந்தப் பிரிவுகளுக்குச் சென்று வரும்வரை முகாமையாளர்களால் வாடிக்கையாளர் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட முடியாதிருந்தது. ஆனால் இப்பொழுது முகாமையாளர் காட்டிவரும் தாமதம் வாடிக்கையாளர்களை இழக்கச்செய்து விடும் என்பதனால் பிரச்சினைகள் எல்லாம் அந்தக் கணத்திலேயே தீர்த்துவைக்கக்கூடிய அளவுக்கு தீர்மானமெடுக்கும் ஆற்றலை வங்கி முகாமையாளர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

வங்கிகள் வாடிக்கையாளர் யார் என்பதனையும், அவர்களுக்கு என்ன தேவைப்படுகின்றது என்பதனையும் முன்கூட்டியே அறிந்து கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தனித்துவமான வசதிகள், மற்றும் சேவைகள் என்ற அடிப்படையில் அவற்றைப் பல தொகுதிகளாக வகுத்துக் கொள்ளுதல் வேண்டும். அதனூடே எந்தவொரு வாடிக்கையாளர் தொகுதிக்கும் எது தேவையாக உள்ளது என்பதனையும் முடிவு செய்து கொள்ளுதல் வேண்டும் வங்கிக்கு ஒரு வாடிக்கையாளர் வந்து கரும பீடத்தினூடாகக் கையை நீட்டும்பொழுது அவர் வங்கியின் வேலைப்பழுவை அதிகரிக்க வந்துவிட்டார் என வங்கிகள் கருதக்கூடாது. மாறாக எமது இலாப உழைப்புக்கு ஒரு உதவு தொகையினை வழங்கவந்துள்ளார் என வங்கிகள் கருதிக்கொண்டால் மட்டும் வாடிக்கையாளர் நோக்கிய சேவையை வங்கிகளால் வழங்க முடியும்.

புதிய வாடிக்கையாளர் ஒருவரைப் பெற்றுக்கொள்வதற்கான மொத்தச் செலவினையும், ஏற்கனவே பெறப்பட்ட வாடிக்கையாளர் ஒருவரை இழப்பதனால் ஏற்படக்கூடிய நட்டத்தையும் வங்கிகள் சரியாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர் சேவை என்பது மக்களுக்காக மக்களால் வழங்கப்பட்டு வரும் சேவை என்பதை வங்கிகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுடன் நல்லமுறையில் நடந்துகொண்டால் வாடிக்கையாளர்கள் வங்கிகளைத் தேடி வருவர். வாடிக்கையாளரைக் கவர்ந்துகொண்ட வங்கிகளை நோக்கி மக்கள் பெருந்தொகையில் வருகைதருவர் அதன் மூலமாக நல்லதோர் சந்தைப்படுத்தலை மேற்கொள்ளும் சாத்தியம் வங்கிக்கு ஏற்படமுடியும்.

## 4.0 முடிவுரை

வங்கிகள் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்காக இன்று ஒரு சந்தை அணுகுமுறையைப் பின்பற்றவேண்டியுள்ளது. இதனால் வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகளின் தரத்தினை உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். இந்த சேவைக்கு அவசியமாவது எது என்பதைக் கண்டு கொள்ளச் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதல் வேண்டும். இதனைத் தொடர்ந்து சேவைகள் தொடர்பான அபிவிருத்தியில் ஈடுபடுவதுடன் பல மேம்படுத்தல்நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல் வேண்டும். இதற்காக வங்கிகளின் புதிய திட்டங்கள் பற்றிய விளம்பரங்களிலும் ஈடுபடுதல் வேண்டும். இதன் வரிசையிலேயே கடந்த வருடத்தில் ஜப்பானிய வங்கியொன்று வருடக்கடைசியில் வாடிக்கையாளரை ஐந்து நட்சத்திரவிடுதிக்கு அழைத்து ஒன்று கூடலொன்றை நடாத்தி அவர்களுடனான உறவை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தது. இந்த வகையிலேயே வங்கிகளின் சந்தைப்படுத்தலானது ஏனைய வர்த்தக நிறுவனங்களின் சந்தைப்படுத்தல் போல் முக்கியம் பெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குடமை கலைப்பு
# DISSOLUTION OF PARTNERSHIP

தே. சுமணா
ஆண்டு 13 'B'
வர்த்தகப் பிரிவு

உருவாக்கப்பட்ட பங்குடமை ஒன்று தனது செயற்பாட்டில் இருந்து விலகிச் செல்வதனை பங்குடமை கலைப்பு என்பர். இப் பங்குடமையானது கலைக்கப்படும் போது 1890ம் ஆண்டு பங்குடமைச் சட்டத்தின் 44ம் பிரிவு நியதிக்கு அமைய சொத்துக்கள், பொறுப்புக்கள், இலாபநட்டங்கள் எனபன பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இவ்வாறு இவற்றைத் தீர்ப்பதற்காக பங்குடமைகளின் சொத்துக்கள் பணமாக்கப்பட்டு அது பின்வரும் ஒழுங்கு முறையில் செலுத்தி முடிக்கப்படும், அவையாவன:-

1) அரசுக்கு சென்மதியானவையைக் கொடுத்துத் தீர்த்தல்.
2) பங்காளர் தவிர்ந்த ஏனையோரிடமிருந்து பெற்ற கடன்களை கொடுத்துத் தீர்த்தல்.
3) பங்காளரிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிக் கொடுத்தல்.
4) பங்காளர் மூலதனம் கொடுத்துத் தீர்த்தல்.
5) மீதியாக நிதி காணப்படும் சந்தர்ப்பங்களில் பங்காளருக்கு இலாபம் கொடுத்துத் தீர்த்தல்

பங்குடமையானது இரண்டு வழிகளில் கலைக்கப்படலாம் அவையாவன:-

1) பங்காளரின் சுய விருப்பத்தின்படி
2) நீதிமன்றத்தின் கட்டளையின்படி கலைக்கப்படலாம்.

(i) பங்காளரின் விருப்பத்தின்படி கலைக்கப்படும்போது அவை ஒப்பந்தம் இல்லாத சந்தர்ப்பத்தில் 1890ஆம் ஆண்டு பங்குடமைச் சட்டத்தின்கீழ் பின்வரும் நடைமுறையின்படி கலைக்கப்படலாம். அவையாவன:-

1) நோக்கம் நிறைவேறினால்
2) ஒரு பொதுப் பங்காளி இறந்தால்
3) ஒரு பங்காளி முறிந்தவரானால்
4) ஒரு பங்குடமை நிறுவனம் சட்டத்திற்கு முரணான பங்குடமையாக மாறினால்
5) ஒரு பங்காளர் மூலதனத்தை திருப்பி எடுக்க விரும்பினால் இவ்வாறான சந்தர்ப்பத்தில் பங்குடமையானது தன்னிச்சையாக கலைக்கப்படலாம்.

(ii) நீதி மன்றத்தின் பிரகாரம் கலைக்கப்படுவதற்கான காரணங்கள்.

1) ஒரு பங்குடமையானது தொடர்ச்சியாக நட்டத்தில் செயற்பட்டால்
2) பங்காளர்கள் நிரந்தரமாக பங்குடமை ஒப்பந்தத்தை கடைப்பிடிக்க முடியாமல் இருந்தால்
3) ஒரு பங்காளி சித்த சுவாதீனம் அற்றவராக இருந்தால்
4) பங்காளர் பங்குடமை ஒப்பந்தத்தை கடைப்பிடித்து விட்டு பின் மாறினால்

இவ்வாறு பங்குடமையும் பங்காளரும் காணப்படும் சந்தர்ப்பத்திலேயே நீதி மன்ற அனுமதியுடன் கலைக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குடமை இவ்வாறு இரு வழிகளிலும் கலைக்கப்படும் போது பங்குடமையின் கணக்கேடுகளை முடிவுறுத்தல்

விசேட சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் பின்வரும் அவசிய படிமுறைகள் ஊடாக பூர்த்தி செய்யப்படும்.

1) தேறிய பணக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு சொத்தின் புத்தகப் பெறுமதிகள் தேறிய பணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு அந்தந்த சொத்துக் கணக்கில் செலவிலும் பதியப்படும்

பங்குடமை கலைக்கப்படும் போது ஏற்படும் கலைத்தல் செலவு தேறிய பணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு காசு அல்லது வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படும்.

2) சொத்துக்களாள் தேறும் தொகைகள் காசு அல்லது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு தேறிய பணக் கணக்கில் செலவு வைக்கப்படும்.

NOTE:- சொத்துக்களை பங்காளர் பொறுப்பேற்றால்
பங்காளர் மூலதனக் கணக்கு வரவு
தேறிய பணக் கணக்கு செலவு

3) பொறுப்புக்கள் தீர்க்கப்படும் போது அந்தந்த பொறுப்புக் கணக்கில் வரவிலும் காசு அல்லது வங்கிக் கணக்கில் செலவிலும் பதியப்படும்

4) தேறிய பணக் கணக்கில் உள்ள மீதிச் சொத்துக்களால் ஏற்பட்டது தேறிய இலாபம் அல்லது நட்டத்தைக் குறிக்கும் இத் தொகை பங்காளரது இலாபநட்ட விகிதப்படி அவர்களது மூலதனக் கணக்கிற்கு மாற்றப்படும்.

5) பங்காளரது முற்பணங்கள் ஏதாவது இருப்பின் அவை பங்காளர் மூலதனக் கணக்குக்கு மாற்றப்படும்.

6) இறுதியில் காசுக் கணக்கு மீதியும் பங்காளரது மூலதனக் கணக்கு மீதியும் சமப்படும். அதாவது பங்காளரது மூலதனக் கணக்கு வரவிலும் காசு அல்லது வங்கிக் கணக்கில் செலவிலும் பதியப்படும்.

## R. S ரேடேர்ஸ் எனும் பங்குடமையின்
## 31-12-1993 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பங்காளர் மூலதனம் | | காணிகட்டடம் | 600000 | 200000 | 400000 |
| ராஜன் | 430000 | மோட்டார் | 400000 | 100000 | 300000 |
| சாந்தன் | 280000 | தளபாடம் | 200000 | 50000 | 150000 |
| பங்காளர் நடைமுறைக் கணக்கு | | நன்மதிப்பு | | | 30000 |
| ராஜன் | 32000 | | | | |
| சாந்தன் | 18000 | சரக்கிருப்பு | | 60000 | |
| பொது ஒதுக்கம் | 30000 | கடன்படுனர் | 70000 | | |
| 6% வங்கிக்கடன் | 100000 | அ.வி.மு.க ஒதுக்கம் | [5000] | 65000 | 125000 |
| கடன் கொடுனர் | 45000 | | | | |
| சென்மதி உண்டியல் | 40000 | | | | |
| வங்கி மேலதிகப்பற்று | 30000 | | | | |
| | 1005000 | | | | 1005000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாபநட்டங்களை சமமாகப் பங்கிடும் இப் பங்குடமை பின்வரும் நிபந்தனைகளில் கலைக்கப்படலாம்.

1. காணி கட்டடம் 418000 க்கு விற்கப்பட்டது.
2. மோட்டார் வாகனங்களை 295000 விலையில் ராஜன் பொறுப்பேற்றல்.
3. கலைப்புச் செலவாக 10000 செலுத்தப்பட்டது.
4. அறவிடமுடியாக் கடனாக 5000 ஏற்பட்டது.

## தேறிய பணக் க/கு

| | | | |
|---|---|---|---|
| காணிகட்டடம் | 600000 | காணி பெ. தே, ஒதுக்கம் | 200000 |
| மோட்டார் | 400000 | மோட்டார் பெ. தே ஒதுக்கம் | 100000 |
| தளபாடம் | 200000 | தளபாடம் பெ, தே, ஒதுக்கம் | 50000 |
| நன்மதிப்பு | 30000 | அ வி. மு. க ஒதுக்கம் | 5000 |
| சரக்கிருப்பு | 60000 | வங்கி [காணிகட்டடம்] | 418000 |
| கடன் படுனர் | 70000 | ராஜன்மூலதனக்க[குமோட்டார்] | 295000 |
| கலைப்புச் செலவு | 10000 | வங்கி [கடன்படுனர்] | 65000 |
| | | வங்கி [தளபாடம்] | 150000 |
| | | வங்கி [சரக்கிருப்பு] | 60000 |
| | | நட்டம் ராஜன் | 13500 |
| | 1370000 | சாந்தன் | 13500 |
| | | | 1370000 |

## வங்கிக் க/கு

| | | | |
|---|---|---|---|
| தேறிய பணக்க/கு (காணி) | 418000 | மீதி | 30000 |
| தேறிய பணக்க/கு [க. படுனர்] | 65000 | கலைப்பு செலவு | 10000 |
| தேறிய பணக்க/கு [தளபாடம்] | 150000 | வங்கிக்கடன் | 100000 |
| தேறிய பணக்க/கு [சரக்கு] | 60000 | கடன் கொடுனர் | 45000 |
| | | சென்மதி உண்டியல் | 40000 |
| | | மூலதனக்கு ராஜன் | 168500 |
| | | சாந்தன் | 299500 |
| | 693000 | | 693000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்காளர் மூலதனக் க/கு

| விபரம் | ராஜன் | சாந்தன் | விபரம் | ராஜன் | சாந்தன் |
|---|---|---|---|---|---|
| மோட்டார் (தே.பண.க/கு) | 295000 | | மீதி | 430000 | 280000 |
| நட்டம் | 13500 | 13500 | நடைமுறைக்கணக்கு | 32000 | 18000 |
| காசு | 168500 | 299500 | பொது ஒதுக்கம் | 15000 | 15000 |
| | 477000 | 313000 | | 477000 | 313000 |

1) ஒரு பங்காளனின் மூலதனக் கணக்கு மீதியானது வரவு மீதியாக காணப்படும் போது அப் பங்காளன் காசு கொடுக்க இயலுமானவராகக் காணப்பட்டால் அவரிடமிருந்து அப்பணம் அறவிடப்படும். அப்பணம் அறவிடப்படும் போது—
காசுக் கணக்கு வரவு
பங்காளர் மூலதனக் கணக்கு செலவு

2) பங்காளரின் மூலதனக் கணக்கு மீதியானது வரவு மீதியாக காணப்படும் போது அப் பங்காளரிடமிருந்து பணம் அறவிட முடியாதவராக இருந்தால் அதாவது முறிவடைந்த வராகக் காணப்பட்டால் அப் பணத்தினை காணர் எதிர் மறேவிதியின் பிரகாரம் ஏனைய பங்காளரது இறுதி மூலதன விகிதப்படி நட்டம் பதிவு செய்யப்படும்;

உ-ம்

### K. K- பங்குடமையின்
### 30-06-92 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| பங்காளர் மூலதனம் | | காணிகட்டடம் | 350000 |
| A 500000 | | மோட்டார் | 250000 |
| B 400000 | | தளபாடம் | 200000 |
| C (100000) | 800000 | நன்மதிப்பு | 30000 |
| பொது ஒதுக்கம் | 30000 | சரக்கிருப்பு | 70000 |
| 6%வங்கிக்கடன் | 100000 | க.படுனர் | 60000 |
| கடன் கொடுனர் | 70000 | வங்கி மீதி | 80000 |
| சென்மதி உண்டியல் | 40000 | | |
| | 1040000 | | 1040000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாப நட்டங்களைச் சமமாகப் பங்கிடும் இப் பங்குடமை பின்வரும் நியதிகளில் கலைக்கப்பட்டது.

1) மோட்டார் வாகனங்கள் 270000/= விலையில் Aயால் பொறுப்பேற்கப்பட்டது.
2) கடன்பட்டோரையும், கடன் கொடுத்தோரையும் B பொறுப்பேற்றுக் கொண்டார்.
3) வங்கிக்கடன் வட்டியுடன் தீர்க்கப்பட்டது.
4) C ஓர் முறிந்த பங்காளி ஆவார்.
5) ஒடுக்கற் செலவாக 8000 செலுத்தப்பட்டது.

## தேறிய பணக்க/கு

| | | | | |
|---|---|---|---|---|
| காணிகட்டடம் | 350000 | A மூலதனம் [மோட்டார்] | | 270000 |
| மோட்டார் | 250000 | B மூலதனம் [க. படுனர்] | | 60000 |
| தளபாடம் | 200000 | வங்கி [காணி] | | 350000 |
| நன்மதிப்பு | 30000 | வங்கி [தளபாடம்] | | 200000 |
| சரக்கிருப்பு | 70000 | வங்கி [சரக்கு] | | 70000 |
| க.படுனர் | 60000 | நட்டம் | A | 8000 |
| வங்கிக்கடன் வட்டி | 6000 | | B | 8000 |
| வங்கி (ஒடுக்கற்செலவு) | 8000 | | C | 8000 |
| | 974000 | | | 974000 |

## வங்கிக் க/கு

| | | | | |
|---|---|---|---|---|
| மீதி | 80000 | வங்கிக்கடன் | | 106000 |
| தேறிய பணக்க/கு [காணி] | 350000 | தேறிய பணக்க/கு[ஒடு. செலவு] | | 8000 |
| தேறிய பணக்க/கு [தளபாடம் | 200000 | சென்மதி உண்டியல் | | 40000 |
| தேறிய பணக்க/கு[சரக்கு] | 70000 | மூலதனக் கணக்கு | A | 177555 |
| | | | B | 368445 |
| | 700000 | | | 700000 |

## பங்காளர் மூலதனக் கணக்கு

| விபரம் | A | B | C | விபரம் | A | B | C |
|---|---|---|---|---|---|---|---|
| மீதி | | | 100000 | மீதி | 500000 | 400000 | - |
| மோட்டார்[தே.பண] | 270000 | | | பொது ஒதுக்கம் | 10000 | 10000 | 10000 |
| தே.பணக்க/கு[க.படு] | | 60000 | | க.கொடுனர் | | 70000 | |
| நட்டம் | 8000 | 8000 | 8000 | மூலதனக் க/குA | | | 5445 |
| Cமூலதனக்க/கு | 54445 | 43555 | | ,, ,, B | | | 43555 |
| காசு | 177555 | 368445 | | | | | |
| | 510000 | 480000 | 108000 | | 510000 | 480000 | 108000 |

பங்குடமை கலைப்பின் போது கலைக்கப்பட்ட நிறுவனச் சொத்துக்களைக் குறிப்பிட்ட ஓர் நிறுவனம் முற்றாகப் பொறுப்பேற்கலாம் அல்லது அதன் சொத்துக்கள் பல்வேறு நிறுவனங்களுக்குப் பகுதி பகுதியாக விற்கப்படலாம்.

### சொத்துக்களைப் பகுதி பகுதியாக விற்றல்

சொத்துக்கள் பகுதி பகுதியாக விற்பனை செய்யப்படும் போது பங்காளர்களுக்கிடையிலான இறுதிப் பகிர்வுகள் தாமதமாகும். இதனால் தேறும் பணத் தொகைகள் முதலில் வெளியாருக்கான கடன்கள், பங்காளர்களுக்கான மேலதிகக் கடன்கள் செலுத்தப்பட்ட பின்னர் பின்வரும் இரு பகிர்வு முறைகள் மூலம் பங்காளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

i) மேலதிக மூலதன முறை (Surplus Capitals Method / Equity Method)
ii) கருதுகோள் நட்டமுறை (Assumed Loss Method)

iii) மேலதிக மூலதன முறை (Surplus Capitals Method, Equity Method)

இம்முறையில் பங்காளர்களது மேலதிக மூலதனம் இனம் காணப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். மேலதிக மூலதனம் என்பது இழிந்தளவான மூலதன வீதத்தை அடிப்படையாகக் கொண்டு அல்லது இலாப வீதத்தின் ஊடாக தீர்மானிக்கப்படும். எந்த பங்காளர் மேலதிக மூலதனத்தைத் கொண்டவராகக் கணிக்கப்படுகின்றாரோ அவருக்கே சொத்துக்களினால் தேறும் முதல் தொகைகள் கொடுத்துத் தீர்க்கப்படும்.

ii கருதுகோள் நட்டமுறை (Assumed Loss Method)

இம் முறையில் சொத்துக்களில் முதலில் தேறுகின்ற தொகைகள் கிடைப்பனவாகவும் எஞ்சிய சொத்துக்களினால் எவையும் தேறமாட்டாது அல்லது எஞ்சிய சொத்துக்கள் நட்டமாகக் கருதப்படுவதனையே குறிக்கின்றது. நட்டமாகக் கருதப்படும் சொத்துக்களின் தொகை பங்காளர்களது மூலதனக் கணக்குகளுக்கு நட்டமாக வரவு வைக்கப்படும். இவ்வாறு பதிவு செய்யப்படும் போது பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் பாதகமாக அமையுமாயின் காணர் எதிர் மறே வழக்கு பயன்படுத்தப்படும்.

ஒரு பங்காளி முறிவடைந்தால் அல்லது இறந்தால் அந்நிலைமையில் பங்குடமை கலைக்கப்படுவதாக இருந்தால் பங்குடமையின் 1890-ம் ஆண்டு சட்டத்தின் 33-ம் பிரிவின் பிரகாரம் (ஏனைய ஒப்பந்தம் இல்லாதவிடத்து) ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

பங்குடமைச் சட்டத்தின் 42-ம் பிரிவின்படி அவ்வாறான ஓர் பங்குடமையில் எவ்வாறு தொடர்ந்து இயங்குவது என்பது குறிக்கப்பட்டுள்ளது. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் பருத்திக் கைத்தொழில்

பரராஜசிங்கம் றஜந்தினி
13A வர்த்தகம்

இந்தியாவின் பெரிய கைத்தொழில்களில் முக்கியமானது பருத்தி ஆடைக் கைத்தொழிலாகும். உலகின் ஆடை உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா 2வது இடத்தை வகிக்கின்றது. இத்தொழில் 1970களில் 675 கோடி ரூபாவை 661 ஆலைகளில் முதலீடு செய்து இருந்தது. ஏறத்தாழ 12 இலட்சம் மக்கள் நேரடியாக வேலைவாய்ப்பைப் பெற்று இருப்பதுடன் [பருத்தி உற்பத்தியாளர், பதனிடுவோர் என்ற வகையில்] மறைமுகமாக இத் தொழில் சார்ந்த நிலையில் 30 இலட்சம் மக்கள் உழைப்பைப் பெறும் மார்க்கமாகவும் இக்கைத்தொழில் காணப்படுகிறது. மேலும் மானிய அரசாங்கங்களுக்கும் மத்திய அரசாங்கங்களுக்கும் பெருமளவு வருமானத்தை ஈட்டித் தருகின்ற ஒரு துறையாகவும் இது விளங்குகிறது.

இந்தியாவில் 1வது பருத்திக் கைத்தொழிற்சாலை பிரித்தானியரது முதலீட்டுடன் FORT GLOSTER எனும் இடத்தில் கல்கத்தாவுக்கு அருகே] தாபிக்கப்பட்டு இருந்தது. ஆனாலும் 1856 க்கு பின்னர் பம்பாய் நகரத்தில் நூல் நூற்றல் நெசவு செய்தல் என்னும் கைத்தொழில்கள் இந்திய முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்துதான் இந்தியாவில் பருத்திக் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டது எனலாம். இந்தியாவில் சுதேசி இயக்கம் 1ம் மகாயுத்தம் என்பன இந்தக் கைத்தொழிலை வளர்ச்சி அடையச் செய்வதற்கு அடிப்படையாய் அமைந்து இருந்த இன்னுமொரு காரணியாகும். வளர்ச்சி அடைந்து கொண்டு இருந்த உள்ளூர்த் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஆரம்ப கால பருத்திக் கைத்தொழிற்சாலைகள் முயன்று வந்துள்ளன. 1920- 1930 களில் இந்தியாவின் பருத்திக் கைத்தொழிலானது. கடும் போட்டியை எதிர்நோக்கியிருந்தது. ஜப்பானினது போட்டியும் உள்ளூரில் உற்பத்திச் செலவு அதிகரித்துக் கொண்டு வந்த நிலையும் அக்காலத்தில் நிலவிய உலக மந்த பொருளாதார நிலைமையும் இக்கைத்தொழிலுக்கு பல கஷ்டங்களை எதிர்நோக்க வைத்தன. 1930 க்கு பின்னர் இத்தகைய நெருக்கடி ஜப்பானுடன் இருபக்க வர்த்தக உடன்படிக்கை செய்ததைத் தொடர்ந்து ஓரளவு முன்னேற்றம் அடைந்தது. 1927 இல் கைத்தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இக் கைத்தொழில் வளர்ச்சி அடையத் தொடங்கியது. 2ம் உலகமகா யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்தியாவின் உள்ளூர்த் தேவைகளில் 10% மாத்திரமே இறக்குமதியினால் நிரம்பல் செய்யப்பட்டது.

2-ம் உலகமகா யுத்த காலம் இக் கைத்தொழிலுக்கு வாய்ப்பான காலம் என்று கூறப்படுகின்றது. ஜப்பானின் போட்டி தவிர்க்கப்பட்டது. யுத்தகாலத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டி இருந்தது. ஆனாலும் இக்காலத்தில் கூட சில பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. கடும்வேலை, இயந்திரங்கள் கடுமையாகப் பயன்படுத்தப்பட்டமை, குறைந்த மட்ட தொழில் நுட்பம் காரணமாக கைத்தொழில் எதிர்பார்த்தளவு தேவையை நிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றவில்லை. 2 ம் உலக மகா யுத்தத் திற்குப் பின்னர் இந்தியா சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து இக் கைத்தொழி லில் ஒரு அமைதி நிலை காணப்பட்டது.

தற்போது 70 க்கு மேற்பட்ட பருத்தி ஆலைகள் காணப்படுகின்றன. இதில் பெரும்பாலான ஆலைகள் நான்கு மாநில ங்களில் செறிந்து காணப்படுகின்றன. அவை மகாராஷ்ட மாநிலம், குஜராத் மாநிலம், தமிழ்நாடு, மேற்கு வங்காளம் என்பவையாகும். இதில் குஜராத் மகாரா ஷ்ட மாநிலங்களில் மட்டும் 70 தறிகள் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடங்களில் இக் கைத்தொழிற் சாலைகள் அமைவதற்கு பின்வரும் கார ணிகள்அடிப்படையாய்அமைந்துஇருந்தன:

★ தேவையான மூலப் பொருட்கள் பெரு மளவாகக் கிடைத்தமை.

★ மலிவானதும் விருத்தியடைந்தது மான போக்குவரத்து வசதிகள், குறிப்பாக பம்பாய் போன்றதுறைமுக வசதிகள்காணப்பட்டமை.

★ பொருத்தமான காலநிலை

★ வர்த்தக ரீதியாகவும் நிதி ரீதியாக வும் சாதகமான சூழல்

என்பன கைத்தொழிற் சாலைகளை அமைப்பதற்கான மூலவளங்களைத் திரட்டுவதற்கு இலகுவாக இருந்தமையி, னைக் குறிப்பிடலாம்.

அண்மைக் காலங்களில் மேலே குறிப் பிடப்பட்ட மாநிலங்களைவிட மத்திய பிரதேஷ், பிகார், கேரளா, ஆந்திர பிர தேஷ், உத்தர பிரதேஷ் போன்றவற்றி லும் மிகப்பரவலாக ஆலைகள் தாபிக்கப் பட்டு வருகின்றன. இத்தகைய பன்முகப் படுத்தலுக்கு பின்வரும் காரணங்கள் முக் கியமாக கருதப்படுகின்றன.

★ பருத்தி நார் இழையைப் போக்குவரத் துச் செலவு அதிகரிக்காத நிலையில் நீண்டதூரத்திற்கு அனுப்பக் கூடிய தாக இருத்தல்.

★ எல்லா மாநிலங்களிலும் மூலப் பொருட்கள் கிடைக்கக்கூடியதாக இருத்தல்.

★ மாநில வாரியாக போக்குவரத்து தொடர்புகள் விருத்தியடைந்தமை.

★ அரசாங்கம் பன்முகப்படுத்தலை ஊக் குவித்தமை

என்பவற்றால் இந்தியா முழுவதும் பருத்தி நெசவு ஆலைகள் மிக வேகமாகப் பரவியதுடன் வளர்ச்சியும் அடைந்தது.

இக்கைத்தொழிலானது எதிர்நோக் கும் முக்கியமான பிரச்சினைகளை பின் வருமாறு வகைப்படுத்தலாம்.

★ பருத்தி மூலப்பொருளை வழங்குவ தில் காணப்பட்ட பற்றாக்குறை நிலைமை

உலகின் பருத்தி உற்பத்தியில் 25./· ஐ இந்தியாவே உற்பத்தி செய்கின்ற போதும் இக்கைத்தொழிலுக்கு வேண்டிய முழுமையான மூலப்பொருளை இன்னும் வழங்க முடியாமல் இருப்பது குறிப்பிடத் தக்கது. இதற்கு காரணம் அடிக்கடி ஏற் படுகின்ற வறட்சி, வெள்ள நிலைமைகள் நோய் போன்றவற்றால் உற்பத்திகள் பாதிப்பதுடன் உற்பத்தித் திறனும் குறை ந்த நிலையில் காணப்படுகின்றது.

★ சடுதியான விலை உயர்வுகள்

உற்பத்திப் பற்றாக்குறை எதிர் பாராத விலை உயர்வுகளை ஏற்படுத்தும். துணி உற்பத்தியில் மூலப்பொருளுக்கான செலவு 40·/. மாக இருக்கிறது, கூலி 30·/. மாக இருக்கிறது. இந்நிலையில் உற் பத்தியாளன் பெருமளவு பாதிக்கப்படும் நிலையில் கைத்தொழில் வீழ்ச்சி அடை யும் நிலை தவிர்க்க முடியாதது.

★ நவீன மயப்படுத்தும் பிரச்சினை

இயந்திரம், தொழில் நுட்பம் என்பவை மிகப் பழைமை வாய்ந்த நிலையில் இருப்பதால் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு இக்கைத்தொழில் நவீன மயமாக்குதல் அவசியமாகின்றது.

★ போட்டி நிலை, ஏற்றுமதிப்பிரச்சினைகள் பதிவீட்டுப் பிரச்சினைகள்

ஜப்பான், பாகிஸ்தான், ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின், நெதர்லாந்து போன்ற மிகவும் நுட்பமான முறையில் இக்கைத்தொழிலை மேற்கொள்ளும் நாடுகளுடன் இந்தியாவும் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மற்றும் சேர்க்கைத் துணிகளுடனும் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

★ இந்தியா எதிர்நோக்கும் வலு நெருக்கடி இதன் காரணமாக ஏற்படும் POWER CUT காரணமாக இக்கைத்தொழில் பலமாக பாதிக்கப்படுகிறது.

★ உயர்ந்த வரி விதிப்பு விகிதங்கள்

★ இக் கைத்தொழிலுக்கான பல்வேறு விதமான கட்டுப்பாடுகள் ——

PRICE CONTROL
PRODUCTION CONTROL
STANDARD CONTROL

என்பன இக்கைத்தொழிலைப் பரவலாகப் பாதித்துள்ளன.

இந்தியாவின் கைத்தொழிலின் வளர்ச்சி ஏனைய வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது தரமானதாக இருந்தாலும், அண்மைய காலங்களில் இடம் பெற்று வருகின்ற சர்வதேச பிரச்சினைகள் இந்தியாவின் ஆடைக் கைத்தொழில்களிலும் பலமான தேக்க நிலையினை உருவாக்கி வருகின்றது. இந்த நிலையில் சர்வதேச நாடுகளின் போட்டியும் இந்தியாவின் பருத்திக் கைத்தொழில் எதிர் நோக்குகின்ற முக்கிய பிரச்சினையாக இருக்கிறது, இந் நிலையில் எதிர் காலத்தில் இந்தியாவின் உறுதியான பொருளாதாரக் கொள்கை ஒன்றின் மூலமே இது போன்ற கைத்தொழில்கள் வளர்ச்சி அடைய முடியும். □

□●□ □●□ □●□

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யும்படி வேண்டப்படுகின்றது. பதிவு செய்வதன் மூலம் பணியகத்தினால் வழங்கப்படும் இலவச காப்புறுதி வசதி, சேமிப்பு சான்றிதழ் என்பவற்றினைப் பெறமுடியும். அத்துடன் இலவசமாக அறிவுறுத்தல்கள் கசட்டுகளில் (Cassette) பதிவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவையியலும் விஞ்ஞான முறையும்

இ. கௌரீஸ்வரி
உ/த 13B
வர்த்தகப் பிரிவு

## கலப்பு நியாயத்தொடை அனுமானம்
அறிமுகம்:-

அளவையியல் பகுதி ில் அனுமானம் என்ற பகுதியில் காணப்படும் நியாத்தொடை அனுமானத்தின் பிரதான பிரிவுகளில் ஒன்றாக கலப்பு நியாயத்தொடை காணப்படுகின்றது. இந்த அனுமானம் பாரம்பரிய அளவையியலில் குறிப்பாக அரிஸ்ரோட்டில் போன்ற தத்துவவாதிகளின் வரையறைக்கு உட்பட்டதாகும். இத்தகைய கலப்பு நியாயத்தொடை வாதங்கள் இன்று நவீன அளவையியலின் குறியீட்டு வடிவில் ஆராயப்படுகின்ற போதிலும் அந்நியாயத்தொடையில் க.பொ.த. உயர்தரவகுப்பில் அளவையியல் பாடம் பயிலும் மாணவர்களுக்கு பல வினாக்கள் வருகின்றன என்பதில் ஐயமில்லை.

## கலப்பு நியாயத்தொடையின் வரையறை

நியாயத்தொடையின் மூன்று கூற்றுக்களில் நிபந்தனை, அறுதி, உறழ்வு என்ற எடுப்புக்களில் ஏதாவது கலந்துவருவது கலப்புநியாயத்தொடை எனப்படும். இக்கலப்பு நியாயத்தொடை 3 வகைப்படும்.

1) கலப்பு நிபந்தனை நியாயத்தொடை
2) கலப்பு உறழ்வு நியாத்தொடை
3) இருதலைக் கோள் வாதமுறை

## 1) கலப்பு நிபந்தனை நியாயத்தொடை

நியாத்தொடை ஒன்றின் பேரெடு கூற்று நிபந்தனை எடுப்பாகவும் சிற்றெடு கூற்றும், முடிவுகூற்றும் அறுதி எடுப்பாகவும் அமைந்து வருதல் கலப்பு நிபந்தனை நியாயத்தொடை ஆகும்.

உதாரணம்: விலை குறைந்தால் கேள்வி அதிகரிக்கும்
விலை குறைந்துள்ளது
ஆகவே கேள்வி அதிகரிக்கும்

கலப்பு நிபந்தனை நியாயத்தொடையில் முற்கூற்று, பிற்கூற்று பண்பினைக் கொண்டு நான்கு வகை காணப்படுகின்றன.

1) முற்கூற்று விதித்து பிற்கூற்று விதித்தல்
(உடன்பாட்டாஹாரி / ஆக்கப்பாட்டு நியாயத்தொடை)

2) பிற்கூற்று மறுத்து முற்கூற்று மறுத்தல்
(மறுப்பாஹாரி / அழிவுப்பாட்டு நியாயத்தொடை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பிற்கூற்று விதித்து முற்கூற்று விதித்தல்
(உடன்பாட்டாஹாரிப்போலி / காரிய உடன்பாட்டுப்போலி)
4) முற்கூற்று மறுத்து பிற்கூற்று மறுத்தல்
(மறுப்பாஹாரிப்போலி / காரணமறுப்புப்போலி)

மேற்கூறியவற்றில் முதல் இரண்டு முறைகளுமே வலிதானவை இவற்றையே கலப்பு நிபந்தனை நியாயத்தொடையின் இரு விதிகள் என்பர். மற்றைய இரண்டும் போலியான நியாயங்கள் ஆகும். இவை ஒவ்வொன்றினதும் விளக்கம் பின்வருமாறு:

## 1) உடன்பாட்டாஹாரி:-

கலப்பு நிபந்தனை நியாயத்தொடையின் பேரேடு கூற்றின் முற்கூற்று சிற்றெடு கூற்றில் விதிக்கப்பட்டு பின் பேரேடு கூற்றின் பிற்கூற்று முடிவில் விதிக்கப்படுத்தல் உடன்பாட்டாஹாரி ஆகும். அதாவது முற்கூற்று விதித்து பிற்கூற்று விதித்தல் இது வாகும்.

உதாரணம்:-

மழை பெய்யுமாயின் தெரு நனையும்
மழை பெய்துள்ளது
ஆகவே தெரு நனைந்துள்ளது

உடன்பாட்டாஹாரியில் விதி எடுப்புக்கள், மறைஎடுப்புக்கள் என்பதைக்கொண்டு பின்வரும் நான்கு வடிவங்கள் பெறப்படுகின்றன.

1) உடன்பட்டு உடன்படும் ஆஹாரி
A எனின் B ஆகும்.
A ஆகும்.
ஆகவே B ஆகும்.

2) உடன்பட்டு மறுக்கும் ஆஹாரி
A எனின் B அன்று
A ஆகும்
ஆகவே B அன்று

3) மறுத்து உடன்படும் ஆஹாரி
A அன்று எனின் B ஆகும்
A அன்று
ஆகவே B ஆகும்

4) மறுத்து மறுக்கும் ஆஹாரி
A அன்று எனின் B அன்று
A அன்று
ஆகவே B அன்று

## 2) மறுப்பாஹாரி-

கலப்பு நிபந்தனை நியாயத்தொடையின் பேரெடு கூற்றின் பிற்கூற்று சிற்றெடு கூற்றில் மறுக்கப்பட்டு பின் பேரெடு கூற்றின் முற்கூற்று முடிவில் மறுக்கப்படுதல் மறுப்பாஹாரி ஆகும். அதாவது பிற்கூற்று மறுத்து முற்கூற்று மறுத்தல் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்:-

மழை பெய்யும் எனின் தெரு நனையும்
தெரு நனையவில்லை
ஆகவே மழைபெய்யவில்லை

மறுப்பாஹாரியிலும் விதி எடுப்புக்கள், மறை எடுப்புக்களைக் கொண்டு பின் வரும் நான்கு வடிவங்கள் பெறப்படுகின்றன.

1) மறுத்து மறுக்கும் ஆஹாரி
A எனின் B ஆகும்
B அன்று
ஆகவே A அன்று

2) உடன்பட்டு மறுக்கும் ஆஹாரி
A எனின் B அன்று
B ஆகும்
ஆகவே A அன்று

3) மறுத்து உடன்படும் ஆஹாரி
A அன்று எனின் B ஆகும்
B அன்று
ஆகவே A ஆகும்

4) உடன்பட்டு உடன்படும் ஆஹாரி
A அன்று எனின் B அன்று
B ஆகும்
ஆகவே A ஆகும்

### 3) உடன்பாட்டாஹாரிப்போலி:-

கலப்பு நிபந்தனை நியாயத் தொடை ஒன்றின் பேரெடுகூற்றின் பிற்கூற்று சிற்றெடுகூற்றில் விதிக்கப்பட்டு பின் பேரெடுகூற்றின் முற்கூற்று முடிவில் விதிக்கப்படுவதால் ஏற்படுவது, உடன்பாட்டாஹாரிப்போலி ஆகும். அதாவது முற்கூற்று விதித்து பிற்கூற்று விதித்தல் வேண்டும் என்ற விதியை மீறுவதால் ஏற்படும் தவறே இதுவாகும்.

உதாரணம்:-

மழை பெய்யுமெனின் தெரு நனையும்
தெரு நனைந்துள்ளது
ஆகவே மழை பெய்துள்ளது

### 4) மறுப்பாஹாரிப் போலி:-

கலப்பு நிபந்தனை நியாயத்தொடை ஒன்றின் பேரெடு கூற்றின் முற்கூற்று சிற்றெடு கூற்றில் மறுக்கப்பட்டு பின் பேரேடு கூற்றின் பிற்கூற்று முடிவில் மறுக்கப்படுதல் மறுப்பாஹாரிப்போலி ஆகும். அதாவது பிற்கூற்று மறுத்து முற்கூற்று மறுத்தல் என்ற விதி மீறப்படுவதால் ஏற்படும் தவறே இதுவாகும்.

## 2. கலப்பு உறழ்வு நியாயத்தொடை

நியாயத்தொடையின் பேரெடு கூற்று உறழ்வு எடுப்பாகவும் சிற்றெடு கூற்றும் முடிவுகூற்றும் அறுதி எடுப்பாகவும் அமைந்து வருவது கலப்பு உறழ்வு நியாயத்தொடையாகும்.

உதாரணம்: -

அவன் இன்று அல்லது நாளை வருவான்
அவன் இன்று வரவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அவன் நாளை வருவான்

கலப்பு உறழ்வு நியாயத்தொடையில் இரு வகையான அனுமானமுறை உள்ளன.

1) மறுத்து விதிக்கும் முறை

2) விதித்து மறுக்கும் முறை

இங்கு மறுத்து விதிக்கும் முறையே கலப்பு உறழ்வு நியாயத்தொடையின் அனுமான விதியாக அமைகிறது. இவ் அனுமானமுறை வலிதானதாக அமையும். ஆனால் விதித்து மறுத்தல் முறை வலிதற்றதாக அமையும். அதனையே உறழ்வுப்போலி என்பர். இவை இரண்டையும் இங்கு ஆராய்வது சிறப்பாகும்.

## 1) மறுத்து விதிக்கும் முறை:-

கலப்பு உறழ்வு நியாயத்தொடையின் பேரெடு கூற்றின் ஏதாவது ஒரு கூற்று சிற்றெடு கூற்றில் மறுக்கப்பட்டு மற்றைய கூற்று முடிவில் விதிக்கப்படும்.

உதாரணம்:-

அவன் ஆடுவான் அல்லது பாடுவான்
அவன் ஆடவில்லை
ஆகவே அவன் பாடுவான்

### மறுத்து விதிக்கும் முறையில் பின்வரும் நான்கு வடிவங்கள் பெறப்படுகின்றன.

1) மறுத்து உடன்படும் ஆஹாரி
ஒன்றில் X அல்லது Y ஆகும்
X அன்று
ஆகவே Y ஆகும்

2) மறுத்து மறுக்கும் ஆஹாரி
ஒன்றில் X அல்லது Y அன்று
X அன்று
ஆகவே Y அன்று

3) உடன்பட்டு உடன் படும் ஆஹாரி
ஒன்றில் X அன்று அல்லது Y ஆகும்
X ஆகும்
ஆகவே Y ஆகும்

4) உடன்பட்டு மறுக்கும் ஆஹாரி
ஒன்றில் X அன்று அல்லது Y அன்று
X ஆகும் ஆகவே Y அன்று

## விதித்து மறுக்கும் முறை;-

கலப்பு உறழ்வு நியாயத்தொடை ஒன்றின் பேரெடு கூற்றின் ஏதாவது ஒரு மாற்று சிற்றெடு கூற்றில் விதிக்கப்பட்டு மற்றையது முடிவில் மறுக்கப்படுதல் விதித்து மறுத்தல் ஆகும். இந்நிலையில் பேரெடு கூற்று மெல்லுறழ்வாகவின் அவ்வாதம் வலிதற்றது. இதனையே உறழ்வுப் போலி என்பர். ஆனால் பேரெடு கூற்று வல்லுறழ்வாக வரும் சந்தர்ப்பத்தில் வலிதாக அமைவதுண்டு.

உதாரணம்:-

1) அவள் பாடுவாள் அல்லது ஆடுவாள்
அவள் பாடினாள்
ஆகவே அவள் ஆடமாட்டாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) ஒன்றில் அவள் பாடுவாள் அல்லது ஆடுவாள்
அவள் பாடினாள்
ஆகவே அவள் ஆடமாட்டாள்

### 3) இருதலைக் கோள வாதம்

நியாயத் தொடையின் பேரெடு கூற்று கூட்டு நிபந்தனையாகவும் சிற்றெடுகூற்று உறழ்வு எடுப்பாகவும் முடிவு அறுதி அல்லது உறழ்வு எடுப்பாகவும் அமைந்து வருவது இருதலைக்கோள் வாதம் ஆகும். இதனை இருதலைக் கொள்ளி வாதம் எனவும் கூறுவர். இங்கு முடிவு அறுதி எடுப்பாக அமையின் அது எளிய இருதலைக் கோள்வாதம் எனவும் முடிவு உறழ்வு எடுப்பாக வரின் அது சிக்கல் இருதலைக் கோள் வாதம் எனவும் கூறப்படும். இதன் படியும் கலப்பு நிபந்தனையில் அமைந்த ஆக்கப்பாடு அழிவுப்பாடு என்பதைக் கொண்டும் இரு தலைக்கோள்வாதம் பின்வரும் நான்கு வகையைக் கொண்டமைந்தவையாகும்.

### 1) எளிய ஆக்கப்பாட்டு இருதலைக்கோள்வாதம்:-

இங்கு முடிவு அறுதி எடுப்பாக அமைந்த அதேவேளை முற்கூற்று விதித்து பிற்கூற்று விதிக்கப்படும்.

உதாரணம்:-

ஒன்றில் A அல்லது B எனின் C ஆகும்
ஒன்றில் A அல்லது B ஆகும்
ஆகவே C ஆகும்

### 2) எளிய அழிவுப்பாட்டு இருதலைக்கோள்வாதம்:-

இங்கு முடிவு அறுதி எடுப்பாக அமைந்த அதேவேளை பிற்கூற்று மறுத்து முற்கூற்று மறுக்கப்பட்டிருக்கும்.

உதாரணம்: -

A எனின் C, D எனும் இரண்டுமாகும்
ஒன்றில் C அன்று அல்லது D அன்று
ஆகவே A அன்று

### 3) சிக்கல் ஆக்கப்பாட்டு இருதலைக்கோள் வாதம்:-

இங்கு முடிவு உறழ்வு எடுப்பாக அமைந்த அதேவேளை முற்கூற்று விதித்து பிற்கூற்று விதிக்கப்பட்டுள்ளது.

உதாரணம்:-

A எனின் B ஆகும். மேலும் C எனின் D ஆகும்
ஒன்றில் A அல்லது C ஆகும்.
ஆகவே ஒன்றில் B அல்லது D ஆகும்

### 4) சிக்கல் அழிவுப்பாட்டு இருதலைக்கோள்வாதம்:-

இங்கு முடிவு உறழ்வு எடுப்பாக அமைந்த அதேவேளை பிற்கூற்று மறுத்து முற்கூற்று மறுக்கப்பட்டிருக்கும்.

உதாரணம்:-

A எனின் B ஆகும் மேலும் C எனின் D ஆகும்
ஒன்றில் B அன்று அல்லது D அன்று
ஆகவே A அன்று அல்லது C அன்று

## உசாத்துணை நூல்கள்

1) இடைநிலை அளவையியல் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் இலங்கை
2) அளவையியலும் விஞ்ஞான முறையும்- பாகம் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதை நாற்றிசையும்
புகழ் பரப்ப எமது வாழ்த்துக்கள்

★

நவீன வேலைப்பாடுள்ள அழகிய
தங்கப்பவுண் நகைகள்
உத்தரவாதத்துடன் கிடைக்கும்

**கீதா நகையகம்**

188, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.

வணிக வனிதை வாழ்க வளர்க,

உங்களது நயம் நம்பிக்கை
நாணயமுள்ள தங்க வைர
நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

**அசோகா**

**நகை அகம்**

275, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிக வனிதையின் புகழ்
நாடெங்கும் பரவட்டும்

தரமான தங்கப்பவுண் நகைகளை
நம்பிக்கையுடன் வாங்குவதற்கு
சிறந்த ஸ்தாபனம்

**நித்தியா**

**நகையகம்**

177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிக வனிதை தொடர்ந்து
வெளிவர எமது நல்லாசிகள்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கும் ஸ்தாபனம்.

**நியூ ஆனந்தா**
**ஜீவல்லர்ஸ்**

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்து ஒன்று விருட்சமாக வளர
வாழ்த்துகின்றோம்!

ஆடர் நகைகள் 22 கரட்
தங்கத்தில்
சிறந்த முறையில் செய்து
கொடுக்கப்படும்
ஒரேயொரு ஸ்தாபனம்

**கயல்விழி**
**நகைப் பூங்கா**
224 / B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிக வனிதை வளமுடன்
மலர்க!

**அம்பிகை களஞ்சியம்**
304 (110), மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

★

சகலவிதமான
பலசரக்குப் பொருட்களை
மலிவாகப்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஸ்தாபனம்.

வணிக வனிதைக்கு
எமது வாழ்த்துக்கள்!

ஜவுளி உலகின் நவீன முன்னோடிகள்
நாடவேண்டியது

★

**இளவரசி**
**சேலைச் சோலை**
57, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

வணிக வனிதை மென்மேலும்
வளர்ந்து வர
எமது நல்லாசிகள்!

**துவாரகன்**
**களஞ்சியம்**

வணிக வனிதை வளம்பெற
எமது நல்லாசிகள்!

## றஞ்சனாஸ் வண்ண ஆடையகம்

17, 18. 18 A, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

- கவர்ச்சிமிகு கலர் வண்ணப் புடவைகளுடன்.
- தரமான பிளவுஸ் துணிகள்
- ஆடவர்களுக்கு அழகு செய்யும் சேட்டிங் சூட்டிங்
- மற்றும் சகலவித றெடிமேட் உடைகளுக்கும்

நாடவேண்டிய ஸ்தாபனம்.

நாற்றிசையும் வணிக வனிதை
புகழ்பரவ வாழ்த்துக்கள்!

## லலிதா பட்டுச்சோலை

5, 6 A, அங்காடி,
யாழ்ப்பாணம்.

இறக்குமதி செய்யப்பட்ட சேட்டிங், சூட்டிங் ஸ்கேட் அன் பிளவுஸ்
மங்கள வைபவங்களுக்கேற்ற கூறைச் சேலைகள்,
காஞ்சிபுரம் சால்வைகளையும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
பெயர்பெற்ற ஸ்தாபனம்

## லலிதா பட்டுச்சோலை

வணிக வனிதை புத்துயிர்பெற்று
நாற்றிசையும் ஒளிபரவ
எமது வாழ்த்துக்கள்!

## கண்ணன் அழகுமாடம்

72, சிறப்பு அங்காடி
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

இன்றைய நாகரீகத்திற்கு ஏற்ற
- அழகு சாதனப் பொருட்கள்
- லேஸ் வகைகள்
- கவரிங் நகைகள்
- நூல்கள்
- பரதநாட்டிய நகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
பெயர்பெற்ற ஸ்தாபனம்,

வணிக வனிதை
வளர்க! வளர்க!!

## கிருஷிகா ஆடை அகம்

69 A, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

சிறந்த ரகம்! நிதான விலை!!

இறக்குமதி செய்யப்பட்ட
வோயில்ஸ், சேட், சேட்டிங், சூட்டிங்

மங்கள வைபவங்களுக்கேற்ற
கூறைச் சேலைகள், காஞ்சிபுரம்
பட்டுவேட்டி சால்வைகளையும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதை மாணவ
சமுதாயத்தின் மத்தியில் மணம் வீச
எமது நல்லாசிகள்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

**யமுனா நகையகம்**

177 D, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.

வணிக வனிதை நாற்புறமும்
ஒளிவீச எமது நல்வாழ்த்துக்கள்

ஓடர் நகைகள் குறித்த
தவணையில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

**இந்திரா நகையகம்**

181, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

உன்னத சொல்வளம் மிக்க
வணிக வனிதை வரவிற்கு
எமது நல்லாசிகள்

உன்னத கலை நயம் மிக்க நகைகள்
உங்கள் எழில்மிகு கேசத்திற் கேற்ற
அதிநவீன மோஸ்தர்களில் தரம்
குன்றா தங்கப்பவுண் நகைகளை
செய்து பெற்றிட வாரீர்.

**வித்யா நகையகம்**

177/B, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி,)
யாழ்ப்பாணம்.

வணிக வனிதை வாழ்க வளர்க

★

சகலவிதமான ஆங்கில மருந்து
வகைகள், பால்மா வகைகள்,
அன்பளிப்பு பொருட்கள், கால்
நடை மருந்துகள் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

**ஜீவா மருந்தகம்**

226, சேர் பொன். இராமநாதன் வீதி
(பல்கலைக்கழகம் முன்பாக)
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் வறுமையும் வருமானப் பரம்பலின் சமமின்மையும் அவைகளின் தாக்கவிளைவுகளும்-சுதந்திரத்திற்குப்பின்

அ. யாழினி
ஆண்டு, 13 B
வர்த்தகப்பிரிவு

ஒரு நாட்டின் பொருளாதார அபி விருத்தியில் பொருளாதாரவளர்ச்சி என்பது மட்டுமல்லாது வருமானப்பங்கீடு, வறுமை போன்றனவும் முக்கியத்துவப்படுவதால் ஒரு நாட்டில் பொருளாதார அபி விருத்தி என்பதில் வருமானப்பங்கீடு, வறுமையைக்குறைத்தல் என்ற அம்சங்களிலும் முக்கியகவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற வகையாக 1960 களிலிருந்து வற்புறுத்தப்பட்டு வந்தது. வறுமை, வேலையின்மை, வருமானப்பங்கீட்டில் சமமின்மை என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுபவை. பொருளாதாரம் வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றபோது அவ்வளர்ச்சியால் கிடைக்கும் பலாபலன்களை சமமாகப்பங்கிடாவிடின் வறுமை என்பது குறைக்கப்படமுடியாது. எனவே ஒரு நாட்டின் வருமானப் பங்கீட்டினை ஓரளவிற்கு சமத்துவமாக இருக்கக் கூடிய நிலையிலேயே ஏற்படுகின்ற பொருளாதார வளர்ச்சியே அந்நாட்டில் விரும்பத்தக்க விளைவுகளையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தும். வருமானப்பங்கீடு என்று இங்கு குறிப்பிடும்போது மொத்தத்தேசிய உற்பத்தி அளவில் நாட்டுமக்கள் எவ்வாறு வருமானத்தைப் பகிர்ந்து கொள்வார்கள் என்ற வகையில் வருமானங்களை எந்த வகையாகப் பெற்றுக்கொள்கிறார்கள் என்ற வகையிலும் பொதுவாக (வாடகை கூலி, வட்டி போன்றவடிவங்களில்) வருமானப் பங்கீட்டை மதிப்பீடு செய்யும்போது நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் மொத்த வருமானத்தினை எந்த விதத்தில் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதனைக் கணிப்பீடு செய்து அதிலிருந்து வருமானப் பங்கீட்டை மதிப்பிடல் பின்பற்றப்படுகிறது.

இலங்கையின் வருமானப்பரம்பலின் தன்மையினை நோக்குமுன் வருமானச் சமமின்மை எவ்வாறு கணிப்பிடப்படுகிறது என்பதனை நோக்கின் வருமானப் பரம்பல் என்பதனை அளவீடு செய்வதற்காகக் கடைப்பிடிக்கப்படுகின்ற வழிமுறைகளில் ஒன்றான லோறன்ஸ் வளையி (Lorenz Curve) விளக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள சனத்தொகை தேசிய வருமானத்தின் எந்தளவினைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதனை அறிவதற்கு அச்சனத்தொகையினை அவர்கள் வருமானம் பெறும் அளவிற்கேற்ப 5 குழுக்களாக / 10 குழுக்களாக (decade முறை) பிரிக்கமுடியும். இவ்வாறு பிரித்தபின் இச் சனத்தொகை பெறுகின்ற வருமான அளவினை வருமானம் அதிகரித்துச் செல்கின்ற அளவிற்கேற்ப அவர்களை வகுதிப் படுத்தி 1வது பிரிவுமிகக் குறைந்த பிரிவாகவும் 2-ம் பிரிவு, 3-ம் பிரிவு, 4-ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு 5-ம் பிரிவு ஆகக்கூடிய வருமானத்தைப் பெறுகின்ற பிரிவாகவும் குறிப்பிட்டு இவர்களில் ஆகக்குறைந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்ற 1வது பிரிவினர் ஆகக்கூடுதலான வருமானத்தைப் பெறுகின்ற பிரிவாகக் குறிப்பிட்டு இவர்களில் ஆகக்குறைந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்ற 1வது பிரிவினர் ஆகக் கூடுதல் வருமானத்தைப் பெறுகின்ற பிரிவினர்க்கு எந்தளவாகக் காணப்படுகின்றனர் என மதிப்பிட்டு அதுவே ஒரு நாட்டின் வருமானப்பரம்பலின் தன்மையினை விளக்குகின்ற முறையாகக் காணப்படுகிறது. இதேபோன்று ஆகக்குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற 5% மான மக்கள் வருமானப்பரம்பலின் என்ன நிலையில் உள்ளனர் என்பதனை அறியவேண்டுமாயின் இதற்கு decade முறையாக முழுச் சனத்தொகையை 10 பிரிவாகப் பிரித்து 1வது பிரிவினர் உயர்வருமானம் பெறுகின்ற பிரிவினருக்கு ஆகக்குறைந்த வருமானம் பெறும் பிரிவினர் எந்தளவாகக் காணப்படுகின்றனர் என ஆராயப்படுகிறது. வருமானப்பரம்பல் பற்றிய அளவீட்டில் 1905-ம் ஆண்டு லோறன்ஸ் என்பவரால் விளக்கப்பட்ட வளையி வருமானம் நாட்டுமக்களிடையே பரம்பிய விதத்தைக் காட்டும்.

சனத்தொகைக்கும் வருமானப் பங்கீட்டிற்குமிடையேயான தொடர்பைக் காட்ட முற்படுகின்றபோது அவை திரண்ட சதவீத முறையில் கணிக்கப்பட்ட பின்பே வரைபடத்தில் காட்டுவது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இதனை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கின்


| சனத்தொகை | வருமானம் | சதவீதம் | திரண்ட சதவீதம் சனத்தொகை | திரண்ட சதவீதம் வருமானம் |
|---|---|---|---|---|
| 100 | 3200 | 2 | 10 | 2 |
| 200 | 4800 | 3 | 20 | 5 |
| 300 | 8000 | 5 | 30 | 10 |
| 400 | 9600 | 6 | 40 | 16 |
| 500 | 12800 | 8 | 50 | 24 |
| 600 | 16000 | 10 | 60 | 34 |
| 700 | 17600 | 11 | 70 | 45 |
| 800 | 20800 | 13 | 80 | 58 |
| 900 | 27200 | 17 | 90 | 75 |
| 1000 | 40000 | 25 | 100 | 100 |
| மொத்தம் 1000 | 160000 | 100 | | |

ஒரு நாட்டில் 1000 பேர் உள்ளனர் என எடுத்துக்கொண்டு அவர்கள் மொத்த வருமானத்தில் தனித்தனியே பெற்றுக் கொள்ளும் பங்கினை ஏறுவரிசைப்படி ஒழுங்கமைத்து இரண்டாவது நிரலில் காட்டப்பட்டுள்ளது. 3வது நிரலில் மொத்த வருமானத்தில் ஒவ்வொருவரும் பெறும் பங்கினைச் சதவீதமுறையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


4வது நிரலிலும் 5வது நிரலிலும் முறையே திரண்ட சதவீதத்தில் சனத்தொகையும் வருமானத்தையும் காட்டிநிற்கிறது.

அட்டவணையிலுள்ள திரண்ட சதவீத பெறுமானங்களைவைத்து லோறன்ஸ் வளைகோட்டை வரைந்துகொள்ளலாம். வரைபடம் (1)ல் கிடையச்சில் சனத்தொகை திரண்டசதவீத அடிப்படையிலும் நிலைக்குத்தச்சில் சனத்தொகையால் பெறப்படும் வருமானமானது திரண்டசதவீதத்திலும் காட்டப்படுகிறது. வரையில் 0 என்ற புள்ளி பூச்சிய எண்ணிக்கையுடையசனத்தொகையினர் 0 வருமானத்தையும் K என்றபுள்ளி 100 சதவீத எண்ணிக்கையுடைய சனத்தொகையினர் (அதாவது நாட்டிலுள்ள சகலமக்களும்) 100 சதவீத வருமானத்தைப் பெறுகின்றனர் என்பதை விளக்கும். இங்கு 0 என்ற புள்ளியிலிருந்து K என்ற புள்ளியைத் தொடுத்து வரையப்படும் நேர்கோட்டைச் சமபரம்பல் வளைகோடு (Line of Equal Distribution) ஆகும். இக்கோட்டின் எப்புள்ளியும் வருமானம் சமமாகப் பங்கிடப்பட்டுள்ளதைக் காட்டும். இவ் வளைகோடு வருமானம் சாதாரணமாக சமமாகப் பங்கிடப்பட்டுள்ளதைக் காட்டும். வருமானம் சமனற்ற விதத்திலே நாட்டுமக்களிடத்தில் பங்கீடு செய்யப்பட்டிருக்குமாயின் வருமான சமமின்மையைக் காட்டும். லோறன்ஸ் வளைகோடு சமபரம்பல் வளைகோட்டிற்கு வலதுபுறமாகச் செல்வதைக் காணலாம். நாடுகளில் வருமானப்பரம்பலில் சமனற்றநிலை காணப்படுவதும் வருமானம் பெறும் குழுக்களை ஏறுவரிசைப்படி ஒழுங்குபடுத்தி திரண்ட சதவீதத்தைக் கணிப்பிட்டு லோறன்ஸ் வளையி வரைவதால்தான் இக்கோடு சமபரம்பல் கோட்டிற்கு வலதுபுறமாகச் செல்கிறது. இந்த லோறன்ஸ் வளைகோடு குறிப்பிட்டகாலத்தில் குறிப்பிட்ட நாட்டிலுள்ள சனத்தொகையில் குறிப்பிடப்பட்ட வீதமானோர் உண்மையில நாட்டின் மொத்த வருமானத்தில் எத்தனை சதவீதத்தினைப் பெறுகின்றனர் என்பதனைக் காட்டி நிற்கிறது.




சமபரம்பல் கோட்டிலிருந்து லோறன்ஸ் வளைகோடு விலகிச் செல்லச் செல்ல அதுவருமானப் பரம்பலில் சமமின்மை அதிகரிப்பைக் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கப்படம் (1) இனை நோக்கின் 1953 - 1963 வரையிலான காலப்பகுதியில் வருமானப்பரம்பல் இலங்கையிலுள்ள விதத்தினைக் காட்டும். இங்கு லோறன்ஸ் வளையியானது 1953-ம் ஆண்டிலிருந்த நிலைமையைவிட ஒப்பீட்டளவில் 1963, 1973 காலப்பகுதியில் வருமானப்பரம்பலில் ஏற்படுகின்ற முன்னேற்றத்தினை விளக்குகிறது. ஆனால் படம் (2) இனை நோக்கின் 1973-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பின்னைய காலங்களில் இலங்கையில் வருமானச் சமமின்மை என்பது அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது.

1977 வரையும் இலங்கையின் பொருளாதாரவளர்ச்சியின் பலாபலன்கள் சமூகத்தின் கீழ்மட்டத்தினரை நோக்கிச் சென்றதனையும் இக்காலத்தின்பின் வருமானப் பரம்பலில் ஏற்படுகின்ற சமமின்மை அதிகரிப்பால் இப்பலாபலன்கள் ஒரு பகுதியினருக்கு செல்வதனையும் காணமுடிகிறது. 1970 - 1977 வரை தேசிய வருமானத்தின் நிலையானவிலைகளின் அதிகரிப்பு சராசரியாக 4% மாக அமையும். இத்தேசிய வருமான அதிகரிப்பால் ஏற்பட்ட முன்னேற்றங்கள் முக்கியமாக சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் உள்ளவர்களுக்கும் நடுத்தர வருமானமட்டத்தவர்களுக்கும் பயன்தரக்கூடிய வகையிலே பல்வேறு வகையான சமூகநலன் புரிச்சேவைகள், குறைந்தபட்ச கூலிமுறைகள், வரிமுறைகள் போன்றவற்றினூடாக மேற்கொள்ளப்பட்டது. மேலும் வருமான சமமின்மையை நீக்குவதற்கு அரசாங்கம் நிலச்சீர்திருத்தங்கள், மானியஉதவித்திட்டங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்தியது. பொதுவாக நாம் நோக்கும் நாட்டின் உயர் வருமானம் பெறும் வகுப்பினர் தொடர்ச்சியாக மொத்ததேசிய வருமானத்தில் கூடிய பகுதியை பெறுகின்றனர் என்பதனைக் காணமுடிகின்றது. மாறாக குறைந்த வருமானம் பெறும் பிரிவினர் குறைந்த அளவையே பெறுகின்றனர் என்பதனை பின்வரும் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றது.

| | 1973 | 1978 | 1981/82 | 1986/87 |
|---|---|---|---|---|
| ஆகக்குறைந்த வருமானம் பெறும் 20% | 4.97 | 3.76 | 3.7 | 3.5 |
| 2வது குறைந்த வருமானம் பெறும் 20% | 10.08 | 8.36 | 8.08 | 7.8 |
| 3வது குறைந்த வருமானம் பெறும் 20% | 15.85 | 13 2 | 12.5 | 12.5 |
| 4வது குறைந்த வருமானம் பெறும் 20% | 23.21 | 20.35 | 19.2 | 19.4 |
| ஆக உயர் வருமானம் பெறும் 20% | 45.89 | 54.31 | 56.92 | 56.4 |

(ஆதாரம்:- குடிசன மதிப்பீட்டு திணைக்களத்தால் வெளியிடப்படுவதும் புள்ளி விபரத்திணைக்களத்தால் வெளியிடப்படும் குடிசன புள்ளிவிபர ஆண்டு அறிக்கை)

1989ல் பதவிக்கு வந்த அரசினால் பெரும் எடுப்பில் அறிமுகப்படுத்திய ஜனசவியதிட்டத்தினால் வருமானச்சமமின்மை கணிசமாக குறைக்கப்பட்டதன் விளைவாக வளையி சம பரம்பல் கோட்டை நோக்கி சற்று நகர்ந்து காணப்படுகிறது இதனை படம் (4) காட்டுகிறது.

இந்த லோறன்ஸ் வளையி விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு புள்ளி விபரவியல் ரீதியாக கினி (GINI) என்ற இத்தாலிய விரிவுரையாளர் வருமானச் சமமின்மையை விளக்குவதற்கு குணகம்

ஒன்றினை (GINI CO efficient) கணிப் பீடு செய்தார். இக் குணகத்தின் பெறுமா னம் 0 இருந்து 1 வரைக்கும் வேறுபடும். பொதுவாக 0.2—0.35 ஆக இது காணப் படும் போது இதனை சமவருமானப்பரம் பல் எனவும் 0.5—0.7 என்பவற்றுக்கிடை யில் காணப்படின் சமனற்ற வருமானப் பரம்பல் எனவும் குறிப்பிடப்படும்.

இவ்வரைபில் இனிக்குணகத்தை கணித ரீதியாக கணிப்பிடின்

சமன்பாடு:-

படம் (1) ன் படி

$$\frac{A}{ock} = \frac{\text{Area of } A}{\text{Area of ock}} = \text{Gini co-efficient}$$

இதைவிட சற்று உயர்கணித முறையில் நோக்கின்

சமன்பாடு:-2

$$G = \frac{1}{2n^2/u} \sum_{i=1}^{n} \sum_{i=1}^{n} \left| yi - yi \right|$$

என்பதன் மூலம் கணிப்பிடலாம். n என்பது குடும்பங்களின் எண்ணிக்கையை யும் /u என்பது குடும்பங்களின் வருமானத் தினது இடை / சராசரியையும் மட்டு (Modulus) /yi-yi/ என்பது n என்னும் எண்ணிக்கையுடைய குடும்பங்களில் ஏதா வது இரண்டினுடைய வருமானங்களுக் கிடையேயான வித்தியாசத்தையும் குறிக் கின்றது.

1980—1988 காலப்பகுதியில் அதி உயர் வருமானமட்ட வகுப்பிலுள்ள 20% மானவர்களின் வருமானமானது மிக கீழ்மட்டத்திலுள்ள 20%த்தினரது வரு மானத்தினைவிட 11.7% ஆக அதிகமா கக் காணப்பட்டது. இதனை நிரூபிக்கும் கினிக் குணகத்தின் பெறுமானமும் 1986-ல் 0.58 ஆக உயர்ந்து காணப்பட்டது. மேலும் ஆரம்பகாலம் தொடக்கம் இதனை நோக்கின்

1953 — 0.50
1963 — 0.49
1973 — 0.41
1978/79 — 0.49
1981/82 — 0.52
1985/86 — 0.58
1990/91 — 0.47

இவ்வாறு அதிகரிப்பதற்குக் காரண மாக 77ன் பின்னரான திறந்த பொருளா தாரக் கொள்கையால் ஏற்பட்ட விளைவுகள் வருமானப்பரம்பலில் சமச்சீரின்மையை அதிகரிப்பதற்கே வழிவகுத்தன. தனியார் முதலீட்டை அதிகரிப்பதற்காக பல்வேறு விதமான தூண்டுதல்கள், வழிவிடப்பட்ட தால் தனியார் கூடுதலாக இலாபம் பெற் றமை, விலைக்கட்டுப்பாடு நீக்கப்பட் டமை, பணவீக்கம் துரிதமாக ஏற்பட் டமை மரபுரீதியான இலவசமாகப் பெறப் பட்டு வந்த சுகாதாரவசதி, கல்விவசதி போன்றவற்றிலும் பணம் கொடுத்தும் பெறவேண்டியநிலை தோன்றியமை போன்ற காரணங்களால் வருமானப் பரம் பலிலுள்ள சமச்சீரின்மை அதிகரித்துள்ளது இப்போக்கு பொருளாதார அபிவிருத்தி யில் வரவேற்கத்தக்கதொன்றல்ல. ஆனால் 1989ல் பதவிக்கு வந்த புதிய அரசினால் அறிமுகம் செய்யப்பட்டபெரும் எடுப்பி லான வறுமை ஒழிப்புதிட்டமான ஜனச விய திட்டம்மூலம் பெருமளவில் வறிலவர் களின் வருமானம் சீர் செய்யப்பட்டதால் வருமான சமமின்மை குறைக்கப்பட்டதன் விளைவாக 1990 / 91களில் இக்கினிக் குணகம் 0.47 ஆக சாதக நிலையை ஏற் படுத்தியதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமைநிலை (Poverty Situation)

வருமானச்சமமின்மையோடு இறுக்க மாகப்பிணைக்கப்பட்டதாகவே வறுமை என்பதும் விளக்கப்படுகிறது. இது வளர்ச்சியடைகின்ற நாடுகளில் ஒரு நச்சுச் சுழலாகக் காணப்படுகிறது. இலங்கையில் ஏறக்குறைய 25% மானவர்கள் வறுமை மட்டத்தின் கீழ் போஷாக்கின்மை போதுமான கலோரியை உட்கொள்ளும் வருமான மட்டத்தின் கீழ் வாழ்ந்துவருகின்றனர். இதற்குத் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் உணவு, மானியங்கள் குறைக்கப்பட்டமை பிரதான காரணமாகும். 1970 களின் நடுப்பகுதியில் தேசிய வருமானத்தில் 5%மாகக் காணப்பட்ட உணவு, மானியச்செலவு 1984ல் 1% மாகக் குறைந்துள்ளது. இதனால் வறியவர்கள் பாதிக்கப்பட்டனர். வறுமையினைப்பற்றி ஆராயும் போது வறுமைக்கு 2 வகையான வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. அவை யாவன:

முழுஅளவிலான வறுமை
(Absolute Poverty)
சார்பளவான வறுமை
(Relative Poverty)

முழு அளவிலான வறுமை பற்றி விளக்கத்தில் பல்வேறு வகையான விளக்கங்கள் அமைகின்றன. பொதுவாக ஐக்கிய நாடுகள் சபையின் வரைவிலக்கணத்தின்படி முழு வறுமை என்பது நாள் ஒன்றிற்கு தலா கலோரிப் புரதம் உட்கொள்ளும் அளவை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படும். அதாவது ஒரு நாளைக்கு ஒரு நபர் 2500 கலோரி 45 gram புரதம் உட்கொள்ளக் கூடியளவுக்கு போதுமான வருமானத்தைக் கொண்டிராத நிலையைக் கூறலாம்.

சார்பளவு வறுமை என்பது ஒரு சமூகத்தில் வாழ்கின்ற ஒரு சராசரியான அந்தஸ்தினைப் பேணக்கூடிய வகையில் வருமானம் இல்லாத நிலையைக் குறிக்கும்.

ஆனாலும் வறுமை பற்றிய எண்ணக்கருவில் முழு அளவிலான வறுமைபற்றிய எண்ணக்கருவினையே பொதுவாகக் கணிப்பீடு செய்யப்படுகிறது. வறுமையின் தன்மை வெவ்வேறு நாடுகளுக்கு வேறுபட்டதாக அமையும். உலகில் பெரிய அளவில் சனத்தொகை வாழும் தென்னாசியா, உபசகாராக்கண்டம், இந்தோனேசியா போன்றவற்றில் மொத்தவறுமையில் 75% மானவர்கள் வசிக்கின்றனர். இவ் வறுமை மூலம் பொருளாதார அபிவிருத்தி என்பது பாதிக்கப்படுகிறது. இலங்கையை நோக்கின் வறுமை என்பது பெருமளவாகக் கிராமிய சமூகங்களிலும் குறிப்பாக விவசாயமும் விவசாயம் சார்ந்தவர்களிடமும் இவ்வறுமை நிலவுவதை அவதானிக்க முடிகிறது.

இலங்கையின் வறுமையை நோக்கின் (புரதம்) கலோரிகள் உட்கொள்ளும் அளவு.

| நாளைக்கு | 1963 | 1971 | 1978 | 1981 | 1988 | 1993 |
|---|---|---|---|---|---|---|
| | 2180, | 2230, | 2343, | 2200, | 2267 | 2277 |

ஆகக்காணப்படுகிறது.

எனவே முழு அளவாக வறுமையைக் காண முடிகிறது. இது ஒரு கசப்பான உண்மையாகும். இலங்கையில் 25% மானவர்கள் போஷாக்கின்மை, வறுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 1979ற்கு பிற்பட்ட திறமுறையானது. பங்கீட்டுவினைத் திறனை வளர்த்த போதும் இத்தகைய பிரச்சினையை தீர்க்கத்தவறி விட்டது. இப்பிரச்சனைக்கு முகம்கொடுக்க அரசு வறுமை ஒழிப்புதிட்டத்தை மேற்கொண்டது இத்திட்டம் நுகர்வுமற்றும் கணிசமான முதலீடுகளுக்கு வளங்களை ஏழை மக்களுக்குத் திருப்பியது. வறியமக்களின் சொத்துரிமை வருவாய் தேடும் இயலளவு ஆகியவற்றை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இக்காலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் ஏற்கனவே மானியங்களைப் பெற்றவர்கள் பின்னர் மானியங்கள் நிறுத்தப்பட்டதால் இந்நிலையை அடைந்தனர். மேலும் வறுமையைஒழிக்க இலவச சுகாதாரம், கல்வி போன்ற வசதி திட்டங்களைத் தவிர உணவுமுத்திரை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைநிவாரணம், இலவச நூல்கள், மதிய உணவு, சீருடை போன்றன வழங்கப்பட்டன. 77 லிருந்து சமூகநல செலவீடுகள் குறிப்பாக மானிய உதவித்திட்டம் நிறுத்தப்பட்டதால் இலங்கையின் வறுமை அளவு ¼ பங்காக காணப்படுகிறது. இவ்வாறான நிலைமை பல்வேறுகாரணங்களின் விளைவாக ஏற்பட்டது என உணர்ந்து அரசு 1989 ம் ஆண்டில் ஜனசவிய உதவித் திட்டம் ஒன்றை வறுமை ஒழிப்பிற்காக அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் உற்பத்தி நுகர்வு ஆகியவற்றை கவனத்தில் கொண்டு தீட்டப்பட்டது.

இத்திட்டமானது வங்காள தேசத்தி லுள்ள Gromeen Bank முறைக்கும் தென் கொரியாவிலுள்ள Soemul Lending (கிராமிய எழுச்சித்திட்டம் Rural Movement Plan) என்பதனையும் மனதில் கொண்டு ஜனசவியத்திட்டம் தோற்றம் பெற்றது. வங்காளதேசவங்கியானது எழுத்தறிவற்றவர்களுக்கும் வறியவர்களுக்கும் குறிப்பாக பெண்களுக்கு சுயதொழில் வேலைவாய்ப்பு கடன்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்ட வங்கியாகும். இது 10 வருடகாலத்தில் பெரியளவு உற்பத்தி முயற்சிகளுக்கு கடனைவழங்கக்கூடிய நிறுவனமாக வளர்ந்தது. இதே போன்று தென்கொரியா கிராமிய எழுச்சித்திட்டமானது கிராமிய அமைப்புக்களை நிறுவ 300 பைக்கற் சீமெந்து கிராமிய நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் பெரிய நிறுவனங்களை உருவாக்கி பல்கலைக்கழகத்தை ஒத்த நிறுவனங்களை வளர்க்க உதவியது. இத்திட்டங்களை கவனத்தில் கொண்டு சுயசார்பு பொருளாதார வளர்ச்சித்திட்டங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் காந்திய பௌத்த சர்வோதய கோட்பாடுகளின் அடிப்படையில் ஜனசவிய திட்டம் இலங்கையில் 25 மாவட்டங்களுக்கும் 272 உப அரச அதிபர் பிரிவுகளில் அறிமுகம் செய்வதாக இத்திட்டம் தீட்டப்பட்டது. இதன்படி 1.4 மில்லியன் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தகுதியுள்ளவர்களாக ஊக்குவிக்கப்பட்டது. இதன்படி மாதாந்த ரூ 2500 ல் நுகர்விற்காக ரூ 1408 சேமிப்பாக 1042 ரூபாவும் வழங்கப்பட்டு 2 வருட முடிவில் நுகர்விற்காக ரூ 34992 சேமிப்பாக ரூ 25008 மொத்தமாக ரூ 60 000/= 2 வருடமுடிவில் கொடுக்கப்பட்டது. இச்சேமிப்பை அடிப்படையாகக் கொண்டு மக்கள் வங்கிகளில் கடன்களைபெறுதல், சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஊக்குவித்தலே பிரதான நோக்கமாக இருந்தது. இத்திட்டமானது பேரினப் பொருளியல் ரீதியாகப் பல விளைவுகளை இலங்கை பொருளாதாரத்தில் ஏற்படுத்தியது. அதாவது அரசநிதிப் பற்றாக்குறையை மேலும் அதிகரித்தது போன்ற பல விளைவுகளை ஏற்படுத்தியது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஜனசக்தி திட்டம் 92 ம் ஆண்டின் இறுதிவரை அதாவது செயலாற்றத்தை நோக்கின் 3 சுற்று நடவடிக்கைகளை பூர்த்திசெய்துள்ளது.

| நிகழ்ச்சி சுற்றுக்கள் | பிரதேச செயலாலர் பிரிவு எண்ணிக்கை | நுகர்வு நன்மை பெற்ற குடும்பங்கள் |
|---|---|---|
| 1வது சுற்று 1991 Sept ல் முடிபு | 28 | 121000 |
| 2வது சுற்று 90 Dec ஆரம்பம் 92 Dec முடிவு | 22 | 103664 |
| 3வது சுற்று 92 Feb ஆரம்பம் | 22 | 101882 |
| மொத்தம் 3 சுற்று | 72 | 326546 |

(மதித்தியவங்கி ஆண்டறிக்கை 1992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுள்ளமொத்தம் 121000 குடும்பங்கள் 92 Sept.ல் 25000/= முகப்பெறுமதியிலான மூலதன உரித்துச் சான்றிதழ் வழங்கப் பட்டது. இது 25000/= கொண்ட மூல தன அடிபடை ஒன்றை வழங்கியதுடன் சுய தொழிலுக்கு வங்கியிலிருந்து 25000/= கடனாகப் பெற இது பிணையாக வைப்புச் செய்யலாம். ஆரம்பத்திலிருந்து 1992 ன் இறுதிவரை வறியமக்களுக்கு நுகர்வு உத வியை வழங்க சனசக்தித்திட்டம் 101130 இலட்சம் கொள்வனவு செய்தது. மேலும் ஜனசக்தி திட்டமுயற்சிகள் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உதவியது என்பதை எவரும் மறுக்க முடியாது.

1991 Sept.முடிந்த 1வது சுற்றில்100476 குடும்பங்கள் தொழில்வாய்ப்பு பெற்றன. 1992 Dec முடிந்த 2வது சுற்றில் 58749 ஆட்கள் தொழில்களைப் பெற்றனர்'

அதிகமாக இவ்தொழில் வாய்ப்புக் கள், வேளாண்மை, மீன்பிடித்தொழில், சுய கைத்தொழில், வர்த்தகம், வாணிபம் என்ப வற்றில் உருவாக்கப்பட்டது.

மேலும் ஜனசக்தி பெறுவோர் நிலைத்து நிற்கும் அடிப்படையில் வருவாய் களை உருவாக்கும் நடவடிக்கை மேம் பாடுகளிலும் கடன்வசதிகள் வழங்கப்பட் டுள்ளது.

1வது சுற்றின் கீழ் 6250 இலட்சம் பெறு மதியான கடன்கள்

2வது சுற்றின் கீழ் 3220 இலட்சம் பெறு மதியான கடன்கள்

3வது சுற்றின் கீழ் 850 இலட்சம் பெறும தியான கடன்கள் வழங்கப்பட்டன

(மத்தியவங்கி ஆண்டறிக்கை 1992

## வறுமை ஒழிப்புத்திட்டமான ஜனசவிய திட்டம் எதிர்நோக்கும் நெருக்கடிகள்

1) 11 சுற்றுகளைக் கொண்டதாகவும் ஒவ் வொரு சுற்றும் 2 ஆண்டுகள் என்ற விதத்தில் 22 வருடங்களை எடுக்கும். இது நீண்டகாலத்தைக் கொண்டிருப் பதுடன் தொடர்ந்துவரும் ஆட்சி மாற்றம் அதன் கொள்கை மாற்றம் காரணமாக இது இடை நிலையில் தடைப்படும் ஒரு அபாயம் காணப் படுகிறது.

2) (Weaking of the selected projects சனசக்தி பெறும் குடும்பங்களால் தெரிவுசெய்யப்பட்ட சுயதொழில் திட்டங்களை வழிநடத்த சரியான திட்டங்களைத் தெரிவுசெய்ய ஆலோ சனைகள் தகுந்த வழிகாட்டல் இன் மையால் இவை தோல்வியைச் சந்திக் கின்றன

3) (Marketing problem) ஜனசவியத் திட்டத்தின் பிரதான தோல்விக்கான காரணமாகத் தமது உற்பத்திப் பொருட்கள் தொடர்பான எந்தப் பொருளை உற்பத்தி செய்தல் என்ப தும் ஒழுங்கமைக்கப்பட்ட சந்தைப் படுத்தல் திட்ட அறிவு இன்மையும் காணப்படுகிறது.

4) தவிர்க்க முடியாத காரணங்களான விவசாய முதலீடுகளின்போது கால நிலையுடன் தொடர்பான தடை களும் கால்நடை வளர்ப்பு போன்ற வற்றில் ஏற்படும் நோய்களும் தோல் விக்கு ஒரு காரணமாகும்.

5) மேற்கொள்ளும் திட்டங்களைச் சரி யான மேற்பார்வை அதிகாரிகளின் ஆலோசனை அமுல்படுத்தும் அக்கறை குறைவு அதனுடன் தொடர்புபட்ட அதிகாரிகளின் கவனக்குறைவாலும் திட்டங்கள் தோல்வியைத் தழுவுகின் றன.

6) வழமையாக ஆளும் கட்சியால் அமுல் படுத்தப்படும் இவ்வாறான திட்டங் களுக்கு எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பும் மாறிமாறிப் பதவிக்குவரும் அரசு களின் மாறுபட்ட கொள்கைகளும் இத்திட்டத்தைப்பாதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகக்கூறின் இத் தனியார் துறையாக்கம் மூலம் கைத்தொழில் துறையை வளர்க்க முற்பட்டபோது மறுதலையாக பொருளாதாரத்தில் முக்கிய முதுகெலும்பாகக் காணப்பட்ட தோட்டத் துறைகள் கவனிக்கப்படவில்லை. இதனால் தோட்டத்துறையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டதுடன் வருமானம் வீழ்ச்சியடைந்ததுடன் கைத்தொழில்துறையைக் கூட உண்மையில் பலமான கைத்தொழில் அடித்தளத்தைக்கூட நிறுவத்தவறிவிட்டது. இந்நிலையில் தனியார் ஊக்குவிப்பால் சமனற்ற வருமானப்பரம்பல் அதிகரித்ததுடன் நாட்டின் பொருளாதாரமும் ஒரு திரிசங்கு நிலையில் காணப்படுவதை எவரும் மறுக்க முடியாது. மேலும் இவ் வருமானச்சமமின்மையை நிவர்த்தி செய்யவும் வறுமையை ஒழிக்கவும் எனக் காலத்திற்குக் காலம் பதவிக்கு வரும் அரசுகளினால் பல திட்டங்கள் (சமூகநல செலவீடுகள், மானியத்திட்டங்கள்) மேற்கொண்ட போதும் மாறிமாறிப் பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் இத்திட்டங்கள் பூர்த்தி செய்யும் முன்பே நிறுத்தப்படுவதால் வறுமையை ஒழிக்கமுடியவில்லை என்பது பெரும் குறைபாடாகும். இறுதியாக 89-ல் கொண்டுவரப்பட்ட மிகப்பெரிய எடுப்பாக சனசக்திதிட்டமும் பல குறைபாடுகளையும் நெருக்கடிகளையும் கொண்ட நீண்டகாலத் திட்டமாகவும் காணப்பட்டதால் இதனுடைய அமுலாக்கமும் வேகமும் குறைந்துள்ளதைக் காணமுடிகிறது. இதனால் இதனுடைய தோல்வியும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இறுதியாக முன்எடுக்கும் திட்டங்கள் சிறந்தவையாகவும் ஆனால் அமுல்படுத்தும் விதமும் அதன் குறைபாடுகளும் தான் நாட்டில் வறுமையைக் குறைக்கமுடியாததற்குக் காரணமாகும். இப்போக்குப் பொருளாதார அபிவிருத்தியில் வரவேற்கத்தக்கதொன்றல்ல.

## உசாத்துணை நூல்கள்:-


1) மத்தியவங்கி ஆண்டறிக்கை- 1992
2) மார்க்கம் மலர் 3& 2- 1993
3) மார்க்கம் மலர் 4- 1993
4) பொருளியலாளன்- 1987
5) பொருளியல் நோக்கு- மாசி 1993


இலங்கை வங்கி தனது துணைக் கம்பனிகளான இலங்கை ஆவண தனியார் கம்பனி லிமிட்டெட் இலங்கை வியாபார வங்கி என்பனவற்றுடன் இணைந்து பொதுமக்களுக்கு பங்கு முதலீட்டு சேவை வசதியினை வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கி (CENTRAL BANK)

சி. குகப்பிரியா
ஆண்டு 13B
வர்த்தகம்

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினையும் பொருளாதார உறுதிப்பாட்டையும் பேணுவதுடன் நாணய அமைப்பின் தலைமைத்தாபனமாக விளங்கி அரசுக்கு உதவி அளிக்கும் நிதிநிறுவனமே மத்திய வங்கியாகும். இது பணச்சந்தையினதும் வங்கித் துறையினதும் தலைமை நிறுவனமாக செயற்படுகின்றது.

## இலங்கையில் மத்திய வங்கியின் தோற்றம்

இலங்கையில் "யோன் எக்ஸ்ரா" என்பவரின் சிபாரிசுக்கு அமைய 1949 ம் ஆண்டில் மத்தியவங்கிச் சட்டம் உருவாக்கப்பட்டது. 1950-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் இந்நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. இதன் தலைவரை நிதி அமைச்சே தெரிவு செய்யும். இவரை மத்திய வங்கி ஆளுனர் என அழைப்பர்.

## சட்டமும் நோக்கமும்

இலங்கை மத்திய வங்கியினது 1949 ம் ஆண்டின் 58 ம் இலக்கச் சட்டத்தின் 5 ம் பிரிவானது அதன் நோக்கங்களையும் பிற தொழிற்பாடுகளையும் வரையறை செய்கின்றது. இதன்படி பணமுறைமையையும் வங்கிமுறைமையையும் நிர்வகித்து ஒழுங்குபடுத்தும் பொறுப்புடைய தனிஅதிகாரியாக இயங்குவதுடன், நாட்டு நாணயத்தின் உள்நாட்டு வெளிநாட்டுப் பெறுமதியை உறுதிப்படுத்தல், இலங்கையின் உற்பத்தியையும் வேலை நிலையையும் பராமரித்து விருத்தி செய்தல், உற்பத்தி வளங்களின் முழுமையான அபிவிருத்தியை ஊக்குவித்தல் போன்ற தொழிற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது.

## அமைப்பு

இலங்கையின் மத்திய வங்கியானது ஆரம்பத்தில் ஐந்து (5) திணைக்களங்களுடனும் இருநூற்றைம்பது (250) உத்தியோகத்தர்களுடனுமே செயற்பட்டது. ஆனால் இன்று

(1) இலங்கை மத்தியவங்கி தொழில் நாணயத் திணைக்களம்
(2) வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
(3) பொருளாதார ஆய்வுத் திணைக்களம்
(4) ஊழியர் சேமலாப நிதித் திணைக்களம்
(5) நிறுவன பணியாளரக திணைக்களம்
(6) செலாவணிக் கட்டுப்பாட்டு திணைக்களம்
(7) உட்துறை கணக்காய்வு திணைக்களம்
(8) பொதுப்படுகடன் திணைக்களம்
(9) செயலகம்

என ஒன்பது (9) பிரிவுகளாகச் செயற்பட்டு வருவதுடன் தொழிற்பாட்டு விரிவுக்கு ஏற்ப ஊழியர் எண்ணிக்கையும் அதிகரித்து சென்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொத்துக்கள் பொறுப்புக்கள்

மத்திய வங்கியின் ஐந்தொகைப் பட்டியலின் மூலம் அதன் சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ளலாம். மத்திய வங்கியின் சொத்துக்களுக்கு சமமாகவே அதன் பொறுப்புக்கள் அமைந்திருக்கும். சொத்துக்கள் உயர்வடையுபோது அதற்கு சமனான வகையில் பொறுப்புக்களை வங்கி உயர்த்திக் கொள்ளலாம். குறிப்பாக சொத்துக்கள் உயர்வடையுமாயின் வங்கியின் பணவெளியீடு அதிகரிக்கும். இதனால் நாட்டின் பண நிரம்பலும் அதிகரிக்கும். எனவே மத்திய வங்கியின் சொத்துமாற்றம் நாட்டின் பண நிரம்பலிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். மத்திய வங்கியின் சொத்துக்களை பிரதானமாக இரு பகுதிகளாக வகுக்கலாம்.

(1) வெளிநாட்டுச் சொத்துக்கள் (பன்னாட்டு ஒதுக்குகள்)

(2) உள்நாட்டுச் சொத்துக்கள்

வெளிநாட்டிலுள்ள பணங்களும், நிலுவைகளும், வெளிநாட்டுப் பிணைகளும், திறைசேரி உண்டியல்களும், சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் போன்ற வகையில் மத்திய வங்கி தனது வெளிநாட்டுச் சொத்துக்களை பேணுகின்றது. உள்நாட்டு சொத்துக்களுள் அரசுக்கான கடன்கள், முற்பணங்கள் ஏனைய நிறுவனங்களுக்கான குறுங்கால, நடுத்தரகால, நீண்டகால கடன்கள் ஏனைய நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் ஏனைய சொத்துக்கள் என்னும் வகைகளில் பேணிக்கொள்கிறது.

மத்திய வங்கியின் பொறுப்பு விடயங்களாக ஆரம்ப மூலதனம், இலாபமிகைகள், சுற்றோட்டத்திலுள்ள நாணயம், அரசினது வைப்புக்கள், அரசமுகவர் நிலையங்கள், நிறுவனங்களின் வைப்புக்கள். வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள், பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிடு வங்கி நிறுவனங்களின் வைப்புக்கள், திறைசேரி உண்டியல்களில் முதலிட்ட தொகை தவிர்ந்த கட்டாய வைப்புக்கள், வெளிநாட்டிலிருந்து பெற்றகடன் பாடுகள் மூலதன உறவுதொகை கணக்குகள் மத்திய வங்கி பிணைகள், ஏனைய பொறுப்புக்கள் போன்ற அம்சங்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

## மத்திய வங்கியின் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியின் பிரதான தொழிற்பாடுகளாக பின்வருவனவற்றை கூறலாம்

1) நாணய வெளியீடு செய்தல்.
2) அரச வங்கியாகத் செயற்படுதல்.
3) வங்கிகளின் வங்கியாக செயற்படுதல்.
4) நாணயப் பெறுமதியைப்பாதுகாத்தல்.

## நாணய வெளியீடு செய்தல்

தாள் நாணயங்களையும் சில்லறை நாணயங்களையும் வெளியிடுதலே நாணய வெளியீடு எனப்படும். இது மத்திய வங்கியினது தனியுரிமை ஆகும். ஆரம்பகாலத்தில் தன்னிடமுள்ள தங்கத்தை ஒதுக்காக வைத்தே அதேஅளவு பெறுமதியான நாணயத்தை வெளியிட்டு வந்தது. ஆனால் தற்காலத்தில் மத்தியவங்கியானது. தன்னிடமுள்ள உள்நாட்டு வெளிநாட்டு சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பணவெளியீடு செய்கின்றது. அதாவது சொத்துக்கள் உயரும் போது பணவெளியீடு அதிகரிக்கும். சொத்துக்கள் குறையும் போது பணவெளியீடு குறைவடையும்.

## அரசவங்கியாகச் செயற்படுதல்

அரசதிணைக்களங்களின் கணக்குகளைப் பேணிபராமரித்தல். நாட்டின்பணநிரம்பல், நிதிநிலை பற்றி அரசுக்கு ஆலோசனை கூறுதல், நீண்டகால குறுங்கால கடன்களை அரசுக்கு அளித்தல், அரசின் பணவைப்புக்களை ஏற்றல், அரசாங்க கொடுப்பனவுகளை கொடுத்து தீர்த்தல் திறைசேரியின் சார்பில் உண்டியல்களை விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல், அரசின் தேசிய பொதுக்கடனை நிர்வகித்தல். அரசாங்கத்தின் சார்பில் சர்வதேச ரீதியிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல், நிதி சம்பந்தமான சர்வதேச மகாநாடுகளில் அரசின் சார்பில் பங்கு பற்றல் போன்றவற்றுக்கு அரசின் வங்கியாக செயற்படுகிறது.

## வங்கிகளின் வங்கியாக செயற்படுதல்

வணிகவங்கிகள் யாவற்றினதும் தலைமை வங்கியாக மத்தியவங்கி செயற்படுகின்றபோது அவற்றின் மொத்த வைப்பில் ஒரு பகுதியை ஒதுக்கமாக பெற்று தேவைக்கேற்ப அவற்றை முகாமை செய்கிறது. வணிகவங்கிகளின் திரவத்தன்மை குறைவடையும் போது அவற்றின் தொழிற்பாட்டினை தொடர்ந்து மேற்கொள்ளும் வகையில் இறுதிக்கடன் ஈவோன் என்னும் தொழிற்பாட்டின் ஊடாக கடன்களை வழங்குகின்றது. வணிகவங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு கணக்குகளை திறந்து அவர்கள் இடையேயான கொடுக்கல் வாங்கல்களை அக்கணக்குகளில் மாற்றம் செய்வதன் ஊடாக தீர்த்துவைப்பதைப் போன்று மத்தியவங்கியும் வணிகவங்கிகளுக்கு கணக்குகளை திறந்து அவற்றுக்கு இடையேயான கொடுப்பனவுகளை தீர்த்து வைக்கின்றது. இந்நடவடிக்கையையே மத் வங்கி "தீர்வகமாக செயற்படல்" எனவும் குறிப்பிடுவர். அண்மை காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் தரவு நிரல்படுத்தல் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இலங்கை தன்னியக்க தீர்வகம் மூலம் விரைவாக வணிக வங்கிகள் இடையேயான காசோலைகள், வங்கி ஆணைகள் பற்றிய தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் வங்கிகளுக்கு நிதி தேவைப்படும் போது உண்டியல்களை கழிவு செய்வதன் ஊடாகவும் கடன்களை வழங்குகின்றது. வணிகவங்கிகளுக்கு வேண்டிய நிதி சம்பந்தமான ஆலோசனைகளையும் வழங்கி நாட்டின் பொருளாதாரத்தை சிறப்பாக இயக்கிச்செல்ல வங்கிகளின் வங்கியாக மத்திய வங்கி தொழிற்படுகின்றது.

## பணப் பெறுமதிகளை உறுதிப்படுத்தல்

பணமானது அதன் தொழிற்பாடுகளை சிறப்பாக ஆற்றுவதற்கு அதன் உள்நாட்டு வெளிநாட்டுப் பெறுமதி உறுதியாக இருத்தல் வேண்டும். உள்நாட்டுப் பண நிரம்பலின் அளவுக்கு ஏற்ப பொருள் நிரம்பலை ஊக்குவித்து உள்நாட்டு விலைமட்டத்தை உறுதிப் படுத்துவதால் உள்நாட்டு விலைப் பெறுமதியைப் பேணுகின்றது. நாணய உறுதிப்பாட்டின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் உறுதி நிலையையும் பாதுகாத்துக் கொள்ளமுடியும். சர்வதேச ரீதியில் நாணயமாற்று விகிதத்தில் இலங்கை நாணயத்தின் பணப் பெறுமதி குறையாமல் பாதுகாப்பதையே வெளிநாட்டுபெறுமதியை உறுதிப்படுத்தல் என்பர். மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்களின் அடிப்படையிலேயே நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதி நிர்ணயிக்கப்படுகிறது. வெளிநாட்டு சொத்துக்கள் உயர்வடையும் போது நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி உயர்வடையும். நாணய மாற்று விகிதம் நாட்டுக்கு சாதகமாக அமைந்திருக்கும். வெளிநாட்டு சொத்துக்கள் குறைவடையும் போது நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதி குறைவடையும். நாணயமாற்று விகிதம் நாட்டுக்கு பாதகமாக அமையும்.

மத்திய வங்கி மேற்கூறிய பிரதான தொழிற்பாடுகளுடன் பின்வரும் சேவைகளையும் நாட்டின் நலன் கருதி ஆற்றி வருகின்றது.

1) அன்னிய செலாவணி மீதிகளை பாதுகாத்தல்
2) நாணய நிதி கொள்கைகளை தீர்மானித்தல்.
3) அபிவிருத்திக்கான நிதி உதவிகளை வழங்கல்
4) தரவு சேகரிப்பும் அளவீடும்.
5) தகவலும் வெளியீடும்
6) கடன்க்க கட்டுப்பாடு

## அன்னியசெலாவணி மீதிகளை பாதுகாத்தல்

இலங்கையின் இறக்குமதி தகுதியை பாதுகாப்பது மத்திய வங்கியின் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும் நாட்டுக்கான அன்னிய செலாவணி மீதியின் அடிப்படையிலேயே இறக்குமதி இயல் அளவு நிர்ணயிக்கப்படுகின்றது. இதனால் ஏற்றுமதித் துறைகளை ஊக்குவித்தல், வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள், ஏனைய சேவைகள் ஏற்றுமதிகள் மூலமாக அன்னிய செலாவணி உழைப்பை அதிகரித்து கொள்வது தொடர்பாக ஆலோசனைகளை அரசுக்கு மத்திய வங்கி வழங்கிவருகின்றது. மேலும் உழைக்கப்படும் பெறுமதியான அன்னிய செலாவணி வீண்விரயமாகாமல் தடுப்பதற்கும் மத்திய வங்கி செலாவணித் தடைகள், இறக்குமதி கட்டுப்பாடுகள் மூலம் முயற்சிக்கின்றது. தொடர்ச்சியானதும், நிலையானதுமான சந்தை வாய்ப்பையும் உறுதியான விலைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய பாதுகாப்பான ஏற்றுமதிகளும் உறுதியான அன்னிய செலாவணி உழைப்பும் இலங்கைக்கு இல்லாத நிலையில் மத்திய வங்கியின் இத்தொழிற்பாடு முக்கியமானதாக கருதப்படுகின்றது.

## நாணய நிதிக்கொள்கைகளை தீர்மானித்தல

பணப்பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு சிறப்பான நாணய நிதிக்கொள்கைகள் கடைப்பிடிக்கப்படவேண்டும். நாட்டின் நாணயநிதிக் கொள்கைகளை ஆராய்வதும் அவை பற்றி விதப்புரை செய்வதும் அமுலாக்குவதற்கு வேண்டிய உதவிகளை செய்வதும் மத்திய வங்கியின் கடமையாகும். பணநிரம்பல் மாற்றம், பணபெறுமதி மாற்றம் தொடர்பான கொள்கைகளை தேவையை பொறுத்து காலத்துக்கு காலம் மத்தியவங்கி சிபாரிசு செய்து வருகின்றது. இலங்கையின் பணச்சந்தை வளர்ச்சி அதன் ஆரம்பபடிநிலையில் இருப்பதாலும் சர்வதேச உதவிவழங்கும் நிதி நிறுவன அமைப்புக்களின் நிபந்தனைகளை நாடு பின்பற்றவேண்டி இருப்பதாலும் இலங்கையில் இத்தொழிற்பாடு ஓரளவு கடினமானதாகவே காணப்படுகிறது. ஆயினும் மத்திய வங்கி திறமையாக செயற்பட முனைகின்றது.

## அபிவிருத்திக்கான நிதி உதவிகளை வழங்கல்

மத்திய வங்கி நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக வங்கியின் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் மூலம் கொடுகடன் உத்தரவாதங்களையும் மீள் நிதியிடல் வசதிகளையும் வழங்கிவருகின்றது. சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்களுக்கும் பெருந்தொகையளவு தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் போன்றவற்றுக்கு நடுத்தவணை நீண்ட தவணை கொடுகடன்கள் வழங்கப்படுகின்றன கிராமியக் கடன் சிறு ஏற்றுமதிக்கான கடன், தொழில் வாய்ப்பு கடன், போன்றவற்றுக்கும் மீள நிதி வசதி அளிக்கின்றது. மேலும் நிதிக் கூட்டுத்தாபனங்களை தொடங்குவதற்கும் மத்திய வங்கி ஆரம்ப மூலதனத்தையும் வழங்கி உதவி உள்ளது.

## தரவு சேகரிப்பும் அளவீடும்

நாட்டின் உற்பத்திப் போக்கு பற்றிய வருடாந்த கணிப்பீடாக தேசிய வருமான கணிப்பீடு அமைகின்றது. மத்தியவங்கி இலங்கையின் தேசிய வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த தேசிய உற்பத்தி என்னும் அடிப்படைகளில் உற்பத்தி, செலவு, வருமான முறைகளில் கணிப்பீடு செய்வதுடன் அவற்றின் துறை வாரியான பங்களிப்பு பற்றியும் கணிப்பீடுகளை மேற்கொண்டு அதன் வருடாந்த அறிக்கையில் வெளியீடு செய்கின்றது நாட்டின் எதிர்கால திட்டமிடலுக்கும் இவ் அளவீடுகள் உதவுகின்றன.

நுகர்வுப் பொருட்களின் சில்லறைவிலை போக்குகளை அடிப்படையாகக் கொண்டு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை மத்திய வங்கி கணிப்பீடுகின்றது. இலங்கையின் பொதுவிலைமட்ட போக்குகள் பணவீக்க போக்குகள் பற்றிய மதிப்பீட்டுக்கு இச்சுட்டெண்ணும் பயன்படுத்தப்படுகின்றது. துறைவாரியாக தொழிலாளர் கூலிகள் சம்பளங்கள் பற்றி மதிப்பிட்டு ஆய்வு செய்கின்றது. நுகர்வோர் நிதி, சமூக பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதார அளவீடுகளுடன் மக்கள் கடன் முன்னோடித்திட்டங்கள் பற்றிய அளவீடுகள் போன்றவையும் மத்தியவங்கியினால் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய அளவீடுகள் மூலம் நாட்டின் பொருளாதார விடயங்கள் பற்றி ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு வங்கி தகவல்களை வழங்கி உதவுகின்றது.

## தகவலும் வெளியீடும்

மத்திய வங்கி தகவல்களைச் சேகரிப்பவர் களஞ்சியப்படுத்துபவர், பரப்புபவர் என்னும் பணிகள் மூலம் இலங்கையின் சம பொருளாதார போக்குகள் அபிவிருத்தி உத்திகள், வங்கியின் உதவித் திட்டங்கள் என்பன தொடர்பாக தரவுகளையும் தகவல்களையும் தொடர்ந்து வழங்கிவருகின்றது. வங்கியினால் கிரமமாக வெளியிடப்பட்டு வரும் நூல்கள் பருவ வெளியீடுகள் ஆண்டறிக்கைகள் போன்றவை மூலம் இவ்வறிவினை வங்கி பொதுமக்களுக்கும், தொடர்பு சாதனங்களுக்கும் வழங்கி வருகின்றது. வங்கியின் கொழும்பு தலைமை அலுவலகம் மூலமும் ஏனைய பிரதேச அலுவலகங்களிலும் அதன் வெளியீடுகளை நேரடியாக பெற்றுக் கொள்ள விசேட விற்பனை பீட பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## கடனாக்க கட்டுப்பாடு

வணிக வங்கிகள் வைப்புக்களை ஏற்றல், கடன் வழங்குதல் என்னும் நடவடிக்கைகள் மூலம் நாட்டிலே பண அளவின் (பணநிரம்பல்) மீதும் கொடுகடன் (கடனாக்கம்) அளவின் மீதும் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்த முடிகின்றது. எனவே உள்நாட்டிலே பணத்தின் அளவு கொடுகடன் அளவு என்பதனை நாட்டின் தேவைகளைப் பொறுத்து மத்திய வங்கி கட்டுப்படுத்துகின்றது. வங்கி இக்கட்டுப்பாடுகளை இரு முறைகளில் மேற்கொள்கிறது. அவையாவன:

(1) தொகைக் கொடுகடன் கட்டுப்பாடு
(மரபுரீதியான கட்டுப்பாடு)

(2) தெரிவுக் கொடுகடன் கட்டுப்பாடு
(மரபுரீதியற்றகட்டுப்பாடு)

## (1) மரபுரீதியான கட்டுப்பாட்டுக் கருவிகள்

மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் வணிக வங்கிகளின் கடன்களை ஒழுங்குபடுத்த மத்திய வங்கி பயன்படுத்தும் கடன் கட்டுப்பாட்டு கருவிகள் மரபு ரீதியான கட்டுப்பாட்டுக் கருவிகளாக குறிப்பிடப்படுகின்றன. இக்கருவிகளை வங்கி அமுல்படுத்தும் போது வணிக வங்கிகளின் கடன்கள் மொத்தமாக மாற்றி அமைக்கப் படுவதால் இவற்றை தொகைக் கடன் கட்டுப்பாட்டு கருவிகள் எனவும் குறிப்பிடுவர். மரபு ரீதியான கட்டுப்பாட்டு கருவிகளாக,

(1) வங்கிவீதம்

(2) ஒதுக்குவீதம்

(3) பகிரங்க சந்தை நடவடிக்கை என்பன அமைகின்றன.

## வங்கி வீதம்

வணிக வங்கிகள் தமது தொழிற்பாட்டின்போது திரவநிலை குறையுமாயின் மத்திய வங்கியிடம் இருந்து கடனைப் பெறுகின்றன. இவ்வாறு பெறப்படும் பணத்திற்காக மத்திய வங்கியால் வணிகவங்கிகளுக்கு விதிக்கப்படும் வட்டியே ''வங்கிவீதம்'' எனப்படும். மத்திய வங்கியானது வங்கி வீதத்தைக் கூட்டும் போது வணிக வங்கிகளும் கடனுக்காக வட்டிவீதத்தை கூட்டுகின்றன. இதனால் கடன் பெறுவோர் தொகை குறைவடைகின்றது. மாறாக மத்திய வங்கியானது வங்கி வீதத்தை குறைப்பின் வணிக வங்கிகளும் கடனுக்கான வட்டி வீதத்தை குறைக்கும். இதனால் கடன் பெறுவோர் தொகை கூடுகின்றது. எனவே மத்தியவங்கி வங்கி வீதத்தில் ஏற்படுத்தும் மாற்றம் கடன் அளவிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒதுக்கு விகிதம்

வணிகவங்கிகள் பொதுமக்களிடமிருந்து பெறும் வைப்புக்களில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை மத்திய வங்கியில் காசு ஒதுக்கமாக வைக்கவேண்டும். இதுவே "ஒதுக்கு விகிதம்" ஆகும். இவ் ஒதுக்கு விகிதம் இலங்கையைப் பொறுத்தவரை மாறக் கூடியதாக அமைந்துள்ளது. கேள்வி வைப்புகளுக்கு 10- 40% மாகவும் சேமிப்பு வைப்புகளுக்கு 5- 20% ஆகவும் ஒதுக்குவீதம் காணப்படுகின்றது. ஒதுக்கு விகிதத்தை உயர்த்தும் போது படிப்படியாக கடன் வழங்கும் அளவு குறைவடைந்து கடனாக்க அளவும் குறைவடையும். ஒதுக்கு விகிதம் குறைவடையுமாயின் கடனாக்க அளவு அதிகரிக்கும்.

## பகிரங்க சந்தை நடவடிக்கை

பணச் சந்தையில் மத்திய வங்கி நேரடியாக பிரவேசித்து ஆவணங்களை கொள்வனவு விற்பனவு செய்யும் நடவடிக்கையே "பகிரங்க சந்தை நடவடிக்கை" ஆகும். பணச்சந்தையிலே வங்கி ஆவணங்களை விற்பனை செய்யுமிடத்து வணிக வங்கிகள் அவற்றைக் கொள்வனவு செய்யும் இதனால் வணிக வங்கியின் காசு மத்திய வங்கிக்கு செல்கிறது, இந்நிலையினால் வணிகவங்கிகள் கொடுகடன் நடவடிக்கைகளை குறைத்துக் கொள்ள தீர்மானிக்கின்றது. ஆவணங்களை மத்தியவங்கி மீண்டும் கொள்வனவு செய்யும்போது வணிகவங்கிகளின் பண அளவு அதிகரித்து கடன் அளவும் உயர்வடையும்.

## (2) மரபு ரீதியற்ற கட்டுப்பாட்டுக் கருவிகள்

மத்தியவங்கி ஆரம்பிக்கப்பட்டு ஒரு தசாப்த கால முடிவிலேயே இக்கட்டுப்பாட்டு கருவிகள் வணிக வங்கிகளின் கடன்களை ஒழுங்குபடுத்தக் கூடிய அளவுக்கு பயன்படுத்தப்பட்டமையால் இவற்றை மரபுரீதியற்ற கட்டுப்பாட்டு கருவிகள் என குறிப்பிடுவர். தெரிந்தெடுக்கப்பட்ட முறையில் இக்கருவிகள் மூலம் வணிக வங்கிகளின் கடன்கள் ஒழுங்குபடுத்தப்படுவதால் இவற்றை தெரிவுக்கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் எனவும் குறிப்பிடுவர். இலங்கையில்

(1) இழிவு ஒதுக்கு எல்லைகளை மாற்றல்
(2) முதலீட்டு பட்டியலுக்கு வரம்பிடல்
(3) சொத்து, ஒதுக்கம் மீதான ஒதுக்கு எல்லைகளை மாற்றல்
[4] துறைவாரியான கடன் கட்டுப்பாடு
(5) நுகர்வோர் கடனை ஒழுங்குபடுத்தல்
(6) நல்வழி புகட்டல்

போன்ற கருவிகள் முக்கியம் பெறுகின்றன.

## இழிவு ஒதுக்க எல்லைகளை மாற்றல்

வணிக வங்கிகளால் வழங்கப்படுகின்ற பல்வேறு கடன் பத்திரங்களுக்கு எதிரான பணஒதுக்கு வீதங்களை மத்திய வங்கி மாற்றி அமைப்பதன் மூலம் தேவையான கடன்களை வழங்கவும் தேவையற்ற கடன்களை கட்டுப்படுத்தவும் எடுக்கும் நடவடிக்கையே இழிவு ஒதுக்கு வீதங்களை மாற்றுதல் என்னும் கடன்கட்டுப்பாட்டு முறையாகும் தேவையற்ற பொருட்களான ஆடம்பர இறக்குமதிகளுக்காக வணிகவங்கிகள் கடன்பத்திரங்களை பொறுப்பாக வைத்து கடன் பெறவருகின்ற போது இழிவு ஒதுக்க எல்லையை உயர்வாக நிர்ணயிக்கும், அதேபோல் உள்நாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கடன் பத்திரங்களை ஈடாக வைத்து வணிக வங்கி கடன் பெற வரும் போது மத்தியவங்கி இவ் வீதத்தை குறைவாக நிர்ணயிக்கும்.

## முதலீட்டு பட்டியலுக்கு வரம்பிடல்

மத்திய வங்கி வணிக வங்கிகளின் கடனாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு கையாளுகின்ற பிரதான தெரிவு கடன் கட்டுப்பாட்டு கருவியாக இது அமைகின்றது. இந்த கட்டுப்பாட்டு முறையின் மூலம் வழங்கப்படும் கடன்கள் முழுவதையுமோ. தெரிந்தெடுக்கப்பட்ட சிலவற்றையோ கட்

டுப்படுத்தலாம். வணிக வங்கியால் வழங்கப்படும் தேவையற்ற முதலீடுகள் கடன்கள் மீதே இக்கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

## சொத்து, ஒதுக்கம் மீதான ஒதுக்கு எல்லைகளை மாற்றல்

வணிக வங்கிகளில் பேணப்படுகின்ற சொத்துக்கள், ஒதுக்கங்கள் என்பவற்றுக்கான எல்லைகளை மாற்றி அமைப்பதன் மூலம் மத்திய வங்கி வணிக வங்கிகளின் கடனாக்கத்தை கட்டுப்படுத்தமுடியும். மத்திய வங்கி தான் விரும்பாத துறைகளுக்கு எதிரான ஒதுக்கங்களை உயர்த்தும்படி வணிக வங்கிகளைக் கேட்கலாம். இதனால் வணிகவங்கிகளின் நிதி வலுவை பேணுவதற்கு ஏற்றதாக சொத்து ஒதுக்கங்களின் எல்லைகளை மாற்றி அமைத்து கடன்களை கட்டுப்படுத்துவதில் மத்தியவங்கி ஈடுபடுகின்றது. இலங்கையை பொறுத்தவரை இம்முறை மிகவும் குறைவாகவே கையாளப்படுகிறது.

## துறைவாரியான கடன்கட்டுப்பாடு

விவசாயத்துறை, கைத்தொழில்துறை, சேவைகள் துறை ஏற்றுமதி என்னும் வகையில் பொருளாதாரத்தின் ஒவ்வொருதுறையையும் தெரிந்தெடுத்து அவற்றை ஊக்குவிக்கவேண்டிய அளவைப்பொறுத்து கடன் அளவுகளை தீர்மானித்துக் கொள்ளுதலே துறைவாரியான கடன்கட்டுப்பாட்டு நடவடிக்கை ஆகும். இங்கு துறைவாரியாக கடன் வழங்கும் விதம் வேறுபட்டு அமையலாம். இதனால் கடன்கள் ஒழுங்குபடுத்தப்படுவதுடன் துறைவாரியான வளர்ச்சியை பெற்றுக்கொள்ளவும் நாட்டின் பணநிரம்பலை ஒழுங்குபடுத்தி கடனாக்கத்தை கட்டுப்படுத்தவும் வணிக வங்கிகள் ஊடாக மத்திய வங்கி முயற்சிக்கின்றது.

## நுகர்வோர் கடனை ஒழுங்குபடுத்தல்

வணிகவங்கிகள் நுகர்வு தேவைகளுக்காக வழங்கும் கடன்களை ஒழுங்குபடுத்தல் மூலம் கடனாக்கத்தை கட்டுப்படுத்தலே நுகர்வு கடனை ஒழுங்குபடுத்துதல் எனப்படும். நேரடியாக உற்பத்திக்கு உதவாத வகையில் நீண்டகால பாவனை உடைய பொருட்களை கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்காகவும் வீட்டுக்கான மின்சார வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும் வணிகவங்கிகள் ஆரம்பத்தில் கடன்களை வழங்கி வந்துள்ளன. நாட்டின் பண நிரம்பல் மோசமடைந்து செல்லும்போது மத்திய வங்கி இவற்றுக்கான கடன் அளவுகளை குறைக்கும்படி கேட்கலாம். அதேபோல் அவற்றை திருப்பிச் செலுத்தும் தவணைகளையும், குறைவாக நிர்ணயிக்கலாம். இந்நிலையில் வணிகவங்கிகளின் கடன்கள் குறைவடைந்து கடனாக்கம் குறைவடையும்.

## நல்வழி புகட்டல்

மத்திய வங்கி நாட்டின் தலைமை வங்கி என்னும் நிலையில் இருந்து நாட்டின் பொருளாதார நிலைமை, நிதிநிலைமைபற்றி வணிக வங்கிகளுக்கு எடுத்துக்கூறி அவற்றின் கடன்களை ஒழுங்குபடுத்தும்படி ஆலோசனை கூறுதலே இம்முறையாகும். ஏனைய முறைகளிலும் பார்க்க எளிமையான முறையாக இந்நடவடிக்கை அமைகின்றது. மத்திய வங்கிக்கும், வணிக வங்கிகளுக்கும் இடையில் நெருக்கமான உறவு காணப்படும்போது மட்டுமே இந் நடவடிக்கை வெற்றி அளிக்கக்கூடியதாகக் காணப்படும்.

மேற்கூறிய கடன்கட்டுப்பாடு கருவிகளைப் பயன்படுத்தி மத்தியவங்கி வணிக வங்கிகளின் கடன்களை கட்டுப்படுத்த முற்படுகின்றதாயினும் வணிகவங்கிகளிடம்மேலதிக திரவத்தன்மை காணப்படுகின்றபோதும் வங்கி அமைப்பு தவிர்ந்த ஏனைய நிதிநிறுவன அமைப்புக்கள் நாட்டில் வளர்ச்சி அடைந்திருக்கின்ற நிலையிலும் பணப்பதுக்கலும், கறுப்புப்பண நடவடிக்கையும்காணப்படுகின்ற நிலையிலும் மக்களிடையே வங்கி பழக்கவழக்கம் குறைவாக காணப்படுகின்றபோதும் மத்தியவங்கி தனது கடன்கட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு கருவிகள் ஊடாக நாட்டின் பண நிரம்பலை ஒழுங்குபடுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது.

## பிரதேச அலுவலகங்கள்

மத்திய வங்கியின் நிர்வாக பன்முகப் படுத்தலுடன் இணைந்தவகையில் பிரதேச ரீதியாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் வங்கி 1985ம் ஆண்டு முதல் பிராந்திய ரீதியாக தனது கிளைகளை விஸ்தரித்து வருகின்றது இவ் வகையில் அநுராதபுரம், மாத்தறை, மாத்தளை ஆகிய இடங்களில் வங்கி 3 பிரதேச அலுவலகங்களை அமைத்துள்ளது. வணிக வங்கிகளை இலகுவாக மேற்பார்வை செய்யவும் நிர்வாகத்தை செயல்திறன் உடையதாகவும் விரைவாகவும் செயற்படுத்தவும் பிரதேசத்தின் முதலீட்டு சூழ்நிலைக்கேற்ப நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும் இவ் அலுவலக விஸ்தரிப்பு நடவடிக்கை வங்கிக்கு பெரிதும் உதவுகின்றது.

அண்மைக்காலத்தில் இலங்கை மத்திய வங்கி இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு ஏற்றவகையிலும் சர்வதேச வர்த்தகத்துடன் இணைந்த வகையிலும் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தி வருகின்றது. இலங்கையையும் சர்வதேச நிதி சந்தைகளின் தரத்திற்கு முன்னேற்றும் நோக்கத்துடன் அன்னிய செலாவணி வங்கி அலகு முறையை (FOREIGN CURRENCY BANKING UNIT) அறிமுகப்படுத்தியுள்ளதுடன் வணிக வங்கிகளும் இத் தொழிற்பாட்டுக்கு உதவும் வகையில் அன்னிய செலாவணி வங்கி அலகு திறக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரக் கொள்கையுடன் இணைந்த அடிப்படையில் பணச்சந்தையை மேலும் விரிவாக்கும் வகையில் 1ம் 2ம் தர திறைசேரி உண்டியல்களை சந்தையில் அறிமுகப்படுத்தி உள்ளதுடன் திறைசேரி உண்டியல்களுக்கான மீள் கொள்வனவு சந்தைகளையும் ஆரம்பித்துள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளருக்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு சலுகைகள் இதன் துரித வளர்ச்சிக்கு உதவும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வங்கியில் வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் நோக்கில் அதற்கு பொறுப்பான மேற்பார்வை திணைக்களம் அமைக்கப்பட்டு செயற்பட்டுவருகின்றது. சர்வதேச விமான நிலையத்தில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வெளிநாட்டுப் பயணிகளுக்கான தங்கக்கொள்வனவு விற்பனை சேவையையும் வங்கி வழங்கி வருகின்றது. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமநிதியத்திணைக்களம் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவின் நெருங்கிய கூட்டுறவுடன் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான நடவடிக்கைகளை கண்காணித்து வருகின்றது. கல்வி சார்ந்த கல்வி சாராத நெறிகளில் மத்திய வங்கி அலுவலர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சியளித்து வருகின்றது. அத்துடன் கிராமிய வங்கி தொழில் அலுவலர் பயிற்சிக்கல்லூரி மூலம் பல்வேறு சிறு அளவு தொழில் முயற்சியாளருக்கும் சுய தொழிலில் ஈடுபடுவோருக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. உயர் தொழிலில் ஈடுபடுவோருக்கும் வங்கி அலுவலர்களுக்கும் ஏனைய நிதித் துறைகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கும். இந் நிறுவனம் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வங்கி நாட்டின் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்வதுடன் அவற்றுக்கு ஏற்ப சிறந்த முறையில் இலங்கைப் பொருளாதாரத்தை வழிநடத்த அரசிற்கு அனுசரணையாக இருந்துவருகின்றது. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார்துறைக் கைத்தொழிலும் அதற்கான ஊக்குவிப்புக்களும்

ப. கோமதி
ஆண்டு 13B
வர்த்தகப்பிரிவு

இலங்கையில் மக்களுக்காகப் பொருட்களையும் சேவைகளையும் ஆக்கம் செய்து கொடுப்பவையே கைத்தொழில் ஆகும். இலங்கையின் கைத்தொழில் அமைப்பை உடைமை அடிப்படையில் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) பொதுத்துறைக் கைத்தொழில்
(2) தனியார்துறைக் கைத்தொழில்

## பொதுத்துறைக் கைத்தொழில்

அரசாங்கத்தினால் மூலதனம் உள்ளீடு செய்யப்பட்டு அரசின் விருப்பத்திற்கு அமைய உருவாக்கப்படுகின்ற கைத்தொழில் பொதுத்துறைக் கைத்தொழில் எனப்படும். அரசாங்கம் இக் கைத்தொழிலை இரு நோக்கங்களுக்காக ஆரம்பித்துள்ளது. அவையாவன:

1) உள்நாட்டு வளங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்துதல்.
2) வெளிநாட்டு உற்பத்திகளுக்கு பிரதியீடான உற்பத்திகளை உள்நாட்டில் மேற்கொள்ளுதல் என்பனவாகும்.

## தனியார்துறைக் கைத்தொழில்

இலங்கையில் தற்காலத்தில் முக்கிய இடம்பெற்றுவரும் கைத்தொழிலே தனியார்துறைக் கைத்தொழில் ஆகும். இலாப நோக்கத்திற்காக உற்பத்திகளை மேற்கொள்ள தனிப்பட்டவர்களால் மூலதனம் உள்ளீடு செய்யப்பட்டு தனிப்பட்டவர்களால் உருவாக்கப்படுகின்ற கைத்தொழில் தனியார்துறைக் கைத்தொழில் எனப்படும்.

இலங்கையில் தனியார்துறைக் கைத்தொழிலை

1) முதலீட்டு அளவு
2) உற்பத்தி அளவு
3) இயந்திரங்களின் பாவனை
4) தொழிலாளர் தொகை
5) சக்தி பயன்பாடு

ஆகியவற்றின் அடிப்படையில் மூன்று பிரிவாக வகைப்படுத்தலாம். அவையாவன:

1) பேரளவுக் கைத்தொழில்
2) இடைத்தரக் கைத்தொழில்
3) சிற்றளவுக் கைத்தொழில்

## பேரளவுக் கைத்தொழில்

இயந்திரங்கள் உட்பட நிலையான சொத்துக்களில் எட்டு மில்லியன் ரூபாவிற்கு அதிகமான மூலதனத்தையும் நூறு பேருக்கு அதிகமான நிரந்தரத் தொழிலாளர்களையும் ஐந்நூறு வோல்ற் மின்சாரத்திற்கு அதிகமான பயன்பாட்டையும் கொண்டதுமான ஒரு கைத்தொழில் பேரளவுக் கைத்தொழில் ஆகும். இப்பேரளவுக் கைத்தொழிலில் அதிகளவு இயந்திரங்களும் குறைவான தொழிலாளர்களும் காணப்படுவர். இதனால் இவ்வகைக் கைத்தொழில் மூலதனச் செறிவுமிக்க கைத்தொழில் எனக் குறிப்பிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரளவுக் கைத்தொழில் சூழலுக்கு சில தீய விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது. குறிப்பாக

1) நீர் மாசடைதல்
2) வளி மாசடைதல்
3) நோய்கள் ஏற்படுதல்

என்பனவாகும். இத் தீய விளைவுகளிலிருந்து சூழலைப் பாதுகாக்கவும் நகரங்களின் மத்தியில் தொழிற்சாலைகளின் உருவாக்கத்தைக் கட்டுப்படுத்தவும் என "மத்திய சுற்றாடல் அதிகாரசபை" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தற்போது நகர்ப் புறத்தில் தொழிற்சாலைகளின் உருவாக்கத்திற்கு இந் நிறுவனத்தின் விசேட அனுமதிகள் பெறப்படுதல் வேண்டும்.

இப் பேரளவுக் கைத்தொழிலின் பொருளாதார முக்கியத்துவம் யாதெனில், மொத்தத் தேசிய உற்பத்திக்கு அதிகளவான பங்களிப்பையும், இலங்கை மக்களுக்கு குறைந்தளவில் வேலைவாய்ப்பையும் வழங்குகின்றது.

## இடைத்தரக் கைத்தொழில்

இயந்திரங்கள் உட்பட நிலையான சொத்துக்களில் நான்கு மில்லியன் ரூபாவிற்கு அதிகமான மூலதனத்தையும் எட்டு மில்லியன் ரூபாவிற்கு குறைவான மூலதனத்தையும் ஐம்பது பேருக்கு மேற்பட்ட நிரந்தரத் தொழிலாளரையும் நூறு பேருக்கு உட்பட்ட நிரந்தரத் தொழிலாளரையும் ஐம்பது வோல்ற்றுக்கு மேற்பட்ட மின்சாரத்தையும் ஐந்நூறு வோல்ற்றுக்கு குறைவான மின்சாரப் பயன்பாட்டையும் கொண்ட ஓர் கைத்தொழிலே இடைத்தரக் கைத்தொழில் என வரையறுக்கப்படும். இடைத்தரக் கைத்தொழிலில் இயந்திரங்களும், தொழிலாளர்களும் கணிசமான அளவு ஈடுபடுத்தப்பட்டிருக்கும்.

இடைத்தரக் கைத்தொழிலின் பொருளாதார முக்கியத்துவம் யாதெனில், மொத்தத் தேசிய உற்பத்தியிலும் வேலை வாய்ப்பிலும் கணிசமான அளவு பங்கு வகிக்கின்றது

## சிற்றளவுக் கைத்தொழில்

இலங்கையில் நிலையான சொத்து உட்பட மூலதனம் எல்லையானது நான்கு மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவும் ஐம்பது பேருக்கு மேற்படாத நிரந்தரத் தொழிலாளரையும் ஐம்பது வோல்ற்றுக்கு குறைவான மின்சார பயன்பாட்டையும் உடைய ஓர் கைத்தொழில் சிற்றளவுக் கைத்தொழில் என வரையறுக்கப்படும். இச்சிற்றளவுக் கைத்தொழிலில குறைந்தளவான இயந்திரங்களும் கூடுதலான தொழிலாளர்களும் காணப்படுவர். இதனால் இதனை ஊழியச் செறிவான கைத்தொழில் என அழைப்பர்.

சிற்றளவுக் கைத்தொழிலில் பொருளாதார முக்கியத்துவம் யாதெனில் இலங்கை மக்களுக்கு அதிகரித்த வேலைவாய்ப்பையும் மொத்த தேசிய உற்பத்திக்குக் குறைந்தளவான பங்களிப்பையும் வழங்குகிறது.

இலங்கையின் சிற்றளவுக் கைத்தொழிலாளர்கள் தமது வளர்ச்சிக்குப் பிரதானமாகப் பின்வரும் தடைகளை எதிர்நோக்குகின்றார்கள். அவையாவன:

1) மூலதனப்பற்றாக்குறை

2) சந்தை பற்றிய அறிவு இன்மை

3) உற்பத்திக்கு போதிய சந்தை வாய்ப்பு இன்மை.

4) அரசின் போதிய ஊக்குவிப்பு இன்மை

5) தாரான இறக்குமதிக் கொள்கை.

6) கைத்தொழில் முகாமைத்துவ அறிவு இன்மை.

7) தொழில் நுட்ப அறிவு பற்றாக்குறை
8) தொழிலாளர்களுக்கு பயிற்சி இன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) திறுவன ரீதியான வழிப்படுத்தல் போதாமை என்பனவாகும்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு சிற்றளவுக் கைத்தொழிலே மிகப் பொருத்தமானதாகக் கருதப்படுகின்றது. இதற்கான காரணம்:

1] குறைந்தளவான மூலதனத்தை உடையதாக இருத்தல்.
2] அதிகளவு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல்.
3] உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்த முடிதல்.
4] குறைந்தளவான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த முடிதல்.
5] வினைத்திறமை குறைந்த முயற்சியாளரால் ஆரம்பித்து விட முடிதல்.
6) பிரதேச அபிவிருத்திக்கு உதவியளித்தல் போன்றவையாகும்.

## குடிசைக் கைத்தொழில்

இலங்கையின் சிற்றளவுக் கைத்தொழிலில் பிரதான இடத்தை வகிக்கும் ஓர் கைத்தொழிலே குடிசைக் கைத்தொழில் ஆகும்.

குடியிருப்பாளனின் வீடு தொழிற்சாலையாகவும் வீட்டு உரிமையாளன் தொழிற்சாலை உரிமையாளனாகவும், குடும்ப அங்கத்தவர்கள்தொழிலாளர்களாகவும் கொண்டு சிறிய அளவில் இடம்பெறும் கைத்தொழிலே குடிசைக் கைத்தொழில் ஆகும்.

குடிசைக் கைத்தொழிலின் பிரதான இலட்சணங்களாவன:

1. குடியிருப்பாளன் குடியிருக்கும் வீடு தொழிற்சாலையாக கருதப்படல்.
2. குடும்ப அங்கத்தவர்கள் தொழிலாளர்களாகக் கருதப்படல் என்பனவாகும்.

இலங்கையின் குடிசைக் கைத்தொழில்களுக்கு எடுத்துக்காட்டாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1) அம்பலாங்கொடை - முகமூடி உற்பத்திகள்
2) காலி - றேந்தை பின்னும் வேலைகள் கருங்காலி
3) களுத்துறை - பாய், பை வகைகள்
4) மாத்தறை - மர செருக்கு வேலைகள்
5) ரத்கம வெலிகம - தும்புக்கைத்தொழில்
6) கண்டி - செம்பு, பித்தளை வேலைப்பாடுகள்

## சிறிய நடுத்தர கைத்தொழில்

இலங்கையின் கைத்தொழிலுக்கான ஊக்குவிப்புகளை வழங்க வசதியான அரசினால் வகைப்படுத்தப்பட்டுள்ள மற்றுமொரு வகைக் கைத்தொழிலே சிறிய, நடுத்தரக் கைத்தொழில் ஆகும். நிலையான சொத்து உட்பட மூலதனத்தின் அளவு எட்டு மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவும் நூறு பேருக்கு குறைவான நிரந்தரத் தொழிலாளர்களையும் ஐந்நூறு வோல்ற்றுக்கு குறைவான மின்சாரப் பயன்பாட்டையும் உடைய கைத்தொழில்கள் சிறிய, நடுத்தரக் கைத்தொழில் ஆகும்.

| | பேரளவுக் கைத்தொழில் | சிற்றளவுக் கைத்தொழில் | நடுத்தரக் கைத்தொழில் |
|---|---|---|---|
| 1) மூலதனம் | எட்டு மில்லியனுக்கு அதிகம். | நான்கு மில்லியனுக்கு குறைவு | நான்கு மில்லியன் - எட்டு மில்லியன் இடைப்பட்டது. |
| 2) தொழிலாளர் | நூறுபேருக்கு அதிகம் | ஐம்பது பேருக்கு குறைவு | ஐம்பது பேர் - நூறு பேர் இடைப்பட்டது |
| 3) உற்பத்தியளவு | அதிகம் | குறைவு | கணிசமான அளவு |
| 4) மின்சாரப் பயன்பாடு | ஐந்நூறு வோல்ற்றுக்கு அதிகம் | ஐம்பது வோல்ற்றுக்கு குறைவு | ஐம்பது வோல்ற் - ஐந்நூறு வோல்ற் இடைப்பட்டது |
| 5) இயந்திரப் பாவனை | அதிகம் | குறைவு | கணிசமான அளவு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான கைத்தொழில்கள் இலங்கையில் உருவாக்கப்படினும் தற்காலத்தில் கைத்தொழில் கொள்கையைத் தீர்மானிப்பதிலே பின்வரும் காரணிகளை கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

1) ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழிலாக அமைதல்
2) வேலைவாய்ப்பை அதிரிக்கக் கூடியதாக இருத்தல்
3) வாழ்க்கைத் தரத்தை அதிகரித்து வருமானப்பகிர்வை ஏற்படுத்தி முன்னேற்றம் காணுதல்.
4) அரச வருமானத்தை உயர்த்துவதன் மூலம் சென்மதி நிலுவையை சமப்படுத்தல்
5) உற்பத்தி சேவைக் குறைத்தல்
6) அன்னியச் செலாவணியை உழைத்தல்
7) ஏற்றுமதியை பன்முகப்படுத்துதல்

## கைத்தொழிலுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஊக்குவிப்புகள்

### 1] கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கப்பட்டமை

இலங்கையில் உள்நாட்டு கைத்தொழிலில் அபிவிருத்திற்கென அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றே கைத்தொழில் பேட்டை ஆகும். உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் உள்நாட்டு உற்பத்திற்கு வாய்ப்பளித்து கைத்தொழிலை அபிவிருத்தி அடையச்செய்வதே கைத்தொழிற் பேட்டை உருவாக்கத்தின் நோக்கமாகும். இலங்கையில் எக்கல, அச்சுவேலி, பூசா, வெலிசாயா, சபுகஸ்கந்தை போன்ற இடங்களில் கைத்தொழில் பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன. இவை கைத்தொழில் அமைச்சினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

### 2. S.M.I. கடன்வழங்கப்பட்டமை

சிறிய நடுத்தரக் கைத்தொழில்களுக்குத் தேவையான நிதிவசதி அமைப்பதற்கு தேசிய அபிவிருத்தி வங்கியால் அறிமுகப் பட்டதே சிறிய நடுத்தரக் கைத்தொழில் கடன் திட்டம் (S. M. I) ஆகும். இலங்கையில் உருவாக்கப்படும் சிறிய, நடுத்தரக் கைத்தொழில்களுக்குத் தேவையான கடன்களை வழங்குவதற்கே இக்கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்குத் தேவையான நிதியினை,

1) உலக வங்கி
2) சர்வதேச அபிவிருத்திச்சங்கம்
3) ஆசிய அபிவிருத்தி வங்கி

போன்றவை வழங்கி வருகின்றன. இதற்கு மேலாக இலங்கை மத்தியவங்கி மறுநிதியீட்டம் செய்து வருகிறது.

தேசிய அபிவிருத்தி வங்கியானது S. M. I. கடன் திட்டத்தை நடைமுறைப் படுத்த

1) இலங்கை வங்கி
2) மக்கள் வங்கி
3) இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத் தாபனம்
4) வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி
5) சம்பத் வங்கி
6) வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி
7) பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி

ஆகிய வங்கிகளை நியமித்துள்ளது. இக்கடன் திட்டம் பல்வேறு தொகுதிகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது S. M. I. iv தொகுதியின் கீழ் கடன் வழங்கி வருகிறது.

## S, M. I. கடனின் அனுகூலம்

1) குறைந்த வீத வட்டி
2) ஒடுங்குபாக முறையில் வட்டி கணிப்பு
3) திருப்பிச் செலுத்துகையில் சலுகை
4) வசுவண்டி (BUS) இறக்குமதியைத் தீர்வைச்சலுகையாக அடிப்படையில் மேற்கொள்ள முடிதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) வஞ்வண்டி (BUS) இறக்குமதிக்கு இக் கடனைப்பெறின் 75% ஆன தொகைக்கு கடனைப் பெறலாம்.

## சாதாரண வங்கிக்கடனைவிட S. M. I. கடனில் உள்ள நன்மைகள்

1) சாதாரண வங்கிக்கடனுக்கான வட்டி அதிகம். ஆனால் S. M I. கடனுக்கான வட்டி குறைவு

2) S. M. I. கடனுக்கு மறுநிதியிட்ட வசதி இருப்பது போல சாதாரண வங்கிக் கடனுக்கு மறு நிதியிட்ட வசதி இல்லை.

3) S. M I. கடனைத் திருப்பிச் செலுத்துகையில் சலுகைகள் வழங்கபடுகின்றன. ஆனால் சாதாரண வங்கிக் கடனுக்கு சலுகைகள் இல்லை.

3) சிறிய நடுத்தரக் கைத்தொழில் உற்பத்தியின் பண்புத்தரத்தை அதிகரிக்கவும், தரக்கட்டுப்பாடு, பிறசேவைகள் சில நிறுவனங்களால் வழங்கப்பட்டது.

□●□

உ×ம்:-

இலங்கைக்கட்டளை நிலையம் உருவாக்வாக்கப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்திச்சபை உருவாக்கப்பட்டது. இலங்கைக் கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்பட்டமை.

4) சிறிய நடுத்தரக் கைத்தொழிலாளர்களுக்கான முகாமைத்துவத்தையும் தொழில் பயிற்சிகளையும் வழங்க சில நிறுவனங்கள் உருவாக்கப்பட்டமை.

உ+ம்:-

தேசிய பயிலுனர் சபை
கைத்தொழில் பயிற்சிச்சபை
தேசிய வியாபார முகாமைத்துவ நிலையம்.

5) கைத்தொழிலாளர்கள் தமது உற்பத்தியைச் சந்தைப்படுத்த சந்தை வசதி வழங்கப்பட்டிருத்தல்.

6) அரசாங்கத்தினால் கைத்தொழிலாளர்களுக்கு வரிவிடுதலைகளும், வரிச் சலுகைளும் வழங்கப்பட்டிருத்தல். □

□●□

இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாக ஆறு பிரதான சட்டங்கள் காணப்படுகின்றன. அவையாவன:

1. 1964-ம் ஆண்டு 37-ம் இலக்க அளவை நிறுவைச்சட்டம்
2. 1950 ம் ஆண்டு 29-ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்
3. 1979 ம் ஆண்டு 1-ம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்
4. 1980 ம் ஆண்டு 26-ம் இலக்க உணவுச் சட்டம்
5. 1984-ம் ஆண்டு 6-ம் இலக்க இலங்கைக் கட்டளைப் பணியகச் சட்டம்
6. 1987-ம் ஆண்டு 1-ம் இலக்கம் நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்திக் கணக்கு

பே. பாமினி
ஆண்டு 13A
வர்த்தகப்பிரிவு

பொருட்கள் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் நிறுவனங்களில் சில தமக்கு தேவையான பொருட்களின் ஒரு பகுதியைத் தாமே உற்பத்தி செய்கின்றன. அத்தகைய நிறுவனங்கள் வியாபார இலாப நட்டக் கணக்குகளுடன் உற்பத்திக் கணக்கையும் தயாரிக்கின்றன. உற்பத்திக் கணக்கு கையாக்கக் கணக்கு பரும்படியாக்க கணக்கு எனவும் அழைக்கப்படும்.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு செலவிடப்பட்ட கிரயத்தைக் கணிபபீடு செய்வதாகும். உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்தவும் உற்பத்திச் செலவைக் கருத்தில் கொண்டு தொடர்ந்து குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதா அல்லது வெளியிலிருந்து கொள்வனவு செய்வதா என்பன போன்ற தீர்மானங்களை முகாமைப் பகுதி எடுக்கவும் இது உதவுகின்றது.

உற்பத்திக் கிரயமானது மூலக்கிரயம் தொழிற்சாலை மேந்தலைச் செலவுகள் என இரு பெரும் கூறுகளாக பிரிக்கப்படலாம். மூலச் செலவுகள் நேர் செலவுகளெனவும் தொழிற்சாலை மேந்தலைகளை நேரில் செலவு எனவும் அழைக்கலாம்.

## மூலக் கிரயம்

கணக்கீட்டு காலப் பகுதிக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களுக்காகப் பயன் படுத்திய மூலப்பொருட்களுக்காகச் செய்யப்பட்ட செலவுகளும் அவற்றை கிடைக்கச் செய்யவும் பயன்படு நிலைக்கு கொண்டுவரவும் ஏற்பட்ட செலவுகள் யாவும் மூலச் செலவுகளாகும். நேர் பொருட்கள், நேர் கூலி, நேர் செலவுகள் யாவும் இக்கணக்குள் உட்படுத்தப்படும்.

## நேர் பொருட்கள் [Direct Materials]

ஒரு பொருளை ஆக்கப் பயன் படுத்தப்படும் எல்லாப் பொருட்களும் நேர் பொருட்களாகும். பின்வரும் பொருட்கள் நேர் பொருட்களாகும்.

(1) உற்பத்திக்காக குறிப்பாக கொள்வனவு செய்யப்பட்ட எல்லாப் பொருட்களும்

(2) களஞ்சியத்திலிருந்து பெறப்பட்ட ஆரம்பப் பொருட்கள் மூலப் பொருட்கள் உட்பட எல்லாப் பொருட்களும்

(3) ஒரு பொருளை உற்பத்தி செய்ய களஞ்சியத்திலிருந்து பெறப்பட்ட முடிவுப் பொருட்களின் பாகங்கள் (Components)

(4) தொழிற்சாலையின் ஒரு பகுதியில் இருந்து வேறொரு பகுதிக்கு மாற்றப் படும் ஆக்கப்பட்ட உருமாற்றப்பட்ட அல்லது குறை உற்பத்திப் பொருட்கள் அவை மேலும் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட வேண்டியவை.

(5) ஆரம்ப பொதிகட்டும் பொருட்கள் காட்போட் பெட்டிகள் உறைகள் போன்றன.

நேர் பொருட்கள் பின்வருமாறு மூலச் செலவுட்ட பொருட்கள் ஆக்கப் பொருட்

கள், களஞ்சியப்பொருட்கள், கட்டுமான பொருட்கள் எனவும் அழைக்கப்படும்.

சுங்கவரி துறைமுகச் செலவு போக்கு வரத்து செலவு, களஞ்சியப்படுத்தும் செலவு, பொருட்களை சீர்படுத்தும் செலவு போன்றன. பொருட்களின் பட்டியல் விலையுடன் சேர்க்கப்பட வேண்டியவை. ஆதலால் அவையும் நேர் பொருட் செலவாகும்.

## நேர்கூலி

ஒரு பொருளை பயன்படு நிலைக்கு மாற்றியமைக்க ஏற்படும் எல்லாச் செலவுகளும் நேர் செலவாகும். இது பயன்தரு கூலி எனவும் அழைக்கப்படும். பயிற்சி பெற்ற தொழிற் திறனற்ற தொழிலாளர்களின் கூலி இதனுள் அடக்கப்படும்.

## நேர் செலவு

மூலச் செலவில் உள்ளடக்கப்பட்ட நேர் பொருள், நேர்கூலி தவிர்ந்த எல்லாச் செலவுகளும் நேர்செலவாகும். பின்வருவன நேர் செலவாகும். ஒரு குறிப்பிட்ட உற்பத்திக்கான சிறுகருவிகள் அல்லது உபகரணங்களின் வாடகை கூலி வரைபடங்கள், மாதிரிப் படங்கள், வரைவுகள் போன்றவற்றின் செலவுகள் அக்கருவிகளின் பராமரிப்பு செலவுகள் தனியுரிமைக் கட்டணம் ஆகியன.

## தொழிற்சாலை மேந்தலைகள்

கணக்கீட்டு காலப்பகுதிக்குள் உற்பத்தி செயற்பாட்டுக்கு உபயோகிக்கின்ற பல்வேறு காரணிகளும் உருப்படிகளுக்காக செய்யப்பட்ட சகல செலவினங்களும் இதனுள் அடங்கும். எரிபொருள், வலு தொழிற்சாலை நிர்வாகம் மேற்பார்வை ஆகியவற்றுடன் தொடர்புடைய செலவுகளும் பொறிவாடகை பொறி சிறு கருவிகள் ஆகியவற்றின் பெறுமானத் தேர்வு போன்றனவும் இதனுள் உள்ளடக்கப்படும் செலவுகளாகும்.

## புத்துருவாகும் வேலை

இது குறைவேலை எனவும் அழைக்கப்படும். உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிட புத்துருவாகும் வேலையை எப்பொழுது சீராக்க வேண்டுமென தீர்மானிப்பது முயற்சியாளன் தேவையைப் பொறுத்ததாகும்.

வியாபார நிறுவனங்களில் புத்துருவாகும் வேலையைச் செம்மையாக்கும் போது அது முதற் கிரயத்தில் கணிப்பிடப்படுமா புத்துருவாகும் வேலை முதற் கிரயத்துடன் சீராக்கப்பட்டு முதற் கிரயம் கணிப்பிடப்படும் தொழிற்சாலைச் செலவில் கணிக்கப்பட்டிருந்தால் அது உற்பத்திக் கணக்கின் இறுதியில் சீராக்கப்பட வேண்டும்.

உற்பத்திக் கணக்கு மட்டும் மொத்தக் கிரயம் அந்நிறுவனத்தால் ஆக்கப்பட்ட அலகு பொருட்களின் மொத்தச் செலவாகும். மொத்தக் கிரயத்தை மொத்த அலகுகளால் பிரிக்க வருவது ஒரு அலகின் உற்பத்தி கிரயமாகும்.

## இருப்புக்களை சீராக்குதல்

உற்பத்தி முயற்சியில் உள்ள இருப்புகள் அவற்றின் தன்மைக்கு ஏற்ப 3 வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

(i) மூலப் பொருள் இருப்பு

(ii) புத்துருவாகும் அல்லது குறைவேலை

iii) முடிவுப் பொருட்கள்

கணக்கீட்டு காலப்பகுதியில் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படாத நேர் பொருட்கள் மூலப்பொருள் இறுதி இருப்பெனவும் அக்காலப் பகுதியில் உற்பத்தி செய்து முடிக்க இயலாதுபோன உற்பத்தி மட்டத்திலேயுள்ளவை புத்துருவாகும் வேலை எனவும் அதேபோல உற்பத்திச் செயற்பாடு முடிக்கப்பட்டு விநியோகத்திற்குத் தயாராகவுள்ள பொருட்களில் வருட இறுதியில் எஞ்சியுள்ளவை இறுதி இருப்பு எனவும் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்பத்தி இலாபம்

சில முயற்சியாளர்கள் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களை ஒத்த வேறு பொருட்களை வேறு வியாபாரிகளிடமிருந்தும் கொள்வனவு செய்து விற்கின்றனர். அப்பொருட்களின் சந்தை விலைக்கு ஈடு கொடுக்கும் முகமாக தாம் உற்பத்தி செய்த பொருட்களின் உற்பத்திக் கிரயத்தை குறிப்பிட்ட ஒரு இலாப விகிதத்தால் கூட்டி விலையைத் தீர்மானிப்பார்கள். உற்பத்திக் கிரயத்துடன் குறிப்பிட்ட இலாபமும் கூட்டப்பட்ட பின்வரும் தொகையே உற்பத்திக் கணக்கின் செலவுப் புறத்தில் வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்பட்டது என பதயப்படும். அதனால் உற்பத்திக் கணக்கின் செலவுப்புறம் கூடுதலாகவும் வரவுப் புறம் குறைவாகவும் காணப்படும் அவ் வேறுபாடு உற்பத்தி இலாபம் எனப்படும். இவ்விலாபம் இலாப நட்டக் கணக்கில் செலவில் பதியப்படும்.

உ-ம்: உற்பத்திற் கிரயம் 20000 ரூபாஎனவும் அதில் 10% உற்பத்தி இலாபம் கூட்டி களஞ்சியத்திற்கு மாற்றப்படுகிறதெனவும்எடுத்துக்கொள்வோம்.

| | | |
|---|---|---|
| உற்பத்திக் கிரயம் | | 20000 ரூபா |
| உற்பத்தி இலாபம் | $\frac{100}{10} \times 20000$ | 2000 ரூபா |
| | | 22000 ரூபா |

உற்பத்தி க. கின் செலவுபுறத் தொகை குறிப்பேட்டு பதிவு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| உற்பத்திக் க/கு வரவு | 2000 | |
| இலாபக் க/கு செலவு | | 2000 |

## தேறாத இலாபம் (Unrealised Profit)

உற்பத்திப் பொருட்கள் உற்பத்திக் கிரயத்துடன் உற்பத்தி இலாபம் கூட்டப்பட்ட பெறுமானத்தில் வியாபார கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. குறித்த கணக்காண்டு காலப்பகுதியின் ஆக்கப்பட்ட அலகுகள் விற்பனை செய்யப்பட்டால் தேறாத இலாபப்பிரச்சனை எழமாட்டாது. ஆனால் நடைமுறையில் முழுப்பொருட்களும் விற்பனையாகமாட்டா. அக்காலப் பகுதியில் விற்பனையாகாமல் இறுதி இருப்புடன் சேர்க்கப்பட்டுள்ள ஆக்கப் பொருட்களின் பெறுமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உற்பத்தி இலாபம் தேறாத இலாபம்எனப்படும். தேறாத இலாபத்துக்கான சிராக்கம் செய்யப்படாவிட்டால் இலாப நட்டக் கணக்கில் காட்டப்படும். தேறிய இலாபம் இத்தேறாத இலாப அளவினால் மிகைப்படுத்தி காட்டப்படும். எனவே தேறாத இலாபச் சிராக்கம் மிகஇன்றியமையாதது அதற்கான குறிப்பேட்டுப்பதிவு.

இலாப நட்டக் க. கு வரவு
தேறாத இலாபஏற்பாட்டுக் க கு செலவு

ஆனால் நடைமுறையில் இலாப நட்டக் கணக்கில் வரவில் பதியாமல் அத்தொகை உற்பத்தி இலாபத்திலிருந்தும் ஆக்கப் பொருட்கள் இறுதி இருப்புப் பெறுமானத்திலிருந்தும் கழித்துக் காட்டப்படுகிறது.

சென்ற வருட கணக்குக் காலப்பகுதியில் ஆக்கப் பொருள் இறுதி இருப்புக்கான தேறாத இலாப ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமாயின் அறவிட முடியாக் கடன் ஏற்பாட்டின்போது கடைப்பிடிக்கும் நடைமுறையே இங்கும் பின்பற்றப்படுகிறது.

உ-ம். ஆரம்ப ஆக்கப்பொருள் இருப்பு 8400 ரூபா எனவும் நடப்புவருட ஆக்கப்பொருள் இறுதி இருப்பு 13200 ரூபா எனவும் உற்பத்திக் கிரய விலையுடன் 20% கூட்டி உற்பத்தி இலாபம் சேர்க்கப்பட்டுள்ளது எனவும் எடுத்துக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப இருப்புக்கான தேறா இலாப ஏற்பாடு $\frac{20 \times 8400}{100} = 1400/=$

இறுதி இருப்புக்கான தேறா இலாப ஏற்பாடு $= \frac{20}{100} \times 13200 = 2200/-$

இலாப நட்ட கணக்கில் சேர்க்கப்பட வேண்டியதொகை 2200 — 1400 — 800 ரூபாவாகும்.
இறுதி ஆக்கப் பொருளில் இருந்து கழிக்கப்படவேண்டிய தொகை 2200 ரூபாவாகும்.

## உற்பத்திக் கணக்கின் மாதிரி

### 199..................31 அன்று முடிவடைந்த ஆண்டுக்குரிய உற்பத்திக் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப மூலப் பொருள் | | XXXX | வியாபாரக்/குக்கு மாற்றப்பட்டது. | | XXXX |
| +) மூலப்பொருள் கொள்வனவு | XXXX | | | | |
| (—) மு.பொ. வெளி முக வருதிகள் | (XXX) | XXXX | | | |
| மு.பொ. உள்முககாவுகை | | XXXX | | | |
| சுங்கத் தீர்வை | | XXXX | | | |
| பண்டகசாலை வாடகை | | XXXX | | | |
| | | XXXX | | | |
| (—) இறுதி மூலப்பொருள் இருப்பு | | (XXXX) | | | |
| பயன்படுத்திய மூலப் பொருள் | | XXXX | | | |
| **பயன்தரு கூலி** | | | | | |
| உற்பத்தி கூலி | | XXXX | | | |
| **நேர் செலவுகள்** | | | | | |
| கிடைப்படவரை செலவு | | XXXX | | | |
| தனியுரிமை கட்டணம் | | XXXX | | | |
| மூலக் கிரயம் | | XXXX | | | |
| (+)ஆரம்பபுத்துருவாகும்வேலை | | XXXX | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | | xxxx | |
| (—) இறுதி புத்துருவாக்கும் வேலை | | (xxxx) | |
| | | xxxx | |
| **தொழிற்சாலை மேந்தலைகள்** | | | |
| தொழிற்சாலை இறை | xxxx | | |
| தொழிற்சாலை மின்சாரம் | xx xx | | |
| எரிபொருள் செலவு | xxxx | | |
| பொறி .பெ. தேய்வு | xxxx | | |
| மேற்பார்வை கட்டணம் | xxxx | | |
| பொறிதிருத்த செலவு | xzxx | | |
| தொழிசாலை வேதனம் | xxxx | | |
| சிறுகருவிகள் பெ. தேய்வு | xxxx | xxxx | |
| உற்பத்திக் கிரயம் | | xxxx | |
| உற்பத்தி இலாபம் | | xxxx | |
| | | | xxxx |
| | | xxxx | |

உற்பத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிமல் என்பவரின் புத்தகங்களில் இருந்து 1993-03-31 அன்று பிரித்து எடுக்கப்பட்ட நிலுவைச் சமன்பாடு பின்வருமாறு:

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| காணிக்கட்டம் | 230000 | |
| இயந்திரம் கொள்விலையில் | 350000 | |
| மோட்டார்வான் கொள்விலையில் | 150000 | |
| கடன்படுனரும் கடன் கொடுநரும் | 12000 | 15000 |
| கழிவுகள் | 3000 | 2000 |
| நட்டக் கடன் | 4000 | |
| ஐயக் கடன் ஏற்பாடு | | 8000 |
| இயந்திரம் பழுது பார்த்தல் செலவு | 20000 | |
| மோட்டார் வாகனச் செலவு | 25000 | |
| அலுவலகச் செலவு | 20000 | 6500 |
| அட்டுறச் செலவுகள் 1993. 04. 10ல் | | |
| இறைகள் | 30000 | |
| காப்புறுதி | 35000 | 548100 |
| மூலதனம் | | |

| | | |
|---|---|---|
| 5% கடன் | | 100000 |
| காசு | 57000 | |
| வங்கி மீவரைபல் | | 60000 |
| உற்பத்திக் கூலி | 45000 | |
| வேதனம் | 35000 | |
| தனியுரிமைக் கட்டணம் | 5000 | |
| இருப்பு 1993. 04. 1ல் | 36800 | |
| எரிபொருள் | 10000 | |
| மின்சாரம் | 8000 | |
| மோட்டார் வாகனத் தேய்வு ஏற்பாடு | | 20000 |
| இயந்திரத் தேய்வு ஏற்பாடு | | 70000 |
| மூலப் பொருள் கொள்வனவு | 175000 | |
| விற்பனைகள் | | 2000 |
| உள்முக வரிதிகள் | 2500 | |
| வெளிமுக வரிதிகள் | | 2000 |
| உள்முக காவுகை | 4800 | |
| தொழிற்சாலை மேற்பார்வையாளர் கட்டணம் | 9000 | |
| இறக்குமதித் தீர்வை | 3600 | |
| சிறுகருவிகள் கொள்வனவு | 1200 | |
| விளம்பரம் | 4300 | |
| கடன் வட்டி | 2500 | |
| விற்பனைச் செலவு | 8400 | |
| வருமதியுண்டியல் | 10000 | |
| முதலீடுகள் | 19000 | |
| செலுத்தியுண்டியல் | | 35900 |
| தேறா இலாப ஏற்பாடு 1993 04. 1ல் | | 600 |
| இயந்திர விற்பனை க. கு | | 24500 |
| மோட்டார்வாகன திருத்த செலவு | 12500 | |
| பொதுச் செலவு | 22000 | |
| முற்பணக் கொடுப்பனவு | 7000 | |
| தளபாடம் | 30000 | |
| | 1387600 | 1387600 |

பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன

i) இருப்பு விபரம்

| | 1993 4.1 | 1994.3.31 |
|---|---|---|
| மூலப் பொருள் | 17600 | 24 000 |
| புத்துருவாகும் வேலை | 12000 | 7 000 |
| முடிவற்ற பொருள் இருப்பு | 6600 | 22 000 |
| சிறு கருவிகள் | 1200 | 1 000 |

i) அலுவலகச் செலவினுள் வருடத்துள் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலகத் தளபாடம் ரூ. 12000 ரூபா உள்ளடக்கப்பட்டுள்ளது (அது 1993 10.01-ல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது)

iii) உற்பத்திக் கிரயம் 10% இலாபத்துடன் வியாபாரக் க/கிற்கு மாற்றப்பட்டுள்ளது

iv) அட்டுறு செலவினம் பின்வருமாறு:

| விபரம் | 1993.4.1 | 1994.3.31 |
|---|---|---|
| காப்புறுதி | 1200 | 1800 |
| இறைகள் | 3000 | 1000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பொதுச் செலவு | 1000 | 4200 |
| மின்சாரம் | 1300 | 2100 |

v) முற்பணக் கொடுப்பனவுகளின் விபரம் பின்வருமாறு

| விபரம் | 1993.4.1 | 1994.3.31 |
|---|---|---|
| எரிபொருள் | 3000 | 1500 |
| விளம்பரம் | 500 | 300 |
| அலுவலகச் செலவுகள் | 3500 | 2000 |

vi) உரிமையாளன் தமது சொந்த தேவைக்காக வாரத்துக்கு 200/= ரூபா பொருட்களை எடுப்பனவு செய்துள்ளார். இது தொடர்பான பதிவுகள் ஏடுகளில் இடம் பெறவில்லை.

vii) பின்வரும் செலவுகள் கீழ்வரும் விகிதப்படி பகிரப்பட வேண்டும்

| | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| வரியும் காப்புறுதியும் | $\frac{6}{10}$ | $\frac{4}{10}$ |
| மின்சாரம் | 3 | 1 |
| பொதுச்செலவுகள் | 60% | 40% |

viii) வேதனம் பின்வருமாறு பகுக்கப்பட வேண்டும்

| | |
|---|---|
| தொழிற்சாலை | 30% |
| நிர்வாகம் | 50 % |
| விற்பனை | 20% |

ix) இவ்வருட காலத்துள் 10000/= பெறுமதியான பொருட்கள் தீயாலழிந்துள்ளன. இந் நட்டத்தின் 70%தை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்பதாக இணங்கியுள்ளது. இது தொடர்பான பதிவுகள் ஏடுகளில் இடம் பெறவில்லை.

x) கடன் படுநரில் மேலும் 800/= ரூபாவை நட்டக் கடனாக பதிவழிப்பதுடன் ஐயக் கடனுக்கு 5% ஏற்பாடு செய்க.

xi) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இயந்திரம் கொள்விலையில் ஆண்டுக்கு 10%
தளபாடம் கொள்விலையில் ஆண்டுக்கு 5%
மோட்டார் வாகனம் ஒருங்குபாதை முறையில் வருடத்திற்கு 15%

xii) 1989. 10. 1ல் 50 000 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஒன்று 1994. 3. 31ல் 24 500 ரூபாவுக்கு விற்கப்பட்டது இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக காசுக் க/கிலும் இயந்திர விற்பனை க./ கிலும் பதியப்படாத தவிர வேறு பதிவுகள் இடம் பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1994-3-31ல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி வியாபார இலாப நட்டக் க/குகளையும் அன்று உள்ளபடியான ஐந்தொகையினையும் தயாரிக்கும்படி நீர் கேட்கப்பட்டுள்ளீர்.*

## நிமல் என்பவரின் 1994.3.31ல் முடிவுற்ற ஆண்டுக்கால உற்பத்தி வியாபார இலாப நட்ட க / கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப மூலப் பொருள் | | 17 000 | வியாபார கணக்கிற்கு மாற்றப் பட்டது | | 417648 |
| மூலப் பொருள் கொள்வனவு | 175 000 | | | | |
| (—) வெளிமுக வருதிகள் | (2000) | 173 000 | | | |
| உள்முக காவுகை | | 4 800 | | | |
| இறக்குமதி தீர்வை | | 3 600 | | | |
| | | 198 400 | | | |
| (—) இறுதிமூலப் பொருள் | | (24 000) | | | |
| பயன்படுத்தியமூ.பொருள் கிரயம் | | 174 000 | | | |
| **பயன்தரு கூலி** | | | | | |
| உற்பத்திக் கூலி | | 45 000 | | | |
| தனியுரிமைக் கட்டணம் | | 5 000 | | | |
| மூலக் கிரயம் | | 224 400 | | | |
| **தொழிற்சாலை மேந்தலை** | | | | | |
| இறை | 16 800 | | | | |
| காப்புறுதி | 21 360 | | | | |
| மின்சாரம் | 6 600 | | | | |
| பொதுச் செலவு | 15 120 | | | | |
| எரிபொருள் | 11 500 | | | | |
| தொழிற்சாலை மேற்பார்வை | 9 000 | | | | |
| சிறு கருவி பெறுமானத் தேய்வு | 1 400 | | | | |
| இயந்திர பெ: தேய்வு | 35 000 | | | | |
| இயந்திர விற்பனை நட்டம் | 3 000 | | | | |
| இயந்திரம் பழுதுபார்த்தல் | 20 000 | | | | |
| தொழிற்சாலை வேதனம் | 10 500 | 150 280 | | | |
| + புத்துருவாகும் வேலை | | 374 680 | | | |
| 1993.4.1 | | 12 000 | | | |
| | | 386 680 | | | |
| (-) புத்துருவாகும் வேலை | | (7000) | | | |
| 1994. 4.3 | | 379 680 | | | |
| உற்பத்திக் கிரயம் | | | | | |
| உற்பத்தி இலாபம் | | 37968 | | | |
| | | 417 648 | | | 417648 |
| ஆரம்ப முடிவுப்பொருள் | | 6600 | விற்பனை | 495000 | |
| உற்பத்தி க. இலிருந்து மாற்றப் பட்டது. | 417648 | | (-) உள்முக வருதி | 2500 | 492500 |
| பற்றுக்கள் 10 400 | | | | | |
| (—) தீயால் அழிந்தச.ரூ 10 000 | (20 400) | 397248 | | | |
| விற்பனைக்கிருந்த ச/இன் கிரயம் | | 403848 | | | |
| | | (22000) | | | |
| இறுதி இருப்பு | | 381848 | | | |
| மொ. இலாபம் | | 110652 | | | |
| | | 492500 | | | 492500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **நிலைய நிர்வாகசெலவு** | | | | | |
| அலுவலகச் செலவு முற்பணம் | 3500 | | | | |
| அலுவலகச் செலவு | 8000 | | | | |
| | 11500 | | மொ.இலா | | |
| (—) 94.3.31ல் முற்பணம் | (2600) | | பம் | | 110652 |
| | 8900 | | உற்பத்தி | | |
| இறைகள் | 11200 | | இலாபம் | 37968 | |
| காப்புறுதி | 14240 | | -) தேறாத | | 36568 |
| நிர்வாக வேதனம் | 17500 | | இலாபம் | (1400) | |
| பொதுச் செலவு | 10080 | | பெற்ற | | 2000 |
| தளபாட பெ. தேய்வு | 1800 | | கழிவு | | |
| மின்சாரம் | 2200 | 65920 | ஐயக் கடன் | 8000 | 7440 |
| **விற்பனை விநியேகச் செலவு** | | | ஐயக் கடன் | | |
| | | | ஏற்பாடு | (560) | |
| நட்டக் கடன் | 4800 | | | | |
| விற்பனையாளர் வேதனம் | 7000 | | | | |
| மோ வாகன திருத்தச் செலவு | 12500 | | | | |
| விளம்பரம் | 4500 | | | | |
| விற்பனைச் செலவு | 8400 | | | | |
| மோ. வாகன பெ. தேய்வு | 19500 | | | | |
| மோ. வாகனச் செலவு | 25000 | 81700 | | | |
| **நிதிச் செலவு** | | | | | |
| கொடுத்த கழிவு | 3000 | | | | |
| கடன் வட்டி | 5000 | 8000 | | | |
| **ஏனைய செலவு** | | | | | |
| தீயழிவு நட்டம் | | 3000 | | | |
| | | | தேறிய | | 1960 |
| | | 158620 | நட்டம் | | 158620 |

## நிமல் என்பவரின் 1994-3-31ல் உள்ளபடியான ஐந்தொகை

| உரிமையாண்மை | தொகை | தொகை | நிலையான சொத்து | கொள் விலை | திரண்ட பெறு தேய்வு | தேறியது |
|---|---|---|---|---|---|---|
| மூலதனம் | | 548100 | காணிக கட்டிடம் | 230000 | | 230000 |
| தேறிய நட்டம் | 1960 | | இயந்திரம் | 300000 | 82500 | 217500 |
| [-] பற்று | 10400 | (12360) | மோ. வாகனம் | 150000 | 39500 | 110500 |
| | | 535740 | தளபாடம் | 42000 | 1800 | 40200 |
| | | | | 722000 | 123800 | 598200 |
| **நீண்டகால கடன்** | | | | | | |
| 5 % கடன் | | 100000 | முதலீடுகள் | | | 19000 |
| **நடைமுறை பரிப்பு** | | | **நடைமுறைச் சொத்து** | | | |
| கடன் வட்டி | 2500 | | | | | |
| கடன் கொடுனர் | 15000 | | இருப்பு:- | | | |
| வங்கி மீ. வரையல் | 60000 | | மூலப்பொருள் | | 24000 | |
| சென்மதி யுண்டியல் | 35900 | | புத்துருவாகும் வேலை | | 7000 | |
| அட்டுறு:- | | | | | | |
| காப்புறுதி | 4800 | | முடிவுப்பொருள் | 22000 | | |
| இறைகள் | 1000 | | ( )தேறாத இலாபம் | (2000) | 20000 | |
| பொதுச் செலவு | 4200 | | சிறு கருவிகள் | | 1000 | |
| மின்சாரம் | 2100 | | கடன்படுநர் | | | |
| | | 122500 | | 12000 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | நட்டக் கடன் 800 | | | |
| | | நயக்கடன் 560 | (1360) | 10640 | |
| | | வருமதியுண்டியல் | | 10000 | |
| | | காப்புறுதிக்கூட்டுத் தாபனம் | | 7000 | |
| | | முற்பணம்:- | | | |
| | | எரிபொருள் | | 1500 | |
| | | விளம்பரம் | | 300 | |
| | | அலுவலகச் செலவு | | 2600 | 141040 |
| | | காசு மீதி | | 57000 | |
| | 758240 | | | | 758240 |

வீதிப்போக்குவரத்து அபிவிருத்தித் தொடர்பாக வாகனங்களின் முற்புறக் கண்ணாடியில் வாகன இலக்கங்களை எழுதும்படி வேண்டப்படுகிறது. அத்துடன் வாகனத்துள் இருப்பவர்களை பார்க்க முடியாதவாறான கண்ணாடிகளைப் பயன்படுத்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

# தொங்கல் SUSPENSE A/C

தி. லோஜினி
13B Com.
1995

நிறுவனங்கள தமது பொருளாதார கொடுக்கல் வாங்கல்களை பூரண இரட்டைப்பதிவிற்கு உட்படுத்துகின்றது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட இரட்டைப் பதிவினை எண்கணித ரீதியில் சரிபார்ப்பதற்காக ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் பரீட்சை மீதியினை தயாரிக்கின்றது. இவ்வாறு தயாரிக்கப்படும் பரீட்சை மீதியானது சமப்படல் வேண்டும். இவ்வாறு சமப்பட வேண்டிய பரீட்சை மீதியானது சமப்பட மறுக்கும் சந்தர்ப்பத்தில் இதனை சமப்படுத்துவதற்காக தற்காலிகமாக தோன்றுகின்ற கணக்கே தொங்கல் கணக்காகும். பரீட்சை மீதியானது சமப்படாமைக்குரிய காரணங்கள் கண்டுகொள்ளப்பட்ட பின்னர் தொங்கல் கணக்கானது இல்லாமல் போய்விடும். இதனாலேயே இது தற்காலிகமான கணக்கு என அழைக்கப்படுகின்றது.

நிதியாண்டு இறுதியில் தயாரிக்கப்படும் பரீட்சைமீதியானது சமப்படாமைக்கு தவறுகள் (Errors) காரணமாக அமைகின்றது. பொதுவாக நிறுவனங்கள் கொடுக்கல் வாங்கல்களை ஏடுகளில் பதியும் போது இரு விதமான தவறுகள் ஏற்படுகின்றன. அவை யாவன:

1) சில தவறுகள் பரீட்சை மீதியில் இரு பக்கங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்

2) சில தவறுகள் பரீட்சை மீதியின் ஒரு பக்கத்தில் மட்டும் தாக்கத்தினை ஏற்படுத்தும்

பரீட்சை மீதியின் இரு பக்கங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வழுக்கள்/ தவறுகள் தொங்கல் கணக்கினை தோற்றுவிக்க மாட்டாது.
உதாரணம்:- சம்பளம் ரூ 5000 ஏடுகளில் பதிவுறாமல் இருந்தது. இத்தவறு ஏடுகளில் பின்வருமாறு பதிவு செய்யப்பட வேண்டும்.

சம்பளக் கணக்கு வரவு 5 000
காசுக் கணக்கு செலவு 5 000

பரீட்சை மீதியில் ஒரு பக்கத்தில் மட்டும் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய வழுக்கள் (Omissions) தொங்கல் கணக்கினை தோற்றுவிக்கின்றது. பின்வரும் வழுக்கள் பரீட்சை மீதியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடியவை.

1) ஒரு பக்கத்தில் மட்டும் கொடுக்கல் வாங்கலைப் பதிதல்

2) ஏடுகளை கூட்டும் போது ஏற்படும் தவறு

3) நாளேடுகளை பேரேடுகளிற்கு மாற்றாது விடுதல்

4) பக்கம் மாறி பதிதல்

5) இரு பதிவையும் ஒரே பக்கத்தில் பதிதல்

6) ஒரு நடவடிக்கைக்கு மூன்று பதிவுகளை ஏற்படுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) தொகைகளை பிழையாகப் பதிதல்

8) பரீட்சை மீதிக்கு மாற்றும் போது ஒரு கணக்கு மீதியை தவற விடுதல்

9) பரீட்சை மீதிக்கு மாற்றும்போது தொகைகளை பிழையாகப் பதிதல்

10) பரீட்சை மீதியில் பக்கம் மாறி பதிதல்

உதாரணம்:-

31 / 12 / 93 பிறேமினி என்பவரது நிறுவனத்தின் நிதியாண்டின் இறுதியில் எடுக்கப்பட்ட பரீட்சை மீதியானது இணங்கவில்லை. பரீட்சை மீதியின் செலவுப்பக்கத்தில் ரூ.213 வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு இடப்பட்டது. 93 டிசம்பரில் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன:

1) சென்ற வருட இறுதியில் காணப்பட்ட இறைவரி முற்பணம் ரூ 240. இறைவரி கணக்கின் கீழ் கொண்டுவரப்படவில்லை.

2) இயந்திர கொள்வனவு ரூ 1100 கொள்வனவு கணக்கில் பதியப்பட்டிருந்தது.

3) விற்பனை நாளேடு ரூ 500 குறைத்து கூட்டப்பட்டிருந்தது

4) இயந்திர விற்பனை (புத்தகப்பெறுமதி) ரூ 400 விற்பனைக் கணக்கில் பதியப்பட்டிருந்தது

5) கடனிற்கு கொள்வனவு செய்த ரூ 15 பொருட்கள் கடன் கொடுத்தோர் கணக்கில் ரூ 51 என பதியப்பட்டது.

6) கொடுத்த கழிவு ரூ 9 கடன்பட்டோர் கணக்கில் பதியப்பட்டிருந்தது

7) கடன்பட்டோர் மீதி ரூ 60 பரீட்சை மீதியில் விடப்பட்டிருந்தது

8) உட்திரும்பல் ரூ 20 கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது

## பிழைகள் திருத்தமுன் பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கொடுத்த கழிவு | 320 | |
| பெற்றகழிவு | | 410 |
| கொள்வனவு | 41700 | |
| கொள்வனவு திரும்பல் | | 600 |
| விற்பனை | | 72300 |
| விற்பனை திரும்பல் | 1500 | |
| வெளிமுக கூலி | 4130 | |
| சம்பளமும் கூலியும் | 23500 | |
| ஆரம்ப இருப்பு | 19200 | |
| மின்சாரம் | 7800 | |
| வாடகையும் காப்புறுதி | 5600 | |
| பொதுச்செலவு | 6100 | |
| கட்டிடம் | 10000 | |
| இயந்திரம் | 9330 | |
| கடன்பட்டோர் | 8059 | |
| கடன் கொடுத்தோர் | | 4972 |
| காசும் வங்கியும் | 5676 | |
| மூலதனம் | | 64420 |
| | 142915 | 142702 |
| தொங்கல் | | 213 |
| | 142915 | 142915 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுகள் வருமாறு:

| பரீட்சைப் மீதி யில் உள்ள விபரங்கள் | வரவு | செலவு | தவறுகள் இலக்கம் | திருத்தப்பட்ட பரீட்சை மீதி வரவு | திருத்தப்பட்ட பரீட்சை மீதி செலவு | இலாபத்தாக்கம் + | இலாபத்தாக்கம் — | தொங்கல் வரவு | தொங்கல் செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொடுத்த கழிவு | 320 | | | 320 | | | | | |
| பெற்ற கழிவு | | 410 | | | 410 | | | | |
| கொள்வனவு | 1700 | | 2 | 40600 | | 1100 | | | |
| கொ/வுதிரும்பல் | | 600 | | | 600 | | | | |
| விற்பனை | | 72300 | 3<br>2 ]- | | 72400 | 500 | | | |
| விற்பனை திரும்பல் | 1500 | | | 1500 | | | 400 | 500 | |
| வெளிமுகக் கூலி | 4130 | | | 4130 | | | | | |
| சம்பளமும் கூலியும் | 23500 | | | 23500 | | | | | |
| ஆரம்ப இருப்பு | 19200 | | | 19200 | | | | | |
| மின்சாரம் | 7800 | | | 7800 | | | | | |
| வாடகைக் காப்புறுதி | 5600 | | | 5340 | | | | | 240 |
| பொதுச் செலவு | 6100 | | 1 | 6100 | | | 240 | | |
| கட்டடம் | 10000 | | | 10000 | | | | | |
| இயந்திரம் | 9330 | | 2<br>4 ]- | 10030 | | | | 9 | |
| கடன் பட்டோன் | 8059 | | 6 ]-<br>7 ] | 8070 | | | | 40 | 60<br>36 |
| கடன் கொடுத்தோர் | | 4972 | 5 | | 4936 | | | | |
| காசும் வாங்கியும் | 56 76 | | | 5676 | | | | | |
| மூலதனம் | | 64420 | | | 64420 | | | | |
| தொங்கல் | | | 1<br>3<br>5<br>6<br>7<br>8 | மேற் கூறப்பட்ட கணிப்பீடுகளின் படி. | | | | | |
| ஆரம்பக் கூட்டுத் தொகை | 142915 | 142915 | | | | | | | |
| திருத்தப்பட்ட கூட்டுத்தொகை ← | | | | 142766 | 142766 | | | | |

இலாபத்தாக்கம்: + 1600, — 640 → (640); 1600 − (640) = 960

இலாபத்தாக்கம் தேறியது ← 960

தொங்கல்: 549, 336 → (336); 549 − (336) = 213

தொங்கலின் தோற்றம் ← 213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதைக்கு எமது நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ

★ உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
★ தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
★ ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்
★ தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

## புதிய லலிதா நகை மாடம்

74/1, சந்தோசப் தெரு, (கஸ்தூரியார் வீதி,)
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதை வளர்க! வளர்க!!

**ஆறுமுகம் அன் சன்ஸ்**

81, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வணிக வனிதை தொடர்ந்து
வெளிவர எமது நல்லாசிகள்!

★

**கீன் கல்வி நிலையம்**

பலாலி வீதி,
யாழ்ப்பாணம்

★

ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11
வரையும்
A/L 95, 96 கலை, வர்த்தக
பகல் நேர, மாலை நேர வகுப்புக்களும்
யாழ் நகரின் திறமையான
ஆசிரியர்களால் போதிக்கப்படுகிறது.

வணிக வனிதையின் வரவை
ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்
வர்த்தக மாணவர்களுக்கு
எமது நல்லாசிகள்!

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சகல வகையான
ஐஸ்கிறீம் வகைகள், குளிர் பானங்கள்,
சிற்றுண்டி வகைகளை
சுத்தமாகவும், சுகாதாரமாகவும்
சுவையாகவும் உண்டுகளிக்க
இன்றே விஜயம் செய்யுங்கள்.

வணிக வனிதை
மாணவ சமுதாயத்திற்கு
ஒரு வரப்பிரசாதமாகும்.

**த. குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ்**

42, 44, கிரான் பஜார்,
யாழ்ப்பாணம்

புத்தம்புதிய புடைவை வகைகள்,
குழந்தைகள், பெரியோர்களுக்கான
ஆடை வகைகள் அனைத்திற்கும்
நாடவேண்டிய
ஒரே இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதை
நாடெங்கும் புகழ்பரவ
எமது நல்லாசிகள்!

★

**அலகின் பாதணி**

**நிலையம்**

121/1, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

★

தங்களின் பாதங்களின் அழகினை
மேலும் அழகுற
பாதணிகளைப் பெற
நம்பிக்கை, நாணயம் நிறைந்த
ஒரே ஸ்தாபனம்.

வணிக வனிதை நலமுடன்
வெளிவர எமது நல்லாசிகள்!

★

**வெங்கடேஸ்வரா**

மிதிவண்டி
உதிரிப்பாக விற்பனை
நிலையம்

79, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★

கலப்படம் அற்ற சிறந்த ரக
உதிரிப்பாகங்களைப் பெற
யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரே இடம்.

வணிக வனிதை மணம் பரப்ப
எமது நல்லாசிகள்!

**றோலெக்ஸ்**

**பேக் மாட்**

118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுத்தமாக சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்ட

- பாண் வகைகள்,
- பட்டர் கேக்
- கேக் வகைகள்,
- லெமன் கேக்
- சொக்லெட் கேக்,
- றிச்கேக்,
- புருட்கேக்,
- ஜாம் கேக்

பிறந்த நாள், திருமண
வைபவங்களுக்குத் தேவையான
கேக் வகைகள் நீங்கள் விரும்பும்
டிசைன்களில் செய்து கொடுக்கப்படும்.

வணிக வனிதை மிளிர
வாழ்த்துக்கள்!

★

**தூயா அச்சகம்**

138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

★

நீங்கள் கேட்கும் குறித்த காலத்தில்
அச்சக வேலைகளை
திறம்பட செய்ய நாடவேண்டிய
ஒரே இடம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதை நாற்றிசையும்
மணம் கமழ எமது நல்லாசிகள்

மங்கையர் மனதை கொள்ளை
கொள்ளும் நவீன டிசைன்களில்
தரமான 22 கரட் தங்க
நகைகளுக்கு நாடவேண்டிய இடம்.

**நதியா**
**ஜுவல்லறி**

2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன வேலைப்பாடுள்ள அழகிய
தங்கப்பவுண் நகைகள்
உத்தரவாதத்துடன் கிடைக்குமிடம்

**தமிழ்மதி**
**நகைமாடம்**

82/6, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

நவநாகரிக டிசைன்களுக்கு
உத்தரவாதத்திற்கு
உறுதியான வேலைக்கு
இன்றே நாடுங்கள்

**ரூபி**
**நகைப் பூங்கா**

111/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிக வனிதையின் வரவிற்கு
எமது நல்லாசிகள்

இன்று அறிமுகமான புடைவைத்
தினிசுகளை இன்றே பெற்றுக்கொள்ள
இன்றே நாடவேண்டிய ஸ்தாபனம்

S. S. GNANAM
**TEXTILES**

54, GRAND BAZAAR,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் ஏற்றுமதி மற்றும் தொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்புக்கள்

பா. ராதிகா
ஆண்டு 13B
வர்த்தகப்பிரிவு

ஏற்றுமதி வர்த்தகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இலங்கையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் குறிப்பிடத்தக்க ஓர் நடவடிக்கையே இவ் ஏற்றுமதிக்கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கையாகும். இது ஏற்றுமதியாளர்களுக்கு பலதரப்பட்ட வசதிகளை அளித்தலை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. 1978 ம் ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்ட 15 ம் இலக்க இலங்கை ஏற்றுமதிக்கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் 1979 பெப்ரவரி 3ல் உருவாக்கப்பட்டது இலங்கையில் ஏற்றுமதி வியாபாரத்தை ஊக்குவிப்பதும் பன்முகப்படுத்தலுமே இதன் பிரதான குறிக்கோளாகும்.

இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் பல்வேறு வகையான இடர்களை ஏற்றுமதிகளில் எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. வர்த்தக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இந்த இ ர்கள் ஏற்படலாம். இவ்வாறான சமயங்களில் பணநட்டங்களை ஈடுசெய்ய வேண்டிய தேவை காணப்பட்டது. மற்றும் ஏற்றுமதியாளர்களுக்குக் கடன் பெறவேண்டிய பிரச்சினைகளும் காணப்பட்டன. இவற்றுக்கு சுமுகமான தீர்வு வழங்கும் நோக்கத்தில் இக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டது.

இக் கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப அனுமதித்த மூலதனம் 5 மில்லியன் ரூபாவாகும் இதில் ஸ்ரீ லங்கா மத்திய வங்கியும் இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனமும் மூலதனத்தை ஈடுபடுத்தியுள்ளன. மத்திய வங்கி ஆரம்ப மூலதன்மாக 2.5 மில்லியன் ரூபாவை ஈடுபடுத்தியிருந்தது.

இந்த ஏற்றுமதிகடன் காப்புறுதிக்கூட்டுத்தாபனம் ஏற்றுமதி வர்த்தகம் சார்பில் மேற்கொள்ளும் பங்களிப்புக்களைப் பற்றி பின்வருமாறு கூறலாம் ஏற்றுமதிக் கொடுப்பனவு காப்புறுதித்திட்டம்.

ஏற்றுமதியாளருக்கு வர்த்தக ரீதியான அல்லது அரசியல் ரீதியான காரணிகளினால் ஏற்றுமதிப் பணத்தை பெறமுடியாத வேளையில் ஏற்படும் நட்டத்தில் பெரும் பகுதியை ஏற்றுமதி கடன்காப்புறுதி கூட்டுத்தாபனம் உடன்படும் ஒரு திட்டம் ஏற்றுமதி கொடுப்பனவுக் காப்புறுதியாகும்.

இங்கு வர்த்தக ரீதியான இழப்புக்களாக இறக்குமதியாளன் பணத்தைப் பெறுவதற்குக் காலதாமதப்படுத்தல் அல்லது இறக்குமதியாளன் முறிவடைவதால் ஏற்படும் நட்டங்களைக் கூறலாம். அரசியல் ரீதியான இழப்புகளாக இறக்குமதியாளன் நாட்டில் ஏற்படும் அரசியல் குழப் ம், இறக்குமதிக்கட்டுப்பாடு, அந்நியச் செலாவணிக்கட்டுப்பாடு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

1) கப்பலில் ஏற்றுவதற்கு முன்னான கடன் உத்தரவாதம்:-

ஏற்றுமதியாளன் கப்பலில் பொருட்களை ஏற்றுவதற்கு முன் அவற்றை உற்பத்தி செய்வதற்கும், கொள்வனவு செய்வதற்கும், பொதிகட்டுவதற்கும் கப்பற் கட்டணம், சுங்கத்தீர்வை போன்றவற்றைச் செலுத்துவதற்கும் தேவையான நிதியை வங்கிகளில் கடனாகப் பெறுவதற்கு ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உத்தரவாதம் வழங்குகின்றது. இதனை கப்பலில் ஏற்றுவதற்கு முன்னான கடன் உத்தரவாதம் என அழைப்பர். ஏற்றுமதியாளர் பெரும் அபாயங்களை எதிர்நோக்குவதனால் வழங்கிய கடனைத் திருப்பிப்பெற முடியாத நிலை ஏற்படலாம் என்ற பயத்தினால் வங்கிகள் கடன் வழங்கத்தயங்குகின்றன. இதனால் ஏற்றுமதியாளர்கள் நிதிப்பற்றாக்குறை மற்றும் கூடியவட்டிக்கு கடன் எடுத்தல் கடன் பெறுவதில் தகுந்த பொறுப்புக்களின்மை போன்ற இடர்களை எதிர்நோக்குகின்றனர். இத்தகைய இடர்ப்பாடுகளை குறைத்து ஏற்றுமதியாளர்கள் சுலபமாக நிதி நிறுவனங்களிடம் கடன்வசதிகளைப் பெறுவதனை இலகுபடுத்துவதற்கு இக்காப்புறுதித்திட்டத்தினை கூட்டுத்தாபனம் செயற்படுத்துகிறது.

2) கப்பலில் ஏற்றுவதற்குப் பின்னான கடன் உத்தரவாதம்:-

கப்பலில் பொருட்களை ஏற்றிய பின்னர் ஏற்றுமதிப் பொருட்களுக்கான வருமதிப் பணத்தை அதாவது இறக்குமதியாளனிடம் இருந்து வரவேண்டிய பணத்தை கடன் அடிப்படையில் முன்கூட்டியே வங்கிகளிடமிருந்து ஏற்றுமதியாளர் பெறுவதற்கு வசதியாக இக்காப்புறுதித்திட்டம் செயற்படுகிறது. ஏற்றுமதியாளர் ஏற்றுமதிப் பத்திரங்களை வங்கியில் சமர்ப்பித்து முன்கூட்டியே பணம் பெற இது உதவுகின்றது. வங்கிக்கு கொடுக்குமதியாகவுள்ள ஆகக்கூடிய கடன்தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு நூறு ரூபாவுக்கும் 5 சதம் மாதாந்தக் கட்டணமாக ஏற்றுமதியாளர் செலுத்த வேண்டும். முறிந்தால் அல்லது வங்கிக்கு பணத்தை செலுத்தமுடியாத நிலையில் இருந்தால் வங்கிக்கு கொடுக்குமதியான தொகையில் 75% கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படும் என்ற உத்தரவாதம் அளிக்கப்படும்

3) திறன் அல்லது நிறைவேற்று உத்தரவாதம்:-

இது ஏற்றுமதியாளருக்கு வசதியாக செயற்படுத்தப்படுகின்றது. குறிப்பிட்ட ஏற்றுமதியாளர் இறக்குமதியாளருடன் மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய பொருட்களை ஏற்றுமதி செய்வார் என உறுதிப்படுத்துவது இதுவாகும். இவ்வாறு ஏற்றுமதி தொடர்பாக மேற்கொண்ட ஒப்பந்தம் தொடர்பாக வங்கியிடமிருந்து உத்தரவாத கடிதத்தை செலுத்துமாறும் கேட்கின்றனர். இதற்கேற்ப ஏற்றுமதியாளர் குறிப்பிட்ட அளவு பணத்தை வங்கியில் வைப்பிலிடவேண்டுமென ஏற்றுமதியாளரைக்கோருகின்றனர். இக்காப்புறுதிச் சேவை கடன் உத்தரவாதம் என்பன மட்டுமல்லாமல் வருமதிப்பணத்தை அறவிடுதல் தொடர்பாக ஏற்றுமதியாளர்களுக்கு ஆலோசனை வழங்கல், ஏற்றுமதியாளர்களுக்கு சந்தை வாய்ப்பு தொடர்பன தகவல்களை வழங்கல் மற்றும் பிறநாட்டு சந்தையாராய்ச்சிபிரசித்தப்படுத்தல் என்பன மூலமும் ஏற்றுமதியாளர்களுக்கு உதவுகின்றது.

இந்த ஏற்றுமதிக்கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அண்மைச்சாலங்களாக சில புதிய நடைமுறைகளையும் கொண்டுள்ளது. அவற்றை பின்வருமாறு கூறலாம்:

1) நாடுவிட்டுச் செல்லும் இலங்கை ஊழியர்களுக்கான வங்கிக்கடன் உத்தரவாதம்:-

இலங்கையிலிருந்து தொழில் வாய்ப்புக்களைப்பெற வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி வசதியளித்த ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கும் உத்தரவாதம் நாடுவிட்டுச் செல்லும் இலங்கை ஊழியர்களுக்கான வங்கிக்கடன் உத்தரவாதம் எனப்பர். 18 வயதிற்கும் 50 வயதிற்குமிடைப்பட்டவர் அல்லது தொழில்முகவர் நிலையத்தினால் வழங்கப்படும் உறுதிப்பத்திரப்பிரதி தமது நிரந்தரவதிவிட முகவரியை உறுதிப்படுத்தும் அரசாங்க அதிபரினாலும், கிரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மசேவகரினாலும் உறுதிப்படுத்தும் கடிதம் என்பவற்றை சமர்ப்பித்து 20000/- வரை வங்கியில் கடனாகப்பெற்றுக்கொள்ளலாம். வேலை வாய்ப்புக்களுக்கான விமானச் சீட்டுக்கு இக்கடன் வசதி உதவுகின்றது இக் கடனுக்கு விண்ணப்பிப்பவர் தாம் வசிக்கும் இடத்திற்கு அண்மையிலுள்ள வங்கியில் ஒரு NRFC ஐ அல்லது சேமிப்பு கணக்கை ஆரம்பிக்க வேண்டும். இவர் தனது தொழிலினால் எதிர்பார்க்கும் சேமிப்புக்கள் கடன் தவணையினதும் அதன் வட்டியினதும் மொத்த அளவிற்கு குறையாது இருத்தல் வேண்டும். இக்கடன் 12மாதத்திற்குள் கடன் பெற்றவர் தீர்க்கவேண்டும். ஏற்றுமதிக்கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சிபாரிசுக்கென வழங்கப்படும் இத்திட்டம் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற விரும்புவோருக்கு பெரும் ஊக்குவிப்பாகக் காணப்படுகிறது.

2) இரத்தினக்கல் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான விசேட வங்கி உத்தரவாதத்திட்டம்:-

ஏற்றுமதியாளன் இரத்தினக்கற்களை ஏலத்தில் கொள்வனவு செய்வதற்கும் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கும் தேவையான கடன் வசதிகளையும் வர்த்தக வங்கியிடம் பெறுவதற்கு ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உத்தரவாதத்தினை வழங்குகின்றது. இதனையே இரத்தினக்கல் ஏற்றுமதிக்காக விசேடவங்கி உத்தரவாதத்திட்டம் என அழைப்பர்-

3) கிராமங்களில் ஏற்றுமதியினை ஊக்குவி பதற்கான விசேட வங்கி உத்தரவாதத்திட்டம்:-

இத்திட்டத்தின் பிரகாரம் ஏற்றுமதி ஏராமக உற்பத்தியாளர்களுக்கு அல்லது ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் கடனுல் 100000/- வரை இக்கூட்டுத்தாபனம் உத்தரவாதம் அளிக்கும். வழங்கப்படும் கடனில் 90%ற்கு இக்கூட்டுத் தாபனம் உத்தரவாதம் அளிக்கின்றது வழங்கப்படும் உச்சக்கடன்தொகையில் ஒவ்வொரு100ரூபாவிற்கும் 6% வங்கியினால் ஒவ்வொரு மாதத்திலும் காப்புறுதிக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும், இக்கடன் திட்டத்திற்கென முதிர்வுகாலம் 12 மாதங்களாகும்.

இவ்வாறு இந்த ஏற்றுமதிக்கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இலங்கையிலுள்ள ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பும் பண்டங்கள் சேவைகளுக்கான பணத்தைப் பெறுவதிலுள்ள இடர்களை நீக்குவதனை ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்தரவாதத்தை வழங்குவதுடன் மட்டுமல்லாது வேறு தொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாகக் காணப்படுகிறது எனலாம். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தொடர்பாடல் முறைகள்
## (NEW COMMUNICATION METHODS)


சி. செல்வராணி
ஆண்டு 13A
வர்த்தகப்பிரிவு


## 1:1 அறிமுகம் [INTRODUCTION]

அண்மைக்காலத்தின் தேவைக்கேற்ப பல புதிய தொடர்பாடல் முறைகள் அறிமுகத்திற்கு வந்துள்ளன. இவற்றை இலகுவில் அறிமுகப்படுத்தும் நோக்கம் கருதியே அரசாங்கம் தொலைத்தொடர்பு திணைக்களத்தை ஸ்ரீலங்கா ரெலிக்கோம் (SRILANKA TELE COM.) என்னும் அமைப்பாக மாற்றம் செய்தது இதனைத்தொடர்ந்து அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருப்பது போன்ற பல புதிய முறைகளை தொடர்பாடலுக்காக அறிமுகப்படுத்தியதுடன் தொடர்பாடல் சேவையில் கணணி முறையும் அறிமுகபபடுத்தப்பட்டது. அத்துடன் பின் வரும் புதிய முறைகள் தொடர்பாவில் கொண்டுவரப்பட்டன.

## 1:2 பேஜர் [PAGER]

தொலைபேசி தொடர்பாடலின் ஊடாக வெளிக்கள நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவருடன் எந்த நேரத்திலும் வலைப்பின்னல் உள்ள இடங்களில் தொடர்பாவில் ஈடுபடலாம் இதன்படி தொலைபேசியின் ஊடாக பேஜர் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட நபரின் பேஜர் இலக்கத்தையும் தகவல்களையும் வழங்கும் போது அது வானொலி அலைகளின் ஊடாக குறிப்பிட்ட நபரின் பேஜருக்கு பரிமாற்றி வைக்கப்படும்: இத்தகவல் பேஜர் உடமையாளரை சென்றடையும் போது முதலில் தொலைபேசியைப் போன்று ஒலி ஒன்றை ஏற்படுத்தும், பின்னர் தகவல் வழங்கும் இந்த பேஜர் உடமையாளன் தகவல்களை மாத்திரம் பெற்றுக்கொள்ளலாமே தவிர நமது தகவல்களை பரிமாற்ற முடியாது இதனால் தொலைபேசி செலூலர் தொலைபேசிகளைப் போன்று இருவழித் தொடர்பாடல் காணப்படமாட்டாது. தனியார்துறைக் கம்பனிகளால் மாத்திரமே இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. NET PAGE நிறுவனம் முக்கிய நிறுவனமாக உள்ளது.

ஆரம்பத்தில் பேஜர் மூலம் தொலைபேசி இலக்கங்கள் மாத்திரம் பரிமாற்றப் பட்டு வந்தது தற்போது வரையறுக்கப் பட்டளவு தகவலும் பரிமாற்றப்படுகின்றது.

## 1:3 செல்லூலர் இடம் பெயர் தொலைத்தொடர்பாடல நகரும் தொலைபேசி CELLULAR

1985-ம் ஆண்டு ஆரம்பமாகிய இந்த நவீன தொலைத்தொடர்முறை தற்பொழுது இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது ஆரம்பத்தில் செல்டேல் என்ற நிறுவனத்ினாலும் அதன் பின்னர் 1993-ம் ஆண்டு லங்கா செலூலர் சேவை நிறுவனம் கோல்லிற் என்ற பெயரிலும் செலூலர் இடம்பெயர் தொலைத் தொடர்பாடல் வசதியினை இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளார். அத்துடன் அரசாங்கத்துறை செலூலர் தொலைத்தொடர்பாடல் என்ற அடிப்படையில் இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிகொம் நிறுவனம் அவுஸ்ரேலியா கடல் கடந்த டெலிகோம்யூனிகேசன் நிறுவனத்துடன் சேர்ந்து ஓர் செலுலர் இடம்பெயர்த் தொலைத் தொடர்பாடல் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந் நிறுவனங்கள் தமது சேவையினை கொழும்புப் பெரும்பாகப்பகுதி, கண்டி ஆகிய இடங்களில் ஆரம்பித்துள்ளது. தற்காலத்தில் பெரும் பகுதி வியாபாரிகளே இத்தகைய நகரும் தொலைபேசி வசதியைப் பயன்படுத்துகின்றனர்.

செலூலர் இடம்பெயர் தொலைத் தொடர்பாடல் கருவியைப் பயன்படுத்தி நடமாடும் சேவையைப் பெறக்கூடியதாக இருக்கும் இதன்படி ஒரு இடம்பெயர் தொலைத்தொடர்பு கருவியில் இருந்து மற்றுமொரு இடம்பெயர் கருவியுடன் அல்லது நிரந்தரமாக பொருத்தப்பட்ட கருவியுடன் தொடர்பு கொள்ள முடியும். வானொலி அலைகளின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்படுவதனால் நடமாடும் சேவை அதிகளவில் சாத்தியப்படுகின்றது. அத்துடன் நவீன கைக்கடக்கமான சிறிய விரைவில் எங்கும் எடுத்துச் செல்லக் கூடிய தோலைபேசி ஆகக் காணப்படுகிறது.

இத்தொடர்பாடல் சேவைக்கான கட்டண அளவு தொலைபேசியினை விட உயர்வாகக் காணப்படுகின்றது. கோல்லிங்க் நிறுவனம் 1040 ரூபா முதல் 1400 ரூபா வரை மாதாந்த சந்தா அறவிடுகின்றது. கருவியைப் பொருத்துவதற்கான கட்டணம் 5000 ரூபா ஆகும். குறித்த ஒரு நிமிட சேவைகரு வெளிச் செல்லல் 12ரூபா தகவல் உள்வருகை 9.90 சதம் கட்டணம் அறவிடப்படுகின்றது. இத்தகைய செலூலர் சேவையில் அதிகளவு தொலைபேசி இலக்கங்களைச் சேமிக்கக்கூடியதாக இருப்பதுடன் மற்றவர்கள் செலூலரைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்திக் கூடியதாகவும் இருக்கும்.

செலூலர் தொடர்பாடல் முறையினால் கிடைக்கும் அனுகூலங்கள்.

**அனுகூலங்கள்**

1. போக்குவரத்தின் போது தொடர்பாடலில் ஈடுபடலாம்.
2) விரும்பிய இடத்தில் விரும்பிய நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்
3) சிறிய கைக்கடக்கமானதாகும்
4) ஒரே நேரத்தில் பல இலக்கங்களை ஞாபகப்படுத்தலாம்.
5) வேறு நபர் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தலாம்
6) அழைப்புக்களின் செய்தியை பதிவு செய்யலாம்

## 1:4 பக்ஸ் (FAX)

வெளிநாட்டு செய்திப் பரிமாற்றத்தில் முக்கியம் பெற்று வரும் முறையே இது வாகும். இது ரெலெக்ஸ் முறை போன்றே ஒரு இயந்திரத்தால் செய்தி அனுப்பப்பட்டு இன்னொரு இயந்திரத்தால் செய்தி ஏற்கப்படுவதுடன் அச் செய்திகளை வானொலி அலைகளே எடுத்துச் செல்லும். பெரும்பாலும் ரெலெக்ஸ் தொலையச்சு என்ற அடிப்படையில் எழுத்து வடிவத்திலேயே செய்திகளைக் கொண்டு செல்லமுடியும். பெரும்பாலும் ஆவணங்கள், வரைவுகள் படங்கள் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்க பக்ஸ் முறையைப்பயன்படுத்தப்படுகிறது. அதனால்

1) ஆவணங்களின் பிரதிகளை வெளிநாடுகளில் பெறமுடிதல்.
2) விரைவான செய்திகளை வழங்குதல்
3) விரும்பிய மொழிகளில்கிடைக்கச் செய்தல்.

போன்ற நன்மைகளைகளைப் பெறலாம் ரெலெக்ஸ் முறை போல் பைக்ஸ் பல ஒற்றுமைகளைக் கொண்டிருந்தாலும் விரும்பிய வடிவத்தில் செய்தியினைப் பெறலாம் என்பதும் கூடிய செலவை ஏற்படுத்தும் என்பதும் வேறுபாடு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1:5 பல்கூரியர் சேவை [COURIER SERVICE]

வெளிநாட்டுக்குக் கடிதங்கள், பொதிகள் என்பவற்றை விரைவாக நகர்த்திச் செல்லும் முறையே இதுவாகும். விமானத் தபால்களை விரைவாகக் காவிச்செல்லக் கூரியர் சேவை பாவிக்கப்படும். இந்த சேவை முறையுடன் சர்வதேச விமானப் போக்குவரத்துத் தொடர்புபட்டுள்ளது. இதன் காரணமாக வெளிநாட்டுக் கடிதங்களும் பொதிகளும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் எடுத்துச் செல்லப்படுகின்றன இதனை D.H.L சேவை என்பது குறிப்பதாகவும் அமைந்துள்ளது. வெளிநாட்டிற்கான ஆவணங்கள், பொதிகள் கடிதங்கள் என்பன ஓரிரு தினங்களுக்குள் எடுத்துச் சென்று ஒப்படைக்கப்படுவதற்கு கூரியர் சேவை வழிவகுத்துள்ளது.

## முடிவுரை

தற்காலத்திலே தொடர்பாடல் நடவடிக்கையானது வர்த்தகத்தின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தொடர்புபடுகின்றது. உள்நாட்டு வியாபார நடவளக்கையிலும், வெளிநாட்டு வியாபார நடவடிக்கையிலும் இத்தொடர்பாடல் ஈடுபாடு கொண்டுள்ளது எனவேதான் வர்த்தகத்தில் புதிய தொடர்பாடல் முறைகள் உருவாகி வருவதனை காணமுடிகின்றது. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதை தொடர்ந்து வெளிவர எமது

★

## குறிஞ்சி மெடிக்கல்

பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

★
★
★

தரமான ஆங்கில மருந்து வகைகள்,
குழந்தைகளுக்கான
பால்மா வகை, பிஸ்கட் மற்றும்
பரிசுப் பொருட்களை நியாய விலையில்
பெற்றுக் கொள்ள

**குறிஞ்சி மெடிக்கல்**

வணிக வனிதை வளர்க! வளர்க!!

★

## ராஜேஸ்வரி வர்த்தகம்

பரமேஸ்வரா சந்தி,
யாழ்ப்பாணம்.

★

தரமான நவநாகரிகப்
பொருட்களைப் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்!

வணிக வனிதை வளர்க! வளர்க!!

★

## Office Equipment Technical Centre

**O. E. T. C. No. 140, Navalar Road,**
**Jaffna.**

★

பொருட்களின் தரத்தினை உயர்த்துவதற்காக
தொழில்நுட்பம் சார்ந்த உபகரணங்களை கொள்வனவு செய்ய
இன்றே நாடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதை வளர்க வளர்க

Kanesan Store

63, 78 K. K. S. Road,
JAFFNA.

வணிக வனிதையின் வரவிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

உங்களது நயம் நம்பிக்கை,
நாணயமுள்ள தங்க வைர
நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்.

சோபிகா

நகை மாளிகை

111 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிக வனிதை வளம் பெற
எமது நல்லாசிகள்

- சிறந்த தரம்
- நிதான விலை
- நிறைந்த சேவை
- என்றும் எவரும் நாடுவது

தீபா நகையகம்

177 A, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி,)
யாழ்ப்பாணம்.

வணிக வனிதை நாடெங்கும்
புகழ் பரவ எமது நல்வாழ்த்துக்கள்

★
★
★

தங்களின் கடிகாரங்களை
திறமான முறையில்
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்.

குறோசனின்

வோச் வேக்ஸ்

இல. 3 B அர்ச்சுனா சாலை
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SUBAMALA MOTORS

79, Stanley Road.

**JAFFNA.**

மோட்டார் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

★

தங்களின் மோட்டார் வாகனங்களை திறம்பட இயங்கச் செய்வதற்கு உதிரிப்பாகங்களை யாழ் நகரில் பெற்றுக் கொள்ள ஒரே ஒரு சிறந்த ஸ்தாபனம்.

புனித வனிதையின் வரவிற்கு எமது நல்வாழ்த்துக்கள்!

## ரமேஸ் புகைப்படக்கலையகம்,

(வெளிப்புற படப்பிடிப்பாளர்)

383, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

மங்களகரமான நிகழ்வுகளை வண்ணப் புகைப்படங்களாக அழகான முறையில் படம் பிடித்திடவும்.

கலர்ப்படச் சுருள்கள் பிரதியாக்கவும், வீடியோ படப்பிடிப்பு ஓடர்களுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞா. கவிதா
பொருளாளர்

## உதவிய கரங்கட்கு உவகையுடன் நன்றி

| | |
|---|---|
| *1994 ஆம் பிரிவு பழைய மாணவர்கள்* | *560. 00* |

**வர்த்தகர் வரிசையில்**

| | |
|---|---|
| *லலிதா ஜுவல்லறி* | *200.00* |
| *றேடியோஸ்பதி* | *100 00* |
| *நித்திய கல்யாணி* | *100. 00* |
| *கணேசானந்தா பட்டுமாடம்* | *100. 00* |
| *சிவகணேசன் ஸ்ரோர்ஸ்* | *100. 00* |
| G .S *லிங்கநாதன் அஸ்கோ* | *100. 00* |
| *குகன் களஞ்சியம்* | *100. 00* |
| *வின்சன் புடைவைஅகம்* | *100. 00* |
| *புதிய ஆனந்தா* | *50 00* |
| *மு . கிருபானந்தா (அம்மன் வீதி)* | *50.00* |
| *மலர் நகையகம்* | *50. 00* |
| *குணம் புடைவை* | *50. 00* |
| Epward Phi *(83/4* Pt. Pedro Rd*)* | *50. 00* |

தொடர்ந்து வருகின்ற எமது நல்லுள்ளம் கொண்ட
விளம்பரதாரர்களை விருப்புடனே ஆதரிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology ...
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............

# நன்றியுரை

பொன்விழாக்கண்ட எமது கல்லூரியின் வர்த்தக மாணவர் ஒன்றியம் தனது இரண்டாவது அகவையை நிறைவு செய்கின்றது. அந்த வகையில் பரந்துபட்ட வர்த்தகத்துறைக்கு சிறிதளவேனும் பங்களிப்பு செய்யும் வகையில் வர்த்தக மாணவர் மன்றம் ''வணிக வனிதை'' என்னும் இந் நூலினை வெளியிடுகின்றது. புகழ் பூத்த இம்மலருக்கு பல்வேறு வழிகளிலும் உதவிய அனைத்து கரங்களுக்கும் நன்றி அறிவித்தலைத் தெரிவிக்க வேண்டியது எமது மன்றத்தின் கடமைப் பங்காகும். இந்தவகையில்,

★ எமது அழைப்பை ஏற்று வருகை தந்து இம் மலர் வெளியீட்டினை சிறப்பித்த பிரதம விருந்தினர் அவர்கட்கும்,

★ இவ் விழாவிற்கு வருகை தந்து மலரை சிறப்பித்த பெரியோர்கட்கும்,

★ இம் மலர் வெளியீட்டிற்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய எமது கல்லூரி அதிபர் திருமதி ஜெயராஜா அவர்கட்கும்

★ இம் மலர் வெளியீட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எமது மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி சிவநித்தானந்தா அவர்கட்கும்

★ கட்டுரைகள், வழங்கிய விரிவுரையாளர்கட்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும்

★ மலர் வெளியீட்டுக்கு ஆதரவு வழங்கிய ஆசிரியர் அவர்கட்கும் மற்றும் இருகரம் தந்து உதவும் மாணவர்கட்கும்

★ அன்பளிப்புக்கள், விளம்பரங்கள் மூலம் நிதி உதவிகளை வழங்கியவர்களுக்கும்

★ வணிக வனிதையின் அட்டைப்படத்திற்கான ஓவியத்தை சிறப்புற வரைந்த ஓவியக் கலைஞர் அவர்கட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இம் மலரை சிறப்புற மிக அழகாகவும், தெளிவாகவும் அச்சிட்ட தாசன் அச்சகத்தவர்களுக்கும்

★ எமது அழைப்பை ஏற்று வருகை தந்து இம் மலர் வெளியீட்டு விழாவினை சிறப்பித்த ஆசிரியர் மாணவர்களுக்கும்.

எமது வணிக மன்றத்தின் சார்பில் செயலாளர் என்ற முறையில் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பா. ராதிகா
செயலாளர்



வணிகத்துறை மாணவிகளின் இடைவிடாத முயற்சியால்
வெளிவருகிறாள் இன்று 'வணிக வனிதை'.
இவளுக்கு எமது மங்களகரமான நல்வாழ்த்துக்கள்

Bicycle,
Bicycle Parts,
Fancy Goods,
Oilmam Goods Etc.

# LINGAM TRADE CENTRE

78, KASTHURIYAR ROAD.
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்து மகளிர் கல்லூரியின்

## மங்களம் கொண்ட வனிதையானவள்

மங்காது தொடர்ந்து காலாகாலமும் மலர
எமது நல்லாசிகள்

தங்க வைர நகைகளை நம்பிக்கை நாணயமாகப்
பெற விரும்புகிறீர்களா ?

ஆம் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்
ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.



நாடுங்கள்;-

# நகுலா நகை மாடம்

## தங்கப்பவுண் நகை வியாபாரம்

170, V, சந்தோஷம் தெரு,
*(கஸ்தூரியார் வீதி)*
**யாழ்ப்பாணம்.**

தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org